Civil Aviation Authority Sri Lanka

Safe and Efficient Skies for all




# ஆண்டறிக்கை 2017

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை



Civil Aviation Authority
Sri Lanka

Safe and Efficient Skies for all

# இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை

# வருடாந்த அறிக்கை - 2017

(2002) இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான செவை அதிகார சபைச் சடடத்தின் 15 வது வாசகத்திற்கமைய பாராளுமன்றத்தில் சமா்ப்பிக்கப்படுகின்றது.




## சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் தொனிப்பொருள் கீதம்

ஸ்ரீ லங்கா சிவில் குவன் சேவா அதிகாரிய
கித் யாசின் கதலே
ஹெலி தொட்ட ஹெலி ஹெலே //

சக்வித்தி ராவண ஆருதி யுகேன்
தண்டு மொனிரின் குவன தினா //
விஸ் அமதி லக்தன வாரிய பொலனுத்
பாவிது நுவன மனா //

“உவதுரு தொர பவ சந்தஹா முல்வெமு”
வெய்பெர வெக்கிய அபே //
“இக்மன் அய மகநெகுமகி முல்வெவ”
மேவெய் தமக்கும அபேய் //

ரடவெசி யுதுகம இடுவன அயுரின்
மௌபிம ஹா பெதமு //
சமாஜ மெஹவர சாரதாஹம் ரெக
வககீமென் புதமு //

**ஆக்கம்** : கலாபூசனம் அரிசன் அஹுபுது (மறைந்த)
**பாடியவர்** : கலாகீர்த்தி தேசமானிய கலாநிதி பண்டித் டப்ளியு.டி. அமரதேவ (மறைந்த)
**இசையமைத்தவர்** : கலாகீர்த்தி தேசமானிய கலாநிதி பண்டித் டப்ளியு.டி. அமரதேவ (மறைந்த)



## கௌரவ போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்

இவ் ஆண்டறிக்கை 2002 இலக்கம் 34 கொண்ட சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்தின் 15 வது வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டினை நிறைவு செய்யும் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், 2017 ஜனவரி 01 ஆம் திகதி ஆரம்பித்து 2017 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டில் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் செயற்பாடுகளை உள்ளடக்குகின்றது. 2017 ஆம் ஆண்டுக்காக அதிகார சபையின் நிதி நிலைமைகள் தொடர்பான வெளிப்பாடும் இதில் உள்ளடங்கியுள்ளது.



**ஆனந்த விமலசேன**
தலைவர்

**இலங்கை சிவில் விமான சேவை அதிகாரசபை**
2018 பெப்ரவரி 28

# உள்ளடக்கம்

சிவில் விமான சேவை அதிகார சபையின் கீதம்...02
சுருக்கமான சொற்றொடர்கள் ...06
விபரக் கொத்து...08
தலைவரின் மீளாய்வு...10
சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் மீளாய்வு...14
CAASL பக்கத் தோற்றம்...19
அறிமுகம் 19
CAASL இன் அங்கத்தவர்கள் 19
CAASL 10 வது பணிப்பாளர் சபையின் (அமுலில் உள்ள) அங்கத்தவர்கள் தொடர்பான தகவல்கள் 22
இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை ...30
எதிர்கால நோக்கு 30
பணிக்கூற்று 30
குறிக்கோள் வாசகம் 30
தத்துவம் 30
இலக்கு கள் 30
தந்ரோபாயங்கள் 30
மதிப்பீடுகள் 30
CAASL முதன்மை இலக்குகள் 31
எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள் 31
வெளியீடுகள் 32
மேற்பார்வை விடயத்துறை ...33
இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் நிருவாக மற்றும் பொறுப்புக்கள்...38
அதிகார சபையின் செயற்பாடுகள் 38
பணிப்பாளர் சபை 38
அதிகார சபையின் நிறைவேற்று அதிகாரங்கள் 38
அதிகார சபையின் குழு 39
பணியாளர் சபையின் குழு 39
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு 39
NGAP இலங்கை வேலைத்திட்டம் - தேசிய குழு 40
சிவில் விமான சேவை அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு 41
பங்காளர் தரப்பினருடனான உறவினைப் பேணல். 41
அதிகார சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் பொறுப்பு 41
பொறுப்புக் கூறும் செயற்பாடுகள் 41
ஆர்வ ரீதியிலான முரன்பாடுகள் 41
உள்ளகக் கணக்காய்வு 41
பிரமாணக் குறிப்பு தேவைகளுக்கிணைவான செயற்பாடுகள் 42
விழுமியச் செயற்பாடுகள் 42
சிரேஷ்ட முகாமைத்துவக் கட்டமைப்பு 42
செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவம் ...44
பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் 45
CAASL இன் கூட்டம் 45
விபத்து ஆய்வுப் பிரிவு 45
சட்டம் மற்றும் வலுவூட்டல் பிரிவு 46
DGCA இனால் வெளியிடப்பட்ட பொது அறிவித்தல் 47
கௌரவ அமைச்சினால் விடுக்கப்பட்ட கட்டளைகள் 47
தர மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு 47
ஆராய்ச்சி, அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் விசேட வேலைத்திட்டப் பிரிவு 48
வான்பரப்பு மற்றும் பாதுகாப்பு மேற்பார்வைக் கிளை...56
விமான சேவை பாதுகாப்புப் பிரிவு 56
விமானத் தளப் பிரிவு 58
விமானக் கையாளுகைப் பிரிவு 61
வானியல் தற்காப்பு மேற்பார்வைக் கிளை ...65
பயிற்சி ஒழுங்கமைப்பு மற்றும் தனிநபர் அனுமதிப்பத்திரப் பிரிவு 65
வானியல் செயற்பாட்டுப் பிரிவு 66
விமானங்களைப் பதிவு செய்தல் மற்றும் விமானத் தகைமைப் பிரிவு 69
கூட்டிணைந்த செயற்பாடுகள் மற்றும் பொருளாதார மேற்பார்வைக் கிளை ...70
விமானப் போக்குவரத்து மற்றும் பொருளாதார மேற்பார்வைக் கிளை 70
மானித வள மற்றும் அலுவலக முகாமைத்துவப் பிரிவு 77
வருமானம் மற்றும் நிதி முகாமைத்துவப் பிரிவு 83
பிரதான செயற்சாதனைச் சுட்டி - 2017 ...85
CAASL இன் செயற்சாதனைகள் - 2017 85
போக்குவரத்துத் தகவல்கள் 89
CAASL நிதி வெளிப்பாடுகள் - 2017 ...92
கணக்காய்வாளர் அறிக்கை...116
கணக்காய்வாளர் அறிக்கைக்கான பதில் ...128

# சுருக்கமான சொற்றொடர்கள்

| | | |
|---|---|---|
| AE | - | விமானத் தளங்கள் |
| ANS | - | வான்செலவுகள் சேவை |
| AASL | - | விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்துச் சேவைகள் (இலங்கை) கம்பனி |
| AIU | - | விபத்து விசாரனை அலகு |
| L & EU | - | சட்டம் மற்றும் அமுலாக்கல் பிரிவு |
| ADG | - | மேலதிக பணிப்பாளர் நாயகம் |
| AME (BL) | - | வானூர்திப் பராமரிப்புப் பொறியியலாளர் (அடிப்படை அனுமதிப் பத்திரம்) |
| AML | - | வானூர்திப் பராமரிப்பு அனுமதிப் பத்திரம் |
| AMO | - | அங்கீகரிக்கப்பட்ட பராமரிப்பு அமைப்பு |
| AMT | - | வானூர்தி பராமரிப்புத் தொழில்நுட்ப கலைஞர் |
| ANR | - | வான்செலவுகள் ஒழுங்குக் கோவை |
| AOC | - | வான் செயற்பாட்டாளர் சான்றுப் பத்திரம் |
| AS | - | வானியல் சேவைகள் |
| ASN | - | விமானப் போக்குவரத்து பாதுகாப்பு அறிவித்தல்கள் |
| AT | - | வான் போக்குவரத்து |
| ATC | - | வான் நெரிசல் கட்டுப்பாடு / வான் நெரிசல் கட்டுப்பாட்டாளர் |
| Av.Sec. | - | விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு |
| AW | - | வான் தகைமை |
| Aw E | - | வான் தகைமைப் பொறியியலாளர் |
| BIA | - | பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் |
| CAASL | - | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை |
| CADEC | - | சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்வியூட்டற் குழு |
| CEO | - | பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் |
| COSCAP-SA | - | செயற்பாட்டுப் பாதுகாப்பு மற்றும் தொடர்ச்சியான வான்தகைமையினை விருத்தி செய்வதற்கான தெற்காசிய ஒத்துழைப்பு வேலைத்திட்டம் |
| C of R | - | பதிவுச் சான்றிதழ் |
| D | - | பணிப்பாளர் |
| DDG/ASR | - | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (வான்பரப்பு மற்றும் பாதுகாப்பு ஒழுங்கு விதிமுறைகள்) |
| DDG/CAER | - | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (கூட்டாண்மை விவகார மற்றும் பொருளாதார கட்டுப்பாடுகள்) |
| DDG/FSR | - | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (விமானப் பாதுகாப்பு ஒழுங்கு விதிமுறைகள்) |
| D/AED | - | பணிப்பாளர்/ விமானத்தளம் |
| D/ANS | - | பணிப்பாளர்/ விமானச் செயற்பாட்டுச் சேவைகள் |
| D/A Ops | - | பணிப்பாளர்/ விமானச் செயற்பாடுகள் |
| D/ARAW | - | பணிப்பாளர்/ விமானச் செயற்பாடுகள் மற்றும் பதிவுகள் |
| D/ATER | - | பணிப்பாளர்/ விமானப் போக்குவரத்து மற்றும் பொருளாதாரக் கடப்பாடுகள் |
| D/Av S | - | பணிப்பாளர்/ விமானப் பாதுகாப்பு |
| D/HROM | - | பணிப்பாளர்/ மனித வள மற்றும் அலுவலக முகாமைத்துவம் |
| D/RFM | - | பணிப்பாளர்/ வருமானம் மற்றும் நிதி முகாமைத்துவம் |
| D/TOPL | - | பணிப்பாளர்/ தனியார் அனுமதிப்பத்திரம் மற்றும் பயிற்சி ஒழுங்குகள் |
| D/RDSP | - | பணிப்பாளர்/ விசேட செயற்திட்ட ஆய்வு, அபிவிருத்தி |
| D/QIA | - | பணிப்பாளர்/ தர மற்றும் உள்ளகக் கணக்காய்வு |
| DG | - | ஆபத்தான பொருட்கள் |
| DGCA | - | சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம் |
| FIR | - | விமானப் பறப்புத் தகவல் வலயம் |
| FS | - | விமானப் பறப்புப் பாதுகாப்பு |
| IA | - | உள்ளகக் கணக்காய்வு |
| ICAO | - | சர்வதேச விமானப் போக்குவரத்து அமைப்பு |
| PBN | - | விமானப் போக்குவரந்து சார்ந்த முன்னேற்றங்கள் |
| FPP | - | விமான ஒழுங்கு விதிமுறைத் திட்டங்கள் |
| MRIA | - | மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் |
| NCASP | - | தேசிய சிவில் விமான சேவை போக்குவரத்து வேலைத்திட்டங்கள் |
| PEL | - | தனிநபர் அனுமதிப் பத்திரங்கள் |
| RPK | - | பிரயாண கிலோமீற்றருக்கமைய வருமானம் |
| RTK | - | கிலோமீற்றருக்கமைய வருமானம் |
| SARPs | - | தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட நடைமுறைகள் |
| SARI | - | தெற்காசிய பிராந்திய முன்னெடுப்பு |
| SLAS | - | இலங்கை கணக்கீட்டு நியமங்கள் |
| SLCAP | - | இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து முறைமைகள் |
| SLFRS | - | இலங்கை நிதியிடல் அறிக்கையிடல் நியமங்கள் |
| RDPSP | - | ஆராய்ச்சி, பயிற்சித் திட்டங்கள் மற்றும் விசேட வேலைத்திட்டங்கள் |
| SMS | - | பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை |
| SSP | - | தேசிய பாதுகாப்பு திட்டம் |
| USAP | - | உலகளாவிய பாதுகாப்பு சோதனை வேலைத்திட்டம் |
| USOAP | - | உலகளாவிய பாதுகாப்பு மேற்பார்வை சோதனை வேலைத்திட்டம் |

# விபரக்கொத்து

| | | |
|---|---|---|
| **தலைமை அலுவலகம்** | : | இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை<br>இல. 152/1, மினுவன்கொட வீதி,<br>கட்டுநாயக்கா |
| | | தொலைபேசி : 94-11-2304632, 94-11-2358800<br>தொலைநகல் : 94-11-2304644<br>மின்னஞ்சல் : info@caa.lk<br>இலத்திரணியல் : www.caa.lk<br>தபால் முகவரி : த.பொ.இலக்கம் 535, கொழும்பு<br>தந்தி முகவரி : AIRCIVIL<br>AFTN முகவரி : VCCCYAYX |
| **கட்டுநாயக்கா அலுவலகம்** | : | இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை<br>எப்.டி 11, வெளியேறும் பிரிவு<br>பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கா |
| | | தொலைபேசி : 94-11-2252269<br>தொலைநகல் : 94-11-2252269 |
| **மத்தளை அலுவலகம்** | : | இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை<br>மத்தளை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம்<br>மத்தளை |
| | | தொலைபேசி : 94-47-7510530<br>தொலைநகல் : 94-47-7510541 |
| **விமானத் தகைமை உப அலுவலகம்** | : | இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை<br>கொழும்பு விமான நிலையம்<br>இரத்மலானை |
| | | தொலைபேசி : 94-11-3135828<br>தொலைநகல் : 94-11-2635756 |
| **கணக்காய்வாளர்** | : | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் கணக்காய்வாளர் நாயகம் |
| **சட்டத்தரணிகள்** | : | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் சட்டமா அதிபர் |
| **வங்கியாளர்** | : | இலங்கை வங்கி |
| **காப்புறுதியாளர்** | : | MBSL காப்புறுதி கம்பனி லிமிட்டட் |



"அனைவருக்கும் ஆபத்தற்ற ஆகாயம்"





## தலைவரின்
மீளாய்வு

தேசிய வான்பரப்பு தேசத்தின் பெரும் சொத்தாகும். பாதுகாப்பு மற்றும் வினைத்திறன்மிக்க வான்பரப்பு சகல காலங்களிலும் நாட்டின் நலனுக்கு மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு உயர்ந்தபட்ச பிரதிலாபங்களை வழங்கும் 2017 ஆம் ஆண்டிலும் சிவில் விமான சேவை அதிகார சபை,

**2017** ஆம் ஆண்டுக்குள் இலங்கையைப் போன்று ஆசிய பசுபிக் வலயத்தில் சிவில் விமான சேவைக் கைத்தொழில் பல்வேறுபட்ட அதிசிறந்த அடைவு மட்டங்களைக் காண முடிந்தது. 2017 ஆம் ஆண்டுக்குள் சர்வதேச விமானப் போக்குவரத்து தொடர்பாக முழுமையாக பிராந்திய நிலைமைகள் குறித்து கருத்திற் கொள்ளும் போது அதன் வருமானம் பயணிகள் கிலோ மீற்றர் 9.6% அளவு வரை மிகவும் உயரிய விகிதாசாரத்தில் விருத்தியடைந்து காணப்பட்டது. அத்துடன் இவ் வலயத்திற்கு சர்வதேச விமானப் போக்குவரத்து சந்தையில் இரண்டாவது மிகப்பெரிய சந்தைப் பங்கான 29% கிடைக்கப் பெற்றிருந்தது.

ஆசிய பசுபிக் வலயத்தின் சிவில் விமான சேவைகள் மூலம் உருவாகும் பொருளாதார அழுத்தங்கள் தொடர்பில் கருத்திற் கொள்ளும் போது இவ் வலயத்தின் விமானப் போக்குவரத்து பிரிவு 30 மில்லியனுக்கு மேற்பட்ட நபர்களுக்காக சேவைக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் மொத்தத் தேசிய உற்பத்திற்கு (GDB) 630 மில்லியன் அ.டொருக்கு மேற்பட்ட அளவு பங்களிப்புச் செய்துள்ளது.

2017 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதத்தில் சைனா சதோன் எயார்லைன்ஸ் கம்பனி கொழும்பு வரை அவர்களின் சேவையை ஆரம்பித்தனர். ஒக்டோபர் மாதம் தொடக்கம் ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் கம்பனி மெல்போன் வரை நாளாந்தச் செயற்பாடுகளை ஆரம்பித்ததுடன் 2017 ஆகஸ்ட் மாதத்தில் எயார் இந்தியா கம்பனி வாரனாசியிலிருந்து கொழும்பு வரை புதிய விமானப் போக்குவரத்து சேவையை ஆரம்பித்தது.

இவ்வாண்டுக்குள் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை ICAO விமானப் போக்குவரத்து சேவை உடன்படிக்கை நிகழ்வுக்கு (ICAO) அனுசரனை வழங்கியது. வெளிநாட்டு இராட்சியங்கள் மற்றும் 66 சர்வதேச அமைப்புக்களிலிருந்து வருகைதந்த 426 பிரதிநிதிகள் பங்கேற்ற இந்த நிகழ்வு வெற்றிகரமான ஒரு நிகழ்வாக அமைந்தது. இவ் உடன்படிக்கை செய்யும் நிகழ்வின் போது அதில் பங்கேற்ற இராட்சியங்களுக்கிடையே இருதரப்பு விமானப் போக்குவரத்து தொடர்பான 456 பேச்சுவார்த்தைகள் நடாத்தப்பட்டதாகவும் இரு தரப்பு உடன்படிக்கை மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கை (MOUS) 420 இனை கைச்சாத்திட அல்லது புதுப்பிக்கப்பட்டதாகவும் சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பு ICAO அறிக்கைப் படுத்தியுள்ளது. இதன் போது இலங்கைக்கு 31 இரு தரப்புப் பேச்சு வார்த்தைகள் நடாத்தி புதிய 07 உடன்படிக்கைகள் உட்பட 02 உடன்படிக்கைகளை செய்து கொள்ள இறுதியாகத் தீர்மானம் எடுக்க முடிந்தது.

தேசிய வானபரப்பு தேசத்தின் பெரும் சொத்தாகும். பாதுகாப்பு மற்றும் வினைத்திறன்மிக்க வான்பரப்பு சகல காலங்களிலும் நாட்டின் நலனுக்கு மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு உயர்ந்தபட்ச பிரதிலாபங்களை வழங்கும் 2017 ஆம் ஆண்டிலும் சிவில் விமான சேவை அதிகார சபை, அமுலில் உள்ளவாறு மேற்பார்வைக் கோட்பாடுக்குள் இப்பெறுமதி வாய்ந்த வளத்தின் பாதுகாப்புடன் மற்றும் பயன்மிக்கதாக முகாமைத்துவத்திற்குட்படுத்துவதற்கும் உயர்ந்தபட்சம் பயன்படுத்துவதாகவும் உறுதிப்படுத்தப்பட்டதுடன் இவ் விடயத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காக முன்னெடுக்க

வேண்டிய சகல செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. இதன் போது நாட்டின் பல்வேறுபட்ட பாதுகாப்பு தேவைகள் தொடர்பிலும் கவனத்திற் கொள்ள வேண்டிய நிலைமை சிவில் விமான சேவைக்கு ஏற்பட்டது.

ICAO வினால் அறிமுகப்படுத்தப்பட்ட சிவில் மற்றும் விமானத் தேவைகளின் இரு வகைகள் தொடர்பில் கவனத்திற் கொள்வது விமான வான்பரப்பின் உற்பத்தித்திறனை பயன்மிக்கதான அடிப்படையில் பயன்படுத்துவதனை உயர்ந்தபட்சம் முன்னெடுக்கும் “சாதகமான அடிப்படையில் வான் பரப்பின் பயன்பாடு” என்ற திட்டத்தை அமுல்படுத்துவதற்காக சிவில் விமான சேவை அதிகார சபை இலங்கை விமானப் படையுடன் நடாத்திய உரையாடல்கள் விருத்தி செய்யப்பட்டன.

தொடர்ந்தும் சிவில் விமான சேவை அதிகார சபை, செயற்சாதனையினை அடிப்படையாகக் கொண்ட அசைவுகள் (PBN) மற்றும் ADS-B இலங்கையில் அடுல்படுத்துவதற்காக வ/ப விமான நிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனிக்கு உதவிகள் வழங்கப்பட்டன. 2017 ஆம் ஆண்டில் MRIA மற்றும் PBN அமுல்படுத்தப்பட்டதுடன் தற்போது சர்வதேச ஓடுபாதைக்கு PBN எட்டுவதை அமுல்படுத்தும் ICAO பிராந்திய இலக்குடன் இலங்கை 100% இசைவுடன் செயற்பட வேண்டும்.

இவ்வாண்டுக்குள் இலங்கையில் ரோனர் செயற்பாடுகள் துரிதமாக வளர்ச்சியடைந்தது. இவ் ரோனர் செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்காக இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை புதிய ரோனர் கோவைகளை அமுல்படுத்தி இலங்கையில் ரோனர் கோவைகள் தொடர்பாக பொதுமக்களை அறிவுறுத்தும் நோக்குடன் அறிவுறுத்தல் வேலைத்திட்டங்களும் நடாத்தப்பட்டன.

2017 ஆம் ஆண்டில் வான்பரப்பிற்கு இணைவாக வினைத்திறன்மிக்க பயன்பாடு மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்குட்படுத்தப்பட்டுள்ளது. இது எவ்வாறாக இருப்பினும் வான்பரப்பின் அபிவிருத்தி தொடர்ச்சியான செயற்பாடாக அமைந்துள்ளது.

மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டில் ஜனவரி 05 தொடக்கம் ஏப்ரல் 06 வரையான காலப்பகுதிக்குள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் (BIA) ஓடுபாதையின் மேற்பரப்பு மீளப் புணரமைக்கப்பட்டது. இவ்வாறு இவ் ஓடுபாதை 1986 ஆம் ஆண்டில் புணரமைக்கப்பட்டு அவ்வாண்டில் இது தொடர்பான நிர்மானப் பணிகளை பூர்த்தி செய்த பயன்படுத்தப்பட்டதன் பின்னர் முதற் தடவையாகவே புனரமைப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இது நீண்ட காலத் தேவையாகும். ஓடுபாதையின் மேற்பரப்பினை மீளப் புணரமைக்கும் செயற்பாடுகள் தொடர்பில் மிக நெருக்கமான மேற்பார்வைகளை முன்னெடுத்து இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை அதனுடன் தொடர்புபட்ட பங்காளர்களுடன் நாளாந்தம் கூட்டங்களை நடாத்தியது. இதற்கு மேலதிகமாக ஓடுபாதையின் மேற்பரப்பு மீளப் புணரமைக்கப்பட்ட கால எல்லைக்குள் பயன்படுத்துவதற்காக கொள்கை மற்றும் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறை ஆவணமும் தயாரிக்கப்பட்டது. வான் பரப்பின் ஓடுபாதையின் மேற்பரப்பை மீளப் புணரமைப்பது சார்ந்த பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் விமானக் கையாளுகைச் செயற்பாடுகள் தொடர்பில் எழுந்துள்ள பாதுகாப்பு அபாய நிலைமைகளை கட்டுப்படுத்துவதற்கும் இக்காலத்திற்குள் விமானங்களில் உயர்ந்தபட்ச எண்ணிக்கைக்கு வசதிகளை வழங்குவதற்கும் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை (CAASL) இற்கு உதவிகள் வழங்கப்பட்டன.

CAASL இன் மீள் கட்டமைப்பு செயற்பாடுகளுக்கு அமைவாக 2017 ஆம் ஆண்டு மே மாதத்தில் சட்டத்தை வலுவூட்டும் பிரிவு தாபிக்கப்பட்டது. CAASL இன் சட்டங்கள் மற்றும் வலுவூட்டல் பணிகளுக்குரியதாக செயற்பாடுகளை நவீனமயப்படுத்துவது L & E பிரிவின் பிரதான நோக்கமாகும்.

2017 ஆம் ஆண்டில் CAASL இன் மறுசீரமைப்பு ஒழுங்கமைப்புக் கட்டமைப்பின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக CAASL இனால் புதிதாக 36 ஊழியர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். இதற்கமைய CAASL இன் மொத்த ஊழியர் எண்ணிக்கை 172 ஆகும். இப்பதவிகளில் அனேகமானவைகள் தொழில்நுட்பத் துறையின் பாதுகாப்பு மேற்பார்வை பணிகளுக்காக பரிசோதகர் பதவி மற்றும் கூட்டிணைந்த பிரிவின் உதவி முகாமைத்துவ பதவியுமாகும். 2017 ஆம் ஆண்டில் இப்புதிய ஊழியர்களுக்கு அடிப்படைப் பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன் தற்போது இவர்கள் அனைவரும் CAASL இல் சேவையாற்றுகின்றனர். CAASL இனால் பெரும் எண்ணிக்கையானோர் ஒரே தடவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

2017 நிதியாண்டு நிறைவடையும் போது 1,993 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டது. இதற்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது இது 17% அதிகரிப்பாகும். 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது செலவினம் 21% தினால் அதிகரித்தது. இதற்குப் பிரதான காரணமாக அமைந்தது ஊழியர் எண்ணிக்கையின் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டமையாகும்.

ஆண்டுக்குள் இலங்கை சிவில் விமான சேவைக்கு வழங்கப்பட்ட ஒத்துழைப்பிற்காக கௌரவ போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சருக்கும் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் செயலாளருக்கும் பணியாளர் சபைக்கும் நன்றியைத் தெரிவிக்க இதனை வாய்ப்பாகக் கொள்கிறேன். இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் தலைவராகச் செயற்பட்டு அதன் பணிகளை முன்னெடுப்பதற்காக எனக்கு முழுமையாக ஆதரவினையும் ஒத்துழைப்பினையும் வழங்கியமைக்காக CAASL இன் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களுக்கும் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் மற்றும் ஊழியர்களுக்கும் எனது இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஆனந்த விமலசேன**
தலைவர்
இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை



## ஆனந்த விமலசேன

## தலைவர்

## இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை

### சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரின் மீளாய்வு



தேசிய வான்பரப்பு தேசத்தின் பெரும் சொத்தாகும். பாதுகாப்பு மற்றும் வினைத்திறன்மிக்க வான்பரப்பு சகல காலங்களிலும் நாட்டின் நலனுக்கு மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு உயர்ந்தபட்ச பிரதிலாபங்களை வழங்கும் 2017 ஆம் ஆண்டிலும் சிவில் விமான சேவை அதிகார சபை,

### உலகளாவிய நிலைமைகள்

2017 ஆம் ஆண்டில் சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்தின் பாதுகாப்பு, வினைத்திறன் மற்றும் சூழலை தொடர்ச்சியாக விருத்தி செய்வதன் மூலம் அத்துறையில் பாரிய முன்னேற்றங்களின் நிலையான தன்மை காட்சிப்படுத்தப்பட்டது. இந்த நீடித்த நிலையான தன்மை தேசிய, பிராந்திய மற்றும் உலகளாவிய மட்டங்களில் கூட்டு முயற்சி மற்றும் ஒத்தழைப்புக்களின் பயன்களாகும். தற்போது அபிவிருத்தி செய்யப்படும் உலகளாவிய பொருளாதார நிலைமையின் உதவியுடன் விமானப் போக்குவரத்திற்கான கேள்வியின் அதிகரிப்புக்கள் தொடர்சியான முன்னேற்றங்களை எட்டியுள்ளன. இந்நிலைமை ஆண்டு பூராகவும் தொடர்ச்சியாகக் காணப்பட்டன. 2017 ஆம் ஆண்டுக்காக உலகின் உண்மையான மொத்தத் தேசிய உற்பத்தியில் (புனூ) வளர்ச்சி 2.7மூ என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது 2016 ஆம் ஆண்டில் 2.4மூ அதிகரிப்பை விடக்கூடிய அதிகரிப்பு வேகமாகும். புனூ விருத்தி இவ்வாறு அதிஉயரிய மட்டத்தை எட்டும் போது முன்னேற்றகரமான பொருளாதாரத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளும் அதிகரித்த ஏற்றுமதிக் கோரிக்கைகள் காரணமாக முன்னேற்றமடைந்து செல்லும் சந்தையினை அபிவிருத்தி செய்து காணப்படும் பொருளாதாரத்தை தற்போது இருக்கும் நிலைமைக்கு மாற்றியமைக்கும் காரணிகளை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது.

சர்வதேச சிவில் விமன சேவை அமைப்பு ICAO வினால் வெளியிடப்பட்ட கூட்டு புள்ளிவிபர ஆவணங்களுக்கமைய 2017 ஆம் ஆண்டு விமான சேவைக் கைத்தொழில் மூலம் உண்மையாக ஆவணப்படுத்தப்பட்ட விமானப் போக்குவரத்து சேவைப் பயணிகளின் புதிய சாதனையான 4.1 பில்லியன் பயணிகளை அழைத்துச் செல்ல முடிந்தது. 2016 ஆம் ஆண்டு எண்ணிக்கையுடன் ஒப்பீடு செய்யும் போது இது **7.1%** அதிகரிப்பாகும். உலகளாவிய அடிப்படையில் விமானங்கள் புறப்பட்டுச் செல்லும் எண்ணிக்கையில் அண்மித்த அடிப்படையில் 37 மில்லியன் ரூபா வரை அதிகரித்ததுடன் உப ஆவணப்படுத்தப்பட்ட வருமானம் பயணிகள் கிலோமீற்றர் எண்ணிக்கையாக வெளியிடப்பட்ட உலகின் பிரயாணிகள் கேந்திர நிலையத்தினால் **RPK** ஈட்டிய 7.7 திரில்லியன் அண்ணளவாக **7.6 %** தினால் அதிகரித்துக் காணப்பட்டது. கடந்த ஆண்டில் எல்லைப் பிரதேசம் ஊடாக பயணித்தல் 1.2 பில்லியன் என்ற உலகின் சுற்றுலாப் பிரயாணிகளின் அரைப்பகுதிக்கு மேற்பட்டோர் விமானம் மூலம் அழைத்துச் செய்யப்பட்டுள்ளனர். எரிபொருள் விலை குறைவடைந்துள்ளமையினால் வீழ்ச்சியடைந்த விமானக் கட்டணம் காரணமாகவும் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது ஒப்பீடு செய்யப்பட்ட அளவையேனும் குறைந்த மட்டத்திலேனும் விமானப் போக்குவரத்து விருத்தியினை தொடர்ச்சியாக மேற்கொள்ள ஊக்கமளிக்கப்பட்டது.

உள்நாட்டு உபஆவணப்படுத்தப்பட்ட விமானப் போக்குவரத்து சேவை தொடர்பில் கருத்திற் கொள்ளும் போது 2017 ஆம் ஆண்டு மொத்த சந்தை **7.0%** தினால் அதிகரித்தது. இது 2017 ஆம் ஆண்டில் பதிவான **6.7%** தை தாண்டிய வளர்ச்சியாகும். இந்தியா மற்றும் சீனா (விசேடமாக **20.0%** வளர்ச்சியுடன்) பலம் பொருந்திய கேள்விகள் காரணமாக 2017 ஆம் ஆண்டில் ஆசிய பசுபிக் வலயத்தில் **10.6%** பலம் பொருந்திய வளர்ச்சிகளும் இடம்பெற்றன். 2017 ஆம் ஆண்டில் வட அமெரிக்க வலயத்தின் வளர்ச்சி 2016 ஆம் ஆண்டை விட குறைந்த வேகத்தினால் அதாவது **3.8%** மாக காணப்பட்டது.

இருப்பினும் இதற்கு முன்னர் உலகில் உபஆவணப்படுத்தப்பட்ட உள்நாட்டு விமானப் போக்குவரத்துச் சந்தையும் பாரிய பகுதி, அதாவது **41%** தினால் சமமானதாக அடங்கியிருந்தது ஆசிய பசுபிக் மற்றும் வட அமெரிக்கா ஆகிய இரு வலயங்களிலாகும்.

குறைந்த செலவு கொண்ட விமானப் போக்குவரத்துக் கம்பனி **(LCCs)** உலகின் பொதுவான வளர்ச்சி வேகத்தை விடக் கூடுதலான வேகத்தினால் வளர்ச்சியடைந்து காணப்பட்டதுடன் விசேடமாக அபிவிருத்தி அடைந்து செல்லும் பொருளாதாரத்தின் அதற்குரிய சந்தைப் பகுதியினை விருத்தி செய்யும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெற்றன. 2017 ஆம் ஆண்டில் குறைந்த செலவினம் விமானப் போக்குவரத்து கம்பனியினால் 12 பில்லியன் பயணிகள் அழைத்துச் செல்லப்பட்டதாகவும் இவ் அளவு உலகின் உப ஆவணப்படுத்தப்பட்ட பயணிகளில் முழுமையான எண்ணிக்கையில் சுமார் **30%** எனக் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. **LCCs** இனால் அழைத்து வரப்பட்ட மொத்தப் பயணிகளின் எண்ணிகையில் **33%** ஐரோப்பாவின், **LCCs** இனால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளதுடன் ஆசிய பசுபிக் மற்றும் வடஅமெரிக்க வலயங்களும் தொடராக **31%** மற்றும் **26%** அடங்கியிருந்தன.

விமானப் போக்குவரத்திற்காக கேள்விகள் அதிகரிக்கும் வேளையில் துரிதகதியில் கைத்தொழிலின் கொள்ளளவில் விருத்திகள் இடம்பெற்ற பயன்பாட்டு ஆசனங்கள் கிலோமீற்றர் **(ASK)** என வெளியிடும் உலகின் விமானப் போக்குவரத்துக் கம்பனியினால் உள்நாட்டு சந்தைக்கு சமர்ப்பிக்கப்படும் முழுமையான கொள்ளளவு 2017 ஆம் ஆண்டில் **6.4%** தினால் அதிகரித்தது. இதன் பயனாக முழுமையான பயணிகள் பொறுப்பு **(Load Factor) 0.9%** தினால் வளர்ச்சியடைந்து **81.2%** சாதனை மட்டத்தை எட்டியது. விமானப் போக்குவரத்து சேவையினை விருத்தி செய்யும் போது அழுத்தங்களுக்கு உட்பட்டமையினால் பொறுப்பில் குறைவுகள் பதியப்பட்ட ஒரேயொரு வலயம் மத்திய கிழக்கு வலயமாகும். ஆபிரிக்கா **70.8%** தொடக்கம் வட அமெரிக்கா **83.4%** வரை பொறுப்புக்கள் ஒவ்வொரு வலயங்களுக்குமிடையே மாற்றமடைந்து செல்கின்றது.

அபிவிருத்தி அடைந்து செல்லும் உலகளாவிய பொருளாதார நிலைமைகள் மற்றும் ஏற்றுமதி உட்பட இறக்குமதி கட்டளைகளை விருத்தி செய்வதில் காணப்படும் உலக வர்த்தகத்தின் பலத்துடன் விமான சரக்குப் பொருட்களைக் கொண்டு செல்ல 2017 ஆம் ஆண்டில் பலமுடன் விருத்தி செய்யப்பட்டது. விமான சரக்குப் பொருள் தொன் கிலோமீற்றர் **(FTK)** எனக் கணிப்பீடு செய்யப்படும் உலகில் அட்டவணைப்படுத்தப்பட்ட விமான சரக்குப் பொருள் கொண்டு செல்லும் செயற்பாடுகள் 2017 ஆம் ஆண்டில் பலமடைந்து **9.5%** வளர்ச்சியை எட்டியது. இது **3.8%** என்ற அடிப்படையில் 2016 ஆம் ஆண்டு இடம்பெற்ற வளர்ச்சியுடன் ஒப்பீடு செய்யும்போது குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் எட்டப்பட்டது. முழுமையான விமான சரக்குப் பொருள் அளவில் அணமித்த அளவு **87%** தை பிரதிநிதித்துவப்படுத்தும் சர்வதேச விமான சரக்குப் பொருள் பிரிவு 2016 ஆம் ஆண்டில் காணப்பட்ட **3.7%** வளர்ச்சி தொடக்கம் **10.3%** வரை அதிகரித்துக் காணப்பட்டது. அத்துடன் உபஆவணப்படுத்தப்பட்ட சர்வதேச சரக்கு விமானப் பொறுப்பின் வளர்ச்சி வேகம் 2016 ஆம் ஆண்டில் காணப்பட்ட **53%** திலிருந்து 2017 ஆம் ஆண்டில் **55%** வரை அதிகரித்தது.

2017 ஆம் ஆண்டில் ஜெட் எரிபொருள் விலை (பொதுவாக) 2016 ஆம் ஆண்டை விட அதிகரித்தது அவ்வாறு இருந்தபோதிலும் இதன் விலை 2016 ஆம் ஆண்டுக்கு முன்னைய 10 ஆண்டுகளுக்குள் மேற்பார்வைக்குட்படுத்தப்பட்ட விலைகளை விடக் குறிப்பிடத்தக்களவு குறைந்த மட்டம் காண்பிக்கப்பட்டது. இந்நிலைமையில் விமானப் போக்குவரத்து வளர்ச்சியில் விமானப் போக்குவரத்துக் கம்பனிகளுக்கு அவர்களின் செயற்பாட்டு இலாபம் அண்மித்த அளவில் 2016 ஆம் ஆண்டில் காணப்பட்ட மட்டத்தில் நிலைப்படுத்த உதவியாக அமைந்தது. 2017 ஆம் ஆண்டு இறுதியளவில் விமானப் போக்குவரத்துக் கம்பனியின் கைத்தொழில் செயற்பாடுகள் 60 பில்லியன் அ.டொலருக்கு அண்மித்ததாக பதிவாகிய செயற்பாட்டு இலாபம் **8.0%** செயற்பாட்டு உள்ளீடுகள் **(Margin)** முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அடிப்படைத் தகவல்கள் ஊடாக வெளிவந்துள்ளது. கைத்தொழிலின் தேறிய இலாபம் 36 பில்லியன் அ.டொலர் என்றும் இந்த இலாபம் அண்மித்த அளவின் **45%** வட அமெரிக்க வலயத்தின் விமானப் போக்குவரத்துக் கம்பனிகள் மூலம் ஈட்டப்பட்டுள்ளதாக பதியப்பட்டுள்ளது.

## பிராந்திய நிலைமைகள்

ஆசிய, பசுபிக் வலயத்திற்கு உலகளாவிய விமானப் போக்குவரத்து சந்தையின் இரண்டாவது மிகப் பெரிய பகுதியான **29%** கிடைக்கப் பெற்றிருந்ததுடன் இது **9.6%** வேகத்தில் வளர்ச்சியடைந்தது. இவ் வளர்ச்சி வேகம் உலகின் சகல வலயங்களுக்கிடையேயும் இரண்டாவது அடிப்படையில் பலம்மிக்க வளர்ச்சி வேகமாகக் காணப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் ஆசிய பசுபிக் வலயத்தின் விமான சேவைச் செயற்பாடுகள் அதன் சமூக பொருளாதார வளர்ச்சி தொடர்பில் மிகவும் தீர்க்கமான காரணியாக மாற்றமடைந்தது. விமான சேவைக் கைத்தொழில் வலயத்தில் மொத்த தேறிய உள்நாட்டு உற்பத்திக்கு **(GDP)** 705 பில்லியன் அ.டொலருக்கு மேற்பட்ட அளவு ஈட்டப்பட்டிருந்ததுடன் 33 மில்லியன் பேர்களுக்கு தொழில் வாய்ப்புக்களை வழங்கி 1.5 பில்லியன் பயணிகளை விமானம் மூலம் அழைத்துச் செல்லவும் முடிந்தது. கடந்த ஆண்டில் வலயத்தில் விமானப் போக்குவரத்து கம்பனியினால் 14 மில்லியன் தொன் விமான சரக்குப் பொருட்களுக்கு மேற்பட்ட அளவு சர்வதேச மட்டத்தில் கொண்டு செல்லப்பட்டது. 2017 ஆம் ஆண்டு இறுதியில் ஆசிய பசுபிக் வலயத்தின் விமானப் போக்குவரத்து கம்பனிகள் உலகில் அழைத்துச் செல்லப்பட்ட விமானப் பயணிகளில் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் இல் ஒரு பகுதியும் (1/3), உலக விமான சரக்குப் பொருள் அளவில் **40%** மும் கையாளப்பட்டிருந்தது.

## உள்நாட்டு நிலைமைகள்

2017 ஆம் ஆண்டு உள்நாட்டு விமானப் போக்குவரத்துக் கைத்தொழில் எந்தவொரு விபத்துக்களும் அற்ற மற்றுமொரு முக்கியத்துவம் மிக்க ஆண்டாகக் காணப்பட்டது. இவ்வாண்டுக்குள் விமானப் போக்குவரத்தின் முழுமையான அபிவிருத்தி ஆண்டு தோறும் காண முடிந்தது. 2017 ஆம் ஆண்டில் பயணிகளின் போக்குவரத்து எண்ணிக்கை (11.3 மில்லியன்) **5.9%** தினாலும் (சரக்குப் பொருள் நகர்வு 265,000) மெ.தொன் **4.5%** தினாலும் (2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது) வளர்ச்சியடைந்தது. 2017 ஆம் ஆண்டில் விமானப் போக்குவரத்து எண்ணிக்கை 64,903 (உப ஆவணப்படுத்தப்பட்ட மற்றும் வேறு வகையிலும்) ஆகும். நாட்டிலுள்ள இரண்டு சர்வதேச விமான நிலையங்களில் கூடுதலான விமானங்கள் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலேயே கையாளப்பட்டது. விமானப் போக்குவரத்தின் அபிவிருத்திக்காக மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின் பங்களிப்பினை மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் மிகக்குறைந்த அளவிலேயே கையாளுகைச் செயற்பாடுகள் இடம்பெற்றன. விமான நிலையத்திலிருந்து ஏற்றுக் கொள்ளக்கூடிய தூர அளவிற்குள் விமானப் போக்குவரத்திற்காக கேள்விகள் கொண்ட கூடுதலான சமூகம் அல்லது கைத்தொழில் வலயங்களில் இன்மையினால் **MRIA** இன் குறைந்த பயன்பாட்டிற்கு பிரதான காரணமாக அமைந்தது.

மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் உள்நாட்டு விமானப் போக்குவரத்திற்கான கேள்வியை கூடுதலான அளவு முன்னேற்றங்கள் காணப்படவில்லை. நாடு தழுவிய ரீதியில் உள்நாட்டு விமான வலையமைப்புக்களை தழுவி நியாயமான விலைக்கு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட பட்டியல்படுத்தப்பட்ட விமான சேவைகள் இன்மையினால் விமானப் போக்குவரத்து வளர்ச்சியில் பின்னடைவுகள் ஏற்படக் காரணமாக அமைந்தது.

வ/ப விமான நிலைய மற்றும் விமான சேவைகள் இலங்கைக் கம்பனி 2017 ஜனவரி 06 தொடக்கம் ஏப்ரல் 06 வரை 03 மாத கால எல்லைகளுக்குள் நாளாந்தம் 08 மணித்தியாலங்கள் வீதம் விமான நிலையத்தை மூடி பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பிரதான ஓடுபாதையின் மேற்பரப்பினைப் புணரமைக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டன. இப்பணிகளின் திட்டங்களை வகுத்தல் மற்றும் நிர்மானப் பணி மேற்பார்வைக்காக **AASL** இனால் நெதர்லாந்து எயார்கோட் கன்சல்டன்ட் **(NACO)** மற்றும் எஞ்சினியரிங் கன்சல்டன்சி லிமிட்டட் **(BCL)** இரு கம்பனிகளின் வர்த்தகப் பங்குடமை, ஓடுபாதையின் மேற்பரப்பினை அமைத்தல் மற்றும் அது சார்ந்த பணிகளை திட்டமிடுவதற்கான ஒப்பந்தத்திற்கு அமைய மேற்கொள்வதற்காக ஒப்பந்ததாரர் என்ற வகையில் சைனா நெசனல்ஏரோ டெக்னோளஜி இன்டர்நேசனல் எஞ்சினியரிங் குரூப் **(CATIC)** மற்றும் சீன சிவில் விமான சேவை அதிகார சபை சன்கை நியு ஈரா எயார்போர்ட் டிசைன் அன்ட் ரிசேவ் இன்ஸ்ரிரியுட் கம்பனி லிமிட்டட் நிறுவனத்தின் வர்த்தக பங்குடமையாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஓடுபாதையினை மீளப் புனரமைப்பதற்கான மொத்தச் செலவினம் 7.2 பில்லியன் ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டதுடன் வ/ப விமான நிலைய மற்றும் விமான சேவை (இலங்கை) கம்பனியினால் அது முழுமையாக நிதியாக்கப்பட்டது.

கட்டுநாயக்க **CAASL** தலைமையகக் கட்டடத்தை நிர்மானிக்கும் பணிகள் 2017 ஜூன் மாதம் நடுப்பகுதியில் பூரணப்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்து. கட்டடத்தை நிர்மானிப்பதற்கான பொறுப்பு வழங்கப்பட்ட அரச பொறியியல் கூட்டுத்தாபனம் இலக்காகக் கொள்ளப்பட்ட தினத்திற்கு நிர்மானப் பணிகளை பூர்த்தி செய்தத் தவறியது. இதனால் அமைச்சரவையினால் அதற்குரிய காலம் 2017 செப்ரெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டது. 03 மாதங்களினால் காலத்தை நீடிக்கும் போது அக்காலப்பகுதிக்குள் நிர்மானப் பணிகளை பூர்த்தி செய்ய ஒப்பந்ததாரர் தவறியமையினால் 2017 டிசம்பர் 31 ஆம் திகதி வரையும் புதிய கட்டடத்தில் அலுவலகத்தை மாற்றியமைக்க இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைக்கு முடியவில்லை.

கௌரவ அமைச்சரின் அலுவலகத்தின் அனுசரனை மற்றும் கைத்தொழில் பங்காளர்களின் மிகுந்த விரிவான பங்களிப்புக்களுடன் தயாரிக்கப்பட்ட தேசிய சிவில் விமான சேவைக் கொள்கையினை வெளியிட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை **(CAASL)** உள்ளிட்ட பணியாளர் சபைக்கு முக்கியத்துவம் வாய்ந்த பணியினை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது. பொதுமக்களின் கருத்துக்களை வினவுவதற்காக தேசிய சிவில் விமான சேவைக் கொள்கை வகுப்பாளர்கள் பத்திரிகையில் விளம்பரங்களைப் பிரசுரித்ததுடன் அதனைத் தொடர்ந்து இறுதி மீளாய்விற்காக கௌரவப் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சரின் தலைமையில் நடாத்தப்பட்ட கைத்தொழில் ஆலோசனைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இறுதியாக அங்கீகரிக்கப்பட்ட தேசிய சிவில் விமான சேவைக் கொள்கை ஆவணத்தை அங்கீகரிப்பதற்காக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

2010 இலக்கம் 14 கொண்ட சிவில் விமான சேவைகள் சட்டத்தின் 09 வது வாசகத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கௌரவ அமைச்சர் சிவில் விமான சேவைச் சட்டத்தின் 2 வது உப ஆவணத்திற்குரிய இரத்மலானை விமான நிலையம் மற்றும் கட்டுநாயக்க விமான நிலையம், 3 வது உப ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய சொத்துக்களும் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைக்கு மாற்றியமைத்து அதற்கமைய பொறுப்புக்கள் வழங்கப்பட்டன.

சர்வதேச உபகரண 04 ஓடுபாதைகள் கட்டுநாயக்க **(04/22)** மற்றும் மத்தள **(05/23)** போன்றன இலங்கையில் அமைந்துள்ளன. **ICAO** வினால் தாபிக்கப்பட்ட பிராந்திய விமானப் போக்குவரத்தின் முன்னணிச் செயற்பாடுகளை பூரண்படுத்தக்கூடிய வகையில் 2017 ஆம் ஆண்டில் இதன் சகல பிரதான ஓடுபாதைகளும் **PBN** எட்டுவதற்கான வசதிகளை வழங்க இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையினால் **CAASL AASL** இற்கு அதிகாரம் வழங்கப்பட்டது. இலங்கை வான்பரப்பில் விமானங்கள் தொடர்பான தேடுதல்களை மேம்படுத்துவதற்காக **ADS - B** அறிகப்படுத்துவதற்காகவும் **AASL** ஆர்வம் காண்பிக்கப்பட்டது. **AASL** இன் சேவையின் ஈடுபடுத்தப்பட்டுள்ள விமானக் கட்டுப்பாட்டாளர்களுக்கு விமானக் கட்டுப்பாட்டுப் பணிகளுக்காக **ADS-B** பயன்படுத்துவது தொடர்பில் இந்தியாவில் இலவசமாக பயிற்சியினை வழங்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன.

மட்டக்களப்பு விமான நிலையம் சிவில் மற்றும் இராணுவப் பிரதேசங்களை தெளிவாக பகிர்ந்து ஒதுக்கியதன் பின்னர் அதன் செயற்பாட்டு நிருவாகப் பொறுப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஒதுக்கும் எல்லைகளைத் தாபிப்பதற்காக **CAASL** இனால் 23 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

2017 டிசம்பர் 04 ஆம் திகதி தொடக்கம் 08 ஆம் திகதி வரை இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் 10 வது விமானப் போக்குவரத்து சேவை உடன்படிக்கை மாநாடு கொழும்பில் நடாத்தப்பட்டது. இம்மாநாட்டில் 65 வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு மேற்பட்ட 425 மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். இவ் அறிக்கையில் எவரிடமும் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இம்மாநாடு இலங்கைக்கு பல்வேறுபட்ட மட்டத்தில் பயன்களைப் பெற்றுத்தந்தமை பாரிய வெற்றியாக அமைந்தது.

மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் **CAASL** இன் அடிப்படைப் பணியாக விமான சேவையின் பாதுகாப்புச் செயற்பாடுகளின் போது தலையீடு செய்யும் அமைப்புக்கள் மற்றும் நபர்களை அடிப்படையாகக் கொண்டு அவர்களை சான்றுப்படுத்தவும், அதற்குப் பின்னர் சோதனைகளை மேற்கொள்வதற்கான செயற்பாடுகளும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டன. செயற்பாட்டாளர்கள், பயிற்சி அமைப்புக்கள் மற்றும் சேவை வழங்குனர்கள் தொடராக அவர்களின் பாதுகாப்பு முகாமைத்துவ முறை **(SMS)** இற்கமைய செயற்படுவதற்கு மேற்பார்வை செய்யும் அரச பாதுகாப்பு வேலைத்திட்டம் **(SSP)** வலுவான முறையில் அமுல்படுத்துவதற்காக பல்வேறுபட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

உதவி முகாமையாளர்கள் / சிவில் விமான சேவைப் பரிசோதகர்கள் போன்ற பல்வேறுபட்ட பதவிகளுக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட 27 இளம் பட்டதாரிகளின் குழுவிற்காக **MRIA** இன் **CAASL** அலுவலகத்தில் தொடர்ச்சியாக 10 மாதங்கள் முழுமையான அடிப்படைப் பயிற்சிப் பாடநெறி நடாத்தப்பட்டது. இப்பாடநெறியில் வெளிக்களச் சுற்றுலா, வானியல் செயற்பாடுகள்

தொடர்பான அடிப்படைப் பயிற்சி, அதிதிகளுக்கான உரை, சமர்ப்பிப்புக்கள், மதிப்பீடுகளை மேற்கொள்ளல் மற்றும் கழியாட்டச் செயற்பாடுகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன. அவர்களுக்கு இப்பாடநெறி மூலம் விமான சேவை தொடர்பான முழுமையான அறிவு கிடைக்கப் பெற்றதுடன் பங்கேற்றோரினால் இந்நிகழ்வு மற்றும் அதன் முக்கியத்துவமும் பாராட்டப்பட்டன.

பயிற்றுவித்தல் மற்றும் மீளப் பயிற்சியளிக்கும் ஏதேனும் அமைப்பின் வெற்றிக்குக் காரணமாக அமையும் பிரதான காரணியாகும். எனவே இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை (CAASL) இன் பதவி வகிப்போருக்கு அப்பதவிக்குரிய கடமைகளை வினைத்திறனுடன் முனனெடுப்பதற்கு தேவையான தேர்ச்சி எவ்வாறு வழங்கப்பட வேண்டும் என்பதை தீர்மானித்து பதவியின் தேர்ச்சியினை விருத்தி செய்யும் ஒழுங்கு விதிமுறைகள் (PCDS) தயாரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

ஊழியர் ஒருவரின் தொழில்சார் முன்னேற்றங்கள் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட ஆவணமாக ஊழியர் தேர்ச்சி அபிவிருத்தி ஒழுங்கு விதிமுறைகள் (ECDS) வெளியிடுவதற்காக எவையேனும் பதவிக்கு ஆட்சேர்ப்புக்களை மேற்கொண்டதற்கமைய அதன் நபருக்குரியதாக இருக்க வேண்டிய தேர்ச்சிகளுக்கமைய உரிய நபர் தொடர்பில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. மீளாவிற்குட்படுத்தப்பட்ட ஆண்டில் அனேகமாக இது தொடர்பான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

கடமைகள் மற்றும் பணிகளை பயன்மிக்கதாக மேற்கொள்ளும் போது அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிகைக்கு பயிற்சி மற்றும் அனுபவம் கொண்ட விமான சேவைத் தொழிலாளர்களை சேவையில் சேர்த்துக் கொள்ளல் மற்றும் அவர்களை சேவையில் நிலைப்படுத்தும் பிரதான சவாலை தொடர்ந்தும் எதிர்கொள்ள வேண்டிய நிலை CAASL இற்கு ஏற்பட்டது.

இவ்வாறான தொழில்சார் சேவைகளில் ஈடுபடுத்தப்படாதுள்ள பயன்மிக்க அரச பாதுகாப்பு மேற்பார்வை முறையினை வெளியிடல் மற்றும் முன்னெடுப்பது CAASL இற்கு சிரமமான பணியாக மாற்றம் பெற்றுள்ளது. இவ் அரச பாதுகாப்பு மேற்பார்வை முறை, சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின் அங்கத்துவ இராட்சியமாக சர்வதேச சிவில் விமான சேவை இணக்கப்பாட்டின் கீழ் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்ற முடியுமா என்பது தொடர்பில் கண்டறிவதற்காக தொடர்ச்சியான அடிப்படைக்கமைய ICAO வினால் நடாத்தப்படும் கிரமமான மற்றும் கட்டாய கணக்காய்விற்குட்படுத்தப்படும் ICAO கணக்காய்வில் சித்தியடையாமை உள்நாட்டு விமான சேவைக் கைத்தொழிலுக்கு மாத்திரமன்றி அரசாங்கத்தின் முழுமையான பொருளாதாரத்திற்கும் பாதிப்புமிக்க திருப்தியற்ற பெறுபேறுகளை எட்டுவதற்கு காரணமாக அமையும். இவ்வாறான பயிற்சிகள் மற்றும் அனுபவங்கள் விமான சேவைத் தொழிலில் குறைவாகக் காணப்படுவதற்கு கீழ்க் குறிப்பிடப்பட்ட பல்வேறு செயற்பாடுகள் காரணங்களாக அமைந்துள்ளன.

- பயிற்சி மற்றும் அனுபவம் கொண்ட பணியாளர் சபை ஓய்வு பெறல்.
- தேவையான தொழில்சார் பயிற்சியினை நாளாந்தம் வழங்குவதற்காக தேசிய வேலைத்திட்டம் இன்மை.
- பயிற்சி பெற்ற ஊழியர்களுக்காக கைத்தொழில் பிரிவுகளுடன் காணப்படும் கடுமையான போட்டி.
- பயிற்சிப் பணியாளர் சபைக்காக வெளிநாடுகளில் சமமான நிறுவனங்களுடன் காணப்படும் போட்டிகள்
- குறைந்த செலவு கொண்ட பயிற்சிக்கான வாய்ப்புக்கள் குறைவாக இருத்தல்.

இந்நிலைமையின் கீழ் CAASL இன் பணிப்பாளர் சபை இம்மாநாடு தொடர்பில் கூடிய கவனம் செலுத்தி அதற்கு போதியளவு மற்றும் நிரந்தர தீர்வுகளை வழங்க முடிந்துள்ளது.

2017 ஆம் ஆண்டில் CAASL இனால் மேற்கொள்ளப்பட்ட பிரதான பணிகள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான சுருக்கம் இங்கு மேலே உள்ள வாசகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2017 ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்காக வழங்கிய பங்களிப்புகளுக்காக இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் மொத்தப் பணியாளர் சபைக்கு நன்றி தெரிவிக்க இதனை வாய்ப்பாகக் கொள்கிறேன்.

அத்துடன் CAASL இன் பணிகளை வெற்றிகரமான நிறைவேற்றுவதற்காக வழங்கிய ஒத்துழைப்புக்கள், வழிகாட்டல்கள் உட்பட உதவிகளுக்காக இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் தலைவருக்கும் உப தலைவருக்கும் பணிப்பாளர் சபையின் சகல அங்கத்தவர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

இறுதியாக இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் என்ற வகையில் எனக்கு வழங்கிய கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு வழங்க உதவிகள் மற்றும் ஒத்துழைப்புகளுக்காக கௌரவ போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சருக்கும் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைப் பிரதி அமைச்சருக்கும் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரின் செயலாளருக்கும் பணியாளர் சபைக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

**திரு. எச்.எம்.சி. நிமல்சிறி**
சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம்
மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்
இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை

# CAASL புக்குத் தோர்ற்றும்

## அறிமுகம்

2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்தின் கீழ் 2002 டிசம்பர் மாதம் 27 ஆம் திகதி இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை தாபிக்கப்பட்டது. இது இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்பின் 154 வது வாசகத்தின் கீழ் உரிய கணக்குகள் கணக்காய்வுப் பணிகளுக்கான அரச தொழில் முயற்சி நிறுவனமாகக் கருதப்படுகின்றது.

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் பிரதான பணிகளாக அமைவது 2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்தினால் 2010 இலக்கம் 14 கொண்ட சிவில் விமான சேவைச் சட்டத்தில் உள்ளடங்கும் பிரதானக் குறிப்பு ஏற்பாடுகளின் கீழ் செயற்பட்ட சர்வதேச சிவில் விமான சேவை அமைச்சு (ICAO) இனால் அங்கீகரிக்கப்பட்ட உரிய சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகளுக்கமைவாக சிவில் விமான சேவையின் பாதுகாப்பு, நம்பகத்தன்மை, வினைத்திறன் மற்றும் கிரமமான செயற்பாடுகள், சிவில் விமான சேவையினால் சூழலுக்கு ஏற்படக்கூடிய அழுத்தங்களை மேற்பார்வைக்குட்படுத்தல் மற்றும் இலங்கை பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி இலங்கை விமான சேவைத் துறையினை தேசிய பொருளாதார வளர்ச்சியின் பிரதான பங்காளியாக மாற்றியமைத்து முன்னோக்கி செல்வதே நோக்கமாகும்.

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை 08 அங்கத்தவர்களைக் கொண்டமைந்துள்ளதுடன் இதில் 05 பேர் சிவில் விமான சேவை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் நியமிக்கப்படுவர். பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், நிதி விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் பிரதிநிதி மற்றும் சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உத்தியோகபூர்வ அதிகாரத்தின் மூலம் CAASL இன் அங்கத்தவர்களாக ஏனைய 03 பேர் சிவில் விமான சேவை விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரினால் நியமிக்கப்படுவர். அமைச்சரவையினால் நியமிக்கப்படும் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் உரிய பிரமானக் குறிப்புகளுக்கமைய CAASL இன் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தராவார்.

நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களின் உத்தியோக பூர்வக் காலம் நியமனத் திகதி தொடக்கம் மூன்று (03) வருடங்களாகும்.

அதிகார சபையின் சிவில் விமான சேவை விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் பொதுவான செயற்பாடுகள் மற்றும் நிருவாகத்திற்குட்படும். தற்போது அமைச்சராகப் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் கௌரவ நிமல் சிறிபால டி சில்வா செயற்படுகின்றார்.

## இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் அங்கத்தவர்கள்

**CAASL இன் 10 வது பணியாளர் சபை (2015.12.10 தொடக்கம்)**

பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் (போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சரினால் நியமிக்கப்பட்ட)

- **திரு. ஆனந்த விமலசேன**
  - CAASL இன் தலைவர்
- **திரு. குசான் டி. அல்வீஸ்**
  - ஜனாதிபதி சட்டத்தரணி,
  CAASL இன் உப தலைவர்
- **பேராசிரியர் டப்.எல்.பி. பெரேரா**
  - CAASL இன் அங்கத்தவர்
- **பொறியியலாளர். சுதர்ம அலக்கந்த**
  - CAASL இன் அங்கத்தவர்
- **கலாநிதி அமிந்த மெத்சில பெரேரா**
  - CAASL இன் அங்கத்தவர்

## பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் (உத்தியோக பூர்வ அதிகாரத்தின் மூலம் நியமிக்கப்பட்ட)

- **பொறியியலாளர் கருணாசேன ஹெட்டிஆரச்சி**
  பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் (2017 ஜூன் 29 வரை)
- **திரு. கபில வைத்தியரட்ன - ஜனாதிபதி சட்டத்தரணி -**
  பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் (2017 ஜூலை 27 தொடக்கம்)
- **திருமதி. அனுலா கரஸ்கம**
  நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் பிரதிநிதி (2017 ஜூன் 29 வரை)
- **திரு. சி.ஜே.கே. பெரேரா**
  நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் பிரதிநிதி (2017 ஆகஸ்ட் 31 வரை
- **திரு. எச்.எம்.சி. நிமல்சிறி**

  இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்



## பணிப்பாளர் சபை


ஆண்டறிக்கை 2017
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

# CAASL இன் 10 வது (ஊக்குவிப்பு) பணிப்பாளர் சபை ஆங்கத்தவர்கள் தொடர்பான தகவல்கள்



**திரு. ஆனந்த விமலசேன**
CAASL இன் தலைவர்

திரு. ஆனந்த விமலசேன 2015 ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் தலைவராக கடமைகளைப் பொறுப்பேற்றார். இந்த நியமனத்திற்கு முன்னர் திரு. விமலசேன வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) கம்பனியின் தலைவராக கடமையாற்றினார். இவர் வ/ப ஆசிரி வைத்தியசாலை கம்பனியின் ஆரம்ப முகாமைத்துவப் பணிப்பாளர், அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் பல பதவிகளை வகித்துள்ளார்.

விஞ்ஞானப் பட்டதாரியான இவர் கணக்காளராவார். தனியார் மற்றும் அரச துறையைப் போன்று நிதித்துறையிலும் விரிவான அனுபவம் இவருக்கு காணப்படுகின்றது. கொழும்பு ஆனந்த கல்லூரியில் கல்வி பயின்ற இவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாவார்.



**திரு. குசான் டி. அல்விஸ்**
CAASL இன் உப தலைவர்

ஜனாதிபதி சட்டத்தரனியான குசான் டி. அல்விஸ் கல்கிசை புனித தோமஸ் கல்லூரியின் பழைய மாணவராவார். இலங்கை சட்டக் கல்லூரியூடாக சட்டப் பட்டத்தைப் பெற்றதன் பின்னர் இவர் 1985/10/21 ஆம் திகதி சட்டத்தரனியாக சத்தியப்பிரமானம் செய்து கொண்டார். சட்டக்கல்லூரியில் இருக்கும்போது இவர் 1982 ஆம் ஆண்டில் ஹெக்டர் ஜயவர்தன தங்கப்பதக்கத்தை பெற்றுள்ளதுடன் 1984 ஆம் ஆண்டுக்காக சட்ட மாணவர் சங்கத்தின் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார்.

இவர் மறைந்த ஜனாதிபதி சட்டத்தரணி ஜே.இ.பி தரனியகல மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி தயாபெரேரா ஆகியோரின் கீழ் பயிற்சி பெற்றுள்ளார். 30 வருடத்திற்கு மேற்பட்ட கால சட்டத் தரனியாக ஈடுபட்டுள்ள இவர் ஆரம்ப நீதிமன்றத்தைப் போன்று மேன்முறையீட்டு நீதி மன்றங்களிலும் கடமையாற்றியுள்ளதுடன் இவர் சிவில் மற்றும் கூட்டுத்தாபன, வர்த்தகம் உட்பட நிருவாகம் சட்டம் தொடர்பில் நிபுனத்துவ அறிவினைப் பெற்றுள்ளார்.

மேலும் இவர் பிணக்குகளைத் தீர்த்தல், கூட்டுத்தாபன சட்டம் உட்பட மேற்பர்வைக் கேட்பாடுகளும் இதனுடன் இணைந்த சேவைகள் தொடர்பில் ஆலோசனைக் வழங்குதல் உட்பட பிணக்குகளைத் தீர்க்கும் செயற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளார்.

2012 நவம்பர் மாதத்தில் இவர் ஜனாதிபதி சட்டத்தரணியாக சத்தியப்பிரமானம் செய்து கொண்டார். 2011 - 2015 ஆம் ஆண்டு வரை இவர் சட்ட ஆணைக்குழுவின் அங்கத்தவராகவும் கடமையாற்றியுள்ளார். அத்துடன் வரி மேன்முறையீட்டு ஆணைக்குழுவின் சட்ட ஆலோசனை சபையின் அங்கத்தவராகவும் கடமையாற்றியுள்ளார்.

தற்போது இவர் அரசியல் யாப்பு மறுசீரமைப்பு தொடர்பான மக்கள் பிரதிநிதிக் குழுவின் அங்கத்தவராவார்.

ஆசிய பசுபிக் வலயத்தின் பிரதான சட்டத்தரணிகள் தொடர்பில் விசேட கட்டுரைகளை வெளியிடும் லண்டன் வெளியீட்டு நிறுவனமான வேம்பர்ஸ் அன்ட் பார்ட்னஸ் இதனால் வெளியிடப்பட்ட “சேம்பர்ஸ் ஏசியா சஞ்சிகையில்” (CHAMBERS ASIA) இவர் தொடர்பில் விசேட மலரை வெளியிட்டமை திரு. டி. அல்விஸ் பெற்ற பாரிய கௌரமாகும்.



**திரு. எச்.எம்.சி. நிமல்சிறி**
சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர் (உத்தியோகபூர்வ அதிகாரத்தின் மூலம் நியமனம்பெற்ற அங்கத்தவர்)

திரு. எச்.எம்.சி நிமல்சிறி அவர்கள் 2002 டிசம்பர் மாதத்தில் தாபிக்கப்பட்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் ஆரம்பம் தொடக்கம் அவர் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் உட்பட பிரதம நிறைவேற்று உத்தியோகத்தராக கடமையாற்றியுள்ளார். 2002 ஜூலை மாதத்தில் பதில் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்படும் வரை அவர் 1987 ஆம் ஆண்டு தொடக்கம் சிவில் விமான சேவைத் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் (செயற்பாடுகள்) பதவி வகித்துள்ளார்.

திரு. நிமல்சிறி அவர்கள் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையைத் தாபிக்க வழிவகுத்த புதிய சட்டக் கோட்பாட்டினை வரைவதைப் போன்று 1950 இலக்கம் 50 கொண்ட விமானப் போக்குவரத்து சட்டமும் மறுசீரமைக்கப்பட்ட 2010 இலக்கம் 14 கொண்ட சிவில் விமான சேவைச் சட்டத்தை சட்டமாக்குவதற்கும், முன்னோடியாக செயற்பட்ட உத்தியோகத்தர் சிலரில் இவரும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின் தரங்கள் மற்றும் பரிந்துரை ஒப்பளவுகளுக்கமைய இலங்கையில் அமுல்படுத்தப்பட்டுள்ள இலங்கையின் சிவில் விமான சேவை மேற்பார்வை தொகுதியினை மறுசீரமைத்து சமகாலப்படுத்துவதற்கும் அவரது தலைமையில் நடடிவடிக்கை எடுக்கப்பட்டது. தமது தொழில்சார் செயற்பாடுகளின் போது தனிநபர் அனுமதிப்பத்திரங்களை வெளியிடல், விமானப் போக்குவரத்து, விமான சேவைப் பாதுகாப்பு மற்றும் விமான சேவைகள் பாதுகாப்பு ஆய்வுகள், பாதுகாப்பு முகாமைத்துவ முறைகள், விமான விபத்துக்கள் மற்றும் சம்பவங்கள் தொடர்பில் ஆய்விற்குட்படுத்துவதும் உரிய விடயங்கள் தொடர்பன பல பாடநெறிகளையும் தொடர்ந்துள்ள திரு. நிமல்சிறி அவர்கள் சிவில் விமான சேவைத் துறையில் விரிவான அறிவு உட்பட அனுபவத்தையும் பெற்றுள்ளார். அவர் ICAO இல் உலகளாவிய பாதுகாப்பு மேற்பார்வை ஆய்வுப் பாடநெறியையும் பாதுகாப்பு முகாமைத்துவ முறை மற்றும் அரச பாதுகாப்பு வேலைத்திட்டத்தின் பயிற்சிப் பாடநெறியை தொடர்ந்துள்ளார்.

சிவில் விமான சேவை தொடர்பில் பல்வேறுபட்ட வலய மற்றும் சர்வதேச சம்மேளனங்களில் பங்கேற்றுள்ள திரு. நிமல்சிறி வெளிநாடுகளுடன் மேற்கொள்ளப்பட்ட இருதரப்பு விமான சேவைகளினதும் உடன்படிக்கை தொடர்பில் தீர்மானிக்கும் பல கலந்துரையாடல்களிலும் அப்போது காணப்பட்ட சிவில் விமான சேவைத்திணைக்களம் மற்றும் அதற்குப் பின்னர் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையையும் பிரதிநித்துவப்படுத்தி கலந்து கொண்டுள்ளார். 2007 ஆம் ஆண்டில் இவர் பிராந்திய ஒத்துழைப்புக்கள் ஊடாக உரிய இராட்சியங்களின் பாதுகாப்பு மேற்பார்வை இயலுமையினை விருத்தி செய்யும் நோக்குடன் தெற்காசியாவின் 07 இராட்சியங்களினால் ஆரம்பிக்கப்பட்ட பிராந்திய வேலைத்திட்டத்தின் இணைப்பாளராகவும் செயற்பட இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட மூன்று வருட கால விடுமுறையின் கீழ் சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின் இரண்டாம் தர நியமனத்தினையும் பெற்றிருந்தார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானமானி (BSC) பட்டத்தைப் பெற்றுள்ள நிமல்சிறி அவர்கள் அப்பல்கலைக்கழகத்தின் கணணி விஞ்ஞானம் தொடர்பிலும் விஞ்ஞானமானி (MSC) பட்டத்தையும் பெற்றுள்ளார். ரஷ்யா யுலினோவிக்ஸ் இல் நடாத்தப்பட்ட தகைமைபெறும் பயிற்சி பாடநெறியைத் தொடர்ந்ததன் பின்னர் இவர் விமான பறப்புச் செயற்பாட்டு உத்தியோகத்தர் அனுமதிப்பத்திரத்தையும் பெற்றுள்ளார். இவர் தொடர்ந்தும் 2004 ஆம் ஆண்டில் ஐக்கிய அமெரிக்கா வெசிங்டன் பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்பட்ட விமானப் போக்குவரத்துப் பாதுகாப்பு மற்றும் தற்காப்பு முகாமைத்துவச் சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டத்தினையும் தொடர்ந்திருந்ததுடன் 2006 ஆம் ஆண்டில் அப்பல்கலைக்கழத்தினால் நடாத்தப்பட்ட விமான போக்குவரத்து பாதுகாப்பு மற்றும் தற்காப்பு தொடர்பான சர்வதேச உயர்மட்ட மாநாட்டிலிலும் கலந்து கொண்டிருந்தார்.

2014 ஆம் ஆண்டில் திரு. நிமல்சிறி அவர்கள் ஆசிய பசுபிக் வலயத்தின் பிராந்திய விமான சேவை பாதுகாப்பு அமைப்பின் (RASG - APAC) தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு தற்போது அவர் அப்பதவியை வகிக்கின்றார். தொடர்ந்தும் அவர் ஆசிய பசுபிக் வலயத்தின் பிராந்திய விமான சேவைப் பாதுகாப்பு அமைப்பின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு தற்போது அப்பதவியில் சேவையாற்றுகின்றார். இதற்கு மேலதிகமாக ஆசிய பசுபிக் வலயத்தின் விமானப் போக்குவரத்து செயற்பாட்டுப் பணிகளைத் திட்டமிடல் மற்றும் அமுல்படுத்துவதற்காக ICAO இனால் முன்னெடுக்கப்படும்

ஆசிய பசுபிக் விமானப் போக்குவரத்து திட்டமிடல் உட்பட அமுல்படுத்தும் அமைப்பின் (APANPRIG) தலைராகவும் அவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். 2015 ஆம் ஆண்டில் மொன்றியலில் நடாத்தப்பட்ட இரண்டாவது உயர்மட்ட பாதுகாப்பு சங்கத்தின் உப தலைவராகவும் கடமையாற்றுகின்றார். இலங்கை அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தி சர்வதேச மட்டம் பிராந்திய கூட்டங்கள் / பல சம்மேளனங்களிலும் இவர் பங்கேற்றுள்ளார்.



**பேராசியர் டப்.எல்.பி. பெரேரா**
CAASL இன் அங்கத்தவர்

பேராசிரியர் டப்.எல்.பி பெரேரா பேராதனைப் பல்கலைக்கழத்தினால் பொருளியல் விஞ்ஞானம் தொடர்பான கலைமானிப் பட்டம் (கௌரவ - முதற் பட்டம்) (**BA-Honours - 1st Class**) போன்று பொருளியல் தொடர்பான கலைமானி (**MA**) மற்றும் கலாநிதிப் பட்டத்தையும் (**Ph.D**) பெற்றுள்ளார். பேராதனைப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளராக சுமார் 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கற்பித்தலில் அனுபவத்தை கொண்டுள்ள இவர் தற்போது பொறியியல் பேராசிரியராகவும் செயற்படுகின்றார். இவரது ஆராய்ச்சித் துறைகளுக்குரியதான சர்வதேச நிதி, நிதி சார்ந்த பொருளாதரம், அரசியல் பொருளாதாரம், பொருளியல் சார்ந்த எதிர்வுகூறல்கள் போன்றன உள்ளடங்கியுள்ளன. இவை சர்வதேச நிதி, வர்த்தகம் மற்றும் அது சார்ந்த விடயங்கள் தொடர்பான ஆராய்ச்சி ஆக்கங்கள் மற்றும் பெரும் எண்ணிக்கையான நூல்களையும் வெளியிட்டுள்ளார். **E-views, minitab** மற்றும் **R- studio packages** போன்றனவும் இவரது வெளியீடுகளாகும்.

பேராசியர் பிரசந்த பெரேரா பொதுநலவாய சபையின் கலாநிதிப் பட்டப் புலமைப்பரிசில், கொடிகார விருது, வாசலமுதலி ஏ.பி. திலகரட்னஆரச்சி புலமைப்பரிசில் மற்றும் இமாய் ஞாபகார்த்த புலமைப்பரிசில் உட்பட பரிசில்கள் மற்றும் பல விருதுகளையும் பெற்றுள்ள இவர் தேசிய கல்வி நிறுவகத்தின் பொருளியல் கற்கை பிரிவின் அங்கத்தவராகவும் செயற்படுகின்றார். இவர் சமீபத்தில் வெளியிட்ட சஞ்சிகையில் இலங்கையின் சிறுதோட்ட உரிமையாளர்கள் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களின் பிரச்சினைகள் மற்றும் சவால்கள், இலங்கையில் நேரடி வெளிநாட்டு முதலீடு (**FDI**) தொடர்பான நூல், சார்க் இராட்சியங்களுக்காக நேரடி வெளிநாட்டு முதலீடு தொடர்பான மாதிரியினை வகுக்கும் ஆய்வு நூல், இலங்கை சுற்றுலாப் பொருளாதார விஞ்ஞானம், நேரடி வெளிநாட்டு முதலீடு தொடர்பான பொருளாதார ஆய்வு, இலங்கையில் வெளிநாட்டு வர்த்தகம் மற்றும் பொருளாதார அபிவிருத்திகள் போன்ற விரிவான ஆய்வுகள் தொடர்பான பல கட்டுரைகளும் வெளியிடப்பட்டுள்ளன.

இவர் சர்வதேச பொருளாதரம் தொடர்பான பல்வேறுபட்ட நூல்களையும் வெளியிட்டுள்ளார். இலங்கையின் வர்த்தகச் செயற்பாடுகள் தொடர்பான விளக்கங்கள், அது தொடர்பான கோட்பாடுகள் உட்பட தெற்காசிய இராட்சியத்தின் பின்னணி, பிராந்தியப் பொருளாதார ஒத்துழைப்பின் இலங்கை மற்றும் தெற்காசியாவின் பொருளாதாரம் எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ள சவால்கள் மற்றும் நிலைமைகள் போன்றன இவரினால் வெளியிடப்பட்ட நூல்கள் ஆகும்.

தற்போது பேராசிரியர் பிரசன்ன பெரேரா இலங்கை துறைமுக அதிகார சபையின் உப தலைவராக பதவி வகிக்கின்றார். தொடர்ந்தும் இவர் சிவில் விமான சேவை அதிகார சபையின் ஏனைய கம்பனிகளிலும் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் அங்கத்தவராகவும் கடமையாற்றுகின்றார். 2015. ஒக்டோபர் மாதத்தில் இலங்கை துறைமுக அதிகார சபையின் உப தலைவராக கடமைகளை பொறுப்பேற்பதற்கு முன்னர் இவர் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் உப தலைவராக மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்



**பொறியியலாளர் சுதர்ம அலகந்த**
CAASL இன் அங்கத்தவர்

பொறியியலாளர் சுதர்ம அலகந்த தற்போது நீர்ப்பாசன மற்றும் நீர் வழங்கல் முகாமைத்துவ அமைச்சின் செயற்படும் (IDK World Bank) உலக வங்கியினால் நிதியுதவி வழங்கப்படும் காலநிலை மாற்றம் செயற்திட்ட பணிப்பாளராகவும் கடமையாற்றுகின்றார். இந் நியமனத்திற்கு முன்னர் இவர் IDA/ World Bank உலக வங்கியினால் நிதியுதவி வழங்கப்பட்ட அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வழங்கல் திட்டமிடல் செயற்திட்டத்தின் செயற்திட்டப் பணிப்பாளராக கடமையாற்றினார். இதன்போது இவர் உலக வங்கியின் திருப்திகரமான தரப்படுத்தலுக்கு உட்பட்டதுடன் அச் செயற்திட்டத்தினால் இதுவரை இலங்கையில் வெற்றிகரமாக பூரணப்படுத்திய சிறந்த செயற்திட்டங்களில் ஒன்றாகக் கருதப்பட்டது.

இவர் சர்வதேச நீர் சார்ந்த துறையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேச வலையமைப்பின் பல நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்து கொண்டுள்ளதுடன் சர்வதேச செயலமர்வுகள் உட்பட கருத்தரங்குகளில் தொழில்நுட்ப ஒப்படைகளையும் சமர்ப்பித்துள்ளார். 1979 ஆம் ஆண்டில் இலங்கை மகாவலி அதிகார சபையில் இணைந்து கொண்டதுடன் இலங்கையில் இதுவரையில் அமுல்படுத்தப்பட்ட மிகப் பாரிய பல்நோக்கு அபிவிருத்தி வேலைத்திட்டமாக இனங்காணப்பட்டுள்ள மகாவலி அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் பல்வேறுபட்ட பதவிகளை வகித்து 35 வருடங்களுக்கு மேற்பட்ட கால அனுபவத்தையும் கொண்டுள்ளார். 2014 ஆம் ஆண்டில் இவர் இலங்கை மகாவலி அதிகார சபையின் மேலதிக பணிப்பாளர் நாயகமாகவும் நியமிக்கப்பட்டார். மகாவலி அதிகார சபையில் நிரந்தர ஊழியர் பெற்றுக் கொள்ளக்கூடிய அதிஉயரிய பதவி இதுவாகும்.

திரு. அலகந்த கொழும்பு பல்கலைக்கழகத்தின் வர்த்தக நிருவாகம் தொடர்பான (MBA) பட்டத்தையும், மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் அகழ்வு முகாமைத்துவம் மற்றும் சுற்றாடல் முகாமைத்துவம் தொடர்பாக இரு டிப்ளோமா பாடநெறிகளையும் தொடர்ந்துள்ளார். இவர் 1982 ஆம் ஆண்டு தொடக்கம் லண்டன் சிவில் பொறியியலாளர்களின் நிறுவனத்தின் இணைந்து அங்கத்தவராக செயற்படுவதுடன் இலங்கை பொறியியலாளர்களின் நிறுவனத்தின் அங்கத்தவராகவும் கடமையாற்றுகின்றார். இவர் ஆரம்பப் பட்டத்தை இலங்கை பேராதனை பல்கலைக்கழகத்திலிருந்து (BSc- Civil Engineering) (சிவில் பொறியியல்) பட்டத்தையும் பெற்றுள்ளார்.



**கலாநிதி அமிந்த மெத்சில பெரேரா**
CAASL இன அங்கத்தவர்

கலாநிதி அமிந்த மெத்சில பெரேரா இலங்கையின் வடமேல் பல்கலைக் கழகத்தின் கணக்கியல் நிறுவனத்தின் நிதி முகாமைத்துவம் தொடர்பான சிரேஷ்ட விரிவுரையாளராவார். மாத்தறை புனித தோமஸ் கல்லூரியில் கல்வி கற்றுள்ள இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ கற்கைப் பீடத்தில் உயர் கல்வியைத் தொடர்ந்து அரச நிருவாகம் தொடர்பான விஞ்ஞான மானி - விசேட (Bsc - Special) பட்டத்தைப் பெற்றுள்ளார்.

கலாநிதி அமிந்த மெத்சில சர்வதேச நிதி முகாமைத்துவத் துறையில் அவரது முதலாவது வர்த்தக நிருவாக கலைமானி (Masters Degrees) பட்டம் இந்தியாவில் IGNOU பல்கலைக்கழகத்திலும், இரண்டாவது கலைமானி பட்டத்தையும் சந்தைப்படுத்தல் துறையில் வர்த்தக நிருவாக கலைமானி பட்டத்தையும் இலங்கை வடமேல் பல்கலைக்கழகத்தில் பெற்றுள்ளார். இப் பல்கலைக்கழகத்தில் இவர் நுகர்வோர் செயற்பாடுகள் தொடர்பிலான முதுமானி (Ph.D) பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் ஜேர்மன் கஸ்நொப் கற்கை பீடத்தில் (Kasnoff Academy) இனால் நடாத்தப்பட்ட அரச சார்பற்ற நிகழ்வின் (NGO) பணியாளர் சபை முகாமைத்துவம் தொடர்பான டிப்ளோமாப் பாடநெறியையும் தொடர்ந்துள்ளார்.

கலாநிதி பெரேரா இவரது தொழில்சார் முன்னேற்றங்களை மேற்கொள்ளும் அதேவேளையில் தனியார் மற்றும் பல அரச அமைப்புக்களில் பதவி வகித்துள்ளார். தற்போது இவர் மக்களின் வங்கி, தேசிய நூலக மற்றும் சுவடிக்கூட சபையிலும், வ/ப பிரட்ஒப் சிலோன் தனியார் கம்பனியிலும் பணிப்பாளராக பதவி விகிக்கிறார். 2015 ஒக்டோபர் 16 ஆம் திகதி தொடக்கம் அமுலுக்குவரும் வகையில் கலாநிதி பெரேரா இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.



**பொறியியலாளர் கருணாசேன ஹெட்டிஆரச்சி**
(பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்) CAASL இன் அங்கத்தவர் - உத்தியோகபூர்வமாக நியமனம் பெற்ற - 2017 ஜூலை 20 வரை

திரு. ஹெட்டிஆரச்சி 1977 ஆம் ஆண்டில் இலங்கையில் பெற்றுக் கொண்ட விஞ்ஞானமாணி - கௌரவ பொறியியல் (Bsc Hons - Engineering) பட்டத்தையும், 1986 ஆம் ஆண்டில் பெல்ஜியத்தில் பெற்ற விஞ்ஞானமானி (பொறியியல் விஞ்ஞானம்) (Bsc Hons - Engineering) பட்டத்தையும் கொண்டுள்ளார். 1977 ஆம் ஆண்டில் சிவில் பொறியியலாளராக வீடமைப்பு நிர்மானத்துறை அமைச்சில்

தமது தொழில் வாழ்வை ஆரம்பித்தார். அன்று தொடக்கம் இவர் உள்நாட்டு மற்றும் சர்வதேச பல அமைப்புக்களில் சிவில் பொறியியலாளர், தலைவர் மற்றும் பணிப்பாளர் பதவிகளையும் வகித்துள்ளார். மத்திய பொறியியல் ஆலோசனை பணியகம், நீர்ப்பாசனத் திணைக்களம், பெல்ஜியம் கத்தோலிய யுனிவர்சிட்டி ஒப் நிறுவனம் **(Katholike Universitate of Leuven Institution)**, சர்வதேச நீர்ப்பாசன முகாமைத்துவ நிறுவனம், வ/ப நிபன் கொய் ஆலோசனை கம்பனி **(Nippon Koei Consultants Ltd)**, வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு, பெற்றோலிய வள அமைச்சு, தொழிலாளர் உறவுகள் மற்றும் வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சு, சர்வதேச ஒத்துழைப்புக்களான ஜப்பான் வங்கி, மத்திய சுற்றாடல் அதிகார சபை (தனியார்) கம்பனி மற்றும் நகர அபிவிருத்தி நீர்வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சும் உள்ளடங்குகின்றது.

இவர் தொடர்ந்தும் F.I.E (SRI LANKA) பட்டயப் பொறியியலாளர் - ஐக்கிய இராட்சியம் MIP மற்றும் FIM இன் தொழில்சார் அமைப்பு உட்பட கம்பனி அங்கத்துவத்தையும் வகித்துள்ளார்.



**திரு. கபில வைத்தியரட்ன**
(ஜனாதிபதி சட்டத்தரணி - பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்) CAASL இன் அங்கத்தவர் உத்தியோகபூர்வ அதிகாரத்திற்கமைய நியமனம் பெற்ற - 2017 ஜூலை 27 தொடக்கம்

திரு. வைத்தியரட்ன அவர்கள் சட்டவிரோத குடியேற்றங்கள் மற்றும் அது சார்ந்த வர்த்தகங்கள் உட்பட தேசங்களின் எல்லைகளில் இடம்பெறக்கூடிய குற்றச் செயல்கள் தொடர்பில் போலிச் செயற்பாடுகள் 2011 ஆம் ஆண்டில் சிட்னி நகரில் நடாத்தப்பட்ட அவசிய முக்கியத்துவம் வாய்ந்த உத்தியோகத்தர் அமைப்பின் கூட்டம் மகாதா இராட்சியம் மற்றும் சீன மக்கள் குடியரசில் நடாத்தப்பட்ட மோசடியாக நிதி மாற்றுதல் தொடர்பான ஆசிய / பசுபிக் அமைப்பின் 2003 வருடாந்தக் கூட்டம் - 2004 சிங்கப்பூரில் நடாத்தப்பட்ட பயங்கரவாதத்திற்கு எதிராக இயலுமைகளை விருத்தி செய்யும் பொதுநலவாய சபையின் செயலமர்வு மற்றும் 2005 ஆம் ஆண்டில் கொழும்பில் நடாத்தப்பட்ட பயங்கரவாதத்திற்கு நிதி வழங்குதலை வெளிப்படுத்தல் மற்றும் தடுப்பது தொடர்பான தெற்காசிய பிராந்திய சம்மேளனம் உட்பட பல சர்வதேச சம்மேளனங்களில் பங்கேற்றுள்ளார்.

2017 ஜீலை மாதம் 04 ஆம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேன்மை தங்கிய ஜனாதிபதி மற்றும் கூட்டுப்படைகளின் தளபதி என்ற வகையில் அவர்களினால் திரு. கபில வைத்தியரட்ன பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டார். இந் நியமனத்திற்கு முன்னர் திரு. வைத்தியரட்ன இலங்கை சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிரேஷ்ட மேலதிக சொலிசரல் ஜெனரலாக கடமையாற்றினார்.

பிரபல்யமிக்க கல்கிஸ்ச சென் தோமஸ் கல்லூரியின் பழைய மாணவரான திரு. வைத்தியரட்ன பாடசாலைப் பருவத்தில் கல்வி மற்றும் விளையாட்டு ஆகிய துறைகளில் பெரும் திறமைகளை வெளிப்படுத்தியதுடன் விக்டோரியா தங்கப்பதக்கம் உட்பட பல பரிசில்களையும் அவர் பெற்றுள்ளார். கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் விஞ்ஞானத்திற்காக நிபுனத்துவம் கொண்ட கலைப்பிரிவின் கலைப் பட்டம், சர்வதேச தொடர்பாடல் தொடர்பான கலைமாணிப் பட்டம் (**Masters Degree)** பெற்றுள்ளார்.

இலங்கை சட்டக் கல்லூரி ஊடாக சட்டக் கல்வியைத் தொடர்ந்ததை அடுத்து 1982 ஆம் ஆண்டில் திரு. வைத்தியரட்ன இலங்கை உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் வேல்ஸ் மற்றும் ஐக்கிய இராட்சியத்திற்கான சொலிசிடர் ஆகவும் செயற்பட்டுள்ளார்.

1983 ஆம் ஆண்டில் திரு. வைத்தியரட்ன அரச சட்டத்தரணியாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் இணைந்து கொண்டதுடன் 1994 ஆம் ஆண்டு சிரேஷ்ட அரச சட்டத்தரணியாக பதவி உயர்த்தப்பட்டார். 2005 ஆம் ஆண்டில் இவர் பிரதி சொலிசிடர் ஜெனரலாக பதவி வகித்து அவர் 2014 மே ஆண்டில் மேலதிக சொலிசிடர் ஜெனரலாக பதவி உயர்த்தப்பட்டார்.

இலங்கை சட்டத்தொழில் துறைக்கு இவர் வழங்கிய மிக முக்கியத்துவம் வாய்ந்த பங்களிப்புகள் மற்றும் இவரின் தூய்மையான சேவைக்காக 2015 ஆம் ஆண்டில் இவர் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமிக்கப்பட்டார்.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் கடமையாற்றிய காலப்பகுதியில் திரு. வைத்தியரட்ன நாட்டின் சிக்கலான மற்றும் கருத்து முரன்பாடுகளுக்குட்பட்ட பல குற்ற வழங்குகளில் முறைப்பாட்டாளர் தரப்பில் ஆஜர் ஆனார். தொடர்ந்தும் இவர் சட்டமா அதிபர் திணைக்களத்தின் குற்றவியல் பிரிவின் பொறுப்பாளராகவும் கடமையாற்றியதுடன் சட்டவிரேதமாக குடியகழ்த்தக்கூடிய வர்த்தகம் **(Human Trafficking)**, இலஞ்ச ஊழல் மற்றும் மோசடி நிதி சார்ந்த செயற்பாடுகள் ஆகிய துறைகளுக்கு இவர் மேற்பார்வைச் செயற்பாடுகளை வழங்கியுள்ளார். குற்றங்கள் மற்றும் சிவில் விடயங்களுக்குரிய பல்வேறுபட்ட சட்டம் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பிலும் இவர் இலங்கை அரசாங்கத்திற்கும் உரிய நிறுவனங்களுக்கும் ஆலோசனைகளை வழங்கியுள்ளார். திரு. வைத்தியரட்ன **UNCAC Review** தேசிய குழுவின் அங்கத்தவராகவும் 2010 - 2011 காலப்பகுதிக்குள் இலங்கை மத்திய வங்கியின் நிதி புலமைச் சொத்து பிரிவின் சட்ட ஆலோசகராகவும் சர்வதேச கல்விக்கான பண்டாரநாயக்க மத்திய நிலையத்தின் கற்கை டிப்ளோமாப் பாடநெறியின் விரிவுரையாளராகவும் கடமையாற்றியுள்ளார். இவர் சட்டத்தரணி சங்கத்தின் ஆயுட்கால அங்கத்தவர் என்பதுடன், இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கீழ் உள்ள சூழல் சட்டங்களை மீளாய்விற்குட்படுத்தும் குழுவின் அங்கத்தவராகவும் கடமையாற்றியுள்ளார். இவரது தொழில்சார் இணைப்புக்கள் வைத்திய, சட்ட சங்கம் மற்றும் இலங்கையை ஆசிய குற்றவியல் தடுப்பு மன்றம் போன்ற நிறுவனங்கள் வரை விரிவடைந்துள்ளன.

திரு. கபில வைத்தியரட்ன 1998 ஆம் ஆண்டு தொடக்கம் 2003 வரை இடம்பெற்ற யுகோலோவியாவிற்கான ஐக்கிய நாடுகள் சாசனத்தின் சர்வதேச குற்றவியல் விசாரனை சபையின் வழங்கு விசாரனை சட்டத்தரணியாகவும் சேவையாற்றியுள்ளார். இவர் சர்வதேச தொழிலாளர் அமைப்பு, இலங்கை மற்றும் அவுஸ்திரேலியா குடியகழ்வு தொடர்பான சர்வதேச அமைப்பு உட்பட இலங்கையின் பரஸ்பர சட்ட உதவி வேலைத்திட்டங்களிலும் வளவாளராக கடமையாற்றியுள்ளார்.



**திருமதி. டி.எம். அனுலா கரஸ்கம**
- நிதி அமைச்சின் பிரதிநிதி (CAASL இன் அங்கத்தவர் - உத்தியோகபூர்வமாக நியமனம் பெற்ற - 2018 ஜூன் 29 வரை

திருமதி. அனுலா கரஸ்கம நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சு, பொதுத்திறைசேரியின் பணிப்பாளர் நாயகமாக திறைசேரியின் செயற்பாட்டு பதவி வகித்துள்ளார்.

இவர் பொதுத்திறைசேரியின் தகவல் மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம் (2014) மற்றும் அரச தொழில்முயற்சி திணைக்களம் (2012 - 2013) போன்ற பல்வேறுபட்ட திணைக்களங்களில் பணிப்பாளர் நாயகமாக சேவையாற்றியுள்ளார்.

மேலும் இவர் அரச நிதித் திணைக்களத்தின் மேலதிக பணிப்பாளர் நாயகம் (2011- 2012) பணிப்பாளர் அரச நிதித் திணைக்களம், கொழும்பு UNDP ஆசிய பசுபிக் வலய மத்திய நிலையத்தின் நிதி ஆய்வாளர், இலங்கை அரச தொழில் முயற்சி மீள் கட்டமைப்பு ஆணைக்குழுவின் நிதி மற்றும் நிர்வாகப் பணிப்பாளர் ஆகிய பதவிகளை வகித்துள்ளாார். இதற்கு மேலதிகமாக இவர் பல்வேறுபட்ட அரச அமைச்சுக்கள் மற்றும் வெளிநாட்டு நிதிச் செயற்திட்ட நிறுவனங்களின் பிரதம கணக்காய்வு - கணக்காய்வு பதவிகளை வகித்துள்ளார்.

இவர் அவுஸ்திரேலியா நியு சவுத்வெல்ஸ் பல்கலைக்கழகம் (UNSW), நிதியை பிரதான பாடமாகத் தொடர்ந்து பெற்றுக் கொண்ட வர்த்தகமானி (Master of Commerce) பட்டத்தையும் கொண்டுள்ளார். இதற்கு மேலதிகமாக இவர் முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் பட்ட நிறுவனத்தில் (PIM) முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் பட்ட டிப்ளோமா உட்பட ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கலைமானி பட்டத்தையும் (BA) பெற்றுள்ளார்.

இதற்கு மேலதிகமாக திருமதி. கரஸ்கம அவுஸ்திரேலியா வங்கியில் மற்றும் நிதி நிறுவனம் உட்பட இலங்கை அரச நிதி மற்றும் அபிவிருத்திக் கணக்கீட்டு நிறுவனத்தின் அங்கத்தவராகவும் கடமையாற்றியுள்ளார்.



**திரு. சி.ஜே.கே. பெரேரா**
- நிதி அமைச்சின் பிரதிநிதி (CAASL இன் அங்கத்தவர் - உத்தியோகபூர்வ அதிகாரத்தின் மூலம் நியமனம் பெற்ற - 2017 ஆகஸ்ட் 31)

அரச துறையின் பல்வேறுபட்ட சிரேஷ்ட பதவிகளை வகித்து 32 வருடங்களைத் தாண்டிய அனுபவத்தினை திரு. பெரேரா பெற்றுள்ளார். இவர் **CAASL** இன் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இலங்கை கொழும்புப் பல்கலைக் கழகத்தின் வர்த்தகமாணி - விசேட (**B Com - Special)** பட்டத்தை பெற்றுள்ளார்.

திரு. பெரேரா அரச நிதி சார்ந்த கணக்காளர் நிறுவனத்தின் சிரேஷ்ட அங்கத்தவர் என்பதுடன் நிதி அமைச்சின் திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் நாயகமாகவும் சேவையாற்றியுள்ளார். அத்துடன் இலங்கை தர நிர்னய **(SLSI)** மத்திய சபையின் அங்கத்தவராகவும் செயற்பட்டுள்ளார்.

2017 ஆகஸ்ட் மாதம் தொடக்கம் திரு. பெரேரா கணக்காய்வுக் குழுவின் தலைவராக சேவையாற்றியுள்ளார்.

# சிரேஷ்ட முகாமைத்துவம்




1. **திரு. பீ.ஏ. ஜயகாந்த**
   பணிப்பாளர், விமான சேவைப் பாதுகாப்பு
2. **திரு. எம்.ஏ.கே. பிரசன்ன**
   பணிப்பாளர், விமான செயற்பாட்டு சேவை
3. **திருமதி. சீ. எஸ். காஷீர்**
   பணிப்பாளர், விமானத் தளம்
4. **திரு. பீ.ஏ.ஜீ. ஜயசூரிய**
   பணிப்பாளர், விமானப் பதிவு மற்றும் விமானத் தகைமை
5. **திருமதி. கே.வீ.பீ.ஆர்.எம்.டி. சில்வா**
   பிரதான உள்ளகக் கணக்காளர்
6. **திரு. கப்டன் டப்.எல்.ஏ. பெனான்டோ**
   பணிப்பாளர், விமானச் செயற்பாடு
7. **திரு. ஆர்.எம். வன்னியப்பா**
   பணிப்பாளர், விமானப் போக்குவரத்து மற்றும் பொருளாதார மேற்பார்வை
8. **திரு. கே.எம்.எம்.என். தசநாயக்க**
   பணிப்பாளர், ஆராய்ச்சி அபிவிருத்தி திட்டமிடல் மற்றும் விசேட வேலைத்திட்டம்
9. **திரு. பீ.பீ. ஜயவீர**
   பிரதிப் பணிப்பாளர் நாயகம் (இணைந்த செயற்பாடுகள் மற்றும் பொருளாதார மேற்பார்வை)
10. **திரு. எச்.எம்.சீ. நிமல்சிறி**
    இலங்கை சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிதி உத்தியோகத்தர்
11. **திரு. எஸ்.ஏ. ஜயவிக்ரம**
    மேலதிக பணிப்பாளர் நாயகம்
12. **திரு. எஸ்.பீ.ஆர். மனுகுலசூரிய**
    பிரதிப் பணிப்பாளர் நாயகம் (விமான வான்பரப்பு மற்றும் பாதுகாப்பு மேற்பார்வை)
13. **திரு. பீ.ஆர். பெரேரா**
    பிரதிப் பணிப்பாளர் நாயகம் (விமானப் பாதுகாப்பு மேற்பார்வை)
14. **திருமதி. எம்.என். விக்ரமநாயக்க**
    பணிப்பாளர், வருமானம் மற்றும் நிதி முகாமைத்துவம்
15. **திரு. எஸ்.யு. நாககவத்த**
    பணிப்பாளர், பயிற்சி ஒழுங்கமைப்பு மற்றும் தனிநபர் அனுமதிப்பத்திரம்
16. **திருமதி. எஸ்.ஐ. மாகம்முதலி**
    பணிப்பாளர், மானிட வளம் மற்றும் அலுவலக முகாமைத்துவம்



ஆண்டறிக்கை 2017
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

# இலங்கை சிவில் விமான போக்குவருத்து அதிகாரசபை

## தூரநோக்கு

தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு முதன்மையானதொரு இயைபியக்க உருவாக்கியாக இருத்தல்

## குறிக்கோள்

தந்திரோபாயத் திட்டமிடல், பயனுறுதிமிக்க ஒழுங்கு விதிகள், இடரற்ற பாதுகாப்பானதொரு செயற்பாடு, சர்வதேச நியமங்கள் மற்றும் விதந்துரைக்கப்பட்ட பரிந்துரைகளை உறுதி செய்து கொள்ளும் திறன்மிக்க தேசிய சிவில் விமானப் போக்குவரத்து முறைமைகள் என்பவற்றினூடாக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

## குறிக்கோள் வாசகம்

"அனைவருக்கும் ஆபத்தற்ற ஆகாயம்"

## தத்துவம்

"இலங்கையின் வான்பரப்பு, இலங்கையின் எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்விற்காகவும் முன்னேற்றத்திற்காகவும் ஒரு பொதுச் சொத்தாக முகாமை செய்யப்படல் வேண்டும்"

## இலக்குகள்

- பாதுகாப்பு மற்றும் தற்காப்பு பெறுபேறு இலக்கினை எட்டுதல் அல்லது அதற்கு அப்பால் செல்லல்.
- தேவையான வழங்கலை பெற்றுக் கொள்ளல்.
- தொழில்சார் தரங்கள் மற்றும் தேர்ச்சி நிலையை எட்டுதல்.
- நம்பிக்கை மற்றும் வரவேற்புக்களை வெற்றிகொள்ளல்.
- அடைவு மட்டங்களை பேணல் மற்றும் முன்னேற்றங்களை எட்டுதல்.
- முன்னெடுக்கும் சகல செயற்பாடுகளிலும் உயரிய மட்ட உற்பத்தித் திறனை எட்டுதல்.
- சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகளுக்கு அமைவான மட்டத்தில் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.
- சிவில் விமான சேவைத் திட்டமிடலை மேற்கொள்ளல் மற்றும் அவற்றை விருத்தி செய்யும் பணிகளுக்காக பலம்மிக்க அனுசரனையாளராகச் செயற்படல்.

## தந்திரோபாயங்கள்

- நியதிச் சட்டத் தொழிற்பாடுகளின் அமுலாக்கலை முன்னேற்றுதல் மற்றும் அதனுடன் நிலைப்படுத்தல் அத்துடன் சமூகக் கடப்பாடுகளை நிவர்த்தி செய்தல்.
- மிக முக்கியமான விமானப் போக்குவரத்துப் பிரச்சினைகளுக்குத் தீர்வினை அடையாளங்கண்டு அமுலாக்கல்.
- குறிப்பிட்ட கலாச்சார மாற்றத் தூண்டல்களை அறிமுகப்படுத்தல்.
- விமானப் போக்குவரத்து கைத்தொழிலுடன் கூட்டிணைவுடனும் பங்குபற்றுதலுடனும் தொழில்புரிதல்.
- ஒரு தெளிவான நோக்குடன் தொழிற்படலும் உள்ளார்ந்த மற்றும் வெளித்தரப்பினருடனும் வினைத்திறனான வகையில் தொடர்பாடலை மேற்கொள்ளல்.
- அனைத்து ஆவணங்கள், மூலங்கள் மற்றும் உள்ளக செய்முறைகளை பயனுறுதிமிக்க வகையிலும் மாறாத தன்மை கொண்டதாகவும் பேணுதல்.

## மதிப்பீடுகள்

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை மற்றும் அதன் ஊழியர்கள்

- விமானப் போக்குவரத்தின் பாதுகாப்பிற்கு முக்கியத்துவத்தையும் முன்னுரிமையையும் அளித்து பாதுகாப்புக் கலாசாரத்தினை மேம்படுத்த ஈடுபடல்.
- இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கலைத் துரிதப்படுத்தல்.
- முன்னெடுக்கப்படும் ஒவ்வொரு விடயத்திலும் "முடியும்" என்ற நடத்தையினைக் கொண்டிருத்தல்.
- நம்பகத்தன்மை மற்றும் யதார்த்தத் தன்மை கொண்டிருப்பதனை இலக்காகக் கொள்ளல்.
- தொடர்ச்சியான முன்னேற்ற பணியில் விருப்பம் கொண்டோராகவும் மாற்றத்திற்கு உட்படக்கூடியவராகவும் இரத்தல்.
- வெற்றியை அடைவதற்கு ஒன்றாகப் பணியாற்றல்.
- திறந்த, நேர்மையுள்ள வெளிப்படைத் தன்மையுள்ளோராக இருத்தல்.
- செய்யப்படும் ஒவ்வொன்றிலும் வினைத்திறனையும் நியதித் தன்மையையும் மேம்படுத்தல்.
- குழுவாக வேலை செய்வதன் மூலம் தனியொருவரை நம்புதல் மற்றும் மதிப்பளித்தல்.
- ஒவ்வொருவரின் பங்களிப்புக்கும் வெகுமதி சேர்த்தல்.
- சமூக பொறுப்புடமை மற்றும் கடமையுணர்வு என்பவற்றை அடையாளம் காணல்.
- மேற்கொள்ளும் பணிகள் தொடர்பில் மகிழ்ச்சிடைதல்.
- தொழில்சார் அணுகுமுறையில் பங்குகொள்ளல்.
- தொழில் சூழல் மற்றும் வீட்டுச் சூழலுக்கிடையில் சமநிலையொன்றைப் பேணல்

## இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் முதன்மை இலக்குகள்

- வர்த்தக விமானப் போக்குவரத்து துறையில் பாரிய விபத்துக்களைத் தவிர்த்தல்.
- சிவில் விமானப் போக்குவரத்திற்கு செயற்பாடுகளில் கடத்தல் மற்றும் சட்டத்திற்கு முரனான தலையீடுகளைத் தவிர்த்தல்.
- பொதுவான விமானப் போக்குவரத்து விபத்துக்கள் ஏற்படுவதைத் தவிர்த்தல்.
- விமான நிலையத் தளத்தில் ஏற்படக்கூடிய இறப்பு, நேரக்கூடிய விபத்துக்களைத் தவிர்த்தல்.
- பொறியியல் மற்றும் பராமரிப்பு வேலைத்தளங்களின் விபத்துக்களை குறைத்தல்.
- விமான சேவையில் இடம்பெறக்கூடிய சம்பவங்களைக் கட்டுப்படுத்தல்.
- உரிய நேரத்திற்குப் புறப்படல் (On time)
- சாதாரண வருமானம் பெறும் மக்களுக்கு வான்வழிப் பயணம் கிடைக்கக்கூடிய வகையில் வழிவகைகளை மேற்கொள்ளல்
- வான்வழிப் பயணத்தின் சேவைத் தரத்தினை விருத்தி செய்தல் மற்றும் ஆர்வம் ஊட்டுதல்.
- பாதுகாப்பு தேவைகளை கருத்திற்கொண்டு விமானத் தளத்தில் நெரிசலான வரையான பயணிகள் செய்முறையைக் குறைத்தல்.
- விமான போக்குவரத்தில் செயற்பாட்டுச் செலவீனத்தைக் குறைத்து வீண்விரயத்தைத் தவிர்த்தல்.
- விமான நெசவையினால் சூழலுக்க ஏறந்படக்கூடிய பதாக விளைவுகளை கட்டுப்படுத்த உதவுதல்.
- சிவில் விமான சேவையின் பயன்மிக்க பெறுபேறுகள் தொடர்பில் பாடசாலை மாணவர்கஞ்கக அறிவுறுத்தல்.
- அடுத்த விமான சேவை தொழிலாளர் பரம்பரையினருபக்க பயளிற்சிகளை வழங்கதல்.

## எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகள்

- சிவில் விமானப் போக்குவரத்து துறைக்குரிய இராட்சியங்கள் மீது வழங்கப்பட்டுள்ள சர்வதேச பொறுப்புக்களை நிறைவேற்றல் மற்றும் சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகளை அமுல்படுத்தும் பணிகளை அதிஉயரிய மட்டத்தில் அறிக்கைப்படுத்தி அதன் சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகளைத் தொடர்ந்தும் அமுல்படுத்தலும் வலுவூட்டலும்.
- தடைகள் வரையறைகளிலிருந்து விடுதலை பெற்ற இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து துறையை சர்வதேச அங்கீகாரத்திற்குட்படுத்தல் மற்றும் அரசாங்கத்தின் விமான சேவை முறைக்கு எதிராக ICAO வினால் பாரிய தற்காப்பு தொடர்பான திருப்தியற்ற நிலைமைகள் ஏற்படுவதைத் தவிர்த்தல்.
- சிவில் விமானப் போக்குவரத்தின் பாதுகாப்பு, தற்காப்பு, வினைத்திறன் மற்றும் ஒழுங்குமுறையொன்றினையும், வான் போக்குவரத்து முறைமையில் தொடர்ச்சியான பொதுமக்கள் நம்பிக்கைத் தன்மையையும் கட்டியெழுப்புதல்.
- இலங்கை வான் பரப்பில் இலங்கைப் பிரஜைகளின் நலனுக்காக உயர்ந்தபட்ச பயன்பாட்டினை பெற்றுக் கொள்ளல்.
- நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தியை உருவாக்குதல்.
- காரணமற்ற போட்டித் தன்மையால் எழும் பொருளாதார விரயங்களிலிருந்து பாதுகாத்தல்.
- வான் மூலம் பயணிக்கும் மக்களினதும் மற்றும் விமான சரக்குப் பொருட்களின் கிடைப்பனவு மற்றும் நகர்வுகளை மேம்படுத்தல்.
- சிவில் விமானப் போக்குவரத்துத் துறையில் நம்பிக்கை மிக்க செயற்பாட்டு சேவைகளை வழங்குதல்.
- பாடசாலை மாணவர்களுக்கு சிவில் விமானப் போக்குவரத்துத் துறை சார்ந்த கல்வியினை வழங்குதல்.
- சிவில் வானியல்சார் அனைத்துப் பிரிவுகளையும் மேம்படுத்தல்.
- வான் போக்குவரத்தின் போது மக்களின் சுகாதாரம் தொடர்பில் ஏற்படக்கூடிய அவதானங்களைக் குறைத்தல்.
- விமானப் போக்குவரத்தில் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்தல்

# வெளியீடுகள்

| வெளியீட்டு வகைகள் | வெளியீடுகள் |
|---|---|
| **கொள்கை ஆலோசனை** | • அரசாங்கத்திற்கும் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கும் ஆலோசனை வழங்குதல்<br>• சட்ட மறுசீரமைப்பு<br>• விதிகளின் உருவாக்கம்<br>• அமுலாக்க நியமங்களின் உருவாக்கமும் பிரசுரித்தலும்<br>• விமானப் போக்குவரத்து கொள்கை உருவாக்கம்<br>• செயற்பாட்டு ஒழுங்குவிதிமுறைக் கையேடுகளின் உருவாக்கம்<br>• விமானப் போக்குவரத்து உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான திட்டங்களை வகுத்தல் |
| **பாதுகாப்பு மதிப்பீடு மற்றும் சான்றுப்படுத்துகை** | கீழ் குறிப்பிடப்பட்ட பணிகள் தொடர்பில் அவதான முகாமைத்துவம்<br>• விமான நிலையம் / வான்துறையின் பாதுகாப்பு<br>• விமான சேவைத் துறையினரின் பாதுகாப்பு<br>• பொது விமானப் போக்குவரத்துத் துறையினரின் பாதுகாப்பு<br>• தனிநபர் அனுமதிப் பத்திரதாரரின் பாதுகாப்பு<br>• விமானப் பறப்புப் பயிற்சி பாதுகாப்பு<br>• வானூர்தி பராமரிப்புப் பாதுகாப்பு<br>• விமானப் போக்குவரத்து வழங்கல் சேவைப் பிரிவின் பாதுகாப்பு |
| **பாதுகாப்பு ஆய்வுத் தகவல்கள் மற்றும் மேம்படுத்தல்கள்** | • பாதுகாப்பு விசாரனை<br>• பாதுகாப்பு ஆய்வு<br>• பாதுகாப்புத் தகவல், கல்வி மற்றும் மேம்படுத்தல்<br>• வானூர்தி விபத்துக்கள் மற்றும் சம்பவ விசாரனை பாதுகாப்பு பரிந்துரைகளின் அமுலாக்கங்கள் |
| **அதிகாரமளித்தல்** | • விமான சேவை அட்டவணை அங்கீகாரம்<br>• விமானப் போக்குவரத்துக் கட்டணங்களின் அங்கீகாரம்<br>• பயண முகவர்களை சான்றுப்படுத்தல்<br>• வானூர்திகளை பதிவு செய்தல்<br>• வானூர்தி உதிரிப்பாகங்களின் இறக்குமதிக்கான அங்கீகாரத்தை வழங்குதல்.<br>• உயர் கட்டட நிர்மானங்களை மேற்கொள்வதற்கான அங்கீகாரம்<br>• பொது விற்பனை முகவர்களுக்கு அதிகாரம் வழங்குதல்.<br>• சர்வதேச செயற்பாடுகளுக்கான உள்நாட்டு விமான போக்குவரத்து கம்பனிகளை பெயரிடல். |
| **பாதுகாப்பு மதிப்பீடு** | • சிவில் விமானப் போக்குவரத்துத் துறை பாதுகாப்பு இடர் முகாமைத்துவம் |
| **நடைமுறைப்படுத்தல்** | • சட்ட ஒழுங்குமுறைகளை மீறல் மீதான விளைவுகள்<br>• பொதுச் சுகாதார மற்றும் சுத்திகரிப்புத் தேவைகளை அமுலாக்கல் |
| **அரசாங்கத்திற்கு உதவுதல்** | • விமான போக்குவரத்து நிறுவனங்களிடமிருந்து சரக்குப் பொருள் ஏற்றி இறக்கும் கட்டணத்தை அறவிடல். |



## ஒழுங்கு முறை விடயத் துறைகள்

2017 ஆம் ஆண்டில் சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் மேற்பார்வை ஒழுங்குமுறை விடயத் துறைகள் கீழ்க் குறிப்பிட்டவாறு அமைந்தன.

| ஒழுங்கு முறைத் துறைகள் | 2017 | 2016 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| **விமான நிலையங்கள்** | | | |
| உள்நாட்டுத் தரை விமான நிலையங்கள் | 14 | 14 | 00 |
| உள்நாட்டு நீர் விமான நிலையங்கள் | 16 | 16 | 00 |
| சர்வதேச விமானத் தளங்கள் (RMA உடன்) | 03 | 03 | 00 |
| **விமான போக்குவரத்துக் கம்பனிகள்** | | | |
| உள்நாட்டு வான் சேவைகளில் ஈடுபடும் உள்நாட்டு விமானப் போக்குவரத்து கம்பனிகள் | 10 | 08 | 25% |
| சர்வதேச வான் சேவைகளில் ஈடுபடும் உள்நாட்டு விமானப் போக்குவரத்து கம்பனிகள் | 02[1] | 03 | -33% |
| சர்வதேச வெளிநாட்டு விமானப் போக்குவரத்து கம்பனிகள் | 37 | 33 | 12% |
| **பயிற்சியளிக்கும் நிறுவனங்கள்** | | | |
| பறத்தல் பயிற்சிப் பாடசாலைகள் | 08 | 08 | 00 |
| பொறியியல் / பராமரிப்புப் பாடசாலைகள் | 07 | 06 | 17% |
| சிவில் விமான சேவை பயிற்சி மத்திய நிலையம் | 01 | 01 | 00 |
| **வானியல் சேவைகள் வழங்குனர்கள்** | | | |
| வான் போக்குவரத்து சேவைகள் | 06 | 03 | 100% |
| ரோனர் செயற்பாடுகள் | 01 | 01 | 00 |
| **விமானங்களைப் பதிவு செய்தல் மற்றும் விமானத் தகைமைகள்** | | | |
| பாரிய விமானங்கள் (உயர்ந்தபட்சம் கொண்டு செல்லக்கூடிய நிறை 5700 கிலோ கிராம் மற்றும் அதனை விட மேற்பட்ட) | 30 | 25 | 20% |
| சிறிய ரக விமானங்கள் ( உயர்ந்தபட்ச கொண்டு செல்லக்கூடிய நிறை 5700 கிலோ கிராம் மற்றும் அதனை விட மேற்பட்ட | | | |
| இலகுரக போக்குவரத்து விமானங்கள் | 36 | 34 | 06% |
| மிகுந்த இலகுரக விமானங்கள் | 02 | 02 | 00 |
| ஹெலிகொப்டர் | 13 | 12 | 08% |
| வெப்பக் காற்றழுத்த பலூன் | 07 | 06 | 17% |
| **செயற்கை பயிற்சிச் சாதனங்கள் - வானியல் பயிற்சி உபகரணங்கள்** | | | |
| உள்நாட்டு முழு அளவான வானியல் மாதிரிகள் - Smiulators A 320 | 03 | 03 | 00 |
| வெளிநாட்டைத் தளமாக கொண்ட முழு அளவான வானியல் மாதிரிகள் | 00[2] | 03 | -100% |
| விமானப் பயணக்கட்டுப்பாட்டு மாதிரிகள் ATC | 01 | 01 | 00 |

| ஒழுங்கு முறைத் துறைகள் | 2017 | 2016 | வித்தியாசம் (%) |
|---|---|---|---|
| **தனிநபர் அனுமதிப் பத்திரம்** | | | |
| பயிலுநர் விமானி அனுமதிப்பத்திரதாரர்கள் | 192[3] | 247 | -22% |
| தனிநபர் விமானி அனுமதிப்பத்திரதாரர்கள் | 119[4] | 148 | -20% |
| வர்த்தக விமானி அனுமதிப்பத்திரதாரர் | 373 | 381 | -02% |
| வான் போக்குவரத்து விமானி அனுமதிப்பத்திரதாரர் | 327 | 394 | -17% |
| வான் கட்டுப்பாட்டு அனுமதிப்பத்திரதாரர்கள் | 85 | 89 | -04% |
| வானூர்தி பராமரிப்புப் பொறியியலாளர் அனுமதிப்பத்திரதாரர் | 04 | 03 | 33% |
| வானூர்திப் பராமரிப்பு அனுமதிப்பத்திரதாரர் | 442 | 483 | -08% |
| விமானங்கள் புறப்படுவதற்கான ஆயுத்தங்களை மேற்கொள்ளும் | 208 | 204 | 02% |
| வானியல் தள செயற்பாட்டாளர் அனுமதிப்பத்திரதாரர் | 04 | 04 | 00 |
| விமான சிற்றறை உறுப்பினர் சான்றிதழ்தரார் | 1215 | 1452 | -16% |
| வானியல் ஆலோசகர்கள் | 23 | 19 | 21% |
| உதவி வானியல் ஆலோசகர்கள் | 09[5] | 18 | -50% |
| தள ஆலோசகர்கள் | 09 | 07 | 29% |
| விமானப் புறப்படுகை பரிசோதகர்கள் | 07 | 07 | 00 |
| பெயரிடப்பட்ட ஒப்பீட்டு விமானிகள் | 35 | 39 | -10% |
| பெயரிடப்பட்ட வானியல் வைத்தியப் பரிசோதகர்கள் | 06 | 05 | 20% |
| சான்றிதழ் பெற்ற விமான சேவைப் பாதுகாப்பு ஆய்வாளர்கள் | 847 | 703 | 20% |
| சான்றிதழ் பெற்ற விமான சேவை பாதுகாப்பு ஆலோசகர்கள் | 14 | 14 | 00 |
| சான்றிதழ் பெற்ற விமான சேவை பாதுகாப்பு முகாமையாளர்கள் | 28 | 17 | 65% |
| **விமான போக்குவரத்து சேவை வழங்குனர்கள்** | | | |
| உலகளாவிய விநியோக சேவை வழங்குனர்கள் | 04 | 04 | 00 |
| விமானப் போக்குவரத்து சேவை வழங்குனர் அனுமதிப்பத்திரம் | 511 | 538 | -05% |
| வான் போக்குவரத்து சேவை வழங்குனர் அனுமதிப் பத்திரதாரர்கள் - வகை A | 433 | 446 | -03% |
| வான் போக்குவரத்து சேவை வழங்குனர் அனுமதிப் பத்திரதாரர்கள் - வகை B | 78 | 92 | -15% |
| பொது விற்பனை முகவர்கள் | 25 | 19 | 32% |

**அடிப்படைக் குறிப்பு**

1. இவ் ஆண்டிற்குள் வரையறுக்கப்பட்ட மிஹின்லங்கா கம்பனி மூடப்பட்டது.
2. பயிற்சிக்காக தேசிய விமான மாதிரிகள் இருப்பதனால் இலங்கை விமானக் கம்பனி வெளிநாட்டு மாதிரிகளை பயண்படுத்துவதை இடைநிறுத்தியது.
3. பயிலுநர் விமானிகள் ஆட்சேர்ப்பு வரையறுத்தல் மற்றும் வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்கு வாய்ப்பு கிடைத்தல்.
4. மேலதிக பயிற்சிகளுக்காக வெளிநாடு செல்லல்.
5. உதவி விமான ஆலோகர்கள் விமான ஆலோசகர் தரத்திற்கு பதவி உயர்த்தல்



## "அனைவருக்கும் ஆபத்தற்ற ஆகாயம்"



# வானியல் தகவல் வலையம் - இலங்கை



# இலங்கை சிவில் விமான சேவை
## அதிகார சபையின் நிருவாகம் மற்றும் பொறுப்புக்கள்

### அதிகார சபையின் பொறுப்பு

அதிகார சபையின் பிரதான பொறுப்புக்குரிய பணிகளுக்கு இடையே கீழ்க் குறிப்பிடப்பட்டவைகள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

- நாட்டின் சிவில் விமானப் போக்குவரத்துத் துறையினை திட்டமிடுதலில் கௌரவ அமைச்சர் மற்றும் ஏனைய அரசாங்கப் பங்காளர்களின் கருத்துக்கள் பிரதிபலித்துக் காட்டப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக உரிய தரப்பினருடன் கருத்து பரிமாறிக் கொள்ளல்.
- சிவில் விமான போக்குவரத்துத் துறையின் கொள்கை மற்றும் இலக்குகளைத் தாபித்தல். சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் நோக்கங்களை எட்டுவதற்காக திட்டமிடப்பட்ட செயற்சாதனை மேற்பார்வைகளை மேற்கொள்ளல் மற்றும் உரியவாறு சிவில் விமான சேவைத்துறையில் அரசாங்கத்தின் நோக்கங்களை சித்தரித்து காட்டக்கூடிய வகையில் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் கூட்டாண்மை திட்டங்களை சமகாலப்படுத்தல்.
- உத்தியோக பூர்வ அதிகாரத்தின் மூலம் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தரான சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் உரிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகத் தேவையான பொறுப்புக்களை வழங்குதல்.
- சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் கடமைகளை நிறைவேற்றக்கூடிய வகையில் தகைமைகள் மற்றும் தேர்ச்சிகொண்ட ஊழியர்களை பணிக்கு சேர்த்துக் கொள்ளல் மற்றும் அவர்களின் சம்பளம் உட்பட சேவை நிபந்தனைகளைத் தீர்மானித்தல்.
- திட்டமிடல் மற்றும் CAASL கூட்டாண்மை திட்டங்களை அமுல்படுத்தும் முன்னேற்றங்கள் தொடர்பாக கௌரவ அமைச்சருக்குப் பொறுப்புக் கூறல்.

### பணிப்பாளர் சபை

சிவில் விமான சேவைக்குரிய கொள்கை விடயங்களில் பரந்தளவிலான கருத்துக்களை வெளிக்கொண்டுவரும் பொருட்டு அதிகார சபையின் பணிப்பாளர் சபை வியாபாரம், சட்டம், விமானப் போக்குவரத்துத் துறையில் பரந்தளவிலான ஆற்றல் மற்றும் அனுபவத்தினைக் கொண்ட உறுப்பினர்களை உள்ளடக்கி உருவாக்கப்படுகின்றது.

அதிகார சபைக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் அதன் அனைத்து உறுப்பினர்களும் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் மீது அதிகூடிய விருப்பத்தினை வெளிப்படுத்தக்கூடிய வகையில் அதன் நலனுக்கான செயற்பாடுகளில் ஈடுபட எதிர்பார்ப்பதுடன் அதிகார சபையினால் எடுக்கப்படும் சகல தீர்மானங்களுக்கும் இணங்கி செயற்பட வேண்டும் என்றும் தனித்தனியாக உறுப்பினர்களுக்கு அதிகார சபையின் செயற்பாடுகளுக்கு அப்பால் வேறுபட்ட நிருவாகச் செயற்பாடுகளை மேற்கொள்ளக்கூடாது என்பதையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அதிகார சபையானது கொள்கைகளை உருவாக்குவதன் ஊடாக CAASL இன் இலக்குகளை அடைவதற்காக அதிகாரங்களையும் செயற்பாடுகளையும் பகிர்ந்தளிப்பதனூடாக பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்களை வழிநடத்துகின்றது. அதிகார சபையின் முன்னோக்கிய திட்டங்கள் அதன் முழுமையான கூட்டாண்மைத் திட்டத்தில் உள்ளடக்கப்படுகின்றதுடன், ஒவ்வோர் ஆண்டின் ஆரம்பத்திலும் அதிகாரசபையால் அனுமதியளிக்கப்படும் வருடாந்த வேலை நிகழ்ச்சித்திட்டம், பயிற்சியளித்தல் திட்டம் மற்றும் நிகழ்ச்சித் திட்ட பாதீடு என்பன மூலம் வினைத்திறனான முறையில் கண்காணிக்கப்படுகின்றது. மேலும் அதிகார சபையானது குறிப்பிட்ட ஏற்பாடுகளை தற்போது கொண்டிராத அனைத்து விடயங்கள் தொடர்பிலும் தீர்வினைப் பெற்றுக் கொள்வதற்கு சபையினூடாக பிரதான நிறைவேற்று உத்தியோகத்தருக்கு வழிகாட்டலை வழங்குவதுடன், அவ்வாறான தீர்வுகளை நடைமுறைப்படுத்திக் கொள்வது பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரது கடமையாகவும் காணப்படுகின்றது.

### அதிகார சபையின் நிறைவேற்று அதிகாரங்கள்

2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் நியமிக்கப்படுவதுடன் அவர் யாப்பிற்கமைய சிவில் விமான சேவை அதிகார சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராக செயற்பட வேண்டும்.

அவர் அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்ட சேவை ஒழுங்கு விதிகள், நிபந்தனைகளுக்குப் உட்பட்டு செயற்பட வேண்டியதுடன், இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் சட்டத்தினால் அல்லது அச்சட்டத்தின் கீழ் அல்லது வேறு ஏதேனும் உரிய எழுத்து மூல சட்டத்திற்கமைய அவருக்குப் பொறுப்பளிக்கப்படும் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் சகலவற்றையும் மேற்கொள்ள வேண்டும். இதற்கு மேலதிகமாக அதிகார சபையின் பணிகள் தொடர்பில் பொது நிருவாகப் பணிகளும் அவருக்குப் பொறுப்பளிக்கப்படுகின்றன. சட்டத்தினால் அவருக்கு வழங்கப்பட்டுள்ள நிலையியற் சபைப் பணிகள் தொடர்பில் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் சுயாதீனமாகச் செயற்படுவார் என்பது அதிகார சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இது எவ்வாறாக இருப்பினும் இவ்வாறான கடமைகள் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்காக அதிகார சபையினால் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளுக்கு மற்றும் ஒப்பளவுகளுக்குட்பட்டு CAASL இன் வளத்தைப் பயன்படுத்துவதற்கு சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்திற்கு முடியும்.

### அதிகார சபைக் குழுக்கள்

குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் கூடுதலாக கவனம் செலுத்தி அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தல் மற்றும் அமுல்படுத்துவதற்காக அதிகார சபையினால் பணியாளர் சபைக்குழு நிதிக் குழு மற்றும் கணக்காய்வுக் குழு என அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இரண்டு (02) நிலையான குழுக்கள் தாபிக்கப்பட்டுள்ளது. அதிகார சபையின் நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் ஒழுங்கு செய்யப்படும் முன்னேற்றங்களை உறுதிப்படுத்த மற்றும் மேற்பார்வை செய்வதற்கும் அதன் மூலம் உரிய இலக்குகள் மற்றும் நோக்கங்களை எட்டுவதற்கும் தேவையான அதிகாரங்கள் ஒவ்வொரு குழுக்களுக்கும் பொறுப்பளிக்கப்பட்டுள்ளன. இந்த குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் பணிகள் தொடர்பில் தேவை எனக் கருதப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உரிய விடயங்கள் தொடர்பில் அல்லது அவ்வாறான சகல செயற்பாடுகள் தொடர்பிலும் பணிப்பாளர் சபைக் குழுவின் அதிகாரங்களைத் தொடர்ச்சியாக அமுல்படுத்த முடியும்.

### ஊழியர் குழுக்கள்

ஊழியர் குழுவானது பின்வரும் விடயங்கள் தொடர்பாக அதிகார சபைக்கு பொறுப்புக் கூறுக் கட்டுப்பட்டுள்ளது.

- ஒழுங்கமைப்புக் கட்டமைப்பினை அங்கீகரித்தல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் அதனை மறுசீரமைத்தல்.
- ஊழியர்களது பணிநிலைப் பிரிவு மற்றும் சம்பள அளவுத் திட்டங்களைத் தீர்மானித்தல்.
- தேர்ந்தெடுத்தல், ஆட்சேர்த்தல், நியமனம் வழங்குதல், பதவியுயர்த்துதல், பதவியிறக்குதல், ஓய்வுறுத்துல் மற்றும் சேவை முடிவுறுத்தல் போன்றன தொடர்பான விடயங்களை கையாளல்.
- தேவையான சந்தர்ப்பங்களில் ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிமுறைகளை வெளியிடல் அல்லது மறுசீமைத்தல்.
- CAASL இற்காக அலுவலக ஒழுங்கு விதிமுறைக் கோவைகளை வெளியிடல்.
- ஊழியர்களுக்குரியதான ஒழுக்காற்றுப் பணிகள்
- தேவையான முறைக்கு மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் CAASL ஒருங்கிணைந்த திட்டங்களை மறுசீரமைத்தல் அல்லது சமகாலப்படுத்தல்.
- CAASL இன் வருடாந்தம் அமுல்படுத்தும் வேலைத்திட்டங்கள், பயிற்சிக் கொள்கைகள், செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் வேலைத்திட்ட மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.
- ஊழியர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிக்காக அங்கீகாரத்தை வழங்குதல் மற்றும் CAASL இன் ஊழியர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்குதல்.
- அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் கொள்வனவிற்கான அனுமதியினை வழங்குதல் மற்றும் அச் சொத்துக்களைத் திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி செய்தவதற்கான அங்கீகாரத்தை வழங்குதல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்துத் திணைக்கள ஊழியர்களுக்கான முன்கூட்டிய ஓய்வுறுத்தலுக்கான நஷ்டஈடு அல்லது சேவையிலிருந்து விலகுவதற்காக நட்டஈட்டு யோசனைக் கொடுப்பனவு மறையினை வெளியிடல்.
- இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை ஊழியர்களின் சமூக மற்றும் நலன்புரித் திட்டத்தை மேம்படுத்தல்.

இவ் ஊழியர் குழுவானது இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

1. திரு. ஆனந்த விமலசேன (தலைவர்)
2. திரு. குசான் டி. அல்விஸ் (அங்கத்தவர்)
3. திரு. எச்.எம்.சி. நிமல்சிறி (அங்கத்தவர்)

### கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது பின்வரும் விடயங்கள் தொடர்பாக அதிகார சபைக்கு பொறுப்புக் கூறக் கட்டுப்பட்டுள்ளது.

- உள்ளகக் கணக்காய்வு அலகு மற்றும் வருடாந்த கணக்காய்வுத் திட்டம் என்பவற்றிற்கு பொறுப்புடமையினைத் தீர்மானித்தல்.
- நிறுவனத்தின் அனைத்து செயற்பாடுகளுக்குமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை மதிப்பீட்டு மேற்பார்வை செய்தல்.
- சீரான கால இடைவெளியில் செலவுகளின் வினைத்திறனை மதிப்பீடு செய்தல் மற்றும் வீணான செலவுகளைத் தவிர்த்தல் என்பதான செயற்திறன் மதிப்பீட்டை மேற்கொள்ளல்
- வெளியகக் கணக்காய்வாளர்களுடன் தொடர்புகளை பேணுவதுடன் கணக்காய்வாளர் நாயகத்தின் முகாமைத்துவ ஆவணங்களைப் பின்பற்றல்.

- நியாயாதிக்க நியதிச் சட்ட விதிமுறைகள் மற்றும் சுற்று நிருபங்கள் பின்பற்றப்படுகின்றனவா என்பதை மதிப்பீடு செய்தல்.
- கணக்கியல் நியமங்கள் பின்பற்றப்படுகின்றனவா என்பதனை உறுதி செய்து கொள்ளும் பொருட்டு நிதிக் கூற்றுக்களை மீளாய்விற்குட்படுத்தல்.
- பரிகார நடவடிக்கைகளுக்காக உள்ளகக் கணக்காய்வு அறிக்கை, வெளியகக் கணக்காய்வு அறிக்கை மற்றும் முகாமைத்துவ ஆவணங்களை போன்றவற்றை மீளாய்வு செய்தல்.
- அரச தொழில் முயற்சிக் குழுவின் பரிந்துரைகளின் வழிகாட்டல்களின் அமுலாக்கலை மீளாய்வு செய்தல்.
- ஆண்டறிக்கையில் உள்ளடக்குவதற்கு குழுவின் கண்டுபிடிப்புக்கள் தொடர்பான அறிக்கையினை மீளாய்வு செய்தல்.
- தேவைக்கேற்ப அதிகார சபையினால் கேட்கப்படும் போது அனைத்துக் கணக்காய்வு விடயங்கள் தொடர்பாக அறிக்கையிடல்.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவானது இலங்கை சிவில் விமான போக்குவரத்து அதிகார சபையின் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

1. திருமதி. அனுலா கரஸ்கம (தலைவர்) (2017 ஜூன் 29 வரை)

   திரு. சி.ஜே.கே. பெரேரா (தலைவர்) (2017 ஆகஸ்ட் 31 வரை)
2. பொறியியலாளர் சுதர்ம அலகந்த (அங்கத்தவர்)
3. கலாநிதி அமிந்த மெத்சில பெரேரா (அங்கத்தவர்)

## இலங்கை வேலைத்திட்டங்கள் - தேசிய குழு

எதிர்கால சந்ததியினருக்காக விமான சேவை சார்ந்த தொழில்கள் (NGAP) தொடர்பாக சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின் ICAO கருத்துக்கள்

எதிர்காலத்தில் தேர்ச்சி கொண்ட விமான சேவைத் தொழிலாளர்களின் பற்றாக்குறை ஏற்பட முடியும் என சர்வதேச விமான சேவை சமூகத்தினால் இனங்காணப்பட்டுள்ளது. இப்பாரிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் எதிர்கால சர்வதேச விமானப் போக்குவரத்துக் கம்பனியை செயற்படுத்தல், முகாமைத்துவத்திற்குட்படுத்தல் மற்றும் முன்னெடுப்பதற்கான தகைமைகள் உட்பட தேர்ச்சி கொண்ட விமான சேவைத் தொழிலாளர்கள் கூடுதலாக தயார்படுத்தப்படுவதனை உறுதிப்படுத்துவதற்காக சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பு (ICAO) அடுத்த விமான சேவை தொழில்சார் பரம்பரைக்காக (NGAP) வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

விமான சேவைக் கைத்தொழிலின் பாதுகாப்பு மற்றும் தொழில்சார் கௌரவம் கொண்டதாக எதிர்காலத்திலும் செயற்படுத்துவதற்கான பயிற்சிகள், தகைமைகள் மற்றும் அனுவபம் கொண்ட விமான சேவைத் தொழிலாளர்களின் தேவைகள் உட்பட அதன் முக்கியத்துவம் இலங்கை அரசாங்கத்தினால் இனங்காணப்பட்டுள்ளது. இதன் போது இலங்கை அரசாங்கமும சர்வதேச விமான சேவை அமைப்புடன் கைகோர்த்து அடுத்த பரம்பரைக்காக விமான சேவை தொழில்சார் வேலைத்திட்டம் இலங்கையிலும் அமுல்படுத்தப்பட்டுள்ளது. அதன் மூலம் எதிர்கால மானிட வளத்தை இனங்கண்டு அவர்களுக்குத் தேவையான பொருத்தமான பயிற்சிகள் வழங்கப்படும். இதற்காக கீழ்க் குறிப்பிட்ட பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கைத்தொழில் பங்காளர்களுக்கு அவர்களின் நீண்டகால மானிட வளத் தேவைகளை இனங்காண்பதற்கு மற்றும் விமான சேவைத் தொழிலாளர்களை கவர்ச்சிக்குட்படுத்தி அவர்களுக்கு கல்வி மற்றும் பயிற்சியை வழங்கி அவர்களை சேவையில் நிலைப்படுத்துவதற்காக பின்பற்ற வேண்டிய வியூகங்களை வகுக்க உதவுவதற்காக தேசிய குழுவினைத் தாபித்தல்.

விமானத் சேவைத் தொழிலாளர்களாக எதிர்கால சந்ததியினரை ஈடுபடுத்துவதற்காக வழிகாட்டல் மற்றும் ஏனைய உபகரணங்களை வழங்கி கைத்தொழிலுக்கு உதவுதல் உட்பட விமான சேவை தொழிலை பிரயோகத் தொழிலாக இளைஞர் யுவதிகளுக்கிடையே பிரபல்யப்படுத்தி ஊக்குவித்தல்.

இலங்கை வேலைத்திட்டத்தின் பணிகள், எதிர்கால நோக்கு மற்றும் இலக்குகளை எட்டுவதற்கும் அதன் பிரதான அமுல்படுத்தும் திட்டங்களை முன்னெடுப்பதற்கும் உதவுவது மேற்கூறப்பட்ட தேர்ச்சிக் குழுவின் பொறுப்பாகும்.

## தேசிய குழு - NGAP இலங்கை வேலைத்திட்டம்

NGAP இலங்கை வேலைத்திட்டத்தின் தேசிய குழுவில் கீழ்க் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்கள் அடங்கியுள்ளனர்.

**இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை**

01. திரு. எச்.எம்.சி. நிமல் சிறி (தலைவர்)
02. திரு. அதுல ஜயவிக்ரம (உப தலைவர்)
03. திரு. ஜி.சி.ஜி.பி. தபரேரா (செயலாளர் மற்றும் NGAP தேசிய இணைப்பாளர்)
04. திரு. என். நவஜீவன் (உதவிச் செயலாளர்)
05. திரு. ரொகான் வன்னியப்பா (ஆலோசகர்)
06. திரு. கே.எம்.எம்.என். தசாநாயக்க (விமான சேவை கற்கை, அபிவிருத்திக் குழு பிரதானி)
07. திருமதி. சானிக்க மாணவடுகே (விமான சேவை தொழில்சார் அபிவிருத்திக் குழுவின் பொறுப்பாளர்)
08. திரு. பிரபாத் குலரட்ன (விமான சேவை அறிவுறுத்தல் குழுவின் பொறுப்பாளர்)

**வ/ப. விமான நிலையம் மற்றும் விமான சேவை (இலங்கை) கம்பனி**

09. திரு. தேவிந்த அபேகுணவர்தன
10. திரு. திவங்க வீரசிங்க

**வ/ப ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸ் கம்பனி**

11. திரு. அனுர கல்லேல
12. திரு. சம்பத் செய்சா

## சிவில் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு (CADEC)

சிவில் விமான சேவை போக்குவரத்து சேவைப் பணிகள் தொடர்பான பொதுமக்களின் அறிவினை விருத்தி செய்வதனை இலக்காகக் கொண்ட விசேட வேலைத்திட்டங்களை திட்டமிட்டு வெளியிடல் மற்றும் அமுல்படுத்துவதற்காக 2010 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் சிவில் விமான சேவை அபிவிருத்தி மற்றும் கல்விக் குழு CADEC தாபிக்கப்பட்டது. DGCA மற்றும் CEO இக்குழுவின் தலைமைத்துவத்தை வகிப்பதுடன் சிரேஷ்ட பணிப்பாளர் மற்றும் பணிப்பாளர் (கூட்டிணைந்த) அவருக்கு உகந்த உதவிகள் வழங்கப்படும். தேவைக்கு ஏற்றவாறு மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் சிவில் விமான சேவை பணிப்பாளர் நாயகத்தினால் பெயரிடப்பட்ட பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் CAASL பணியாளர் சபையிலிருந்து நியமிக்கப்படும் அங்கத்தவர்களைக் கொண்டதாக இக் குழு அமைந்துள்ளது.

## நிறுவனத்தில் அக்கறை கொண்டுள்ளோருடனான தொடர்புகள்

விசேடமாக இலங்கை சிவில் விமான போக்குவரத்து சேவை விடயத்திற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் எதிர்பார்ப்புக்கள் தொடர்பில் விளக்கம் பெற்றிருப்பதற்காக பங்காளர் தரப்பினர்களுடன் நெருங்கிய மற்றும் தொடர்ச்சியான இணைப்பக்களை பேணும் பொறுப்பு அதிகார சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

## அதிகார சபையினதும் சிரேஷ்ட முகாமையினதும் பொறுப்பு

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் மற்றும் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் உள்ளிட்ட சிரேஷ்ட முகாமையாளர்களின் செயற்பாடுகள் தொடர்பில் தெளிவான வறையறைகளுடன் சிவில் விமான சேவை அதிகார சபையின் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக முன்னெடுத்துச் செல்வது மிக முக்கியத்துவம் வாய்ந்த பணியாகும்.

**அதிகார சபையானது உயர்மட்டக் கொள்கைகள்** மற்றும் தந்திரோபாயங்களைத் நிலைப்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்படுவதுடன் அதன் பின்னரான இலக்குகளை எடடுவதற்கான முன்னேற்றங்கள் மேற்பார்வைக்குட்படுத்தப்படுகின்றன. அதனைத் தொடர்ந்தும் அமுலில் உள்ள கொள்கைகள், செயற்பாட்டு ஒழுங்கு விதிகள் அல்லது விதிமுறைகளை உரியவாறு கட்டளைகள் வழங்கப்படாதுள்ள விடயங்கள் தொடர்பில் ஆலோசனை வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன.

இங்கு உயர் மட்டக் கொள்கைகள் மற்றும் மூலஉபாயச் செயற்பாடுகளின் பொறுப்புக்கள் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் உள்ளிட்ட சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

2010 இலக்கம் 14 கொண்ட சிவில் விமானப் போக்குவரத்துச் சட்டம், வான் செலவுச் சட்டத்தில் அல்லது அதனால் வெளியிடப்பட்ட ஒழுங்கு விதிகள் அல்லது ஏதாவது எழுதப்பட்ட சட்டங்களின் பிரகாரம் சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ள உரிய மேற்பார்வைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவது தொடர்பிலான பொறுப்புக்கள் அதிகார சபைக்கு இல்லை என்பதுடன் அதிகார சபை அதிலிருந்து விலக்கிச் செயற்படுகின்றது.

இது எவ்வாறாக இருப்பினும் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்திற்கு மற்றும் அரசாங்கத்திற்குள்ள அவ்வாறான மேற்பார்வை பொறுப்புக்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றுவதற்காக சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்திற்குத் தேவையான பணியாளர் சபை, உபகரண வசதிகள் மற்றும் சேவைகள் உள்ளிட்ட இருப்பினும் அதற்கு வரையறையற்ற சகல வழங்கல் மற்றும் உதவிகள் அதிகார சபையினால் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகம்/ CAASL மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தருக்கு சுருக்கமாக மற்றும் முழுமையாக அதிகாரங்கள் உட்பட பணிகள் பொறுப்பளிக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தும் வகையில் அதிகார சபை தமது பணிகளை தெளிவாகக் காண்பித்துள்ளது.

## பொறுப்புடமை

அதிகார சபையின் தந்திரோபாயத் திட்டங்களை இலக்காகக் கொண்டு முன்னேற்றத்தை மேற்பார்வை செய்வதற்காகவும் சிவில் விமான சேவை அதிகார சபையின் பணிகள், அதிகார சபையின் கொள்கைகள், மூல உபாய வழிகாட்டல்கள் உட்பட அதன் கூட்டிணைந்த திட்டத்தின் அபிலாசைகளுக்கமைவாக முகாமைத்துவத்திற்கு உட்படுத்தப்படுவதாகவும் செயற்படுத்தப் படுவதாகவும் அப் பணிகள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதாகவும் மேற்பார்வை செய்வதாகவும் உறுதிப்படுத்தும் வகையில் அதிகார சபையின் கூட்டங்கள் மற்றும் அதன் குழு நாளாந்தம் நடாத்தப்படுகின்றது.

## ஆர்வ ரீதியான முறன்பாடுகள்

அதிகார சபை தொடர்பில் ஆவணம் பேணப்பட்டு அதன் அங்கத்தவர்கள் தமது பல்வேறுபட்ட வெளித் தொடர்புகளை வெளிப்பாட்டு ரீதியில் அறிக்கைப்படுத்துவதற்குள்ள பொறுப்புக்கள் தொடர்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்படுகின்றது. பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களுக்கு மாத்திரமின்றி CAASL இன் சகல ஊழியர்களுக்காகவும் அவ்வாறு தொடர்புபட்ட ஆவணங்களை முன்னெடுத்து செல்வதன் மூலமும் இப்பிரவேசம் சித்தரித்துக் காட்டப்படுகின்றது.

## உள்ளகக் கணக்காய்வு

அதிகார சபையின் பணிகள் மற்றும் கடமைகளில் அனேகமானவை பொறுப்பளிக்கப்பட்டுள்ளதுடன் உற்பத்தித்திறன் மிக்க ஒழுங்கமைப்பு நிருவாகத்தை முன்னெடுத்தல் மற்றும் மேற்பார்வைகளை மேற்கொள்ளும் பொறுப்பு அதிகார சபையின் கீழ் தங்கியுள்ளது.

உள்ளக நிருவாக முறைக்கமைய அதிகார சபையின் உரிய நோக்கங்களை முன்னெடுப்பதற்காக தாபிக்கப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் செயற்பாடுகள் மற்றும் ஒழுங்கு விதிகள் உள்ளடங்கியுள்ளன. அதிகார சபை மற்றும் முகாமைத்துவம் இவ் அறிக்கையில் உள்ளடங்கியுள்ள பொறுப்பு வெளிப்பாட்டில் ஒப்பமிடுவதன் மூலம் அவர்களின் பொறுப்புக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

CAASL இன் சகல ஒவ்வொரு பிரிவுகளினதும் உள்ளக நிருவாக விபரங்கள் நுணுக்கமாக பரிசோதனை செய்வதும் மேற்பார்வை செய்வதற்கும் பொறுப்புக்கள் உள்ளகக் கணக்காய்வு பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது. CASSL இன் முழுமையான கட்டளைகள், பணிகள் மற்றும் அதன் மூலம் வழங்கப்படும் அனைத்து சேவைகளினதும் நிலைமைகளை முன்னெடுப்பதன் மூலம் அதிகார சபையின் தலைவருக்கும் கணக்காய்வுக் குழுவிற்கும் அங்கீகரிக்கப்பட்ட முறைகள் ஊடாக நேரடியாக அறிக்கைப்படுத்தப்படும் நிதி மற்றும் ஏனைய தகவல்களின் நம்பகத்தன்மை தொடர்பிலான பொறுப்புக்கள் வழங்கப்பட்டிருப்பது உள்ளகக் கணக்காய்வின் கருத்துக்கமையவாகும்.

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் முகாமைத்துவம் அழுத்தங்கள் இன்றி சுயாதீனமாகச் செயற்படுவதுடன் அவர்களினால் கண்டுபிடிக்கப்படக்கூடிய விடயங்கள் அங்கீகரிக்கப்பட்ட முறைகள் ஊடாக நேரடியாக சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தருக்கும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கும் அறிக்கைப்படுத்தப்படுகின்றது.

## நிலையியற் சபை தேவைகளுக்கு அமைவான செயற்பாடுகள்

நிறுவனம் அனைத்து சட்டப் பிரமானங்களையும் பின்பற்றுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்காக அதன் பொறுப்புடமையினை அதிகார சபை வெளிப்படுத்துகின்றது. விசேடமாக தமக்குரியதான பிரமாணக் குறிப்பு ரீதியிலான தேவைகள் தொடர்பில் பணியாளர் சபையின் சகலரும் சிறந்த விளக்கத்துடன் செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்காக அவ்வாறான இனங்கக்கூடிய விடயங்கள் தொடர்பிலான பிரச்சினைகளை கிரமமாக இனங்காணும் வகையில் பொருத்தமான வேலைத்திட்டங்களை வெளியிட்டு அமுல்படுத்தும் பொறுப்பு அதிகார சபையினால் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்க அமைப்புக்களினால் அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள பொதுவான சுற்றறிக்கைகள் அல்லது உத்தரவுகள் அதிகார சபையின் செயற்பாடுகள் தொடர்பில் உரியதாக்கிக் கொள்வது ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக கருத்திற் கொள்ளும் அடிப்படைக்கமைவானது என்று அதிகார சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே அதிகார சபையின் அவ்வாறான சுற்றறிக்கைகளின் உள்ளடக்கங்கள் மூலம் அதிகார சபையின் சட்ட ரீதியிலான அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளை அமுல்படுத்துவதில் ஏற்படக்கூடிய அழுத்தங்களை ஆராய்ந்து அவ்வாறான சுற்றறிக்கைளுக்குரியதாக கொள்ள வேண்டிய நிலைமைகள் மற்றும் அளவுகள் தொடர்பில் தீர்மானிக்கும் வரை அரசாங்கத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் ஒவ்வொரு சுற்றறிக்கைகளும் CAASL இன் முகாமைத்துவத்திற்கு உரியதாக்கிக் கொள்ளப்படமாட்டாது.

அரசாங்கத்தின் சுற்றறிக்கை CAASL இன் செயற்பாடுகள் தொடர்பில் உரியதாக்கிக் கொள்ளப்படும் மட்டம் தொடர்பில் சமகாலப்படுத்தப்பட்ட ஒப்பீட்டு செயற்பாட்டுப் பட்டியலை முன்னெடுத்துச் செல்லும் போது கூட்டிணைந்து செயற்படுவது பொருளாதார மேற்பார்வைக் குழுவின் பொறுப்பாகும்.

## ஒழுக்க விழுமியங்கள்

உருவாக்கப்பட்ட ஒழுக்க விழுமியங்களின் அடிப்படையில் அதிகார சபையானது சிறந்த கூட்டுத்தாபன ஆளுமைத் தத்துவத்தினை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒழுக்க விழுமிய நடத்தைகளின் உயரிய நியமங்களை அனைத்து ஊழிர்களும் பின்பற்றுகின்றார்களா என்பதை ஒழுங்குமுறையில் கண்காணித்து வருகின்றது.
ஒழுக்க விழுமிய சிந்தனையில் உள்ளடக்கப்பட்டுள்ள தத்துவங்களுடன் இணங்காதிருப்பவற்றை வெளிக்காட்டக்கூடியதான மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளின் பின்பற்றல் போக்கை கண்காணித்தல், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் அல்லது வேறு ஏதாவது அறிக்கைகள் அல்லது, அறிகுறிகள் போன்றவற்றினூடாக ஒழுக்க விழுமிய நியமங்களுடன் உடன்பாடுகளைக் கண்காணித்தலானது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சிறந்த கூட்டிணைவான பிரஜைகள் அதிகார சபையில் ஈடுபாடு கொண்டுள்ளனர். அதாவது பல்வேறுபட்ட சமூகங்களிலுமுள்ள அனைத்து பிரஜைகளின் நெறிமுறைகள், ஏற்றுக் கொள்ளப்பட்ட உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் போன்றவற்றுடன் இசைவாக்கமடைந்த மனநிலையுடன் செயற்படும் வகையிலான அற்பணிப்பு ஒன்றினை மேற்கொள்ளல் மற்றும் அதிகார முன்னெடுக்கும் கைத்தொழில் மற்றும் அதற்கு அப்பால் அனைத்து சமூகங்களின் உறுப்பினர் ஒருவராக இருத்தல் என்னும் அறிவுடன்கூடிய அதன் ஊழியர்களை உள்ளடக்கியதாக அதிகாரசபை காணப்படுகின்றது.

## சிரேஷ்ட முகாமைத்துவம் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு

2013 நவம்பர் 22 ஆம் திகதி முகாமைத்துவத் திணைக்களத்தினால் மறுசீரமைத்து முகாமைத்துவக் கட்டமைப்பு அங்கீகரிக்கப்பட்டது. CASSL இன் சிரேஷ்ட முகாமைத்துவக் கட்டமைப்பு கீழே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இக் கட்டமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சுருக்கமான உள்ளீடுகளின் விளக்கம் இவ் அறிக்கையின் ஆரம்பத்தில் விபரிக்கப்பட்டுள்ளது செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவம்



# செயற்பாடுகள் மற்றும் முகமைத்துவம்

## பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகம், தலைவர் அலுவலகம், விபத்து விசாரனை அலகு, சட்டம் மற்றும் வலுவூட்டல் பிரிவு



## தர மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு



### பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள்

2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்தின் கீழ் கௌரவ போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய சிவில் விமான சேவை அதிகார சபையின் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

திரு. ஆனந்த விமலசேன மற்றும் குசான் டி. அல்வீஸ் ஆகியோர் தொடராக தலைவர் மற்றும் உப தலைவர்களாக நியமிக்கப்பட்டனர்.

### CAASL இன் கூட்டங்கள்

மீளாய்விற்குட்படுத்தப்பட்ட கால எல்லைக்குள் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை 12 கூட்டங்கள் நடாத்தி CAASL இன் மற்றும் அதன் மூலம் மேற்பார்வை செய்யப்படும் சிவில் விமான சேவை கைத்தொழிலின் முன்னேற்றங்கள் உட்பட நலனுக்காக அதிகார சபையினால் யோசனைகள் அங்கீகரிக்கப்பட்டன. CAASL இன் பணியாளர் சபையின் குழுக் கூட்டம் 07 தடவைகள் கூடியதுடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு 04 தடவைகள் கூடியது.

## விபத்து விசாரனைப் பிரிவு

சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகளுக்கமைய உள்நாட்டு விமான சேவை பணிகளை முன்னெடுக்கும் பொறுப்பு சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின் அங்கத்துவ இராட்சியமாக இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. தரம் கொண்ட சகல அங்கத்துவ இராட்சியங்களுக்கும் விமான விபத்து சம்பவ ஆய்வுகளுக்காக பூரண சுயாதீன அமைப்பு இருக்க வேண்டும். 2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்திற்கமைய விமான விபத்து மற்றும் நிகழ்வுகளை ஆய்விற்குட்படுத்தும் பணிகள் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. விமான சேவை மேற்பார்வையாளராக விமான சேவை பாதுகாப்பினை முன்னெடுக்க உரிய பணிகள் CAASL இற்கு வழங்கப்பட்டுள்ளமையினால் மேற்கூறப்பட்ட வேலைத்திட்டங்கள் திருப்திகரமான முறையில் அமையவில்லை எனத் தென்பட்டுள்ளது. இந்தக் குறைபாட்டினை இனங்கண்ட அரசாங்கம் விமான விபத்து மற்றும் அது சார்ந்த சம்பவங்களை விசாரனைக்குட்படுத்துவதற்காக தனியான சுயாதீன பிரிவினைத் தாபிக்க அங்கீகாரம் வழங்கப்பட்டது. இதற்கமைய விமான விபத்து விசாரனை பணியகம் என்ற பெயரில் சுயாதீன விசாரனை அதிகார சபையினைத் தாபிப்பதற்காக தேவையான சட்ட வரைபினை அங்கீகரிப்பதற்காக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க தயார்படுத்தும் வகையில் மீளாய்வுகள் மற்றும் உறுதிப்படுத்தல்களுக்காக சட்டமா அதிபருக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

2017 ஆம் ஆண்டில் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட விமானங்கள் மற்றும் இலங்கையில் வான் பரப்பிற்கு செயற்படுத்தப்பட்டு வெளிநாடுகளில் பதிவு செய்யப்பட்ட இரு வகையான விமானங்களின் செயற்பாடுகள் ஊடாக 307 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதில் 393 இலங்கையில் பதிவு செய்யப்பட்ட விமானம் சார்ந்த சம்பவங்களாகும். இவ் 293 சம்பங்களில் 112 பறவைகள் மோதுண்ட சம்பவம், 85 ATM/ தொலைத்தொடர்பு சார்ந்த 38 சம்பவங்களும் உள்ளீட்டு செயற்பாடுகள் செயழிலந்தமையினால் ஏற்பட்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளன. பறவைகள் மோதுண்டமையினால் 58 விபத்துக்கள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலும், 08 விபத்துக்கள் மத்தள விமான நிலையத்திலும், 02 விபத்துக்கள் திருகோணமலை சீனத் துறைமுகத்திலும், இரு விபத்துக்கள் இரத்மலானையிலும் இடம்பெற்றுள்ளன. எஞ்சிய பறவை மோதுண்ட சம்பவம் இலங்கைக்கு வெளியே இடம்பெற்றுள்ளது. ATM / தொலைத்தொடர்பு சார்ந்த 85 சம்பவங்களில் 83 இடம்பெற்றிருப்பது ATS பிரிவுடனான இணைப்பு செயழிலந்தமையினால் என்றும் இதன்போது தொடர்புகள் துண்டிக்கப்பட்டமையினால் கூடுதலான சம்பவங்கள் இடம்பெற்றிருப்பது மும்பாய் வானியல் தகவல் வலயம் (FIR) இற்குள் என அறிவிக்கப்பட்டுள்ளது. முறைமை/ உள்ளீடு செயழிலந்தமையினால் அல்லது போலிச் செயற்பாடுகளில் 37 நிகழ்வுகள் ஸ்ரீ லங்கன் எயார் வானியல் சார்ந்த செயற்பாடுகளின் போது இடம்பெற்றுள்ளன. கடந்த 05 வருடங்களுக்குள் இடம்பெற்ற சம்பவங்களுடன் ஒப்பீடு செய்யும் போது அது தொடர்பான குறிப்புக்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

2018 கணக்காய்விற்குத் தயாராகும் பணிகள் 2017 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு இது தொடர்பில் விபத்து விசாரனை - கணக்காய்வுத் துறைக்குரிய அரச விமான சேவைக் கணக்காய்வு வினாக்கொத்து (SAAQ) மற்றும் அது சார்ந்த ஒப்பீட்டுப் பட்டியல் (CC) பூரணப்படுத்தி ICAO-CMA இணையத்தள உருவாக்கம் (Uploaded) மேற்கொள்ளப்பட்டது. CE-1 மற்றும் CE-2 கட்டங்களுக்குரிய புறோடோகோள் கேள்விகள் பூரணப்படுத்தப்பட்டதுடன் ஏனைய துறைகள் புறோடோகோள் கேள்விகள் பூரணப்படுத்தப்படுகின்றன. 2012 ஆம் ஆண்டில் இலங்கை மற்றும் பிரான்சின் BEA ஊடாக இலங்கை உட்பட சிங்கப்பூர் விமான விபத்து விசாரனைப் பணியகத்துடன் விமான விபத்து விசாரனைக்காக உதவிகளை பெற்றுக் கொள்ளும் வகையில் பயன்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் மீளாய்விற்குட்படுத்தி புதுப்பிக்கப்பட்டன.

### சுருக்கமான உள்ளீடுகள்

| | | |
|---|---|---|
| ATM | - | விமான முகாமைத்துவம் **(ATM)** அல்லது தொடர்பாடல்கள் அல்லது தேடல்கள், சேவைகள் தொடர்பான பிரச்சினைகள் **(CAS)** |
| BIRD | - | பறவைகள் மோதுதல் |
| F-NI | - | தீ / புகைத்தல் (அளுத்தங்கள் அற்ற) |
| FUEL | - | எரிபொருள் சார்ந்த |
| GCOL | - | தள மோதல்கள் |
| MAC | - | வானத்தை அண்மித்த / **ACS** விபத்து எச்சரிக்கை / விரிசலைக் குறைத்தல் (அண்மித்த மேல் வானில் மோதல்) |
| MED | - | மருத்துவம் |
| NAV | - | தளத்தில் அல்லது வானில் போலி விமானச் செயற்பாட்டிற்கான அடிப்படை சம்பவங்கள் |
| OTHER | - | ஏனையவை |
| RAMP | - | தளக் கையாளுகைகள் |
| SCF-NP | - | முறைமை/ உள்ளீடுகள் செயலிழத்தல் அல்லது கோளாறு கொண்ட செயற்பாடுகள் (சக்தி வளம் அல்லாத) |




| | | |
|---|---|---|
| SCP-PP | - | சக்தி வளம் செயலிழத்தல் அல்லது கோளாறு கொண்ட செயற்பாடுகள் |
| SEC | - | பாதுகாப்பு சார்ந்த |
| TURB | - | கொந்தளிப்புக்கள் |
| WILD | - | மோதல் - வன ஜீவராசிகள் |
| WSTRW | - | காற்றுத் திசை மாறல் அல்லது இடி மின்னல் தாக்கல் |

# சட்டம் மற்றும் வலுவூட்டல் பிரிவு

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் புதிய ஒழுங்கமைப்புக் கட்டமைப்பிற்கமைய 2017 மே மாதத்தில் அதிகார சபையின் செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவ விடயப் பரப்பின் கீழ் சட்டம் மற்றும் வலுவூட்டல் பிரிவு தாபிக்கப்பட்டது. CAASL இன் சட்டம் மற்றும் வலுவூட்டல் பணிகளை நவீனமயப்படுத்தி அதிகார சபைக்கு உதவுவது இச்சட்டத்தை வலுவூட்டும் பிரிவின் பிரதான நோக்கமாகும்.

சட்டம் மற்றும் வலுவூட்டல் பிரிவு பிரதானமாக கீழ்க் குறிப்பிட்ட செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

- புதிய சட்டங்களை வகுத்தல் அல்லது அமுலில் உள்ள சட்டங்களை மறுசீரமைத்தல்
- புதிய செயற்பாட்டு கோவைகளை உருவாக்குதல் அல்லது காணப்படும் செயற்பாட்டுக் கோவைகளை மறுசீரமைத்தல்.
- DGCA இனால் வெளியிடப்படும் அமுல்படுத்தும் தரங்கள் சகலவற்றினதும் கட்டமைப்புக்கள் உட்பட உள்ளீடுகளை மீளாய்விற்குட்படுத்தல்.
- இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்தின் அல்லது சிவில் விமான சேவைச் சட்டத்தின் சட்ட ரீதியிலான ஒழுங்கு விதிகளின் கீழ் வெளியிடப்படும் சகல முறைகளிலான அனுமதிப்பத்திரங்கள், சான்றிதழ்கள், அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தை வழங்குதல், அங்கீகாரத்தை வழங்குதல் போன்ற கட்டமைப்புக்கள் போன்ற உள்ளீடுகளை மீளாய்விற்குட்படுத்தல்.
- சகல வகைகளுக்குமுரிய உடன்படிக்கைகள், புரிந்துணர்வு உடன்படிக்கைகள், சேவை சார்ந்த ஆவணங்கள், மாதிரிப்படிவங்களை வழங்குதல் அல்லது அதற்குச் சமமான நிருவாக ஆவணங்களை மீளாய்விற்குட்படுத்தல்.
- நீதிமன்றச் செயற்பாடுகளின் போது CAASL / DGCA இற்காக ஆஜர் ஆகுதல்.
- வெளியிடப்பட்ட சிவில் விமான சேவைத் தேவைகளை மீறுபவர்கள் / அமைப்புக்களுக்கு எதிராக சட்டத்தினால் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- தேவையான சந்தர்ப்பங்களில் பணியாளர் சபைக்கு சட்டரீதியிலான ஆலோசனை வழங்குதல்.
- கருத்து முரன்பாடுகளுக்குட்பட்ட சட்டரீதியிலான செயற்பாடுகள் தொடர்பில் CAASL இற்கும் / DGCA க்கும் ஆலோசனை வழங்குதல்.

2017 மே மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் இறுதி வரையான காலத்திற்குள் சட்டங்கள் மற்றும் வலுவூட்டல் பிரிவு ஏனைய கிளைகளுடன் இணைந்து கீழக் குறிப்பிட்ட பணிகளை நிறைவேற்றியது

- விபத்து மற்றும் சம்பவங்களை ஆய்வுக்குட்படுத்தும் பணியகத்தின் சட்ட மூலத்தை உறுதிப்படுத்துவதற்காக சட்டமா அதிபருக்கு சமர்ப்பித்தல்.
- சட்ட வரைஞருடன் பாதுகாப்பு முகாமைத்துவ ஒழுங்குக் கோவை வரைபினை இறுதியாகத் தயாரித்தல்.
- நீரியல் விமானத் தள ஒழுங்குக் கோவை வரைபினை மீளாய்விற்குட்படுத்துவதற்காக சட்ட வரைஞருக்குச் சமர்ப்பித்தல்.
- ஆளணி அனுமதிப்பத்திரங்களை வெளியிடும் ஒழுங்குக் கோவை வரைபினை மீளாய்விற்குட்படுத்துவதற்காக சட்ட வரைஞருக்குச் சமர்ப்பித்தல்.
- விமானத் தளங்களை வகைப்படுத்தும் ஒழுங்குக் கோவை வரைபினை மீளாய்விற்குட்படுத்துவதற்காக சட்ட வரைஞருக்கு சமர்ப்பித்தல்.

## DGCA இனால் வெளியிடப்பட்ட பொது அறிவித்தல்கள்

- 2016.12.31 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டிருந்த அமுல்படுத்தும் தரங்கள் தொடர்பான ஒப்பீட்டுப் பட்டியல் பொது மக்களின் தகவல்களுக்காக 2017 பெப்ரவரி 13 ஆம் திகதி இலக்கம் 2006/02 கொண்ட அதிவிசேட வர்த்தமாணி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டது.

## கௌரவ அமைச்சரினால் விடுக்கப்பட்ட பொது அறிவித்தல்கள்

- 2010 இலக்கம் 14 கொண்ட சிவில் விமானச் சேவைச் சட்டத்தின் 23 வது வாசகத்தின் 1(a) உப பிரிவின் கீழ் அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சரினால் விதிக்கப்பட்ட 2017 பெப்ரவரி 6 - திங்கள் இலக்கம் 2005/3 கொண்ட அரசாங்க அதிவிசேட வர்த்தமாணி அறிவித்தலில் பிரசுரிப்பதன் மூலம் 2017 இலக்கம் 01 கொண்ட மட்டக்களப்பு விமான நிலைய பாதுகாப்பு பிரதேசத்தின் கட்டளை அமுல்படுத்தப்பட்டது. இக்கட்டளையின் மூலம் அங்கு அறிமுகப்படுத்தப்பட்டிருந்த பிரதேசத்திற்குள் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரங்கள் இன்றி உயர் கட்டடங்களை நிர்மானிப்பது தடுக்கப்பட்டது.
- 2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்தின் 09 வது பிரிவின் கீழ் அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரினால் 2017 டிசம்பர் 21 ஆம் திகதி இலக்கம் 2050/38 கொண்ட அரசாங்கத்தின் அதிவிசேட வர்த்தமாணி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மூலம் இத்திட்டத்தின் 2 வது உப ஆவணத்திற்குரிய BIA மற்றும் RMA இரு விமானத் தளங்கள் உட்பட இச்சட்டத்தின் 3 வது உப ஆவணத்தில் பணிக்கப்பட்டவாறு அதன் உரிய விமானத் தள வசதிகள் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட கணியம் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைக்கு மாற்றியமைத்து அதற்கமைய பொறுப்பளிக்கப்பட்டது.

# தர மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

தர மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் பிரதான நோக்கமான அமைவது சிவில் விமான சேவை அதிகார சபையின் தர முகாமைத்துவத்தை விருத்தி செய்தல் மற்றும் வழிகாட்டல்களுக்கமைய இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் பல்வேறுபட்ட கிளைகள் மற்றும் பிரிவுகள் மற்றும் அலகுகள் மூலம் வழங்கப்படும் சேவைகளின் தரத்தினை விருத்தி செய்வதாகும். உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாடுகளினால் நிலையியற் சபை தேவைகள் மற்றும் கூட்டிணைந்த நிருவாக ஒழுங்கு விதிமுறைகளுக்கு அமைவாக நடாத்தப்படும் அளவுகளை மீளாய்விற்குட்படுத்தல் மற்றும் மதிப்பீட்டுக்குட்படுத்துவதன் மூலம் அமைப்பின் அபாய முகாமைத்துவத்தை உள்ளக நிருவாகச் சூழல் மற்றும் நிருவாகக் கோட்பாடு தொடர்பாகவும் சான்றிதழ் வழங்கப்படும்.

தொழில் வழங்குனர் - தொழிலாளிக்கிடையிலான பரஸ்பர இணைப்புக்கள் மற்றும் நல்லுறவிற்கு பங்கம் ஏற்படாத வகையில் கைநழுவல்கள் இடம்பெறக்கூடிய அங்கீகரிக்கப்பட்ட சட்டங்கள் மூலம் புறப்படுகையினைத் தடுக்கும் நோக்குடன் இப்பிரிவினால் கணக்காய்வுகளுக்கு மேலதிகமாக ஊக்குவிப்புப் கொடுப்பனவு, பெற்றுக் கொள்ளாத விடுமுறைகளுக்கான கொடுப்பனவுகள் மற்றும் ஊழியர் சபைக் கடன் நிதி தொடர்பிலும் ஆரம்பக் கணக்காய்வுகள் நடாத்தப்பட்டது. 2017 ஆம் ஆண்டின் பணியாளர் சபைக் கொடுப்பனவுகள் தொடர்பில் 27 கணக்காய்வுகள் நடாத்தப்பட்டன. 2017 ஆம் ஆண்டில் இப்பிரிவினால் மொத்தமாக 55 கணக்காய்வுகள் நடாத்தப்பட்டன. 2016 ஆம் ஆண்டில் 40 கணக்காய்வுகள் நடாத்தப்பட்டன.

## விசேட நிகழ்வுகள் அட்டவணை

| கணக்காய்வு எல்லை | கணக்காய்வுகளின் எண்ணிக்கை |
|---|---|
| நிதி | 06 |
| மானிட வளம் | 06 |
| தொழில்நுட்பப்பிரிவு | 12 |
| தரக் கணக்காய்வு | 04 |
| பணியாளர் சபைக் கடன் (ஆரம்பக் கணக்காய்வு) | 27 |
| கணக்காய்வு - மொத்த எண்ணிக்கை | 55 |

**1 - 2017 இல் நடாத்தப்பட்ட கணக்காய்வுகளின் எண்ணிக்கை**



# ஆராய்ச்சி, அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் விசேட வேலைத்திட்டப் பிரிவுகள்



செயற்பாடு மற்றும் முகாமைத்துவத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள **CAASL** இன் ஆராய்ச்சி, அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் விசேட வேலைத்திட்டப் பிரிவின் பிரதான பொறுப்பாக அமைவது சிவில் விமான சேவைத் துறையின் தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் பரவலாக்கலுக்காக ஆராய்ச்சிகளை நடாத்தல், இனங்காணப்பட்ட துறைக்காக அபிவிருத்தித் திட்டங்களை வகுத்தல் மற்றும் **CAASL** இனால் ஆரம்பிக்க வேண்டிய எந்தவொரு வேலைத்திட்டங்களையும் பொறுப்பேற்று அமுல்படுத்துவதாகும். 2017 ஆம் ஆண்டில் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

## ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பணிகள்

2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவைச் சட்டத்தின் அதிகார சபைக்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ள பிணக்குகளுக்கிடையே சிவில் விமான சேவையின் ஒவ்வொரு பிரிவுகள் தொடர்பிலும் ஆய்வுகளை ஆரம்பித்து அமுல்படுத்துவதாகும்.

இதன் பொறுப்புகளுக்கமைய சிவில் விமான சேவைக்குரிய "ஆராய்ச்சி மற்றும் ஆய்வு" நடாத்துவது அதிகார சபையின் முக்கிய பணியாகக் கருதப்படுகின்றது. இதற்கமைய அதிகார சபை "இலங்கையின் தேசிய பொருளாதார அபிவிருத்தியின் போது சிவில் விமான சேவைப் பிரிவினால் கிடைக்கும் பங்களிப்புக்களை உறுதிப்படுத்தல்" என்ற தொனிப்பொருளுக்கமைய ஆராய்ச்சிகளை நடாத்துவதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆலோசனைக் கம்பனி/ பல்கலைக்கழகத்தின் ஊடாக மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள இவ் ஆராய்ச்சி, இலங்கை மத்திய வங்கி, குடிசனப் புள்ளிவிபரவியல் திணைக்களம் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் தொழில்நுட்ப உதவிக்காக நியமிக்கப்படும் அவ்வவ் விடயங்கள் தொடர்பில் நிபுனர்கள் ஊடாக நெருங்கிய மேற்பார்வைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## தேசிய சிவில் விமான சேவைக் கொள்கை வெளிப்பாட்டினை அபிவிருத்தி செய்தல்

நாட்டில் தேசிய சிவில் விமான சேவைக் கொள்கைகள் இன்மை சிவில் விமான சேவைப் பிரிவின் அபிவிருத்திக்கு பிரதான தடையாக அமைந்துள்ளது. இந்தக் குறைபாட்டை இனங்கண்டு கௌரவ அமைச்சரின் அலுவலகம் உரிய சகல தரப்பினர்களின் கருத்துக்களை வினவி தேசிய சிவில் விமான சேவைக் கொள்கையினை வெளியிட நடவடிக்கை எடுத்தது. இதற்கமைய பிரதமர் அலுவலகத்தில் பல கூட்டங்கள் நடாத்தி சிவில் விமான சேவைக் கொள்கை தயாரிக்கப்பட்டு அது தொடர்பாக பங்காளர் தரப்பினரின் கருத்துக்களை பெற்றுக் கொள்வற்காக அவர்களுக்கிடையே விநியோகிக்கப்பட்டன. அவர்களின் கருத்துக்கள் பெறப்பட்டதன் பின்னர் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சில் அமைச்சரின் தலைமையில் நடாத்தப்பட்ட கூட்டத்தின் போது சிவில் விமான சேவைக் கொள்கையின் இறுதி வரைவு வகுக்கப்பட்டது. மீண்டும் கைத்தொழில் ஆலோசனை சபைக் கூட்டத்தில் கிடைக்கப் பெற்ற கருத்துக்களையும் கவனத்திற்கொண்டு இவ் இறுதி வரைவு மறுசீரமைக்கப்பட்டதன் பின்னர் அங்கீகாரத்திற்காக அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

## வெளியீடுகள்/அறிக்கையிடல்

2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்திற்கமைய 2016 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு கௌரவ அமைச்சரினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முன்னர் அதிகார சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது.

அவ்வாறான அறிக்கைகள் கோரப்பட்டவாறு பௌதீக மற்றும் முன்னேற்ற அறிக்கை, குழுநிலை விவாத வரவு செலவு அறிக்கை, செயற்திட்ட அபிவிருத்தி அறிக்கை போன்றன கோரப்படும் சந்தர்ப்பங்களில் நிரல் அமைச்சிற்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் வழங்கப்பட்டுள்ளது.

## நிர்வாக மற்றும் உதவி சேவை ஒழுங்கு விதிமுறைகள்

2017 ஆம் ஆண்டில் கீழ்க் குறிப்பிட்ட பயிற்றுவிப்புச் செயற்பாடுகள் (பயிற்சிப் பாடநெறி மற்றும் கூட்டங்கள்) 11 இற்காக தேவையான உதவி சேவைகளை தயார்ப்படுத்தி இப்பிரிவு மானிட வள அபிவிருத்திக்காக பங்களிப்பு செய்தது. இப்பயிற்சிப் பாடநெறி / கூட்டங்களில் 255 பேர் கலந்து கொண்டதுடன் **CAASL** இற்காக அனுசரனை வழங்கும் வகையில் 5.4 மில்லியன் ரூபா செலவிடப்பட்டது.

### 1. தெற்காசிய வலயத்தின் ஆரம்ப முயற்சிகள் - ளுயுசுஐ பயிற்சி வேலைத்திட்டம் 2017 மே மாதம்

தெற்காசிய வலயத்தின் ஆரம்ப முயற்சிகள் - **SARI** பயிற்சி வேலைத்திட்டம் **CAASL** இனால் 2017 மே 03 - 07 வரை கொழும்பு ரமாடா (**Ramada**) ஹோட்டலில் நடாத்தப்பட்டது. இதில் பங்களாதேஷ், இந்தியா, மாலைதீவு மற்றும் இலங்கையிலிருந்து 18 பயிற்சி பெறுவோர் கலந்து கொண்டனர்.



### 2. பாதுகாப்பு முகாமைத்துவ முறை - ளுஆளு பயிற்சி வேலைத்திட்டம் - 2017 மார்ச் மாதம்

2017 மார்ச் 7 - 17 வரையான காலத்திற்குள் **CAASL** இனால் கொழும்பு மிலோடா ரெயினிங் அக்கடமியில் (**Miloda Training Acadamy**) (03 பாடநெறிகளைக் கொண்ட பயிற்சி வேலைத் திட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. இப்பயிற்சிப் பாடநெறிகளின் நோக்கமாக அமைந்தது பாதுகாப்பு முகாமைத்துவ முறை (**SMS**) அடித்தளத்தை அறிமுகப்படுத்தல் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்திற்கு பாதுகாப்பு முகாமைத்துவ முறை யோசனைகள் தொடர்பிலான அறிவினை வழங்கி அவர்களுக்கு இவ் வேலைத்திட்டத்திற்குரியதான தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகளை அறிமுகப்படுத்துவதாகும். இப்பயிற்சி வேலைத்திட்டத்தின் மூலம் **ICAO** வினால் தொழில்நுட்பப் பணியாளர் சபையின் சகலருக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டதுடன் அதற்கு மேலதிகமாக சிவில் விமான சேவைக் கைத்தொழில் ஊடாக சமூகமளித்தோர் பலருக்கு பயிற்சிகளை வழங்க முடிந்தது.



### 3. வானியல் செயற்பாட்டுப் பரிசோதகர் பயிற்சி வேலைத்திட்டம் - 2017 ஜூன் மாதம்

2017 ஜூன் மாதம் 05-16 வரை வானியல் செயற்பாட்டு பரிசோதகர் - பயிற்சிப் பாடநெறி நிபுனர்களின் உதவியுடன் இலங்கையில் நடாத்தப்பட்டது. இதில் பங்களாதேஷ், நேபாளம் மற்றும் இலங்கை ஆகிய இராட்சியங்களில் 16 பயிற்சி பெறுவோர் கலந்து கொண்டனர். இப்பயிற்சி வேலைத்திட்டத்தின் மூலம் இதில் பங்கேற்றோருக்கு வர்த்தக விமானப் போக்குவரத்துச் செயற்பாடுகள் (**CAT**) தொடர்பில் **EASA** மற்றும் **SARI** ஒழுங்கு விதிமுறைகளை அமுல்படுத்துவதற்கு விளக்குவதற்காக தேவையான அடிப்படை அறிவு மற்றும் தேர்ச்சி வழங்கப்பட்டது.



## 4. பாதுகாப்பு முகாமைத்துவ முறை (SMS) மற்றும் அரச பாதுகாப்பு வேலைத்திட்டம் (SSP) அமுல்படுத்தல் - பயிற்சி, சேவைக்காலப் பயிற்சியுடன் 2017 ஆகஸ்ட் மாதத்தில்

ICAO - 19 இணைப்பு - SSP மற்றும் SMS தேவைகள் உட்பட வலுவூட்டப்பட்ட நிலமைகளின் மதிப்பீட்டு முறைகள் இவ் வகுப்பறை பாடநெறியின் போது வெளிப்படுத்தப்பட்டது அமைப்பில் SMS மதிப்பீடுகள் மேற்கொள்ளக்கூடிய முறைகள் தொடர்பிலான சேவைக்கால பயிற்சியும் இதில் அடங்கியது. பாதுகாப்பு முகாமைத்துவம் (SSP மற்றும் SMS) தொடர்பான பரிசோதகர்களின் விளக்கம் மற்றும் அறிவினை விருத்தி செய்வது மதிப்பீட்டு உபகரணங்களைப் பயன்படுத்தி பாதுகாப்பு முகாமைத்துவ முறைகள் SMS மதிப்பீடுகளை மேற்கொள்ளும் முறையினை விளக்கும் செயற்பாடுகளும் இச்சேவைக்காலப் பயிற்சிகள் வழங்கப்பட்டது. வகுப்பறையில் பெற்றுக் கொண்ட அறிவு மற்றும் விளக்கங்களை விருத்தி செய்வதற்கும் மதிப்பீக்குட்படுத்தி பிரயோக அனுபவத்தையும் வழங்கும் அடிப்படையிலாகும். 2017 ஆகஸ்ட் 2 - 11 வரை நடாத்தப்பட்ட இப்பாடநெறியில் 18 பேர் கலந்து கொண்டனர்.

## 5. விமான சேவைப் பாதுகாப்பு மேற்பார்வைப் பாடநெறி

நிபுனர்களின் உதவியைப் பெற்று 2017 செப்ரெம்பர் 19-28 வரையான காலத்திற்குள் விமான சேவைப் பாதுகாப்பு மேற்பார்வைப் பாடநெறி இலங்கையில் நடாத்தப்பட்டது. பங்களாதேஷ், பூட்டான், நேபாளம், மியன்மார், மாலைதீவு, சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ் ஆகிய இராட்சியங்களிலிருந்து வருகைதந்த 18 உத்தியோகத்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.

## 6. ஆலோசனைப் பயிற்சிப் பாடநெறி - ழீளு பரிசோதகர்களுக்காக (OTT)

03 நாள் சேவைக்காலப் பயிற்சி உட்பட இப்பாடநெறி 2017 செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி வரை இலங்கையில் நடாத்தப்பட்டது. இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் செயற்பாடுகள் (OPS) பிரிவின் செயற்பாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள்/ ஆலோசகர்களாக மாற்றியமைப்பதற்காக பரிசோதகர்களுக்கு தேவையான அறிவு மற்றும் இயலுமைகளை வழங்குவது இப்பயிற்சியின் நோக்கமாக அமைந்தது.

## 7. ஆலோசனைப் பயிறிசிப் பாடநெறி AIR பரிசோதகர்களுக்காக (AIR)

05 நாள் சேவைக்காலப் பயிற்சி உட்பட இப்பாடநெறி 2017 செப்ரெம்பர் 18 தொடக்கம் ஒக்டோபர் 04 ஆம் திகதி வரை இலங்கையில் நடாத்தப்பட்டது. ஒவ்வொரு பிரிவுகளினதும் அடிப்படைக் கொள்கைகள் மற்றும் நோக்கங்களை மேற்பார்வை செய்வதும் கணக்காய்வு கலைசார் முறைகள் மற்றும் பராமரிப்பு / பயிற்சி ஒழுங்கமைப்பு தொடர்பில் கணக்காய்வுகளை ஒழுங்குபடுத்தும் போது மற்றும் நடாத்தும் போது பின்பற்ற வேண்டிய சிறந்த ஒப்பளவுகளை விளக்குவதற்கு பங்கேற்போருக்கு உதவுவதும் இப்பாடநெறியின் நோக்கமாகும். விமானப் பராமரிப்பு - 66 - பகுதி அனுமதிப்பத்திரம் மற்றும் ஆளனி பயிற்றுவிப்புக்கள் தொடர்பிலும் பங்கேற்போருக்கு அறிவினை வழங்குவது பாடநெறியின் மற்றுமொரு நோக்கமாக அமைந்தது.

## 8. தெற்காசியா மற்றும் வங்காள விரிகுடாவின் உப வலயத்தின் ADS - B அமுல்படுத்தும் செயற்பாட்டுக் குழுவின் 13 வது கூட்டம்

ICAO இல் SEA BOB WG 1 வது கூட்டம் CAASL இனால் 2013 நவம்பர் 11 - 13 வரை கொழும்பு ரமாடா ஹோட்டலில் ஒழுங்கு செய்யப்பட்டது SEA/BOB/ADS-B கூட்டத்தின் போது தீர்மானிக்கப்பட்ட பணிகளை தொடர்ந்தும் அமுல்படுத்துவது இக்கூட்டத்தின் பிரதான நோக்கமாக அமைந்தது தெற்காசியா மற்றும் வங்காள விரிகுடா உப வலயத்திற்குள் ADS - B அமுல்படுத்தும் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடி அதனைச் சமகாலப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. தெற்காசியா மற்றும் வங்காள விரிகுடா உப




வலய இராட்சியங்களின் மற்றும் இலங்கையின் 47 பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்.

## 9. தொடர்ச்சியான விமானத் தகைமை (145 வது பகுதி, பகுதி ஆ, பகுதி 147)

ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் இலங்கையின் விமானத் தகைமைப் பரிசோதகர்களின் பங்கேற்புடன் 2017 நவம்பர் 20 - 27 வரையான காலத்திற்குள் இப்பாடநெறி இலங்கையில் நடாத்தப்பட்டது.

## 10. EASA.3 -SARI AIR Ops செயலமர்வு

EU- தெற்காசிய மற்றும் EU-SA-APP உதவியுடன் இச் செயலமர்வு 2017 டிசம்பர் 04 தொடக்கம் 06 வரைாயன தினங்களில் நடாத்தப்பட்டது.

## 11. EASA 4 - நம்பகத் தன்மை வேலைத்திட்டங்கள்

விமானத் தகைமை (AWS) பணியாளர் சபைக்கு பராமரிப்பு வேலைத்திட்டம் மற்றும் நம்பகத் தன்மை வேலைத்திட்டங்களை வெளியிடுவது தொடர்பிலான அறிவினை வழங்குவதற்காக இவ் வேலைத்திட்டம் 2017 டிசம்பர் 11 - 13 வரை 03 நாட்கள் நடாத்தப்பட்டது.

## CASSL இற்கான தலைமையகக் கட்டடத்தை நிர்மானித்தல்

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் பிரதான அலுவலகத்திற்காக கட்டுநாயக்காவில் 06 மாடிகளைக் கொண்ட கட்டடத்தை நிர்மானிக்கும் ஒப்பந்தம் 2015 டிசம்பர் மாதத்தில் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு (SEC) வழங்கப்பட்டது. இதற்கான மொத்த செலவின அளவு 803 மில்லியன் ரூபாவாகும். ஆரம்பத் திட்டங்களுக்கமைய கட்டட நிர்மானிப்பு 2017 ஜூன் மாதமளவில் பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது. இது எவ்வாறாக இருப்பினும் பல்வேறுபட்ட காரணங்களுக்கமைய கட்டட நிர்மானிப்பில் தாமதம் ஏற்பட்டதுடன் 2017 இறுதியில் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு நிர்மானப் பணிகளில் 90% தை மாத்திரம் பூர்த்தி செய்ய முடிந்தது.



## புள்ளிவிபரங்கள் மற்றும் எதிர்வுகூறல்கள்

இலங்கை சிவில் விமான சேவை புள்ளிவிபர ஆவண வேலைத்திட்டங்களை வெளியிட்டு முன்னெடுக்கும் பொறுப்பு இப்பிரிவிற்கு வழங்கப்பட்டது. இதற்கமைய இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் சகல கிளைகளையும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடியவாறு முன்னெடுக்கப்படும் பிரதான புள்ளிவிபரவியல் தகவல்கள் ஊடாக வெளியிட்டு அது ஜனவரி தொடக்கம் ஆகஸ்ட் வரையான காலப்பகுதிக்காக சமகாலப்படுத்தப்பட்டது. இப்புள்ளிவிபரவியல் மூலத்தைப் பயன்படுத்தி திட்டமிடப்பட்ட செயற்சாதனை முன்னேற்ற அறிக்கை கோரப்பட்டவாறு மற்றும் கோரப்பட்ட சந்தர்ப்பங்களில் இலங்கை மத்திய வங்கி போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு மற்றும் அவ்வாறான அறிக்கைகளை கோரிய வெளித்தரப்பினர்களுக்கும் சமர்ப்பிக்கப்பட்டது.

## வருடாந்த திறந்த வெளியரங்கு பயிற்சிச் செயலமர்வு 2017

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் ஆரம்பம் தொடக்கம் கடந்த 02 வருடங்களை தவிர ஆண்டு தோறும இதுவரையில் அதன் வருடாந்த திறந்தவெளிப் பயிற்சிச் செயலமர்வு நடாத்தப்பட்டுள்ளது. சகல ஊழியர்களினதும் பொதுப் பயிற்சி மற்றும் கொள்ளளவு விருத்தித் தேவைகள் தொடர்பில் செயற்படுவதன் மூலம் வலுவான மற்றும் வினைத்திறன்மிக்க ஊழியர் குழுவாக கட்டியெழுப்பும் நோக்குடன் பணியாளர் சபையின் சகலருக்காகவும் நடாத்தப்படும் ஒரேயொரு பயிற்சிச் செயலமர்வு இதுவாகும்.

CAASL இன் ஊழியர்களுக்கு அவர்களின் தொழில்சார் முன்னேற்றங்களுக்கு தமது அறிவு மற்றும் தேர்ச்சியினை விருத்தி செய்து கொள்ளும் வகையில் தனித்தனியாக தனிப்பட்ட பயிற்சிக்காக பல சந்தர்ப்பங்கள் CAASL இனால் இடைக்கிடையே வழங்கப்படுகின்ற போதிலும் அவர்களை குழுவாக ஒன்றிணைத்து பயிற்சியளிக்கும் சந்தர்ப்பங்கள் மிகக்குறைவாக இடம்பெறுகின்றது.

ஒவ்வொரு ஊழியர்களினதும் இயலுமைக்கு மற்றும் திறமைகளை வெளிப்படுத்துவது தொடர்பில் சிறந்த விளக்கத்துடன் குழுவினை கட்டியெழுப்பும் நோக்குடன் ஒழுங்கமைப்புக் கட்டமைப்பின் பல்வேறுபட்ட நிலைமைகளுக்குரிய ஊழியர்களின் செங்குத்தான செயற்பாட்டு அசைவினை ஏற்படுத்தல் இத்திறந்த வெளியரங்கு செயலமர்வின் அடிப்படை நோக்கமாகும். சிவில் விமான சேவை நிலையம் தாபிப்பதற்கு முன்னர் அதன் ஆரம்ப நிலையமாக சிவில் விமான சேவை திணைக்களத்தினால் இதற்குச் சமமான 05 திறந்த வெளியரங்குச் செயலமர்வுகள் நடாத்தப்பட்டுள்ளன.

எமது எதிர்கால நோக்கினை துரிதகதியில் நனவாக்குவதற்காக மிகுந்த அற்பணிப்புமிக்க எமது பணியினை மேற்கொள்வதற்கு பொருத்தமானவாறு



மாற்றமடைந்து உரிய செயற்பாடுகளை வகுப்போம் என்ற தொனிப்பொருளில் 2017 ஆம் ஆண்டு வருடாந்த திறந்த வெளிச் செயலமர்வு 2017 நவம்பர் 17 தொடக்கம் 19 வரை பாசிக்குடா அமாயா பீஜ் ஹோட்டலில் நடாத்தப்பட்டது.

பேராசிரியர் அத்தநாயக்க எம். ஹேரத் மற்றும் அவர்களின் குழுவினால் பயிற்சிச் செயலமர்வுகள் நடாத்தப்பட்டது. பணியாளர் சபையினை ஊக்குவிப்பது இதன் நோக்கமாக அமைந்தது அமைப்பின் வெற்றிக்காக தேவையான ஊழியர்களுக்கிடையிலான இணைப்புக்கள் மற்றும் தொடர்புகள் உட்பட உற்பத்தித் திறன், சிந்தனை விருத்தியினை ஏற்படுத்தி குழுவாக செயற்படுவதற்குத் தேவையான சிந்தனை ரீதியிலான மார்க்கங்களை விருத்தி செய்வதும் இதன் நோக்கமாகும்.

இச் செயலமர்வு வெற்றிகரமாக நடாத்தப்பட்டது இதில் அதிகார சபையின் தலைவர், சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் மற்றும் 130 க்கு மேற்பட்ட ஊழியர்கள் கலந்து கொண்டனர். பங்கேற்றோரில் நிறைவேற்று மற்றும் நிறைவேற்று அல்லாத தரம் கொண்ட இரு வகை ஊழியர்கள் அடங்குவதுடன் அவ்வாறு பங்கேற்றோரின் அளவு CAASL இன் மொத்த ஊழியர் சபையில் 70% மாகும்.

## CAASL இன் ஊடாகச் செயற்பாடுகள் மற்றும் ஊக்குவிப்புக்கள்

இலங்கையில் சிவில் விமான சேவைகள் தொடர்பில் ஊடாக மற்றும் ஊக்குவிப்பு வேலைத்திட்டங்கள் வருடாந்தம் அமுல்படுத்தப்படுகின்றது. இவ் வேலைத்திட்டத்தின் பாடசாலை மாணவர்களுக்காக சிவில் விமான சேவை தொடர்பில் அறிவுறுத்தும் வேலைத்திட்டம் ஆண்டு பூராகவும் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்பட்டது.

2017 மார்ச் 31 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் 04 வரையான காலத்திற்குள் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்பத்தில் நடாத்தப்பட்ட நிலையான யுகம் வர்த்தக மற்றும் கல்விக்









கண்காட்சியினை சிவில் விமான சேவைகள் அதிகார சபையினை பிரதிநிதித்துவப்படுத்தி கல்வி கண்காட்சி கூடங்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

சிவில் விமான சேவை தொடர்பாக பாடசாலை மாணவர்களின் அறிவினை விருத்தி செய்வதற்காக 2017 ஜூன் மாதம் 26 ஆம் திகதி காலி ஹறந்தெனி மகா வித்தியாலத்தில் கல்வி வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டது.

சிவில் விமான சேவைக்குரிய பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பில் பாடசாலை மாணவர்களை அறிவுறுத்தும் கல்வி வேலைத்திட்டம் 2017 ஜூலை மாதம் 14 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

## சிவில் விமான சேவையின் அறிவுறுத்தல் வேலைத்திட்டம்

2017 ஆம் ஆண்டில் இரு பாடசாலைத் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டு இறுதியில் பாடசாலைகளில் 584 விமான சேவைக் கழகங்கள் முறையாக வகுப்பதற்கு உதவிகள் வழங்கப்பட்டன. "குவன்சர" விமான சேவை தொடர்பான இரு சஞ்சிகைகள் வெளியிடப்பட்டதுடன் 3100 பாடசாலைகளுக்கிடையே இந்த சஞ்சிகை இலவசமாக விநியோகிக்கப்பட்டது. 2017 ICAO வின் மாநாட்டுக்காக "குவன்சர" விசேட சஞ்சிகை வெளியிடப்பட்டது.










இதற்கு மேலதிகமாக சிவில் விமான சேவை அபிவிருத்தி மற்றும் கல்வி குழு (CADEC) விமான நிலையச் செயற்பாடுகள் தொடர்பில் பாடசாலை மாணவர்களை அறிவுறுத்துவதற்காக புதிய வேலைத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இது மாதாந்தம் நடாத்தப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் இது தொடர்பான 03 வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

## அடுத்த விமான சேவை தொழிலாளர் பரம்பரை (NGAP) இலங்கை வேலைத்திட்டம்

ஏதேனும் அபிவிருத்தி வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக ஆரம்பிக்கும் போது அதற்காக பொது மக்களின் தொடர்ச்சியான பங்களிப்பு அவசியம் என இனங்காணப்பட்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை நாட்டின்

சமூக பொருளாதார அபிவிருத்திக்காக சிவில் விமான சேவையில் காணப்படும் இயலுமைகள் தொடர்பாக பொது மக்களை அறிவுறுத்துவதற்காக பல தொண்டர் குழுக்களை இணைத்து 2008 ஆம் ஆண்டு பல வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. ஆரம்பத்தில் இச் செயற்பாடுகளில் தனியான இணையத்தளத்தை முன்னெடுப்பதற்காக "குவன்சர" மும்மாத சஞ்சிகையினை ஆரம்பித்தல், அரச பாடசாலைகளில் விமான சேவைக் கழகங்களைத் தாபித்தல், மாதிரி விமானக் கண்காட்சிகளை நடாத்துதல் மற்றும் பட்டத் திருவிழா போன்றவைகள் உள்ளடங்கியுள்ளன. இச் செயற்பாடுகளுக்காக பாடசாலை மாணவர்களின் மத்தியில் பெரும் ஆர்வம் ஏற்பட்டதுடன் அவர்கள் தமது பெற்றோரின் இல்லங்களிலும் இது தொடர்பான அழுத்தங்களை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்தனர்.

சிவில் விமான சேவை தொடர்பாக விளக்கத்தினை ஏற்படுத்தும் வேலைத்திட்டங்கள் இவ்வாறு கூடுதலாக செயற்படும் வேளையில் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் பயிற்சித் தேவைகள் மற்றும் பயிற்சிக்கான வாய்ப்புக்களை கூட்டிணைக்கும் வகையில் விமான சேவைக் கல்வி மற்றும் பயிற்சியை வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ள சகல அமைப்புக்களையும் ஒரே இடத்திற்குக் கொண்டு வரும் தேவை இனங்காணப்பட்டது. இதற்கமைய 2016 ஆகஸ்ட் மாதம் 01 ஆம் திகதி ஆசிய பசுபிக் வலயத்தின் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தின் 53 வது சம்மேளனத்தின் போது கௌரவப் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரின் ICAO மத்திய சபையின் தலைவர், ICAO பொதுச் செயலாளர் மற்றும் பிராந்தியப் பணிப்பாளரின் பங்கேற்புடன் இலங்கை வேலைத்திட்டம் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

ICAO - 39 வது மாநாட்டின் தேவைகளுக்கமைய இலங்கை அரசாங்கம் மானிட வள அபிவிருத்திப் பணிகளுக்காக ICAO - NGAP வேலைத்திட்டம் இலங்கையில் தேசிய சிவில் விமான சேவைக் கொள்கையில் உள்ளடக்கப்பட்டது. கைத்தொழில் பங்காளர்களின் நீண்ட கால மானிட வளத் தேவையினை இனங்காண்பதற்கும் விமான சேவைத் தொழிலாளர்களை கவர்ச்சிக்குட்படுத்தல், அவர்களுக்கு அறிவினை வழங்குதல், அவர்களுக்குப் பயிற்சியளிக்க மற்றும் நிலைப்படுத்துவதற்குத் தேவையான மூல உபாயங்களைத் தாபிப்பதற்கும் அவர்களுடன் தொடர்பில் பேணி அவர்களுக்கு உதவுவதற்காக NGAP இலங்கை தேசிய குழு தாபிக்கப்பட்டது. அடுத்த பரம்பரையினரை விமான சேவைத் தொழிலாளர் சேவையில் ஈடுபடுத்துவதற்காக தேவையான வழிகாட்டல்கள் மற்றும் கருவியினை வழங்கி கைத்தொழிலுக்கு உதவுவதற்கும் விமான சேவையின் பிரயோகத் தொழிலான இளைஞர்களுக்கிடையே ஊக்குவிப்பதும் இக்குழுவின் பணியாகும். இதற்கமைய இலங்கையில் அடுத்த விமான சேவைத் தொழிலாளர் பரம்பரை (NGAP) இல ங்கை வேலைத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக 2017 மார்ச் 17 ஆம் திகதி இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை, வ/ப விமான நிலைய மற்றும் விமான சேவைக் கம்பனி மற்றும் ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் கம்பனியை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடியவாறு நியமிக்கப்பட்ட அங்கத்தர்களைக் கொண்ட தேசிய குழு இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் நியமிக்கப்பட்டது.

NGAP இலங்கை வேலைத்திட்டத்தின் பிரதான இலக்காக அமைந்தது உள்நாட்டு விமான சேவையினை வலுப்படுத்துவதற்காக கல்வி ரீதியில் மற்றும் தொழில்சார் ரீதியில் தகைமை கொண்ட மானிட வளம் / நபர்களை தயார்படுத்துவதும் எதிர்காலத்தில் பிராந்திய மற்றும் கோளமய மட்டத்தை எட்டுவதுமாகும்.

## திருமதி. சசெஸ்ரா வைஸ் (Shaesta Waiz) அவர்களை வரவேற்கும் வைபவம் (STEM) இற்காக உலகளாவிய சோலோ விமானம்

சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின் ICAO அனுசரணையுடன் உலகளாவிய சோலோ விமானத்தின் மூலம் உலகெங்கிலும் சுற்றுலா மேற்கொள்ளும் லெப்டினல் சசெஸ்டா வைஸ் "DREAM SOAR" வேலைத்திட்டத்தின் பழைய ஆசிரியர் ஆவார். இவ் வேலைத்திட்டத்தின் மூலம் விஞ்ஞானம், தொழில்நுட்பவியல், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) பாடவிதானத்தைக் கற்பிக்கும் முக்கியத்துவத்தை அடுத்த பரம்பரையினருக்கிடையே பிரபல்யப்படுத்தப்பட்டது. மே மாதம் 13 ஆம் திகதி ஐக்கிய அமெரிக்கா புளோரிடா (Florida) ஊடாக பயணத்தை ஆரம்பித்தல் லெப்டினல் சசெஸ்டா வைஸ் அவரின் பயணத்தின் ஒரு தங்குமிடமாக இலங்கையினை கருதாதிருந்த போதிலும் அன்றைய தினம் இந்தியாவில் காணப்பட்ட பாதிப்புமிகுந்த காலநிலை காரணமாக இறுதியாக இலங்கை அவரது 14 வது பயணக் கேந்திர நிலையமாக தேர்ந்தெடுக்க தீர்மானிக்கப்பட்டது.



சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பின் விசேட வேண்டுகோளுக்கு இணங்க தேசிய குழுவின் அனுசரனையுடன் 2017.07.27 ஆம் திகதி லெப்டினல் சசெஸ்டா லைஸ் இனை வரவேற்கும் விசேட விழா ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.



விமானப் போக்குவரத்து சேவைக் கழகங்கள் மற்றும் வாணியல் பயிற்சிப் பாடசாலைகளை பிரதிநிதித்துவப்படுத்தி பாடசாலை கல்லூரி மாணவர்கள் மற்றும் பயிலுனர் விமானிகளும் இவ் வரவேற்பு விழாவில் கலந்து கொண்டனர்.

அடுத்த விமானத் தொழிலாளர் சேவைப் பரம்பரை NGAP உலகளாவிய மாநாட்டில் மற்றும் 2017 நவம்பர் 27 - 29 ஆகிய தினங்களில் கனடா மொன்றியேல் ICAO தலைமையகத்தில் நடாத்தப்பட்ட ICAO-NGAP ஆம் கூட்டத்தில் இலங்கை பங்கேற்றது.

அடுத்த ICAO விமானப் போக்குவரத்து சேவைத் தொழிலாளர் பரம்பரை NGAP உலகளாவிய மாநாடு 2017 நவம்பர் 27-29 ஆகிய தினங்களில் கனடா மொன்றியலில் ICAO தலைமையகத்தில் நடாத்தப்பட்ட ICAO-NGAP ஆம் கூட்டத்தை இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி ஆராய்ச்சி, அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் விசேட வேலைத்திட்டப் பணிப்பாளர் திரு. மானக திசாநாயக்க, என்.ஜீ.ஏ.பி. இலங்கை நிகழ்ச்சித் திட்டத்தின் செயலாளர் NGAP தேசிய இணைப்பாளர் திரு. ஜீ.சி.ஜீ.பி. தபரேரா அவர்களும் பங்கேற்றனர்.




2017 நவம்பர் 27 - 28 ஆகிய இரு தினங்களில் நடாத்தப்பட்ட ICAO-NGAP உலகளாவிய பொதுச் சபை மாநாட்டின் தேசிய NGAP முறைகளை வெளியிடுவது

தொடர்பிலான 7 வது குழு (Panel) அங்கத்தவராக திரு. தபரேரா NGAP இலங்கை வேலைத்திட்டத்திற்குரிய ICAO - NGAP விசேட ஒப்பளவுகள் தொடர்பில் விரிவுரை நடாத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக 2017 நவம்பர் மாதம் 27 ஆம் திகதி நடாத்தப்பட்ட ICAO - NGAP 9 வது கூட்டத்திலும் திரு. தபரேரா ICAO-NGAP செயற்பாட்டுக் குழுவின் அங்கத்தவராக NGAP விமான சேவைக் கைத்தொழிலின் தொழில்வாய்ப்பு மற்றும் விஞ்ஞான, தொழில்நுட்பவியல், பொறியியல் விஞ்ஞானம் மற்றும் கணிதம், (EU-STEM) வேலைத்திட்டம் தொடர்பாக புதிய யோசனை சமர்ப்பிக்கப்பட்டது. இந்த யோசனை ICAO வருடாந்த வேலைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் 2018 நவம்பர் மாதத்தில் முன்னோடி வேலைத்திட்டமாக இலங்கையில் நடாத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

ICAO பொதுச் செயலாளர் கலாநிதி பிரங்ளு ICAO - NGAP உலகளாவிய மாநாட்டை நடாத்தி அவரின் உரையின் போது இலங்கையின் தேசிய NGAP வேலைத்திட்டம் ஏனைய நாட்களுக்கும் சிறந்த முன்மாதிரி என விசேடமாக குறிப்பிட்டார்.



# வான் பரப்பு மற்றும்
# பாதுகாப்பு மேற்பார்வை பிரிவு

## விமான சேவைப் பாதுகாப்புப் பிரிவுய



2017 ஆம் ஆண்டில் விமான சேவைப் பாதுகாப்புப் பிரிவு இலங்கை பாதுகாப்புத் துறையிலுள்ள சகல முறையிலான முன்னோடிப் பணிகளை தொடச்சியாக மேற்கொண்டது. விமான சேவை பாதுகாப்புத் தேடுதல் மற்றும் விமான சேவைப் பாதுகாப்பு நபர்களை உறுதிப்படுத்துவது தொடர்பாக 2017 அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு உப ஆவணத்திற்கமைய இப்பிரிவினால் தர நிருவாகம் மற்றும் சான்றுப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

விமான நிலையம் / விமானச் செயற்பாட்டாளர்களின் கீழ்க் குறிப்பிட்ட வகைகளுக்குரிய விமான சேவைப் பாதுகாப்பு ஊழியர்கள் முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கை தொடர்பில் உறுதிப்படுத்தல் மற்றும் மீள உறுதிப்படுத்தி செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

- விமான சேவைப் பாதுகாப்பு முகாமையாளர்களினை சான்றுப்படுத்தல் மற்றும் மீள உறுதிப்படுத்தல் - 25
- விமான சேவைப் பாதுகாப்பு தொடர்பான ஸ்கிரீனர்களை சான்றுப்படுத்தல் (Security Screeners) மற்றும் மீள உறுதிப்படுத்தல் - 481

மேற்கூறப்பட்ட தர நிருவாக மற்றும் தரச்சான்றிதழ் பணிகளுக்கு மேலதிகமாக 2017 ஆம் ஆண்டில் இப்பிரிவினால் கீழ்க் குறிப்பிட்ட முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

### BIA இன் விமானப் பாதுகாப்பு சேவை வழங்குனர்களை உறுதிப்படுத்தல்

2010 இலக்கம் 14 கொண்ட சிவில் விமான சேவைச் சட்டத்தின் II வது வாசகத்தில் பணிக்கப்பட்டுள்ளவாறு விமான நிலையங்களில் விமான சேவைப் பாதுகாப்பு சேவைகளை வழங்குதல் மற்றும் முன்னெடுப்பதற்காக இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையினால் வெளியிடப்பட்ட அனுமதிப் பத்திரத்தை கொண்ட விமான சேவைப் பாதுகாப்பு சேவை வழங்குனர் நியமிக்கப்பட வேண்டும் என்பது அரசியல் யாப்பு ரீதியிலான தேவையாகும்.

2017 ஆம் ஆண்டு பூராகவும் விமான சேவை பாதுகாப்பு சேவையினை வழங்குவதற்காக சேவை வழங்குனர் அமைப்பு, உறுதிப்படுத்தல் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன. யோசனை தெரிவிக்கப்பட்ட திருத்தியமைக்கும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்காக பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பின்னர் பல பரிசோதனைகள் நடாத்தப்பட்டன. தொடர்ந்தும் திருத்தியமைக்க வேண்டிய ஒரு சில தேவைகள் எஞ்சியிருப்பதாக பரிசோதனை அறிக்கைகள் மூலம் வெளியிடப்பட்டிருந்தன. விமான நிலைய செயற்பாட்டாளர்களினால் அவ்வாறு எஞ்சிய சகல துறைகளையும் பூரணப்படுத்தும் செயற்பாடுகளை உறுதிப்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### ஒழுங்கு விதிமுறைகளை விருத்தி செய்தல்

இப்பிரிவு CASP-AP இனால் அனுப்பப்பட்ட வரைவு ஒழுங்கு கோவைகளை மீளாய்விற்குட்படுத்தியது விமான சேவைப் பாதுகாப்பு ஒழுங்கு கோவையின் இறுதி வரைவு விருத்தி செய்யப்படுவது இதனை அடிப்படையாகக் கொண்டாகும்.

### பாதுகாப்பு வேலைத்திட்ட மதிப்பீடுகள்

உரிய செயற்பாட்டாளர்களினால் தேசிய சிவில் விமான சேவைப் பாதுகாப்பு வேலைத்திட்டத்திற்கமைய விமான சேவைப் பாதுகாப்பை நிர்வகிக்க நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்காக விமானச் செயற்பாட்டாளர்கள் மற்றும் விமான நிலையச் செயற்பாட்டாளர்களின் பாதுகாப்பு வேலைத்திட்டம் மதிப்பீட்டுக்குட்படுத்தப்படுகின்றது.

அது தொடர்பிலான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- வெளிநாட்டு விமானச் செயற்பாட்டாளர்கள் - பாதுகாப்பு வேலைத்திட்டம் - 31
- உள்நாட்டு விமானப் போக்குவரத்து கம்பனி - பாதுகாப்புப் பயிற்சி வேலைத்திட்டம் - 02

### யுத்த உபகரணங்களை விமானம் மூலம் கொண்டு செல்வதற்காக அனுமதி வழங்குதல்.

இலங்கை வான்பரப்பில் மற்றும் இலங்கைக்குள் அமைந்துள்ள விமான நிலையங்களுக்கு / அதற்கு வெளியே யுத்த உபகரணங்களைக் கொண்டு செல்வதற்கு அங்கீகாரம் வழங்கும் அதிகாரம் சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. கீழ்க் குறிப்பிடப்பட்ட பணிகளுக்காக ஆயுதங்களை விமானம் மூலம் கொண்டு செல்வதற்கு அனுமதி கோரி அரச மற்றும் தனியார் அமைப்புக்களைப் போன்று தனி நபர்களினாலும் கூடுதலான விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப் பெறுகின்றன.

- VIP/VVIP பாதுகாப்பு
- ஐக்கிய நாடுகள் அமைதி காக்கும் படையணியினர் பங்கேற்றல்
- ஆயுதப் படை மற்றும் பொலிசாரினால் ஆயுதங்களைக் கைப்பற்றல்.
- சர்வதேச விளையாட்டுப் போட்டித் தொடர்கள் / போட்டிகளில் பங்கேற்றல்.
- சட்ட ரீதியிலான பணிகளுக்காக தனிநபர்கள் மூலம்
- ஏனைய தரப்பு இராட்சியங்களிலிருந்து விமானம் மூலம் இலங்கை வான பரப்பிற்கு மேலாக பயணிக்கும் போது மற்றும் இலங்கையின் விமானத் தளங்களுக்கிடையிலான பயணத்தின் போது

இங்கு 2017 ஆம் ஆண்டுக்குள் விமான சரக்குப் பொருள் களஞ்சியசாலையில் ஆயுதங்களை கொண்டு செல்வதற்காக 167 அங்கீகாரங்களும் விமானத்திற்குள் ஆயுதங்களை கொண்டு செல்வதற்காக 39 அங்கீகாரங்களும் வழங்கப்பட்டன.

### ICAO தூதுப் பணியின் பங்கேற்பு

ICAO வினால் கிடைக்கப் பெற்ற அமைப்பிற்கமைய விமான சேவைப் பாதுகாப்புப் பணிப்பாளர் தாய்லாந்தில் நடாத்தப்பட்ட ICAO USAP கணக்காய்வின் கணக்காய்வுக் குழு அங்கத்தவராக அதில் பங்கேற்றார்.

### ICAO விமானப் போக்குவரத்து சேவை உடன்படிக்கை

10 வது ICAO விமானப் போக்குவரத்து சேவை உடன்படிக்கை நிகழ்வு 2017 டிசம்பர் 4 தொடக்கம் 8 வரை இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் அனுசரனையுடன் இலங்கையில் கொழும்பில் நடாத்தப்பட்டது. எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை எட்டுவதற்காக இப்பிரிவின் சகலரும் பங்களிப்புக்களை வழங்கினர்.

### விமான சேவைப் பாதுகாப்புக் கூட்டங்கள்/ கருத்தரங்கு/செயலமர்வு

- ICAO பயிற்சிப் பாடநெறி வெளியீட்டாளர்களின் பாடநெறி - 2017 மார்ச் 13 - 24 வரை தாய்லாந்து பெங்கொக் நகரில் - விமான சேவைப் பாதுகாப்புப் பணிப்பாளர் பங்கேற்றார்.
- 14 வது செயற்பாட்டுக் குழு (Steering Committee) கூட்டம் 2017 ஜூலை 03 மற்றும் 04 ஆகிய தினங்களில் மியன்மார் யன்கோன் நகரில் - விமான சேவைப் பாதுகாப்பு பணிப்பாளர்களுடன்
- ICAO - 5 வது பிராந்திய விமான சேவைப் பாதுகாப்பு அமைப்பின் (RASCF) கூட்டம் - 2017 ஜூலை 06 மற்றும் 07 ஆகிய தினங்களில் தாய்லாந்து - விமான சேவைப் பாதுகாப்புப் பணிப்பாளர் கலந்து கொண்டார்.
- உலகளாவிய விமான சேவைப் பாதுகாப்புத் திட்டம் (GASeP) தொடர்பாக ICAO பிராந்திய சம்மேளனம் 2017 டிசம்பர் 20 - 21 ஆகிய தினங்களில் தாய்லாந்து - விமான சேவைப் பாதுகாப்புப் பணிப்பாளர் இதில் கலந்து கொண்டார்.
- பயிற்சிச் செயலமர்வு 2017 மார்ச் 28 தொடக்கம் 30 வரை மெக்கோ (MACAO) இல் SCAI - APS இதில் பங்கேற்றார்.

# விமானத் தளப் பிரிவு



உரிய சர்வதேச மற்றும் உள்நாட்டுத் தரங்கள் உட்பட ஒப்பளவுகள் **(SARPs)** இற்கமைய சர்வதேச மற்றும் உள்நாட்டு விமானத் தளங்களை பராமரிப்பதற்காகத் தேவையான கோவைகள் சட்டங்கள், வழிகாட்டல் ஆவணங்கள் மற்றும் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளை வெளியிடுவதும் சிவில் விமானப் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தும் விமானத் தளங்களை முதற் தடவையில் உறுதிப்படுத்தல் உட்பட தொடர்ச்சியாக தேடுதல்களை மேற்கொள்ளும் பொறுப்பு விமானத் தளப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது. விமான நிலையங்களுக்கு வசதிகளை வழங்கும் செயற்பாடுகளை உரிய சர்வதேச தரங்களுக்கமைய அமுல்படுத்துவதும் இப்பிரிவின் விடயப் பரப்பில் உள்ளடங்குகின்றது.

## விமானத் தளங்களை உறுதிப்படுத்தல் மற்றும் தேடுதல்கள்

2017 மார்ச் மாதத்தில் நடாத்தப்பட்ட முழுமையான பரிசோதனைக்குப் பின்னர் மற்றும் விமானத் தளச் செயற்பாட்டாளர்களான வ/ப விமான நிலைய மற்றும் விமான சேவை (இலங்கை) கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தியமைக்கும் செயற்பாட்டுத் திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தில் விமானத் தளத்தை உறுதிப்படுத்தும் செயற்பாடுகள் 2019 வரை புதுப்பிக்கப்பட்டது. கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் **BIA** பரிசோதனைகள் 29 உம், **MRIA** பரிசோதனைகள் 06 உம், இரத்மலானை விமான நிலையத்தில் **(BDA)** 03 பரிசோதனைகளும், நீரியல்சார் விமானத் தளங்களில் 04 பரிசோதனைகளும் ஹொலிபோட்டில் ஒரு பரிசோதனையும் நடாத்தப்பட்டது. சப்ரோன் எயார் **(Saffrom Air)** கம்பனிக்கு நீரியல் சார்ந்த 11 விமானத் தளங்களில் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக தற்காலிக அங்கீகாரம் வழங்கப்பட்டது. **IWS** எமியேசன் மற்றும் நிறுவனத்திற்கு ஹெலிகெப்ரர்களை தறையிறக்கும் இடத்தைத் தாபிப்பதற்காக வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன. இலங்கையின் விமானத் தள ஆவணம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

## BIA ஓடுபாதை மேற்பரப்பினை மீளப் புனரமைத்தல்

2017 ஜனவரி மாதம் 06 ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் 06 ஆம் திகதி வரை அமுல்படுத்தப்பட்ட **BIA** இன் ஓடுபாதையின் மேற்பரப்பினை மீளப் புனரமைத்தல் மற்றும் புதிய பாரிய விமானங்களுக்காக வசதிகளை வழங்கக்கூடிய வகையில் அதன் மேற்பரப்பினை விருத்தி செய்யும் பணிகளின் போது இப்பிரிவிற்கு மிக முக்கிய செயற்பாட்டினை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது. ஓடுபாதையின் மேற்பரப்பு புனரமைக்கப் படுவதினால் அது தொடர்பான செயற்பாடுகளுக்கென ஓடுபாதையினை மூட வேண்டி ஏற்பட்டதைப் போன்று அதனைத் திறக்க செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளை வெளியிட்டு அமுல்படுத்தும் போது இப்பிரிவின் சகல செயற்பாடுகளுக்குமுரியதாக பங்காளர் தரப்பினர்களுடன் இணைப்பினை கட்டியெழுப்புவதற்கும் உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

மேற்கூறப்பட்ட கால எல்லைக்குள் நாளாந்தம் 8.30 தொடக்கம் 16.30 வரை 08 மணித்தியாலங்கள் **BIA** இன் ஓடுபாதை விமான நிலையத்தை பயன்படுத்துவோருக்காக குறைந்தபட்ச சிரமங்களுடன் மூடப்பட்டன. ஓடுபாதை



மூடப்பட்ட கால எல்லைக்குள் செயற்பாடுகளை மேற்கொள்ளவிருந்த சகல விமான சேவைகளையும் முடியுமான அளவு அக்காலப்பகுதிக்கு புறம்பான நேரங்களில் கையாளுகைச் செயற்பாடுகளுக்காக மீள் அட்டவணைப்படுத்தப்பட்டன. இது எவ்வாறாக இருப்பினும் இக்கால எல்லைக்குள் உரிய செயற்பாடுகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்த 20 விமான சேவைகளை இரத்துச் செய்ய வேண்டி ஏற்பட்டது. இக்கால எல்லைக்குள் விமானத் தளப் பிரிவினால் கீழ்க் குறிப்பிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- **BIA** ஓடுபாதையின் மேற்பரப்பினை மீள புனரமைக்கும் செயற்திட்டத்தைத் தொடர்ந்தும் மேற்பார்வை செய்தல்.
- **BIA** ஓடுபாதையின் திருப்பு முனை **(Turn pads)** தாபிப்பதற்காக நிபுனத்துவ அறிவினை வழங்குதல்.
- ஓடுபாதையின் மேற்பரப்பினை மீள அமைத்ததன் பின்னர் மற்றும் அதன் பரப்பினை விருத்தி செய்ததன் பின்னர் அதில் **A380** ரக விமானங்களை கையாளக்கூடிய வகையில் ஒப்பீட்டு ஆய்வுக் கற்கைகளையும் மேற்கொள்ளல்.
- **BIA** டெக்சி ஓடுபாதையினை மீளப் பெயரிடவும் அனுமதி வழங்கதல்.

## உள்நாட்டு விமான சேவைக்காக விமான நிலையங்களை அபிவிருத்தி செய்தல்.

இலங்கை அரசாங்கத்தின் **(GOSL)** கொள்கைக்கமைய மட்டக்களப்பு, பண்டாரவெல, கிங்குரன்கொட மற்றும் பலாலி விமான நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்காக தேவையான சிவில் மற்றும் இலங்கை விமானப் படை **(SLAF)** பிரதேசத்தை ஒதுக்கி வேறுபடுத்தி செயற்பாட்டுக் கையேடுகளைத் தயாரித்தல். உரிய அளவையில் புள்ளிவிபரங்களை வழங்குதல் உட்பட மட்டக்களப்பு விமான நிலையத்தின் காணிக்காக மதிப்பீடு செய்யப்பட்ட அளவின் புள்ளிவிபரங்களை வழங்குதல் உட்பட மட்டக்களப்பு விமான நிலையத்தின் காணிக்காக மதிப்பீட்டு அறிக்கையினை பெற்றுக் கொள்ளல் ஆகிய பணிகளின் போது வ/ப விமான நிலைய மற்றும் விமான சேவை (இலங்கை) கம்பனி (**AASL)** உடன் நிபுனத்துவ அறிவு பங்குடமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன. உத்தேச பண்டாரவெல விமான நிலையம் தொடர்பில் சூழல் அழுத்த மதிப்பீடுகள் (**EIA**) இற்காக செயற்பாட்டுப் பரிந்துரை **(TOR)** கிடைக்கப் பெற்றதன் பின்னர் சூழல் அழுத்தங்களை மதிப்பீடு செய்தல் **(EIA)** பொறுப்பேற்கும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக ஆர்வத்தினை ஏற்படுத்தல் **(EOIs)** கோரப்பட்டது. ஆர்வத்தை வெளிப்படுத்திய நிறுவனங்களில் 04 கம்பனிகள் தேர்ந்தெடுக்கப்பட்டது. **EIA** நிலைப்படுத்துவதற்காக அதன் 04 கம்பனிகளின் யோசனைகளுக்காக கோரிக்கைகள் **(RFPs)** எதிர்காலத்தில் கோரப்படவுள்ளது. சிவில் விமானச் செயற்பாடுகளுக்காக கிங்குரன்கொட விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் ஊடாக உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. கிங்குரன்கொட விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்காக தேவையான செலவின மதிப்பீடுகளைத் தயாரித்து போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டது. இந்தியாவின் விமான நிலைய அதிகார சபை பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யும் பாரிய திட்டம் இது வரையில் கிடைக்கப்பெறாமையினால் இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் பலாலி விமான நிலையத்தை அபிவிருத்தி செய்யும் பணிகளை ஆரம்பிக்க முடியவில்லை. இது எவ்வாறாக இருப்பினும் சிவில் செயற்பாடுகளுக்காக விமான நிலையத்தை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான செலவின மதிப்பீடுகளை பெற்றுக் கெள்வதற்காக **AASL** இன் உதவிகள் கோரப்பட்டுள்ளன.

## விமான நிலையங்களை வலயங்களாக மாற்றியமைக்கும் கோவைகள்

மட்டக்களப்பு விமான நிலையங்களுக்காக வலயமாக மாற்றியமைக்கும் ஒழுங்குக் கோவையினை வகுத்து வர்த்தமாணி அறிவித்தல் வெளியிடப்பட்டது. இதற்கு மேலதிகமாக இரத்மலானை விமான நிலையத்திற்குரியதாக வலயமயப்படுத்தப்படும் கோவைகளிலிருந்து விடுவிப்பதற்காக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## நீரியல் சார்ந்த விமானத் தளங்கள்

இலங்கைக்காக நீர் சார்ந்த விமானத் தளங்களை உறுதிப்படுத்தும் ஒழுங்குக்கோவைகள் மற்றும் விமானத் தளங்களை வகைப்படுத்தும் கோவையின் இறுதி வரைபினை பூரணப்படுத்தி மீளாய்விற்காக சட்ட வரைஞருக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

## உயர் கட்டடங்களுக்காக அனுமதியினை வழங்குதல்.

உயர் கட்டடங்கள் மற்றும் கோபுரங்களுக்காக அங்கீகாரத்தை வழங்கும் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகள் விருத்தி செய்யப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டில் (322) உயர் கட்டடங்களில் உயர் ஆக்கங்கள் (101) க்கு மாத்திரம் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

## தொழில்நுட்ப வழிகாட்டல் கோவை

BIA யின் ஓடுபாதையின் மேற்பரப்பினை மீளப் புனரமைக்கும் வேலைத்திட்டம் BIA ஓடுபாதையினைத் தாபித்தல், BIA யின் B380 விமானச் செயற்பாடுகளுக்காக AASL இன் ஒப்பீட்டுக் கற்கைகள் மற்றும் BIA யின் டெக்சி ஓடுபாதையினை மீள அமைப்பதற்காக தொழில்நுட்ப வழிகாட்டல்கள் வழங்கப்பட்டதுடன் உரிய அங்கீகாரங்களும் வழங்கப்பட்டன.

## கைத்தொழிலுடன் இணைந்த கூட்டங்கள்

விமானத் தளப் பிரிவு BIA இன் பாதுகாப்புப் பிரிவு APRON தற்காப்பு கூட்டங்களுக்கு நாளாந்தம் பங்கேற்றதுடன் RMA இன் முழுமையான அளவு அவசர சந்தர்ப்பங்களில் பயிற்சிகளுக்கும் தேவையான வழிகாட்டல்களை வழங்கி பங்கேற்புகள் இடம்பெற்றன.

## அரச நிறுவனங்கள் மற்றும் முகவர் நிறுவனங்களுடனான இணைப்புக்கள்

விமானத் தளப் பிரிவு, மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சிற்கு இதன் பாரிய விமான நகரின் உத்தேசத் திட்டங்களுக்கு தேவையான உள்ளீடாக BIA இன் இரண்டாவது ஓடுபாதையினை நிர்மானிக்கும் மாற்றுச் செயற்பாடுகள் கையளிக்கப்பட்டுள்ளன.

## அனுசரனைச் செயற்பாடுகள்

IS - 60 அமுல்படுத்தும் தரத்தினை வெளியீடுகள் மூலம் நலன்புரி தொடர்பிலான ICAO - 09 இணைப்பின் உள்ளடங்கும் தரம் மற்றும் பரிந்துரை ஒப்பளவுகள் வெளியிடப்பட்டன.

தொடர்ந்தும் இலங்கை தேசிய விமானப் போக்குவரத்து அனுசரனை வேலைத்திட்டங்கள் (NATFP) வெளியிடப்பட்டதுடன் தேசிய விமானப் போக்குவரத்து நலன்புரி வேலைத்திட்டங்களின் ஆரம்பக் கூட்டங்களும் நடாத்தப்பட்டது.

BIA இல் நடாத்தப்பட்ட விமான நிலைய அனுசரனைக் குழு மற்றும் விமானப் போக்குவரத்து கம்பனிச் செயற்பாட்டாளர் குழுக் கூட்டங்களின் போது இப்பிரிவு நாளாந்தம் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை (CAASL) ஐ பிரதிநிதித்துவப்படுத்தியது.

## பணியாளர் சபைப் பயிற்சி

விமானத் தளப்பிரிவின் உத்தியோகத்தர்களினால் COSCAP - SA நடாத்தப்பட்ட அரச பாதுகாப்பு வேலைத்திட்டம் (SSP) தொடர்பான பயிற்சிப் பாடநெறியும் விமானத் தளத்தை உறுதிப்படுத்தல், விமான சேவைப் பாதுகாப்பு முன்னோடிகளுக்கான கணக்காய்வு முறைகள் மற்றும் விழுமியச் செயற்பாடுகள், தற்காப்பு மேற்பார்வை பரிசோதனை (விமானத் தளங்கள்) பயிற்சிப் பாடநெறிகளில் பங்கேற்றனர். இப்பிரிவிற்கான பதவிகள் திறன் அபிவிருத்தி ஒழுங்கு விதிமுறைகள் சமகாலப்படுத்தப்பட்டதுடன் பிரிவின் ஒவ்வொரு உத்தியோகத்தர் ஊடாக புள்ளிவிபரங்களை பெற்றுக் கொள்ளவும் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளும் வகுக்கப்பட்டன.



# விமானச் செயற்பாட்டுப் பிரிவு



விமானச் செயற்பாட்டு பிரிவின் அடிப்படைப் பொறுப்பாக அமைவது ICAO வினால் அங்கீகரிக்கப்பட்ட உரிய சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை ஒப்பளவுகளுக்கமைய வான்பரப்புத் திட்டங்களை வகுத்தல், ஒழுங்கமைப்புக்களை மேற்கொள்ளல மற்றும் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குரியதான ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் செயற்பாட்டுப் பணிகளை முறையாக வகுத்தல் மற்றும் விமானச் செயற்பாட்டு சேவை வழங்குனர்களை முதற் தடவையில் உறுதிப்படுத்தல் உட்பட தொடர்ச்சியான தேடுதல்களை மேற்கொள்வதை பொறுப்பேற்று செயற்படுவதாகும்.

## தேடுதல் பணிகள்

சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் (DGCA) இனால் அங்கீகரிக்கப்பட்ட 2017 ஆம் ஆண்டிற்காக ANS இன் பரிசோதனைத் திட்டங்களுக்கமைய BIA இல் RMA இன் மற்றும் MRIA இல் விமான நிலையத்திற்குள் அமைந்துள்ள ATS மத்திய நிலையம் மற்றும் BIA இன் மற்றும் RMA இல் AIS மத்திய நிலையம் தொடர்பில் உப ஆவணப்படுத்தப்பட்டுள்ள சகல பரிசோதனைகளும் கீழ்க் குறிப்பிட்டவாறு பூர்த்தி செய்யப்பட்டன.

ATS மத்திய நிலையம் - 29 பரிசோதனைகள்

AIS மத்திய நிலையம் - 16 பரிசோதனைகள்

## ATC அளவு மதிப்பீடுகள்

ANS பிரிவு கீழ்க் குறிப்பிடப்பட்ட ATC அளவினை வெளியிடுவதற்காக 2017 ஆம் ஆண்டுக்குள் 45 மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- பிரதேச நிருவாக ரேடார் அளவு மதிப்பீடுகள் - 10 - (2016:8)
- அடையும் ரேடார் மற்றும் ரேடார் அல்லாத மதிப்பீடுகள் - 12 - (2016:03)
- விமானத் தள நிருவாக மதிப்பீடுகள் - 23 - (2016:16)
- OGT இற்காக SIM பரிசோதனை - 18 - (2016:16)

## மொழித் தேர்ச்சி மற்றும் வானொலித் தொலைத் தொடர்பு ஒழுங்கு விதிமுறைப் பரிசோதனைகள்

மொழித் தேர்ச்சிப் பரீட்சையினை நடாத்தும் போது இப்பிரிவு தனிப்பட்ட அனுமதிப்பத்திரம் பிரிவுடன் (PEL) பிரிவுடன் ஒத்துழைப்புடன் செயற்படுத்தப்படுவதுடன் (CPL) மற்றும் தனியார் வானொலி அனுமதிப்பத்திரம் (PPL) இற்காக தனியார் விமானப் பயிற்சிப் பாடசாலைகளின் முன்னோடிகளில் நடாத்தப்பட்ட R/T பரீட்சைகளின் போது பரிசோதனை சபை பிரதிநித்துவப்படுத்தப்பட்டது. இதற்கமைய R/T 41 பரீட்சைகள் மற்றும் 18 ELPC பரீட்சைகள் இவ்வாண்டில் நடாத்தப்பட்டன.

## விசாரனைகள்

கட்டாய சம்பவ அறிக்கைப்படுத்தல் (MORs) முறையின் கீழ் விமானப் போக்குவரத்து கம்பனியினால் கிடைக்கப் பெற்ற கூடுதலான மும்பாய் விமான தகவல் வலயம் (FIR) தொடர்பு சாதனம் தடைப்பட்டுள்ளமையினால் இடம்பெற்ற நிகழ்வுகள் தொடர்பில் அறிக்கைப்படுத்துவது தொடர்பில் விசாரனைகள் நடாத்தி அவ்வாறான சம்பவங்கள் மீண்டும்

ஏற்படுவதைத் தடுப்பதற்காக இந்தியப் பொறுப்பாளர்களுடன் ஒத்துழைப்புடன் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

கூடுதலான உயரத்தில் செங்குத்து விகித அளவில் விமானங்கள் தரையிறக்கப்படுவதினால் மற்றும் விமானங்களினால் மேற்கொள்ளப்பட்ட உயரப் பயணங்கள் காரணமாக இடம்பெற்ற **TCAS-RA** செயற்படுத்தல்கள் தொடர்பில் பரிசோதனைகள் நடாத்தப்பட்டன. அவ்வாறான சம்பவங்களை கட்டுப்படுத்துவதற்காக தேவையான பரிந்துரைகள் **ANSP** க்கு வழங்கப்பட்டது.

உள்நாட்டு விமானச் செயற்பாடுகள் தொடர்பில் நடாத்தப்பட்ட இரு விசாரணைகளின் போது **ANS** பிரிவு மிக முக்கியத்துவம் வாய்ந்த பணிகளை மேற்கொண்டு அதற்குரிய வலுவூட்டல் செயற்பாட்டு மாற்றங்களுக்காகத் தேவையான நிபுனத்துவ அறிவு வழங்கப்பட்டது.

## அங்கீகாரங்களை வழங்குதல்.

உப ஆவணப்படுத்தப்படாத தொழில்நுட்ப நிறுத்தங்கள்/ வர்த்தகமல்லாத விமானத் தறையிறக்கல் மற்றும் மேலே பறப்பதற்கான அங்கீகாரத்தை வழங்கும் செயற்பாடுகள் வினைத்திறனுடன் வழங்கப்பட்டன. எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும் இடங்களுக்கமைய பாதுகாப்பு அமைச்சு, இலங்கை விமானப் படை மற்றும் தொல்பொருளியல் திணைக்களம் போன்ற ஒவ்வொன்றுக்கும் உரிய முகவர் நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய மேலதிக அங்கீகாரத்திற்குட்பட்டு விமானச் செயற்பாட்டுப் பணிகள் (**Arial Work**) இற்காக முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளுக்காகவும் அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன.

இதற்கமைய இப்பிரிவு 2017 ஆம் ஆண்டுக்குள் உப ஆவணப்படுத்தப்படாத மேலே பறப்பதற்காக 931 மற்றும் உப ஆவணப்படுத்தப்படாத 1412 தறையிறக்கல்களுக்காக அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன. இராஜ தந்திரிகளுக்கு வான்மூலம் பயணிப்பதற்காக எதிர்ப்புக்கள் இல்லை எனக் குறிப்பிடும் 71 குறிப்புக்களுக்கும் இராஜதந்திர விமானத் தறையிறக்கங்களுக்பும் எதிர்ப்புக்கள் இல்லை என குறிப்பிடும் 156 குறிப்புக்களும் வெளியிடப்பட்டன. இதற்கு மேலதிகமாக 87 விமான புகைப்படங்களுக்கும் அங்கீகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக நாட்டில் துரிதமாக பிரபல்யமடைந்து செல்லும் 491 ரோனர் செயற்பாடுகளுக்காகவும் அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன.

## ANS பயிற்சிகள்

ANS பிரிவின் உத்தியோகத்தர்கள் விமான சேவை தகவல் முகாமைத்துவம் தொடர்பில் ஒரு நாள் வெளிநாட்டு பயிற்சிக்கும் 24 வெளிநாட்டுக் கருதரங்குக்கும் இடைக்கிடையே பங்கேற்றனர்.

## ICAO கூட்டங்கள்

**ANS** பிரிவின் உத்தியோகத்தர்கள் கீழ்க் குறிப்பிட்ட **ICAO** கூட்டங்களில் பங்கேற்றனர்.

- SURICG/2 கூட்டங்கள்
- FIT-ASIA/7 கூட்டங்கள்
- AAITF/12 கூட்டம் AIS தொடக்கம் AIM வரை குடியகழ்வு தொடர்பான
- SEA/BOB WG/13 கூட்டங்கள்

தென்கிழக்காசிய மற்றும் வங்களா விரிகுடா உப வலயத்தின் **ADS-B** அமுல்படுத்தும் செயற்பாட்டுக் குழுவின் **(SEA/BOB ADS-B WG/13)** வது கூட்டம் 2017 நவம்பர் மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை இலங்கையில் நடாத்தப்பட்டது. இது இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் அனுசரனையில் நடாத்தப்பட்டது. இராட்சியங்கள் மற்றும் 12 அமைப்புக்களின் 40 பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர். இக்குழுவில் சீனா, கொங்கொங், இந்தியா, இந்தோனோசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், பப்புவா நியுகினியா, சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் ஐக்கிய அமெரிக்காவை பிரதிநிதித்துவப்படுத்தி பிரதிநிதிகளும் **CANSO, IATA** மற்றும் **ICCAIA** ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகளும் உள்ளடங்கியிருந்தனர். இந்த கூட்டம் போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் கௌரவ நிமல் சிறிபால டி சில்வா அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## AIP மறுசீரமைப்பு, AIP மேலதிக விமானத்தளத் தகவல்கள் சுற்றறிக்கை (AICs) மற்றும் நோட்டம் (மேழுவுயுஆள)

AIP இரு மறுசீரமைப்புக்கள், AIP மேலதிகமாக 08 மற்றும் ANS சார்ந்த AIC 07 வெளியிடப்பட்டதுடன் ANS செயற்பாட்டுப் பணிகள் மற்றும் அதனுடன் தொடர்புட்ட 386 நுனுக்கமான முறையில் பரிசோதனைக்குட்படுத்தி வெளியீடுவதற்கு அங்கீகாரங்கள் வழங்கப்பட்டது.

**கொழும்பு வானியல் தகவல் வலயம்** (FIR) **உள்ளே தேடல்கள் மற்றும் மீட்புப் பணிச் சேவை** (SAR)

அவுஸ்திரேலியா சமுத்திரப் பாதுகாப்பு அதிகாரப் பிரிவு (AMSA) உடன் இணைந்து 2015 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள 03 ஆண்டு கால தேடல்கள் மற்றும் மீட்புகள் (SAR) இயலுமைகள் பங்குடமை வேலைத்திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற ஒத்துழைப்பு மூலம் இலங்கையிலும் தாபிக்க உத்தேச தேசிய SAR அமைப்பு உட்பட இலங்கையின் SAR இயலுமைகளை விருத்தி செய்ய தொடர்ச்சியாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தேசிய SAR அனுசரனைக் குழுவினை தாபித்து தேசிய SAR திட்டத்தை முறையாக வகுக்கும் பணிகள் இக்குழுவிற்கு வழங்கப்பட்டது. தற்போது AMSA வழிகாட்டல்களின் கீழ் இத்திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன.

AMSA கீழ்க் குறிப்பிட்டவாறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

- அவுஸ்திரேலியா SAR வேலைத்திட்டம் தொடர்பாக அறிவுறுத்தும் வகையில் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.
- 06 உத்தியோகத்தர்களுக்கு SAR பணி இணைப்பாளர்களாக பயிற்சிகள் வழங்கப்பட்டன.
- 03 உத்தியோகத்தர்களுக்கு நிருவாகிகளாக பயிற்சிகள் வழங்கப்பட்டன.
- 15 உத்தியோகத்தர்களுக்காக இலங்கையில் SAR உத்தியோகத்தர் பாடநெறி நடாத்தப்பட்டது.
- TABLE-TOPSAR பயிற்சி மற்றும் முழுமையான பயிற்சி **SAR Asserts)** பயன்படுத்தாது நடாத்தப்பட்டது.

அவுஸ்திரேலியாவுடனும் மாலைதீவுடனும் ஏற்கனவே உடன்படிக்கை கைச்சாத்திட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் இந்தியாவுடன் கைச்சாத்திடவுள்ள உடன்படிக்கை வரைவு இராஜதந்திர மார்க்கம் ஊடாக அந்நாட்டினால் பரிமாறிக் கொள்ளப்பட்டுள்ளது. இவ்விரு உடன்படிக்கைகளுக்கு **CAASL** இன் எதிர்ப்புக்கள் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

## PBN அமுல்படுத்தல் (1)

23 - ஓடுபாதைக்கு மற்றும் 5 - ஓடுபாதைக்கு **RNP** அடைவு கொண்ட **MRIA** மற்றும் **PBN** செயற்பாட்டுப் பணிகளை அமுல்படுத்துதல் பூர்த்தியடைந்தன. இவ் விசேட வெற்றியை தொடர்ந்து தற்போது இலங்கை, சர்வதேச விமான நிலைய ஓடுபாதையின் இறுதியில் **RNP** யினை எட்டுவதற்கு பயன்படுத்தும் **ICAO** தேவைக்கு ஒப்பீட்டினை பேணும் அளவு **100%** மாக மாற்றமடைந்துள்ளது.

## இலங்கையில் ADS - D அமுல்படுத்தல் (02)

இது இலங்கை வான்பரப்பிற்குள் **ADS - B** அமுல்படுத்துவதற்காக **AASL** இற்கு உரிய மேற்பார்வை உதவிகள் மற்றும் வழிகாட்டல் வழங்குதல்கள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு இலங்கையில் **ADS - B** வெளிச் செயற்பாடுகள் தொடர்பில் அமுல்படுத்தும் தரங்களை வகுத்து பகிரங்கப்படுத்தப்பட்டன. இவ் அமுல்படுத்தல்கள் மூலம் இலங்கையில் **ADS-B** செயற்பாட்டினை மேற்பார்வை செய்யும் பணிகள் இடம்பெற்றுள்ளன. இதேவேளை **CAASL** உம் இந்தியாவில் **ADS-B** செயற்பாடுகள் தொடர்பாக இலங்கையின் 15 விமானக் கட்டுப்பாட்டாளர்களுக்கு பயிற்சியை வழங்க இந்தியாவை இணங்கச் செய்வதற்காக இந்திய விமான நிலைய அதிகார சபையுடன் ஒத்துழைப்புடனான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இப்பயிற்சிக்காக எந்தவொரு செலவினத்தையும் மேற்கொள்ள வேண்டிய தேவை இலங்கைக்கு ஏற்படாது.

## ACAO வின் APANPIRC தீர்மானங்களை அமுல்படுத்தல்

இலங்கையின் வான்பரப்பு சேவை விநியோகஸ்தர்களுடன் ஒத்துழைப்புடன் செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலம் **APANPIRC** உரிய தீர்மானங்களை அமுல்படுத்தும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. **ATS / AIS** செயற்பாட்டு மத்திய நிலையம் தொடர்பில் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளுக்கமைய நடாத்தப்பட்ட பரிசோதனைகளின் போது **APANPIRC** தீர்மானங்கள் பயன்மிக்க வகையில் அமுல்படுத்துவது மேற்பார்வைக்குட்படுத்தப்பட்டன.

## ALS முன்னோடி செயற்பாட்டுப் பணிகள்

இப்பிரிவு **AASL** இன் **ANS** கிளையுடன் விமான சேவைக் கைத்தொழிலின் ஏனைய உரிய பங்குதாரர்கள் சகலருடனும் நாளாந்தம் இணைப்புக்களை பேணுவதன் மூலம் **ICAO** ஆவணங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகளுக்குரிய ஏனைய சகல சேவைகளும் நாளாந்தம் அமுல்படுத்தப்பட்டன.

**ANS** மேற்பார்வைப் பணிகளுக்குரியதாக அமுல்படுத்தும் தரங்கள் 07 இப்பிரிவினால் வெளியிடப்பட்டது.

- **IS - 053** ரோனர் கோவையின் முதலாவது அச்சு - இரண்டாவது மறுசீரமைப்பு - 2017 ஜனவரி 10 ஆம் திகதி பகிரங்கப்படுத்தப்பட்டது.
- இணைப்பு 01 - **I** காண்டம் - **IS** 03 இனை - 02 அச்சு - 2017 பெப்ரவரி 01 ஆம் திகதி பகிரங்கப்படுத்தப்பட்டது (10 இணைப்பு - **II** காண்டம் பகுதி 01 இற்காக டிஜிட்டல் புள்ளிவிபர ஆவணங்கள் தொடர்பில் மறுசீரமைப்பு கோவையுடன்)
- **IS-040** - 2 வது அச்சு - 2017 ஜனவரி 25 ஆம் திகதி பகிரங்கப்படுத்தப்பட்டது. (இணைப்பு **III** காண்டம் - பகுதி 2 - தொடர்புசாதன முறைகள் தொடர்பான மறுசீரமைப்பு கோவையுடன்)
- **IS - 031** முதலாவது அச்சு - 2017 மார்ச் 06 ஆம் திகதி பகிரங்கப்படுத்தப்பட்டது (இணைப்பு 04 இற்கு பதிலாக வானியல் சேவை வரைபடம் தொடர்பான மறுசீரமைப்புக் கோவையுடன்)
- **IS - 038** - இரண்டாவது அச்சு - மறுசீரமைப்பு - 2018 ஆம் மே மாதம் 08 ஆம் திகதி பகிரங்கப்படுத்தப்பட்டது (இணைப்பு - 2 வது காண்டத்திற்கு பதிலாக விமான சேவை தொலைத்தொடர்பு தொடர்பான மறுசீரமைக்கப்பட்ட கோவையுடன்)
- **IS - 042** - முதலாவது அச்சு - மறுசீரமைப்பு - 2017 ஜனவரி மாதம் 20 ஆம் திகதி பகிரங்கப்படுத்தப்பட்டது. (3 வது இணைப்புக்கு பதிலாக காலநிலை விஞ்ஞான சேவை தொடர்பான மறுசீரமைப்புக் கோவை)
- **IS - 064** முதலாவது அசசு - மறுசீரமைப்பு - 2017 ஒக்டோபர் 10 ஆம் திகதி பகிரங்கப்படுத்தப்பட்டது (**ADS-B** செயற்பாடுகள் தொடர்பான ஒழுங்குக் கோவைகளுக்குப் பதிலாக)

## இலங்கையில் ரோனர் கோவைகள் தொடர்பாக அறிவுறுத்தும் வேலைத்திட்டம்

**ANS** பிரிவு இலங்கையில் ரோனர் கோவைகள் தொடர்பான பொதுமக்களை அறிவுறுத்துவதற்காக வேலைத்திட்டம் நலன்புரி/ ஒழுங்குபடுத்தும் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

- இலங்கையில் ரோனர் கோவைகள் தொடர்பான ரோனர் செயற்பாட்டாளர்களை அறிவுறுத்துவதற்காக 2017 ஜூலை 14 ஆம் திகதி **CAASL** இல் பரிசோதனை நடாத்தப்பட்டது. இதில் பிரதம அதிதியாக கௌரவ அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கலந்து கொண்டார்.
- நிதி மற்றும் தகவல் ஊடாகத் துறை அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட ரோனர் கோவை தொடர்பில் அறிவுறுத்துவது தொடர்பாக 03 அமர்வுகள் நடாத்தப்பட்டன. இலங்கை இராணுவத்தின் பீரேங்கி ரெஜிமேன்ட் பிரிவினை அறிமுகப்படுத்தும் வேலைத்திட்டங்கள் நடாத்தப்பட்டன.


ஆண்டறிக்கை 2017
இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை

- பொலிஸ் நிலைய செயற்பாடுகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் OIC / 126 பொலிஸ் நிலையங்களுக்காக 07 அறிவுறுத்தல் அமர்வுகள் நடாத்தப்பட்டன. இது பாதுகாப்பு பதவி நிலைப் பொறுப்பாளர் அலுவலகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்து.

### விமானப் போக்குவரத்துக் கம்பனிகளினால் ANS கட்டணத்தை அறவிடுவதற்கு உதவுதல்.

வெளிநாட்டு விமானப் போக்குவரத்து கம்பனிச் செயற்பாட்டாளர்கள் மூலம் இலங்கையில் விமானப் போக்குவரத்து சேவை வழங்குனர்களாக AASL கம்பனிக்கு மேலே பறத்தல் / தறையிறக்குதல் கட்டணமாக 2017 ஆம் ஆண்டு உட்பட அறவிட இருந்த நிதி நிலைமையினை அறவிட்டுத் தறுமாறு கோரி அவ்வவ் நாடுகளில் விமான சேவைப் பொறுப்பாளர்களுக்கு விசேட கடிதங்களை அனுப்பி இச் செயற்பாட்டின் போது AASL இற்கு உதவிகள் வழங்கப்பட்டன.  இதன் பயனாக மேற்கூறப்பட்ட விமானப் போக்குவரத்து கம்பனிகள் காலாவதியான நிலுவை நிதியினை தீர்க்க நடவடிக்கை எடுத்திருந்தன.

### சேவை உடன்படிக்கை

அச்சு ஊடகங்கள் மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் இரு வகையிலும் விமானப் போக்குவரத்து தள வரைபடங்கள் மற்றும் வரைபுகளை இலவசமாக வழங்குவதற்காக ஜெபசேன் (Jeppessen) நிறுவனத்துடன் கைச்சாத்திடப்பட்டிருந்த சேவை உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டது.

### அபிவிருத்திகளை மேற்கொள்ளல்ஃ ஒழுங்கிணைந்த பணிகள் உட்பட அலுவலக முகாமைத்துவத்திற்கான பங்களிப்பு

தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட செயற்பாட்டு ஈடுபடுத்தல்கள் மற்றும் ஈடுபடுத்துவதற்காக மற்றும் மீளாய்வுகள் மூலம் காணப்படும் சஞ்சிகைகள் (Manuals) / ஒப்பீட்டுப் பட்டியல்கள்/ வழிகாட்டல் ஆவணங்கள் சமகாலப்படுத்தப்பட்டன. இவ்வாறு சமகாலப்படுத்தப்பட்ட ஆவணங்களில் ANS பரிசோதனைக் கையேடுகள் மற்றும் CAASL இன் அலுவலக் கோவையின் ANS தொடர்பான வாசகமும் காணப்பட்டது.

### உள்நாட்டு VFR வாணியல் வரைபடத்தை வெளியிடல்

உள்நாட்டு விமானப் போக்குவரத்துக்கு விசேடமாக இலங்கையில் பயிலுனர் விமானி உதவியாளராக இலங்கை விமான சேவைக் கைத்தொழிலில் நீண்டகாலம் தொடக்கம் காணப்பட்ட தேவையினை பூர்த்தி செய்து உள்நாட்டு VFR வானியல் வரைபடத்தை வெளியிடும் செயற்பாடுகள் பகிரங்கப்படுத்தப்பட்டன.

### விமானப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் உள்நாட்டு விமானப் போக்குவரத்து கம்பனியின் விமானிகளுக்கிடையிலான கலந்துரையாடலுக்கு வசதிகளை வழங்குதல்.

செயற்பாட்டாளர்கள் தொடர்பில் விமானக் கட்டுப்பட்டாளர்கள் மற்றும் உள்நாட்டு விமானப் போக்குவரத்து கம்பனிகளுக்கிடையே பயன்மிக்க உரையாடல்களை கட்டியெழுப்ப நீண்ட காலம் தொடக்கம் பெரும் தேவையாகக் காணப்பட்டது. ANS பிரிவு இத்தேவையினைப் பூரணப்படுத்தி செயற்பாட்டு பிரச்சினைகள் தொடர்பில் இரு தரப்பினர்களுக்கும் திருப்தியடைக்கூடிய வகையில் தீர்வுகளை வழங்க அத்தரப்பினர்களுக்கிடையே தலையீட்டாளராக மாற்றமடைந்து உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. இச் செயற்பாடுகள் உள்நாட்டு விமானப் போக்குவரத்து செயற்பாட்டு பாதுகாப்பு முறை மற்றும் வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கான முன்னேற்றகரமான அடைவு மட்டமாக காணப்பட்டது.

### உயரத்தில் விமானம் பறத்தல்

2017 ஆம் ஆண்டில் 39491 விமானங்கள் இலங்கை வன்பரப்பிற்கு மேலால் பயணித்துள்ளன. 2016 ஆம் ஆண்டில் இதன் எண்ணிக்கை 35,229 ஆகும்.






# விமான பாதுகாப்பு
## மேற்பார்வைப் பிரிவு

## பயிற்சி அமைப்புக்கள் மற்றும் தனிநபர் அனுமதிப் பத்திரப் பிரிவு



சிவில் விமான சேவைக்குரியதான பாதுகாப்பு தொடர்பான பணிகளில் ஈடுபட்டுள்ள பயற்சி பெற்ற அமைப்புக்கள் மற்றும் நபர்களுக்குரியதான சர்வதேச தரங்கள் உட்பட பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகளுக்கமைய சான்றுப்படுத்துவதற்கு மற்றும் தேடல்களுக்குரியதான ஒழுங்குக் கோவைகள் மற்றும் செயற்பாட்டு ஒழுங்கு விதிமுறைகளை வெளியிடும் பொறுப்பு பயிற்றுவிப்பு அமைப்பு மற்றும் தனிநபர் அனுமதிப்பத்திரப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது. சமூகத் தேவையினை நிறைவேற்றுவற்காக பயிற்சி மற்றும் தனிநபர் அனுமதிப்பத்திரப் பிரிவு 2017 ஆம் ஆண்டுக்குள் மேலதிக முன்னேற்றங்களை காண்பித்துள்ளது. 2017 ஆம் ஆண்டில் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பிரதான பணிகள் கீழ்வே குறிப்பிடப்பட்டுள்ளன. இத்துறையினைத் தொடர்ந்தும் அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

### கணணியினை அடிப்படையாகக் கொண்ட பரீட்சை முறையினை வெளியிடல்

தனிநபர் அனுமதிப்பத்திரப் பிரிவினால் வழங்கப்படும் சேவையின் தரத்தினை விருத்தி செய்வதற்காக CAASL தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தித் திட்டமிடலை உள்ளீர்ப்பு செய்வதற்காக கணணியினை அடிப்படையாகக் கொண்ட பரீட்சை முறையினை வெளிப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதுடன் 2017 ஆம் ஆண்டில் இது தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### புதிய வானியல் பாடசாலைகளை உறுதிப்படுத்தல்.

PPL/CPL/IA வெளியிடுவதற்காக விமானப் பயிற்சியினை வழங்குவதற்கு தனிநபர் அனுமதிப்பத்திர சக்குராய் அவியேசன் கம்பனிக்கு வானியில் அனுமதிப்பத்திரங்களை வெளியிட்டது.

### வானியல் பாடசாலைகள்ஃ விமான சேவைப் பயிற்சி அமைப்புக்கள்ஃ பெயரிடப்பட்ட வைத்தியசாலைகளில் தேடல் பணிகள்

தனிநபர் அனுமதிப் பத்திரப் பிரிவு, விமான சேவைப் பயிற்சி மத்திய நிலையம் மற்றும் பெயரிடப்பட்ட வைத்தியசாலைகள் தொடர்பாக கீழ்க் குறிப்பிட்ட ஆய்வுப் பரிசோதனைகள் நடாத்தப்பட்டன.

- பெயார் வேர்ஸ் அவியேசன் அக்கடமி - 2
- மிலேனியம் பிளைட் அக்கடமி - 2
- வ/ப ஓப்பன் ஸ்கை பிளைட் பயிற்சி தனியார் கம்பனி - 4
- வ/ப பிளை சதேன் தனியார் கம்பனி - 4
- இன்டர் நேசனல் அவியேசன் அக்கடமி (வானியல் செயற்பாட்டு உத்தியோகத்தர் பயிற்சி) - 2
- பெயரிடப்பட்ட வைத்தியசாலைகள் - 5

## சர்வதேச கூட்டங்கள் / செயலமர்வுகளில் பங்கேற்றல்

2017 நவம்பர் மாதத்தில் சிரேஷ்ட சிவில் விமான சேவைப் பரிசோதகர் (விமான சேவை வைத்திய விஞ்ஞானம்) ((SCAI-AM)இ செயற்திட்டத்தின் மையக் கேந்திரமான மலேசியா கோட்டா கிளபாலு நகரில் இடம்பெற்ற CAPSCA/AP-9 வது கூட்டத்தில் பங்கேற்றல்.

## வழங்கப்பட்ட புதிய அனுமதிப்பத்திரம் மற்றும் அளவுகள்

மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட ஆண்டில் தனிநபர் அனுமதிப்பத்திரக் கிளை விமான சேவைக் கொள்வனவாளர்களுக்காக கீழ்க் குறிப்பிட்ட அனுமதிப்பத்திரங்களை வெளியிட்டுள்ளது.

- விமானி அனுமதிப் பத்திரம் - 237
- விமானிக்காக விமான வகை அளவையியல்கள் - 138
- வானியல் ஆலோசனை மதிப்பீடுகள் (FI மற்றும் AFI) - 04
- விமானப் பயணக் கட்டுப்பாட்டு அளவு - 25
- விமானப் பராமரிப்பு அனுமதிப்பத்திரம் (AML) -14
- AML ஊக்குவிப்பு / அளவுகள் - 149
- வானியல் செயற்பாட்டு உத்தியோகத்தர் அனுமதிப் பத்திரம் - 04
- கபின் குறோ அங்கத்தவர் சான்றிதழ் - 102
- தள ஆலோசனை அங்கீகாரங்கள் மற்றும் அனுமதிப்பத்திரம் - 22
- விமானிகளுக்காக வெளிநாட்டு அனுமதிப் பத்திரத்தை இரத்தச் செய்யும் சான்றிதழ் - 119
- ML இற்காக வெளிநாட்டு அனுமதிப் பத்திரங்களை செல்லுபடியாக்கும் சான்றிதழ் - 06

## வைத்தியப் பரிசோதனை / வைத்தியப் பரிசோதனை சபைக் கூட்டங்கள்

தனிநபர் அனுமதிப்பத்திரப் பிரிவின் விமான வைத்திய மத்திய நிலைய விமானிகள் மற்றும் விமானப் பயணக் கட்டுப்பாட்டாளர்களுக்கு தனிநபர் அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்காக கீழ் குறிப்பிடப்பட்டவாறு வைத்திய பரிசோதனைகள் நடாத்தப்பட்டுள்ளன.

- அடிப்படை வைத்தியப் பரிசோதனை - 276
- புதுப்பித்தல் வைத்தியப் பரிசோதனை - 794

தொடர்ந்தும் விமான வைத்திய மத்திய நிலையம் சுகாதார நிலைமைகள் தொடர்பாக உறுதிப்படுத்துவதற்காக வைத்திய பரிசோதனை சபையினால் 05 கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

## பெயரிடப்பட்ட வைத்தியசாலைகளுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளை புதுப்பித்தல்

இப்பிரிவினால் பெயரிடப்பட்ட 05 வைத்தியசாலைகளுடன் முன்னர் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டது. அவ்வாறு புதுப்பிப்பதற்கு முன்னர் அவ் வைத்தியசாலைகளிடமிருந்து வழங்கப்படும் சேவைகள் மற்றும் வைத்தியசாலை தரத்தினை மதிப்பிட்டுக்குட்படுத்துவதற்காக வைத்தியப் பரிசோதனைகள் நடாத்தப்பட்டன.



# விமானச் செயற்பாட்டுப் பிரிவு



விமானச் செயற்பாட்டாளர்கள் தொடர்பாக பயன்மிக்க தற்காப்பு மேற்பார்வைகளுக்காக தேவையான உள்நாட்டுக் கோவைகள், ஒழுங்கு விதிகள் வழிகாட்டல்கள் மற்றும் செயற்பாட்டு விதிமுறைகள் சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பு ICAO வினால் அங்கீகரிக்கப்பட்ட உரிய சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகளுக்கமைய (SARPs) ஒப்பீட்டு வெளிபாட்டுப் பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டுள்ள வானியல் பாதுகாப்பு மேற்பார்வை கிளையின் கீழ் செயற்படும் விமானச் செயற்பாட்டு பிரிவாகும். விமான போக்குவரத்துச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக விமானப் போக்குவரத்துக் கம்பனி ஆரம்பத்தில் சான்றுப்படுத்த மற்றும் பின்னர் சான்றிதழ்களுக்காக தேடும் பரிசோதனைப் பணிகளும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. அபாயகர பொருள் அனுமதிப்பத்திரங்களை வெளியிடல் மற்றும் அது தொடர்பான பணிகளின் போது இப்பிரிவினால் உரிய விடயப் பரப்பிற்குட்பட்டு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2017 ஆம் ஆண்டுக்குள் விமானச் செயற்பாட்டுப் பிரிவினால் இக்கைத்தொழில் துறைக்காக பின்பற்ற வேண்டிய கீழ்க் குறிப்பிடப்பட்ட கோவைகள், வழிகாட்டல் ஆவணங்கள் மற்றும் கட்டளைகள் வெளியிடப்பட்டுள்ளன.

- IS-058 – ICAO 6 இணைப்பு (1) பகுதி - விமானம் / சர்வதேச விமானப் போக்குவரத்து செயற்பாடுகள் - (இணைப்பு 6 - முதலாம் பகுதிக்கான 40 வது மறுசீரமைப்பு வரை உட்பட)
- IS057 - 06 இணைப்பு (01) பகுதி 14 வது வாசகம் - அபாயகரப் பொருட்கள் (இணக்கம்)
- D007 – கபின் குறோ ஆளனிக்காக வைத்தியத் தேவைகள்
- D005 – இணைப்பு 18 உடன் இணக்கத்தை பேணல்
- GD 006 – அவசர சந்தர்ப்ப விபத்துக்களின் போது விமானங்கள் மற்றும் உலங்கு வானூர்திக்குள் இருப்போர் மோதக்கூடிய இடங்களுக்காக பாதுகாப்பு பெட்டி / கவசங்கள்
- GD001 – வானியல் ஆளனியினர், கபின் குறோ மற்றும் விமானம் புறப்படுவதற்கு தேவையான ஒழுங்குகளை மேற்கொள்பவர்கள் ஆகியோரிருக்கான வள முகாமைத்துவப் பயிற்சி

DGCA இனால் பணிக்கப்பட்ட தேவைகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்ததன் பின்னர் 03 விமானச் செயற்பாட்டாளர்களை சான்றுப்படுத்தி அவர்களுக்கு விமானச் செயற்பாட்டு சான்றிதழ் வழங்கப்பட்டன. சகுராய் அவியேசன், எப்-எயார் மற்றும் பிளை சதேன் ஆகிய செயற்பாட்டாளர்கள் சான்றுப்படுத்தப்பட்டனர். இதற்கு மேலதிகமாக தனியார் விமான செயற்பாட்டாளர்கள் அனுமதிப்பத்திரம் (PAOP) வெளியிடுவதற்காக ஒரு கம்பனியும் ஒரு தனிநபருக்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

விமானச் செயற்பாட்டாளர்களை சான்றுப்படுத்தியதன் பின்னர் தேவைக்கு ஏற்றவாறு AOC கொண்டிருப்போரினால் சமர்ப்பிக்கப்பட்ட வானியல் செயற்பாட்டுக் கோவையினை மறுசீரமைத்தல், தளச் செயற்பாட்டுக் கோவையினை மறுசீரமைப்பதற்கு அங்கீகாரத்திற்காக கௌரவிப்புக்கள் வழங்கப்பட்டன.

(32) விமானிகள் தொடர்பில் விமானி தேர்ச்சிச் செயற்பாடுகள் **(PPC)** நடாத்துவதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டது. வானியல் செயற்பாட்டு பரிசோதகர்கள் **(FOI)** விமானி தேர்ச்சி செயற்பாடுகளை நடாத்துவதற்காக பெயரிடப்பட்ட செயற்பாட்டு முன்னோடிகள் **DGR** 08 பேர் மேற்பார்வைக்குட்படுத்தப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். 2017 ஆம் ஆண்டில் **DDGR** ஆலோசகர்கள் மற்றும் கபின் குறோ பாதுகாப்பு பரிசோதகர்கள் தொடர்பில் மதிப்பீடுகளை மேற்கொண்டதன் பின்னர் 05 ஆலோசகர்களுக்காக அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன.

இலங்கையின் வலுவான பாதுகாப்பினை மேற்பார்வை செய்யும் முறைமையின் பலமான நிலைமையினை உறுதிப்படுத்துவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமானச் செயற்பாட்டாளர்கள் D மேற்பார்வை தேவைகளுக்கமைய செயற்படுகின்றார்கள் என்பதை கண்டறிவதற்கு அங்கீகரிக்கப்பட்ட தேடுதல் திட்டங்களுக்கமைய தொடர்ச்சியாக தேடுதல் பரிசோதனை நடாத்தப்படுகின்றது. இதற்கமைய செயற்பாட்டுப் பிரிவினால் 2017 ஆம் ஆண்டுக்குள் ரம் பரிசோதனைகள், பயண வழிப் பரிசோதனைகள், DCP மேற்பார்வைப் பணிகள், தலைமையகப் பரிசோதனை மற்றும் பயிற்சி வேலைத்திட்ட மேற்பார்வைகள் உட்பட ஏனைய பரிசோதனைகள் உள்ளடங்கலாக 106 கண்காணிப்புப் செயற்பாட்டாளர்களுக்காக நடாத்தப்பட்டது.

இப்பிரிவினால் சிறிலங்கன் எயார் லைன்ஸ் கம்பனி மற்றும் பிட்ஸ் (FITS) அவியேசன் கம்பனியின் விமானச் செயற்பாட்டாளர்களின் சான்றுப் பத்திரங்களை புதுப்பிக்கும் நோக்குடன் அதன் AOC கொண்டவர்களினால் ICAO தரம் மற்றும் பரிந்துரை செய்யப்பட்ட ஒப்பளவுகளுடன் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டுக் கோவைகள் / ஒழுங்கு விதிச் செயற்பாடுகளுடன் இணங்கிய அடிப்படையில் நடாத்தப்படும் மட்டத்தில் உறுதிப்படுத்துவதற்காக அவ்விரு கம்பனிகள் தொடர்பில் முழுமையான மேற்பார்வைக் கணக்காய்வுகள் நடாத்தப்பட்டன.

இப்பிரிவினால் ICAO உலகளாவிய பாதுகாப்பு மேற்பார்வை ஆய்வு வேலைத்திட்டம் (USOAP) பணிகளிலும் பங்கேற்றனர்.

2018 ஆம் ஆண்டில் நடாத்தவுள்ள கணக்காய்வினை எதிர்கொள்ளத் தயாராகும் வகையில் அவற்றை திருத்தியமைக்கும் செயற்பாடுகளை திட்டமிட்டு வகுக்க புறோட்டோ கோள் கேள்விகளுக்கு பதிலளிக்க மற்றும் இணங்க ஒப்பீட்டுப் பட்டியல்களை பூரணப்படுத்தல் போன்றவற்றை ஒப்பீடு செய்யக்கூடிய வகையில் மறுசீரமைப்புக்களை மேற்கொள்வதற்காக தற்போது அமுலில் உள்ள அமுல்படுத்தும் தரங்கள் உட்பட வழிகாட்டல் ஆவணங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன.



## விமானங்களைப் பதிவு செய்தல் மற்றும் விமானத் தகைமைப் பிரிவு



விமானத் தகைமைகளுக்குரியதான கோவைகள் தொடர்பில் பிரிவின் பரிசோதகர்களுக்கு பயிற்சியளித்தல், பராமரிப்பு ஒழுங்கு விதிமுறைகளை சான்றுப்படுத்தல் மற்றும் பாரமரிப்புப் பயிற்சி அமைப்புக்களை சான்றுப்படுத்தலுக்குரிய புதிய கோவைகள் மற்றும் அது சார்ந்த செயற்பாட்டுப் பணி ஒழுங்கு விதிமுறைகளை வெளியிடல் உட்பட தொடர்ச்சியான விமானத் தகைமை தேவையினை பூர்த்தி செய்தல் போன்ற பணிகள் காரணமாக 2017 ஆம் ஆண்டு இப்பிரிவிற்கு மிகவும் வேலைப்பழு கூடிய ஆண்டாக காணப்பட்டது.

**ANS** க்கு பதிலாக பயன்படுத்துவதற்காக உரிய செயற்பட்டு ஒழுங்குக் கோவை, விண்ணப்பப்படிவ மாதிரி, ஒப்பீட்டு பட்டியல், **CAASL** உத்தியோகத்தர்களுக்கு வழிகாட்டல்கள் மற்றும் கைத்தொழில் வழிகாட்டல்கள் கொண்ட புதிய அமுல்படுத்தும் தரம் வெளியிடப்பட்டது. விமானப் பராமரிப்பு ஒழுங்கமைப்புகளுக்குரியதாக **IS - 145** விமான பராமரிப்புப் பயிற்சி அமைப்புக்களுக்குரியதாக **IS - 147** விமானச் தொடர்ச்சியான விமானத் தகைமை தேவைகளை பூர்த்தி செய்வதற்குரியதாக **IS - N** உம் இலங்கைக்காக விமானத் தகைமைக் கோவை **IS - 21** உம் இவ்வாறு வெளியிடப்பட்ட அமுல்படுத்தும் தரங்களாகும்.

இவ் விரிவான அமுல்படுத்தல் தரம் **EASA** தரத்துடன் சீர்திருத்தப்பட்டுள்ளதுடன், இவை அனைத்தும் வெளியிடப்பட்டிருப்பது தெற்காசிய பிராந்திய மூல ஆரம்பம் (**SARI) (EU/SA** செயற்திட்டம்) இனால் வழங்கப்பட்ட உதவிகள் மற்றும் வழிகாட்டலின் அடிப்படையிலாகும். இலங்கையில் நடாத்தப்பட்ட பயிற்சி அமர்வுகள் மற்றும் அமுல்படுத்தும் செயலமர்வுகள் ஊடாக **SARI** நிபுனர்களினால் விரிவான அமுல்படுத்தல் தரங்களை வெளியிடும் போது பணியாளர் சபைக்கு உதவிகள் வழங்கப்பட்டன. புதிய **IS-M** மற்றும் **IS-147** அமுல்படுத்தும் தரங்கள் கைத்தொழிலுக்கு அறிமுகப்படுத்துவதற்காக கைத்தொழில் கருத்தரங்கு நடாத்தப்பட்டது. இதில் அனேகமானோர் கலந்து கொண்டனர்.

ஏற்கனவே புதிய ஒழுங்குக் கோவை, செயற்பாட்டு ஒழுங்கு விதிகள் மற்றும் கைத்தொழிலுக்கு வழிகாட்டல்களை தெரிவிக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமையினால் **IS - M, IS - 145** மற்றும் **IS - 147** எட்டும் போது உள்நாட்டு கைத்தொழிலும் அமுல்படுத்தப்படும் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுள்ள அமைப்புக்களை மீள உறுதிப்படுத்தும் செயற்பாடுகளை 2018 ஆம் ஆண்டின் திட்டங்களுக்கமைய முன்னெடுக்கப்படும்.

பாதுகாப்பு முகாமைத்துவம், தொடர்ச்சியான விமானத் தகைமை, பராமரிப்புப் பயிற்சி மத்திய நிலையங்களுக்கான தேவைகள், விமானப் பராமரிப்பு அமைப்பு மற்றும் நம்பகத்தன்மை உட்பட பராமரிப்பு வேலைத்திட்டங்கள்

போன்றவற்றிற்கு உரிய கோவைகள் பிரிவின் பரிசோதகர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதற்காக கோட்பாடு சார்ந்ததைப் போன்று சேவைக்கால பயிற்சிகளும் உள்ளங்கியுள்ளன. சிரேஷ்ட பரிசோதகர்கள் நேபாளத்தில் இடம்பெற்ற பிராந்திய அமுல்படுத்தும் செயற்திட்டத்தில் தொடர்ந்து விமானத் தகைமை நிபனர்களாக கலந்து கொண்டனர்.

03 புதிய சிவில் விமான சேவைப் பரிசோதகர்கள் (08) மாத காலம் பூராகவும் மத்தள விமான நிலையத்தின் பயிற்சி மத்திய நிலையத்தில் நடாத்தப்பட்ட விரிவான ஆரம்பப் பயிற்சி வேலைத்திட்டத்தில் கலந்து கொண்டனர்.

ICAO கணக்காய்வினை எதிர்கொள்ளத் தயாராகும் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஏற்கனவே பெரும்பான்மையான துறைகளின் தேவைகளின் இணக்கப்பாட்டு மட்டங்கள் காண்பிக்கப்பட்டுள்ள புதிய கோவைகளுக்கு ஏற்றவாறு விமானத் தகைமை அலுவலகக் கோவைகளை மீளத் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலமும் ICAO கணக்காய்வுகளுக்கு விடையளிக்க முடிகின்றது.

AWS பரிசோதகர்கள் ஐரோப்பாவில் A 320/ A 321 04 விமானங்களைப் பொறுப்பேற்கும் பணிகளில் ஈடுபட்டனர்.

AWS பரிசோதகர்கள் உரிய கோவைகள் தொடர்பில் நிபுனர்களாக மாற்றியமைக்கும் நோக்குடன் கனிஷ்ட பரிசோதகர்களுக்கு அவ்வவ் சிரேஷ்ட பரிசோதகர்களின் கீழ் கற்கைச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு வாய்ப்பினை வழங்கி AWS பரிசோதகர்களின் செயற்பாடுகளின் சீர்திருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டன. இவ் வேலைத்திட்டங்கள் காரணமாக விடய அறிவு சார்ந்த ஆளமான மற்றும் நிபுனத்துவம் தொடர்ந்தும் விருத்தியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

விமானத் தகைமைப் பிரிவு அது வருடாந்தம் அமுல்படுத்தும் திட்டம் மற்றும் வருடாந்தத் தேடுதல் திட்டங்களின் பணிகளை வெற்றிகரமாக நிறைவேற்றுகின்றது. கைத்தொழில் தொடர்பிலான தேடுதல் பணிகள், கணக்காய்வு மற்றும் ஏனைய துறைசார்ந்த உதவிப் பணிகள் வினைத்திறனுடன் மேற்கொள்ளப்பட்டன. மீளாய்விற்குட்படுத்தப்பட்ட கால எல்லைக்குள் பூர்த்தி செய்யப்பட்ட பணிகளின் நிலைமைகள் கிரமமாக விருத்தியடைந்துள்ளதாக மேற்பார்வை செய்ய முடியும்.



# கூட்டிணைந்த செயற்பாடுகள் மற்றும் பொருளாதார மேற்பார்வைப் பிரிவு

## விமானப் போக்குவரத்து மற்றும் பொருளாதார செயற்பாட்டுப் பிரிவு



### சர்வதேச விமானப் போக்குவரத்து சேவை கையாளுகைச் செயற்பாடுகள்

2017 ஆம் ஆண்டு நிறைவடையும் வேளையில் கீழ்க் குறிப்பிட்ட விமானப் போக்குவரத்து கம்பனிகள் 31 இலங்கையில் மற்றும் அதற்கு வெளியே சர்வதேச விமானப் போக்குவரத்து சேவைச் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது.

இலங்கை எயார் லைன்ஸ் கம்பனி 2017 ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி தொடக்கம் மெல்போன் வரை நாளாந்தம் விமான சேவை செயற்பாடுகளை ஆரம்பித்தது. 2017 ஆகஸ்ட் மாதத்தில் எயார் இந்தியா கம்பனி வாரனாசியிலிருந்து கொழும்பு வரை புதிய சேவையை ஆரம்பித்தது.

சர்வதேச விமானப் போக்குவரத்து கம்பனிகளினால் பயணிகள் போக்குவரத்துக்காக மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

### சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பு - விமான சேவை தொடர்பான மாநாடு (ICAN 2017)

விமானப் போக்குவரத்தது சேவைக்காக சர்வதேச மாநாடு சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பினால் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட மாநாட்டுக்கு இலங்கையினால் அனுசரனை வழங்கப் பட்டது. 2017 டிசம்பர் மாதம் 04 ஆம் திகதி தொடக்கம் 08 ஆம் திகதி வரை கொழும்பில் நடாத்தப்பட்டது. இம் மாநாட்டின் ஆரம்ப விழா பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் BMICH இல் நடாத்தப்பட்டதுடன் மாநாட்டு அமர்வு கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடாத்தப்பட்டது. 66 இராட்சியங்களின் சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கம் (IATA) மற்றும் விமான சேவையுடன் தொடர்புபட்ட மென்பொருள் வெளியீட்டுக் கம்பனியும் இம்மாநாட்டில் பங்கேற்றது. பற்கேற்றோரின் மொத்த எண்ணிக்கை 426 ஆகும். இராட்சியங்களுக்கிடையே விமான சேவைகள் தொடர்பில் வளர்ச்சியினை ஏற்படுத்துவதற்காக இம்மாநாடு சிறந்த சந்தர்ப்பமாகும். இம்மாநாடு இலங்கையின் சுற்றுலாக் கைத்தொழிலின் அபிவிருத்திக்கும் பெரும் உதவியாக அமைந்துள்ளது.

மிகவும் பிரபல்யமான பயணக் கேந்திர நிலையங்கள்.




உள்நாட்டு விமானப் போக்குவரத்துக் கம்பனியினால் பயணிகளை அழைத்துச் செல்லல்




இலங்கையுடன் தொடர்புபட்ட மிகவும் பிரபல்யமிக்க 10 பயணக் கேந்திர நிலையங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.




சா்வதேச விமானக் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட விமான சேவைகள் 2017




## ICAN விமான சேவைகள் தொடர்பாக 2017 ஆம் ஆண்டில் இலங்கையினால் நடாத்தப்பட்ட இரு தரப்புக் கலந்துரையாடல்கள்

ICAN 2017 இலங்கை விமான சேவைகள் தொடர்பில் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கிடையே நடாத்தப்பட்ட இருதரப்பு விமானப் போக்குவரத்து சேவை உடன்படிக்கை தொடர்பான கலந்துரையாடல்களின் போது இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை இலங்கையை




பிரதிநித்துவப்படுத்தி அங்கத்தவராக செயற்பட்டது. போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சின் செயலாளரின் தலைமையினால் இலங்கை பிரதிநிதிகளின் குழுவினர் வ/ப விமான நிலைய மற்றும் விமான சேவை (இலங்கை) கம்பனி, ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் கம்பனி, வெளிவிவகார அமைச்சு மற்றும் இலங்கையின் சட்டமா அதிபர் திணைக்களம் போன்ற ஏனைய பங்குடமை நிபுனர்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். இதன் போது இலங்கை இரு தரப்பு விமானப் போக்குவரத்து சேவை உடன்படிக்கை தொடர்பான 31 கலந்துரையாடல்களில் பங்கேற்றதுடன் 20 உடன்படிக்கைகள் தொடர்பில் இறுதித் தீர்மானங்களை எட்டமுடிந்தன இவற்றில் 07 உடன்படிக்கைகள் புதிய உடன்படிக்கைகளாகும். இந்த உடன்படிக்கைகள் தொடர்பாக தீர்மானங்கள் ஆப்கானிஸ்தான், பகமாஸ், சிலி குடியரசு, டொமினிகல் குடியரசு, கோலன்ட் குடியரசு, இந்தியா, இத்தாலி, கசகஸ்தான் குடியரசு, ஓமான், கட்டார் இராட்சியம், ரஷ்யா, சீசெல்ஸ், தென்னாபிரிக்கா, தன்சானியா, தாய்லாந்து, துருக்கி, ஐக்கிய அரபு எமிரேட் இராட்சியம், பெரிய பிருத்தானியா, வட அயர்லாந்து, அமெரிக்க ஐக்கிய இராட்சியம் மற்றும் சிம்பாவே இராட்சியங்களுக்கிடையே எட்டப்பட்டன.

## விமானப் போக்குவரத்து கம்பனி அனுமதிப்பத்திரம் மற்றும் வாடகைச் செயற்பாட்டு அனுமதிப்பத்திரம்

2016 ஆம் ஆண்டில் இலங்கையில் விமானப் போக்குவரத்துச் செயற்பாடுகளை மேற்கொண்ட



அனேகமான வெளிநாட்டு விமானப் போக்குவரத்து கம்பனிகள் 2017 ஆம் ஆண்டிலும் தொடச்சியாக இலங்கையில் அவர்களின் செயற்பாடுகளை மேற்கொண்டனர். இலங்கையில் பதிவு செய்யப்பட்ட 05 விமானப் போக்குவரத்துக் கம்பனிகள் விமானப் போக்குவரத்து கம்பனி அனுமதிப்பத்திரங்களை வழங்கியதுடன் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட விமான போக்குவரத்து கம்பனிகளுக்கு வாடகை அடிப்படையிலாக 11 செயற்பாட்டு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. வ/ப எப்-எயார் வேஸ், வ/ப பிளை சதேன் (தனியார் மற்றும் வ/ப சகுராய் அவியேசன் கம்பனிக்காக புதிதாக வாடகை செயற்பாட்டு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

## சுற்றுலாப் பிரதிநிதிகள்

சிவில் விமான சேவை அதிகார சபையின் **CAASL** இன் ஒழுங்குக் கோவைகளுக்கமைய இலங்கையிலுள்ள சகல சுற்றுலா முகவர்கள் மற்றும் ஏனைய விமானப் போக்குவரத்து சேவை திட்டமிடலாளர்கள் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையினால் வெளியிடப்பட்ட மற்றும் வருடாந்தம் புதுப்பிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

2017 ஆம் ஆண்டு இறுதியில் சிவில் விமான சேவை அதிகார சபை **(CAASL)** இனால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொண்ட 511 விமான சேவை வழங்குனர்கள் உள்ளனர். 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2017 ஆம் ஆண்டு இறுதியில் அமுல்படுத்தப்பட்டிருந்த சுற்றுலா முகவர் நிறுவனங்களின் எண்ணிக்கை கணிசமாக குறைவு ஏற்பட்டிருப்பதை காண முடிகின்றது. அனுமதிப்பத்தரத்தின் ஆரம்பத்தில் வெளியிடுவதற்காக அல்லது புதுப்பிப்பதற்காக கட்டாயமாக ஆரம்பத் தேவையாக வங்கிப் பிணை அவசியம் எனப் பணித்தல் இக்குறைவிற்கு பிரதான காரணம் என மேற்பார்வை செய்ய முடியும். இதற்கு மேலதிகமாக ஹஜ் - உம்ரா ஒரு சில செயற்பாட்டாளர்கள் முஸ்லிம் சமய விவகார திணைக்களத்தின் அவர்களின் கோட்டா கிடைக்காமையினால் அனுமதிப் பத்திரத்தை புதுப்பிக்கவில்லை. அனுமதிப்பத்திரதாரர்களின் பட்டியல் சிவில் விமான சேவை அதிகார சபையின் **(CAASL)** இணையத்தளத்தில் மாதாந்தம் சமகாலப்படுத்தப்படுகின்றது. சுற்றுலா முகவர் நிறுவனங்களுக்காக அனுமதிப்பத்திரங்களை வழங்கும் செயற்பாடுகளை விருத்தி செய்வதற்காக விமானப் போக்குவரத்து மற்றும் பொருளாதார மேற்பார்வைக் கிளையினால் 45 மதிப்பீட்டுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. சுற்றுலா முகவர் நிறுவனங்களின் எதிர்பார்க்கப்பட்ட முகாமைத்துவ குழு அங்கத்தவர்களுக்கு போட்டிகரமான சந்தையின் முன்னேற்றங்களுடன் ஒப்பீடு செய்யும் வகையில் அவர்களின் வர்த்தகத்தை விருத்தி செய்யும் முறைகள் தொடர்பாகவும் பொதுமக்களுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளக்கூடிய முறை தொடர்பாகவும் கற்பிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சுற்றுலா முகவர்களுக்காக பிரவேச அனுமதிப்பத்திரங்களை ஒதுக்கும் செயற்பாடுகள் முழுமையாக மேற்கொள்ளப்படுவது உலகளாவிய பகிர்வு முறையினை **(GDS)** ஊடாக உலகளாவிய பகிர்வு முறைமைக்கு எமடுவஸ், சப்ரே (அபெக்ஸ்) கலிலியோ மற்றும் வெல்ட்ஸ்பேன் நிறுவனங்களும் அடங்குகின்றன. விமானப் போக்குவரத்து விநியோகஸ்தர்கள் (பயணிகள்) அனுமதிப்பத்திரத்தை பெற்றிருப்பதன் இணைப்புக்களை பொறுவதற்கான அடிப்படைத் தேவையாக பணிப்பதற்கும் இப்பிரிவிற்கு முடிந்துள்ளது. இம்முறைமையின் உதவியுடன் அனுமதிப்பத்திரம் பெறாத முகவர்களை வெற்றிகரமாக அகற்றுவதற்காக இப்பிரிவு அதன் தேடுதல் வேலைத்திட்டங்களை தொடர்ந்தும் அமுல்படுத்தியது.

## ஆசனங்களை ஒதுக்குதல் மற்றும் கட்டணங்களை கணிப்பீடு செய்யும் பாடநெறி

மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் 12 வது ஆசன ஒதுக்கீடு மற்றும் கட்டணங்களை கணிப்பீடு செய்யும் பாடநெறியினை வெற்றிகரமான பூர்த்தி செய்ததுடன் 10 மாணவர்கள் அதனை வெற்றிகரமாக தொடர்ந்து பூர்த்தி செய்தனர். 2009 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பாடநெறி மூலம் இதுவரையில் 149 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். இவ்வாறு சித்தியடைந்த மாணவர்களில் கூடுதலானோர் மிக முக்கிய சுற்றுலா முகவர் நிறுவனங்களில் சேவையாற்றுவதுடன் ஒரு சிலர் வெளிநாடுகளுக்கு தொழில் வாய்ப்பு பெற்றுச் சென்றுள்ளனர்.

## வாடிக்கையாளர் முறைப்பாடுகளுக்காக தீர்வுகளை வழங்குதல்.

**AT** மற்றும் **ER** பிரிவுகளுக்கு மொத்தமான 52 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. விமானக் கம்பனிகள் / சுற்றுலா முகவர் நிறுவனங்களுக்கு எதிராக கிடைக்கப் பெற்ற கூடுதலான முறைப்பாடுகள் தொழில்சார் அடிப்படையில் தீர்க்கப்பட்டதுடன் இச் செயற்பாடுகளுக்காக உரிய கைத்தொழில்துறையின் தரப்பினர்களை போன்று பொதுமக்களிடமிருந்தும் திருப்திகரமான வரவேற்புக்கள் கிடைக்கப்பெற்றன.

## சுலொட் இணைப்புக்கள்

சுலொட் குழுவின் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பளவுகளுக்கமைய 2017 ஆம் ஆண்டு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தவணைகள் ஒதுக்கப்பட்டன. 2017 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்த ஓடுபாதை மேற்பரப்பினை மீள் நிர்மானிக்கும் வேலைத்திட்டங்கள் காரணமாக விசேட தவணைக் குழு கூட்டங்கள் கூட்டப்பட்டன. உரிய தளக் கட்டடத்தின் கொள்ளளவு வரையறுக்கப்பட்டிருந்தமையினால் உரிய மணித்தியாலத்தில் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் **BIA** இடவசதிகளை வழங்கக்கூடிய வகையில் வருகை **(Arrivals)** 10 க்கும் வெளியேறல் **(Dipartures)** 12 க்கும் இடைப்பட்டதாகும் கீழ்க் குறிப்பிடப்பட்ட வரையின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளவாறு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கூடுதலான வேலைப்பழு கொண்ட மணித்திலாயங்கள் மேற்பார்வை செய்யப்பட்டுள்ளளன.







## ஓடுபாதை மூடப்பட்ட காலத்திற்குரிய செயற்பாடுகள்

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஓடுபாதையின் மேற்பரப்பு மீள புணரமைக்கப்பட்டமையினால் 2017 ஜனவரி மாதம் தொடக்கம் ஏப்ரல் மாதம் வரை நாளாந்தம் பகல் நேரத்திற்குள் 8.30 - 16.30 வரை 08 மணித்தியாலங்கள் விமான நிலையத்தை மூட வேண்டி ஏற்பட்டது. விமானப் போக்குவரத்து மற்றும் பொருளாளர் மேற்பார்வைக்குரிய ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் கம்பனியின் உப ஆவணப்படுத்தப்பட்ட திட்டமிடல் பிரிவு மற்றும் ஏனைய கம்பனி **(SLOTS)** மற்றும் குழு அங்கத்தவர்களுடன் இணைந்து விமானப் போக்குவரத்து கம்பனிகளுக்கு முதலில் ஒதுக்கப்பட்டிருந்த தவணை **(SLOTS)** மாற்றியமைத்து மீள ஒதுக்கும் முறைகள் வகுக்கப்பட்டன. விமான பயணத் தடவைகள் இவ்வாறு மீள ஒதுக்கப்பட்டமையினால் சகல செயற்பாடுகளும் மாலை நேரத்தில் மற்றும் இரவு நேரத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது. ஓடுபாதை இவ்வாறு மூடப்பட்ட கால எல்லைக்குள் இரத்துச் செய்ய வேண்டி ஏற்பட்டது மிகக் குறைந்த அளவு விமான சேவைகள் மாத்திரமாகும். ஓடுபாதையின் மேற்பரப்பினை மீள அமைக்கும்

பணிகளுக்கு சிறந்த முறையில் முகாமைத்துவச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக இக்குழு மற்றும் பங்காளர்களுக்கிடையே பல கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

### விமானப் போக்குவரத்துக் கைத்தொழிலாளர்களின் பங்காளர்கள் / வர்த்தகத் திணைக்களத்துடனான கூட்டங்கள்

இப் பிரிவு, அமைச்சு, விமானப் போக்குவரத்து கம்பனியின் முகவர் சபை (BAR) விமானப் போக்குவரத்து கம்பனியின் முகவர்களின் இலங்கை சங்கமாகும். இலங்கை சுற்றுலா முகவர் சங்கம், IATA வர்த்தக சபை மற்றும் வர்த்தகத் திணைக்களம் போன்ற அரச திணைக்களத்துடன் நாளாந்தம் கூட்டங்கள் நடாத்தப்பட்டன. விமானப் போக்குவரத்து கைத்தொழிலின் சாதகமான வளர்ச்சியே இக்கூட்டங்களின் நோக்கமாக அமைந்தன.

### வெளிநாட்டு ஊழியர்களுக்காக வீசா பரிந்துரை

உள்நாட்டு விமான சேவை அமைப்பினால் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள வெளிநாட்டு தொழில்நுட்ப ஊழியர்களை போன்று தொழில்நுட்பமல்லாத ஊழியர்களுக்கு இலங்கையில் தங்கி தொழில்வாய்ப்புக்களில் ஈடுபடுவதற்காக குடியழ்வு கட்டுப்பாட்டாளருக்கு பரிந்துரை ஆவணங்களை அனுப்பும் செயற்பாடுகள் சிவில் சிமான சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் 2017 மே மாதம் தொடக்கம் இப்பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தது. இதற்கமைய 2017 ஆம் ஆண்டில் இப்பிரிவினால் பரிந்துரை செய்யப்பட்ட 96 ஆவணங்கள் வெளியிடப்பட்டதுடன் இதில் 32 தொழில்நுட்பத் தொழில் வாய்ப்புக்களுக்காக வழங்கப்பட்டுள்ளன.

### தள உதவியாளர் சேவை வழங்குனர்கள்

இலங்கை சிவில் விமான நிலைத்திற்குள் வர்த்தக ரீதியிலான ஜெட் விமான செயற்பாட்டாளர்களுக்கு, தனிப்பட்ட ஜெட் விமானச் செயற்பாட்டாளர்கள் மற்றும் கழியாட்ட செயற்பாட்டாளர்களுக்கு உதவுவதற்காக தள உதவி சேவை வழங்குனர்களின் தேவைகள் இனங்காணப்பட்டுள்ளன. இவ்வாறான சேவை வழங்குனர்களினால் பின்பற்ற வேண்டிய ஒழுங்குக் கோவைகளின் தேவைகள் தொடர்பில் அறிமுகப்படுத்தப்பட்ட கட்டளை 2017 ஆம் ஆண்டின் சிவில் விமான சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் விமானப் போக்குவரத்து மற்றும் பொருளாதார மேற்பார்வைப் பிரிவு ஊடாக வழங்கப்பட்டது. ஆண்டு இறுதியில் BIA நிலையத்தில் மற்றும் ஏனைய விமானங்களில் உதவி சேவைகளை வழங்கும் 04 சேவை வழங்குனர்கள் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை CAASL இல் பதிவு செய்தனர்.

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் இறுதி நோக்கமாக அமைந்தது சிவில் விமான சேவைக் கைத்தொழிலை விருத்தி செய்ய உதவும் வகையின் தள உதவியாளர் சேவை வழங்குனர்களை துரிதகதியில் எதிர்காலத்தில் நிலையான அடிப்படைச் செயற்பாட்டாளர்கள் (Fixed Based Operator) மட்டத்திற்கு விருத்தி செய்வதாகும்.



## மானிட வள மற்றும் அலுவலக முகாமைத்துவப் பிரிவு



அவ்வவ் தேவைகளுக்கு ஏற்றவாறான நோக்கங்கள், செயற்பாட்டு ஒழுங்கு விதிகள், தகைமைகள், வறையறைகள் மற்றும் விடுவிப்புக்கள் (எவையேனும் இருப்பின்) அது தொடர்பில் விரிவான விளக்கம் கொண்ட மானிட வளக் கொள்கை சிவில் விமான சேவை அதிகார சபையில் உள்ளனர். பணியாளர் சபை சட்ட ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் நிருவாக செயற்பாட்டு ஒழுங்கு விதிக் கோவையின் (SLCAP 5000) இவை அனைத்தும் வழிகாட்டலாக குறிப்பிடப்பட்டுள்ளன. அதிகார சபையின் முன்னணித் தேவையினை எட்டுவதற்காக தாபிக்கப்பட்டுள்ள நோக்கங்கள், இலக்குகள் மற்றும் எதிர்பார்ப்புக்களை நிவர்த்தி செய்வதற்காக அனைவரும் ஒன்றாக இணைந்து செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்காக மானிடவள மற்றும் அலுவலக முகாமைத்துவப் பிரிவு சகல சந்தர்ப்பங்களிலும் நிலையாக மற்றும் மாற்றமின்றி செயற்பட்டுள்ளது.

### அமைப்பின் மறுசீரமைப்புக்கள் மற்றும் பணியாளர் சபை

பிரதானமாக பிரபல மற்றும் நம்பகத் தன்மைமிக்க விமான சேவைப் பாதுகாப்பு முன்னோடியாக மாற்றமடையும் நோக்கினை அடிப்படையாகக் கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை CAASL இல் சிறந்த முறையில் வெளியிடப்பட்ட திட்டமிட்ட ஆட்சேர்ப்பு செயற்பாடுகள் மூலம் CAASL இன் சேவைக்கு சேரும் சகல ஊழிர்களுக்கும் அவர்கள் எதிர்பார்க்கும் பெறுபேறுகள் தொடர்பிலும் சிறந்த இயலுமைகளை உயரிய மட்டத்தில் பெற்றுக் கொள்வதற்காக அவர்களுக்காக அமுல்படுத்தப்படும் முறைகள் தொடர்பில், ஒழுங்கு முறைகள் தொடர்பிலும் தெளிவான விளக்கம் இருப்பதாக உறுதிப்படுத்தப்படுகின்றது.

மறுசீரமைக்கப்பட்ட ஒழுங்கமைப்புக் கட்டமைப்பிற்கமைய வெற்றிடப் பதவிகளுக்காக ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன் இதற்கமைய 2017 இறுதியில் முழுமையான பணியாளர் சபை 172 ஆக மாற்றம் பெற்றுள்ளது. 2017 ஆம் ஆண்டுக்குள் 36 ஊழியர்கள் புதிதாக சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இலங்கை சிவில் விமான சேவை அதகார சபைக்கு இந்தளவு கூடுதலான நிறைவேற்று உத்தியோகத்தர்கள் ஒரே தடவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டது இதுவே முதற் தடவையாகும்.

படக்குறிப்பு - 01 இல் காண்பிக்கப்பட்டுள்ளவாறு 2016 ஆம் ஆண்டு இறுதியளவில் பணியாளர் சபையில் உள்ளடங்காத சிரேஷ்ட முகாமையாளர் சபைக்குரியதாக 03 உத்தியோகத்தர்களும் சிரேஷ்ட முகாமைத்துவ வகையில அடங்கும் 08 உத்தியோகத்தர்களும் முகாமைத்துவ பிரிவிற்குரிய 23 உத்தியோகத்தர்களும் உள்ளனர். அமுலில் உள்ள புள்ளிவிபர எண்ணிக்கைக்கமைய 44 உத்தியோகத்தர்களை வலுவூட்டல் / செயற்படுத்தல் / நீடிக்கும் வகையின் கீழ் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். 02 உத்தியோகத்தர்கள் கனிஷ்ட முகாமைத்துவ வகையின் கீழ் உள்ளடங்குகின்றனர். முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம்) 04 உத்தியோகத்தர்களுக்கும் தொழில்நுட்பமல்லாத முகாமைத்துவ உதவியாளர் 51 உத்தியோகத்தர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஆரம்ப மட்ட (பயிற்சி)




படம் 01

மற்றும் ஆரம்ப மட்ட பயிற்சியளிக்காத வகையில் 17 உத்தியோகத்தர்கள் வீதமும் உள்ளனர்.

மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையில் தொழிலை விட்டுச் சென்றோரின் அளவு (**turnover rate**) 1.74% மாகும். மிகக்குறைவான தொழிலை விட்டு சென்றோர் எண்ணிக்கை காணப்படுவதுடன் அற்பணிப்புடன் பணியாற்றும் உத்தியோகத்தர்களை ஊக்குவித்து சிறந்த ஊழியர்களை உருவாக்குவது இலங்கை சிவில் விமான சேவையின் உற்பத்தித்திறனின் அதிசிறந்த மானிட வளமாகக் காணப்படுகின்றது.

## ஊழியர் நலன்புரி

பணியாளர் சபை அங்கத்தவர் எண்ணிக்கையின் அதிகரிப்பு தொடர்பில் கருத்திற் கொள்ளாது இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை 2017 ஆம் ஆண்டிலும் நிறுவனத்தின் ஊழியர்களுக்கு விரிவான அடிப்படையில் நலன்புரி சேவைகள் தொடர்ச்சியாக வழங்கப்பட்டன. இவ்வாறு வழங்கப்பட்ட நலன்புரி வசதிகள் வேலைத்திட்டம் படம் 02 இல் காண்பிக்கப்பட்டுள்ளது. அதிகார சபையினால் பிரதானமாக கவனத்தில் கொள்ள வேண்டிய ஊழியர்களின் நலனுக்காக இந்த நலன்புரி வசதிகள் அத்தியாவசியமாகும்.

அதிகார சபையின் ஊழியர்களுக்கு மற்றும் அவர்களின் அண்மித்த குடும்பத்தினருக்கு கூடுதலாக பயன்களை வழங்கக்கூடிய வகையிலான நலன்புரி வசதியாக இதன் வைத்தியக் காப்புறுதி திட்டம் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்பட்டன.

2017 ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையான காப்புறுதித் தழுவல் கால எல்லைக்குள் வெளியாளர் சிகிக்சைப் பிரிவின் கீழ் கிடைக்கப் பெற்ற 2121 விண்ணப்பப்படிவங்களுக்காக ரூபா 5,206,741 ரூபா பிரதிலாபமாக செலுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக இக்கால எல்லைக்குள் ஊழியர்களுக்கு வைத்தியக் காப்புறுதி வசதிகளும் வழங்கப்பட்டன.

காப்புறுதிக் கம்பனியினால் சேவைகளை பெற்றுக் கொள்வது தொடர்பில் வெளியிடப்பட்ட அரசாங்கத்தின் சுற்றறிக்கையினை பின்பற்றி பிபள்ஸ் இன்சுரன்ஸ் **PLC** கம்பனியுடன் விபத்துக் காப்புறுதி சார்ந்த (**Policy**) புதுப்பிக்கப்பட்டன. ஒரு சில சந்தர்ப்பங்களில் அவர்களின் சுகாதாரத்திற்கு, பாதுகாப்புக்கு மற்றும் தற்காப்புக்கு பாதிப்புமிக்க நிலைமைகளை எதிர்கொள்ள வேண்டி




படம் 02

ஏற்படக்கூடிய பரிசோதகர்களுக்காக விசேட தழுவல்கள் இக்காப்புறுதிச் சான்றிதழில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பட இலக்கம் 03 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதிகார சபையினால் தாபிக்கப்பட்ட பணியாளர் சபை கடன் யோசனைத் திட்டத்தின் மூலம் பணியாளர் சபை அங்கத்தவர்களுக்கு கணிசமான நிதி உதவிகள் வழங்கப்பட்டன. மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் 40 க்கு மேற்பட்ட பணியாளர்களுக்கு கடன் யோசனைத் திட்டத்தின் கீழ் கடன் உதவிகள் வழங்கப்பட்டன.

2017 ஆம் ஆண்டில் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை **CAASL** 42 ஊழியர்களுக்கு இடர் கடனாக 10,911,090 ரூபா நிதி செலுத்தியிருந்தது. இதற்கு மேலதிகமாக மோட்டார் வாகனத்தைக் கொள்வனவு செய்வதற்காக கடன் நிதியாக ரூபா 4,287,176 உம், இரண்டு ஊழியர்களுக்கு மோட்டார் சைக்கிள்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா **575,500** செலுத்தப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக துவிச்சக்கரவண்டிகளை கொள்வனவு செய்வதற்காக கடனாக ரூபா 40,000 செலுத்தி அதிகார சபையின் இரு ஊழியர்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன.




படம் 03

அதிகார சபையின் உதவியுடன் ஊழியர்கள் மூலம் நிதித் தேவையினை நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் அதிகார சபையினால் சொத்துக் கடன் யோசனைத் திட்டம் தாபிக்கப்பட்டுள்ளது. இச் சொத்துக் கடன் யோசனைத் திட்டத்தின் கீழ் பணியாளர் சபையின் இரு அங்கத்தவர்களுக்கு சொத்துக் கடனாக ரூபா 6,273,944 நிதி செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வாண்டில் பணியாளர் சபையின் 98 அங்கத்தவர்களுக்கு பண்டிகை முற்பணமாக ரூபா 1,470,000 நிதி செலுத்தப்பட்டிருந்தது.

இதன் அடிப்படை நலன்புரி வசதிகளுக்கு மேலதிகமாக பணியாளர் சபைக்காக மேலும் நலன்புரி வசதிகளை வழங்கும் வகையில் வீரவில பங்களாவை ஒதுக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் பணியாளர் சபையினால் வீரவில பங்களா பயன்படுத்தப்பட்ட முறை படக்குறிப்பு 04 இல் குறிப்பிட்ட நாட்கள் எண்ணிக்கையினை அடிப்படையாகக் கொண்டு காண்பிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட நலன்புரி வசதிகளின் அளவினைத் தொடர்ந்தும் விரிவுபடுத்தி இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் 2017 ஆம் ஆண்டு அதன் பணியாளர் சபைக்கு மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு புகையிரத அனுமதிப்பத்திரத்தை வழங்கும் பணிகளையும் ஆரம்பித்தது. மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் பணியாளர் சபை அங்கத்தவர்களுக்கு புகையிர அனுமதிப் பத்திரங்கள் (**Railway Warrauts**) 30 வழங்கப்பட்டுள்ளது.

## பயிற்சிப் பாடநெறி, கருத்தரங்கு, செயலமர்வு, கூட்டங்கள் மற்றும் சம்மேளனங்கள்

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் ஊழியர்களுக்கு எதிர்கால வெற்றிக்காக தேவையான தேர்ச்சி மற்றும் அறிவினை விருத்தி செய்வதனை உறுதிப்படுத்துவதற்காகவும் அதன் மூலம் எதிர்கால




படம் 04

நோக்கினை வலுவூட்டி திறன்மிக்க ஊழியர் அணியினை அணி திரட்டுவதற்காகவும் அதிகார சபையின் மானிட வள விருத்திக்கான முதலீடுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றன. ஊழியர்களின் திறமைகளை விருத்தி செய்தல் மற்றும் அவர்களை சிறந்த முறையில் சேவையில் ஈடுபடுத்த எதிர்பார்ப்பதுடன் திட்டமிடப்பட்ட செயற்பாடுகளுக் கமைய 2017 ஆம் ஆண்டு இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் பயிற்சி வேலைத்திட்டத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிப் பாடநெறிகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளும் அடங்குகின்றன. இதற்கு மேலதிகமாக CAASL இன் பணியாளர் சபையின் அங்கத்தவர்கள் அதிகார சபையைப் போன்று நாட்டையும் பிரதிநிதித்துவப் படுத்துவதற்காக பல்வேறுபட்ட கூட்டங்கள், கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் போன்றவற்றிலும் பங்கேற்கச் செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

சிவில் விமான சேவை அதிகார சபையின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காகத் தேவையான தனிப்பட்ட பயிற்சிகள் மற்றும் அபிவிருத்திகள் தொடர்பில் காணப்படும் தடைகள் மற்றும் எல்லை விதிப்புகளுக்கு மத்தியில் 2017 ஆம் ஆண்டுக்குள் சிவில் விமான சேவை அதிகார சபையின் மானிட வள அபிவிருத்திக்காக ரூபா. 32,133 நிதி செலவிடப்பட்டுள்ளது.

முகாமைத்துவத்திலிருந்து பெறப்பட்ட ஊக்குவிப்புக்கள் காரணமாக பயிற்சிக்கான வாய்ப்புக்களை வழங்கும் கொள்ளளவு விருத்தி அடைந்துள்ளமையினால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2017 ஆம் ஆண்டில் பெறப்பட்டுள்ள பயிற்சி வாய்ப்புக்களின் எண்ணிக்கை 39% தினால் அதிகரித்துள்ளதாக புள்ளிவிபரங்களுக்கமைய காணமுடிகின்றது.

விமான சேவைக் கைத்தொழிலின் கணித ரீதியிலான செயற்பாட்டுத் தன்மைகள் காரணமாக அங்கு தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு மிகவும் சமகாலப்படுத்தப்பட்ட திறமைகள் உட்பட தேர்ச்சிகளை எட்டும் சவாலை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டுள்ளது. இதனால் நவீன முன்னேற்றங்கள் தொடர்பான சமகாலப்படுத்தப்பட்ட அறிவினை வழங்குவதற்காக பணியாளர் சபையின் 140 அங்கத்தவர்களுக்காக 18 வெளிநாட்டு பயிற்சிகளுக்கான வாய்ப்புக்கள் மற்றும் 32 உள்நாட்டுப் பயிற்சிகள் 2017 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது.

அத்துடன் பணியாளர் சபையின் 43 அங்கத்தவர்களுக்கு உள்நாட்டை போன்று வெளிநாட்டுக் கூட்டங்கள், சம்மேளனங்கள் உட்பட 44 கலந்துரையாடல் மாநாடுகளில் பங்கேற்பதற்காக வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

சிவில் விமான சேவை அதிகார சபைக்கு புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட உதவி முகாமையாளர்கள் மற்றும் சிவில் விமான சேவை பரிசோதகர்கள் குழுவிற்காக 4,516,434 ரூபா செலவில் மத்தள சிவில் விமான சேவை வளாகத்தில் விமான சேவை நிறைவேற்றுப் பாடநெறி விசேடமாக நடாத்தப்பட்டது. தொடர்ந்தும் 10 மாதங்களாக இடம்பெற்ற இப்பாடநெறியின் போது விமான சேவையுடன் தொடர்புபட்ட பல்வேறுபட்ட 40 பாடங்கள் தழுவப்பட்டன. இப்பயிற்சிப் பாடநெறியின் முன்னனி நோக்கமாக அமைந்திருப்பது பயிற்சி பெறுவோருக்கு எதிர்காலத்தில் அவர்களின் உரிய செயற்பாட்டுத் துறையின் சவால்களை நம்பிக்கையுடன் எதிர்கொள்வதாகும்.

சவால்களை எதிர்கொள்ளக்கூடிய இயலுமைகளை விருத்தி செய்யும் நோக்குடன் அவர்களின் விமான சேவை அறிவிற்கு பலம்மிக்க அடிப்படையினை வழங்குவதாகும்.

பணியாளர் சபையின் பொதுப் பயிற்சித் தேவைகளை இனங்கண்டு முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பமல்லாத வகையின் உத்தியோகத்தர்களுக்காக 1,484,000 ரூபா செலவில் பயிற்சி வேலைத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இவ் விசேட பயிற்சியின் தேவையாக அமைந்தது அவ் உத்தியோகத்தர்களின் சிங்களம் மற்றும் ஆங்கில தட்டெழுத்து (Typing) இயலுமையினை விருத்தி செய்தாகும்.

## தொழில்நுட்ப நூலகம்

அறிவினைத் தேடுவோரின் மத்திய நிலையமான தொழில்நுட்ப நூலகம் சமகாலப்படுத்தப்பட்ட விமான சேவை ஒழுங்குக் கோவை உட்பட உலகளாவிய விமான




படம் 05






படம் 06

சேவைக் கைத்தொழில் தொடர்பான பல முன்னேற்ற தகவல்களையும் வழங்குகின்றது.

மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டு பூராகவும் 201 வெளிநபர்களுக்காக தொழில்நுட்ப நூலகத்தினால் வழங்கப்படும் வசதிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. 2017 ஆம் ஆண்டில் நூலகத்திற்கு புதிய மொடியுள்களை கொள்வனவு செய்வதற்கான 80,399 ரூபா நிதி செலவிடப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக சமகாலப்படுத்தப்பட்ட வெளியீடுகள் உட்பட நூலகப் புத்தகங்கள் பணியாளர் சபைக்கிடையே இலகுவில் விநியோகிப்பதற்காக பிரதான தொழில்நுட்ப நூலகத்தினால் துறைசார்ந்த (Sectional) நூலகமும் தொடர்ந்தும் நடாத்தி செல்வதற்காகவும் தொடச்சியான உரிய பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

## CAASL இணையத்தளம்

CAASL இணையத்தளம் பொது மக்களுக்கிடையே தகவல்களை பகிர்வதற்காக அத்தியாவசிய ஊடகமாகும். இலகுவில் பிரவேசிப்பதனால் விரிவான பரம்பலில் தகவல்களை பெற்றுக் கொள்ள முடிகின்றமையினாலும் இணையத்தளத்தை பயன்படுத்தியோரின் எண்ணிக்கை 26% தினால் அதிகரிப்பு பதிவாகியிருந்தது. சிவில் விமான சேவைக்குரிய தகவல் மத்திய நிலையத்தின் மூலம் பொது மக்களிற்கிடையே காணப்படும் ஆர்வத்தினைக் காண்பித்து 2017 ஆம் ஆண்டில் 129,832 பேர்களினால் CAASL இணையத்தளம் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது முன்னைய ஆண்டை விட 31% அதிகிரிப்பாகும். கொழும்பில் நடாத்தப்பட்ட மாநாடு தொடர்பான தகவல்களை வழங்குவதற்காக இணையத்தளம் சமகாலப்படுத்தப்பட்டதுடன் அத்தேவையினையும் கருத்திற்கொண்டு மீள் கட்டமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

## CAASL கூட்டிணைந்த திட்டங்கள் மற்றும் அமுல்படுத்தப்பட்ட வேலைத்திட்ட ங்கள்

CAASL இன் ஒவ்வொரு கிளைகளுக்காகவும் அறிமுகப்படுத்தப்பட்ட முன்னணி மற்றும் இலக்குக் கொண்ட வருடாந்தம் அமுல்படுத்தும் வேலைத்திட்டத்தின் மூலம் தீர்மானிக்கப்படுகின்றது. அதன் CAASL இலக்கு, நோக்கு மற்றும் எதிர்காலத்திற்காக உரிய செயற்பாட்டுப் பணிகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. வியூகங்கள், முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாட்டுப் பணிகள் உட்பட அவ்வவ் பிரிவுகளும் காண்பிக்கப்பட்டுள்ளன. மூலஉபாயம், மிக முக்கியத்துவம் வாய்ந்த பணிகள் உட்பட அவ்வவ் பணிகளுக்குரிய செயற்பாடுகள் முடிவுறுத்த வேண்டிய கால எல்லையையும் விசேடமாக காண்பித்து 2017 ஆம் ஆண்டுக்கான வருடாந்த வேலைத்திட்டங்கள் வகுக்கப்பட்டன. இது எவ்வாறாக இருப்பினும் மறுசீரமைக்கப்பட்ட ஒழுங்கமைப்புக் கட்டமைப்பிற்கு ஏற்றவாறு ஒருசில முக்கியத்துவம் வாய்ந்த பணிகளை மறுசீரமைக்க வேண்டி ஏற்பட்டது.

## அலுவலக பராமரிப்பிற்குரிய பணிகள்

மானிட வள மற்றும் அலுவலக முகாமைத்துவக் கிளையின் அலுவலக முகாமைத்துவப் பிரிவு வினைத்திறன் மிக்கதாக மற்றும் பயன்மிக்கதாக அலுவலக வசதிகளை முகாமைத்துவத்திற்கு உட்படுத்துவதன் மூலம் அதிகார சபையின் அடிப்படை நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பங்களிப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன. இப்பிரிவினால் மேற்கொள்ளப்படும் சேவைகளை தொடர்ச்சியான செயற்பாடுகளாக முன்னெடுக்கக்கூடிய முறைகள் இச் சேவைகள் தொடர்பான தடையில்லாத பக்கத்தோற்றங்கள் ஏனைய கிளைகளினால் வழங்கப்படுகின்றன.

உத்தேச கட்டுநாயக்க தலைமையக கட்டடத்தை நிர்மானிக்கும் பணிகள் நிறைவு செய்யப்படாமையினால் மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் சிவில் விமான சேவை அதிகார சபைக்கு குத்தகைக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டடத்தில் அதன் பிரதான அலுவலகத்தை நடாத்திச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டது. இது எவ்வாறாக இருப்பினும் பிரதான அலுவலகம் புதிய தலைமையகக் கட்டடத்திற்கு கொண்டு செல்வதற்காக தேவையான அடிப்படைப் பணிகள் மற்றும் பெறுகைச் செயற்பாட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சுத்திகரிப்புச் செயற்பாடுகள், பாதுகாப்பு மற்றும் தொலைத்தொடர்பு செயற்பாடுகள் உள்ளிட்ட அனேகமான சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக ஏற்கனவே விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன.

DI பில்டிங் மெய்ன்டனல்ஸ் தனியார் கம்பனி இவ்வாண்டுக்குள் சிவில் விமான சேவை அதிகார சபைக்காக சுத்திகரிப்பு சேவைகளை வழங்கியது. இதற்காக மாதாந்தக் கட்டணம் ரூபா 145,680 (வரி

தவிர) செலுத்தப்பட்டது. இக்கம்பனியின் சேவைகளை மேற்பார்வை செய்வதற்காக பொருத்தமான செயற்பாட்டுப் பொறிமுறை வகுக்கப்பட்டது.

பாதுகாப்பு சேவையினை பெற்றுக் கொள்வதற்காக சிவில் விமான சேவை அதிகார சபை மற்றும் வ/ப SD எய்ஜன்சிஸ் தனியார் கம்பனிக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை 2017 ஆம் ஆண்டுக்காக புதுப்பிக்கப்பட்டது. பிரதான அலுவலகத்திற்காக செலுத்தப்பட்ட பொதுவான மாதாந்தக் கட்டணம் 195,500 ரூபா (குத்தகை வரி தவிர) என்பதுடன் மத்தள அலுவலகக் கட்டடத்திற்காக செலுத்தப்பட்ட பொதுவான மாதாந்தக் கட்டணம் ரூபா. 70,496 (வரி தவிர) செலுத்தப்பட்டது.

மத்தள ஊயுயு அலுவலகம் மற்றும் வீரவில விடுமுறை பங்களாவின் பராமரிப்புப் பணிகள் உரிய காலத்தில் உரியவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாளாந்தப் பணிகளை தடைகள் இன்றி அல்லது எதுவித பாதிப்புக்களும் இன்றி மேற்கொள்ளக்கூடிய முறை, எதிர்பாராத தடைகள் தொடர்பிலும் தாமதமின்றி செயற்பட்டு வழமைநிலைக்கு மாற்றியமைக்கப்பட்டது. மீளாய்விற்குட்படுத்தப்பட்ட ஆண்டுக்குள் கட்டுநாயக்க அலுவலகத்தில் தங்குமிட விடுதியினை புணரமைப்பதற்காக தேவையான பெறுகைச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேற்கூறப்பட்ட பிரதான செலவினங்களுக்கு மேலதிகமாக CAA பிரதான அலுவலக சுற்றுச் சூழலைப் பேணுவதற்காக தேவையான பல்வேறுபட்ட பராமரிப்புப் பணிகளுக்கென ரூபா 408,287 நிதி செலவிடப்பட்டுள்ளது.

## ஊழியர்கள் பெற்றுள்ள விடுமுறை

2017 ஆம் ஆண்டிலும் ஊழியர்களுக்கு அலுவலகத்திற்கு வருகைதரும் போது இடையில் எதிர்கொள்ளக்கூடிய சிரமங்கள் காரணமாக அனுமதி வழங்கப்பட்டுள்ள சலுகைக் காலத்தை தவிர அவர்கள் தாமதித்து சமூகமளித்தல் மற்றும் குறுகிய விடுமுறை அறிக்கைகள் மேற்பார்வைக்குட்படுத்தப்பட்டன. பெற்றுக் கொள்ளப்படாத விடுமுறைகளை நிதியாக மாற்றியமைக்கும் உரிமை போன்ற ஊழியர்களை ஆர்வமூட்டும் செயற்பாடுகள் போன்ற நாளாந்த சேவைக்கு ஊழியர்களின் வருகை அதிகரித்தது. ஒவ்வொரு வகைகளிலும் அடங்கக்கூடிய ஊழியர் பிரிவிற்கு உரித்தாகும் விடுமுறை அளவில் பெற்றுள்ள விடுமுறை அளவு விகிதாசாரமாக காண்பிக்கப்பட்டு இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சுற்று 1 மற்றும் படக்குறிப்பு 7 ஐ பார்க்கவும். சுற்று 1 இல் பெற்றுக் கொண்ட விடுமுறை விகிதாசாரம் காண்பிக்கப்பட்டிருப்பது 2016 மற்றும் 2017 இடைப்பட்ட ஒப்பீட்டுக்கு அடிப்படையிலாகும்.

| ஆண்டு | பி. நி.உ | பிரதான நிறைவேற்று அல்லாத சிரேஷ்ட முகாமையாளர்கள் | சிரேஷ்ட முகாமையாளர் | முகாமையாளர் | உதவி / கனிஷ்ட முகாமையாளர் | முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பமல்லாத) | ஆரம்ப மட்டம் |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 | 0% | 1% | 4.63% | 12% | 14.73% | 31.58% | 15.67% |
| 2016 | 0% | 1% | 3.4% | 9.3% | 8.5% | 32.64% | 14.28% |

**Table 01**




# வருமான மற்றும் நிதி முகாமைத்துவப் பிரிவு



## நிகழ்ச்சித் திட்டங்களுக்கான வரவு செலவுகள்

ஆண்டுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம், செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவம், வான்பரப்பு மற்றும் விமான சேவைப் பாதுகாப்பு மேற்பார்வை, விமானத் தற்காப்பு மேற்பார்வை உட்பட கூட்டிணைந்த செயற்பாடுகள் மற்றும் பொருளாதார மேற்பார்வைகளுக்காக பிரதான 04 வேலைத்திட்டங்களின் கீழ் காண்பித்து 2017 - வேலைத்திட்டங்களுக்காக வரவு செலவு மதிப்பீடுகள் வகுக்கப்பட்டன 2017 ஆம் ஆண்டுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் 1863 மில்லியன் ரூபா என்பதுடன் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் 1730 மில்லியன் ரூபாவாகும். முன்னைய ஆண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வரவு செலவுடன் ஒப்பீடு செய்யும் போது 2017 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் 37% தினாலும் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் 10% தினாலும் அதிகரித்துக் காணப்பட்டன.

## CAASL இன் வருமானம் மற்றும் செலவினம்

2017 ஆம் ஆண்டில் 1993 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டது. இது முன்னைய ஆண்டின் உண்மையான வருமானத்துடன் ஒப்பீடு செய்யம் போது 17% அதிகரிப்பாகும். வெளிநாட்டு விற்பனை மிகைக்கட்டணத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற வருமானத்தில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு காணப்பட்டது.

முன்னைய ஆண்டின் உண்மையான செலவினத்துடன் ஒப்பீடு செய்யும் போது 2017 ஆம் ஆண்டின் செலவினம் 21% தினால் அதிகரித்துக் காணப்பட்டது. இதற்குப் பிரதான காரணம் புதிய ஆட்சேர்ப்புக்களாகும்.

## முகாமைத்துவத் தகவல்கள்

இலங்கையின் நிதி அறிக்கைத் தரங்களுக்கமைய நிதி முகாமைத்துவத் தகவல் வெளிப்பாடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.










# பிரதான செயற்சாதனைச் சுட்டி

## CAASL இன் செயற்சாதனை - 2017

| தற்காப்பு மற்றும் பாதுகாப்பு மேற்பார்வைப் பணிகளில் வெளியிடப்பட்ட கோவைகள் / அறிவித்தல்கள் / ஒழுங்கு விதிமுறைகள் | 2017 | 2016 |
|---|---|---|
| விமானப் போக்குவரத்து | 00 | 01 |
| விமானத் தளம் | 03 | 02 |
| விமானப் போக்குவரத்து சேவைகள் | 06 | 02 |
| **ஒழுங்கமைப்பு / நபர்களை முதல் கட்டத்தின் கீழ் உறுதிப்படுத்தல்** | | |
| விமானப் போக்குவரத்து நிறுவனங்கள் (உள்நாடு) | 04 | 00 |
| பராமரிப்பு நிறுவனங்கள் | 07 | 07 |
| விமானிகள் | 237 | 253 |
| விமான பயணக் கட்டுப்பாட்டாளர்கள் | 25 | 08 |
| வானூர்திப் பராமரிப்பாளர் அனுமதிப்பத்திரம் | 14 | 11 |
| விமானப் புறப்படுகை உத்தியோகத்தர்கள் | 04 | 05 |
| விமானப் புறப்படுகை ஆலோசகர்கள் | 04 | 04 |
| உதவி விமானப் புறப்படுகை ஆலோசகர்கள் | 05 | 04 |
| தள ஆலோசகர்கள் | 22 | 51 |
| வானறைக்குழு அங்கத்தவர்கள் | 102 | 212 |
| விமானப் பாடசாலை அனுமதிப்பத்திரம் | 01 | 00 |
| **சான்றுப்படுத்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் தொடர்பான சோதனைகள்** | | |
| ராம்ப் பரிசோதனைகள் - வான்தகைமை | 42 | 72 |
| ராம்ப் பரிசோதனைகள் - செயற்பாடு | 30 | 18 |
| விமானத்தளச் சோதனைகள் | 61 | 33 |
| வான் நெரிசற் சேவைச் சோதனைகள் | 28 | 30 |
| பராமரிப்பு நிறுவனச் சோதனைகள் | 61 | 66 |
| வானூர்திப் பயிற்சிப் பாடசாலைகள் சோதனைகள் | 11 | 12 |
| விமான சேவைப் பாதுகாப்பு தேடல் பணிகள் (பரிசோதனை, கணக்காய்வு, ஆய்வு, பரீட்சை) | 18 | 29 |
| சிமிலேட்டர் சோதனைகள் | 04 | 0 |
| இடைநிலைப் பரிசோதனைகள் - செயற்பாடுகள் | 12 | 14 |
| ஆபத்தான பொருட்கள் மீதான சோதனைகள் | 12 | 12 |
| நிலைய வசதிகள் பற்றிய சோதனைகள் - வான்தகைமை | 05 | 02 |
| வானியற் தகவல் சேவைச் சோதனைகள் | 16 | 16 |
| வான் பயண சேவைகள் | 00 | 01 |
| வான் போக்குவரத்துப் பாதுகாப்பு | 00 | 01 |
| பிரதான தளச் சோதனைகள் / ஆலோசகர் அவதானிப்பு | 13 | 13 |
| பெயரிடப்பட்ட சோதனை விமானிகள் (DCP) மேற்பார்வை | 43 | 34 |
| **பூரணப்படுத்தப்பட்ட கணக்காய்வுகள்** | | |
| வான் பயண சேவைகள் | 00 | 01 |
| வான் போக்குவரத்துப் பாதுகாப்பு | 00 | 01 |
| **செயற்பாடுகள் மற்றும் முகாமைத்துவம் - பிரிவு** | | |
| அதிகார சபைக் கூட்டங்கள் | 12 | 14 |
| கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் | 04 | 05 |
| ஊழியர் சபைக் குழுக் கூட்டங்கள் | 07 | 1 |

| | | |
|---|---|---|
| கைத்தொழில் ஆலோசனைக் கூட்டங்கள் | 72 | 75 |
| வெளி நிறுவனங்கள் / நபர்களின் சந்திப்புக்கள் | 232 | 220 |
| கிடைக்கப்பெற்ற ஆவணங்களின் எண்ணிக்கை | 4,491 | 4,864 |
| **விமானப் போக்குவரத்து பாதுகாப்புப் பிரிவு** | | |
| மீளாய்வு / மறுசீரமைப்பு - தேசிய சிவில் விமான சேவைப் பாதுகாப்பு வேலைத்திட்டங்கள் மற்றும் மேலதிக ஆவணங்கள் | 05 | 06 |
| மதிப்பீடு / மீளாய்வு - உள்நாட்டு விமானக் கம்பனி / விமானத் தள செயற்பாட்டாளர் - | 01 | 02 |
| மதிப்பீடு / மீளாய்வு - வெளிநாட்டு விமானப் போக்குவரத்துக் கம்பனி செயற்பாட்டாளர்கள் - விமான சேவை பாதுகாப்பு வேலைத்திட்டம் | 31 | 20 |
| மதிப்பீடு / மீளாய்வு - விமான சேவை பாதுகாப்புப் பயிற்சி வேலைத்திட்டம் / பாட விதானம் | 02 | 03 |
| விமான சேவைப் பாதுகாப்பு தேடல் பணிகள் (பரிசோதனைகள், கணக்காய்வுகள், பரீட்சை) | 18 | 29 |
| விமான சேவை பாதுகாப்பு முகாமைத்துவச் சான்றுப்படுத்தல் மற்றும் மீள் சான்றுப்படுத்தல் | 25 | 07 |
| விமான சேவை பாதுகாப்பு ஆலோசகர்களைச் சான்றுப்படுத்தல் மற்றும் மீள் உறுதிப்படுத்தல் | 00 | 07 |
| விமான சேவைப் பாதுகாப்பு ஸ்கிரீனர்ஸ் சான்றுப்படுத்தல் மற்றும் மீள் உறுதிப்படுத்தல் | 481 | 419 |
| விமானங்களில் / சரக்குப் பொருள் கொண்ட இடத்தின் ஆயுதங்களைக் கொண்டு செல்வதற்காக அனுமதி வழங்குதல். | 206 | 196 |
| விமான நிலைய பிரவேச அனுமதிப்பத்திரங்களை வெளியிடுவதற்கான பரிந்துரை | 229 | 96 |
| விமான சேவைப் பாதுகாப்புப் பயிற்சி வேலைத்திட்டங்கள் / கூட்டங்கள் / விரிவுரைகளை நடாத்துதல் | 06 | 10 |
| அரசாங்க மற்றும் ஏனைய முகவர் நிறுவனங்களுக்கு நிபுனத்துவ சேவையினை வழங்குதல். | 01 | 01 |
| வெளிநாட்டுப் பயிற்சி / செயலமர்வு / கருத்தரங்கு/ கூட்டங்கள் / ICAO தூதுப் பணிகளில் பங்கேற்றல் | 07 | 03 |
| **ஆராய்ச்சி, அபிவிருத்தித் திட்டமிடல் மற்றும் விசேட செயற்திட்டப் பிரிவு** | | |
| CAASL இன் தலைமை அலுவலகக் கட்டட நிர்மானம் | | |
| CAASL தலைமையக் கட்டட நிர்மானிப்பு - ஆலோசகர்களுடனான கூட்டம் | 20 | 27 |
| CAASL தலைமையக் கட்டட நிர்மானிப்பு - நிலையப் பரிசோதனை | 14 | 20 |
| CAASL தலைமையக் கட்டட நிர்மானிப்பு - ஒப்பந்ததாரர்களுடனான கூட்டம் | 20 | 27 |
| CAASL தலைமையக் கட்டட நிர்மானிப்பு - உள்ளக கூட்டம் | 11 | 17 |
| வெளியிடப்பட்ட குவன்சர சஞ்சிகை எண்ணிக்கை | 02 | 02 |
| நடாத்தப்பட்ட CADEC நிகழ்ச்சிகள் | 01 | 02 |
| பாடசாலை அதிபர்களுக்கான பயிற்சிப் பட்டறைகள் | 01 | 0 |
| பாடசாலை மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறைகள் | 02 | 1 |
| பாடசாலை மாணவர் கழகங்களுக்கான பயிற்சிப் பட்டறைகள் | 02 | 1 |
| நடாத்தப்பட்ட விசேட செயற்பாடுகள் | 05 | 00 |
| கண்காட்சிகளில் CAA வளாகங்களை ஒழுங்குபடுத்துதல் | 04 | 00 |
| CAA ஆண்டறிக்கை | 01 | 02 |
| ஏனைய வெளியீடுகள் / அறிக்கைகள் | 24 | 13 |
| பிரிவின் புள்ளிவிபர ஆவணங்கள் | 12 | 12 |
| CAASL இன் புள்ளிவிபரத் தகவல்கள் | 12 | 12 |
| ஊக்குவிப்புச் செயற்பாடுகள் | 116 | 33 |
| **விமானப் போக்குவரத்து சேவைப் பிரிவு** | | |
| ழேவுயுஆ வழங்குவதற்கான அனுமதிகள் | 386 | 403 |
| வானியற் தகவற் சுற்றறிக்கைகளை வழங்கல் | 07 | 08 |
| AIP குறைநிரப்புக்களை வழங்கல் | 05 | 00 |
| AIP குறைநிரப்புக்களை திருத்துதல் | 02 | 02 |
| மேலே பறப்பதற்கு அங்கீகாரம் வழங்கல் | 931 | 1007 |
| அட்டவணைப்படுத்தப்படாத விமானங்களுக்காக தரையிறக்கும் அனுமதி | 800 | 1022 |
| பங்கேற்ற பயிற்சிக் கற்கை நெறிகள் / கருத்தரங்கு | 85 | 31 |
| முன்னெடுக்கப்பட்ட ATS சோதனைகள் | 29 | 30 |
| முன்னெடுக்கப்பட்ட AIS சோதனைகள் | 16 | 16 |
| வானியல் பணி அங்கீகாரங்கள் | 87 | 73 |



| | | |
|---|---|---|
| டுரோன் செயற்பாட்டு அங்கீகாரங்கள் | 491 | 131 |
| **விமானத் தளப் பிரிவு** | | |
| உயர் கட்டடங்களை நிர்மானிப்பதற்கான அங்கீகாரம் | 322 | 415 |
| நீரியல் சார்ந்த விமானத் தளங்களுக்கான அங்கீகாரம் | 11 | 10 |
| விமானத் தள தேடுதல் பணிகள் | 45 | 33 |
| **தனியார் அனுமதிப் பத்திரங்கள்** | | |
| பயிலுநர் விமானி அனுமதிப்பத்திரம் (SPL) (வழங்கல் + புதுப்பித்தல்) | 192 | 166 |
| தனியார் விமானி அனுமதிப்பத்திரம் (PPL) (வழங்கல் + புதுப்பித்தல்) | 119 | 118 |
| வர்த்தக விமானி அனுமதிப்பத்திரம் (CPL) (வழங்கல் + புதுப்பித்தல்) | 373 | 358 |
| விமானப் போக்குவரத்து விமானி அனுமதிப்பத்திரம் (ATPL) (வழங்கல் + புதுப்பித்தல்) | 327 | 337 |
| வான் போக்குவரத்து கட்டுப்பாட்டாளர் அனுமதிப்பத்திரம் (ATC) (வழங்கல் + புதுப்பித்தல்) | 34 | 45 |
| வானூர்தி பராமரிப்புப் பொறியியல் அனுமதிப்பத்திரம் (வழங்கல் + புதுப்பித்தல்) | 04 | 04 |
| வானூர்தி பராமரிப்பு அனுமதிப்பத்திரம் - (வழங்கல் + புதுப்பித்தல்) | 442 | 468 |
| வானூர்தி பராமரிப்பு அனுமதிப்பத்திரம் - வகைத்தரங்கள் - வழங்குகைகள் | 136 | 34 |
| வானூர்தி பராமரிப்பு அனுமதிப்பத்திரம் - வகைகள் - வழங்குகைகள் | 13 | 07 |
| விமானி அறை ஊழியர் சான்றுப் பத்திரம் - வழங்குகைகள் | 279 | 361 |
| வானூர்தி செயற்பாட்டு உத்தியோகத்தர் அனுமதிப்பத்திரம் - வழங்குகைகள் | 04 | 05 |
| வர்த்தக விமானி அனுமதிப்பத்திரம் (CPL)/ விமானப் போக்குவரத்து விமானி அனுமதிப்பத்திரம் (ATPL) வழங்குகைகள் மீதான விமான வகை மதிப்பீட்டுகள் | 114 | 81 |
| உதவிப் பறத்தல் பயிற்றுவிப்பாளர்கள் (AFI) / பறத்தல் பயிற்றுவிப்பாளர்கள் (FI) வகைத் தரப்படுத்தல்கள் - (வழங்கல் + புதுப்பித்தல்) | 28 | 32 |
| விமானப் புறப்படுகை பாடசாலை அனுமதிப்பத்திரம் - புதுப்பித்தல் | 07 | 06 |
| தளப் பயிற்றுனர் அனுமதிப்பத்திரம் | 09 | 07 |
| தளப் பயிற்றுனருக்கான அனுமதிகள் | 21 | 49 |
| வான் நெரிசற் கட்டுப்பாட்டாளர் தரப்படுத்தல் (வழங்கல் + புதுப்பித்தல்) | 135 | 144 |
| வீசா பரிந்துரைகள் வழங்குகைகள் | 23 | 47 |
| NIB அனுமதிகளை வழங்குதல் | 91 | 73 |
| மருத்துவப் பரிசோதனைகள் | 1070 | 911 |
| **தனிநபர் அனுமதிப்பத்திரப் பரீட்சைகள்** | | |
| PPL தனிநபர் விமானி அனுமதிப்பத்திரப் பரீட்சை | 317 | 337 |
| விமானப் புறப்படுகை செயற்பாட்டு உத்தியோகத்தருக்கான பரீட்சைகள் | 03 | 09 |
| AML பரீட்சைகளின் எண்ணிக்கை | 01 | 02 |
| AML பரீட்சை (விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை) | 1754 | 745 |
| **யுவீடு (யு)** பரீட்சை (வினாத்தாள்களின் எண்ணிக்கை) | 1003 | 1277 |
| **யுவீடு (ர்)** பரீட்சை (வினாத்தாள்களின் எண்ணிக்கை) | 06 | 04 |
| ஆங்கில மொழித் தேர்ச்சிப் பரிசீலனை | 130 | 84 |
| மீள் செய்முறைப்படுத்தலுக்கான பரீட்சை (CPL/IR) | 00 | 02 |
| வானொலி தொலைபேசி - பிரயோகப் பரீட்சை | 73 | 56 |
| உதவி வானியல் ஆலோசகர் பரீட்சை (கோட்பாடுகள் மற்றும் நேர்முகப் பரீட்சை | 10 | 02 |
| உதவி வானியல் ஆலோசகர் பரீட்சை (விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை) | 03 | 00 |
| **விமானச் செயற்பாட்டுப் பிரிவு** | | |
| பங்கேற்ற பயிற்சிப் பாடநெறி / கருத்தரங்கு | 10 | 0 |
| விசேட செயற்பாடுகள் | 12 | 01 |
| வெளிநாட்டு விமானச் செயற்பாட்டாளர் சான்றிதழ் - ஆரம்பம் | 04 | 11 |
| வெளிநாட்டு விமானச் செயற்பாட்டாளர் சான்றிதழ் - புதுப்பித்தல் | 27 | 22 |
| அபாயகர பொருட்களைக் கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரம் - ஆரம்பம் | 01 | 01 |
| அபாயகர பொருட்களை கொண்டு செல்வதற்கான அனுமதிப்பத்திரம் - புதுப்பித்தல் | 13 | 13 |
| பெயரிடப்பட்ட செயற்பாட்டு முன்னோடி (DCP) (ஆரம்பம்) | 08 | 13 |
| பெயரிடப்பட்ட செயற்பாட்டு முன்னோடி (DCP) - புதுப்பித்தல் | 24 | 26 |

| | | |
|---|---|---|
| விமானச் செயற்பாட்டுச் சான்றிதழ் - புதுப்பித்தல் | 09 | 11 |
| சிமிலேட்டர் - புதுப்பித்தல் | 03 | 06 |
| பரிசோதனைக்காக அங்கீகாரத்தை வழங்குதல் | 115 | 117 |
| மேற்கொள்ளப்பட்ட தேடுதல் பணிகள் | 106 | 117 |
| **விமானங்களைப் பதிவு செய்தல் மற்றும் விமானத் தகைமைச் சான்றிதழ்** | | |
| பராமரிப்பு ஒழுங்கமைப்புக்கள் | 07 | 07 |
| ரெம் பரிசோதனை - விமானத் தகைமைகள் | 42 | 72 |
| விமானப் பராமரிப்பு ஒழுங்கமைப்பு - பரிசோதனைகள் | 16 | 66 |
| தள வசதிகள் பரிசோதனை - விமானத் தகைமை | 05 | 02 |
| கைத்தொழில் - ஆலோசனைக் கூட்டம் | 152 | 134 |
| வெளி அமைப்புக்கள் - சந்திப்புக்கள் | 208 | 116 |
| கிடைக்கப்பெற்ற ஆவணங்களின் எண்ணிக்கை | 3792 | 4864 |
| பங்கேற்ற பயிற்சிப் பாடநெறி / கருத்தரங்கு | 91 | 55 |
| மேற்கொள்ளப்பட்ட தேடுதல் பணிகள் (ரெம் / கணக்காய்வு) | 68 | 86 |
| விமானம் - விமானத் தகைமைச் சான்றிதழ் - ஆரம்பம் | 10 | 10 |
| விமானத் தகைமைச் சான்றிதழ் - புதுப்பித்தல் | 77 | 69 |
| விமானப் பராமரிப்பு ஒழுங்கமைப்பு - வேலைத்தள அங்கீகாரம் | 08 | 20 |
| விமானப் பதிவுச் சான்றிதழ் - ஆரம்பம் | 10 | 19 |
| விமானப் பதிவுச் சான்றிதழ் - புதுப்பித்தல் | 70 | 61 |
| விமான நிகழ்வுகள் தொடர்பான தீர்வுகள் | 97 | 149 |
| **விமானப் போக்குவரத்து மற்றும் பொருளாதார மேற்பார்வைப் பிரிவு** | | |
| தயாரிக்கப்பட்ட புதிய கோவை வரைபு | 00 | 01 |
| பங்கேற்ற பயிற்சிப் பாடநெறி / கருத்தரங்கு | 12 | 03 |
| உள்நாட்டு விமான ஆவண அங்கீகாரம் | 10 | 11 |
| விமானப் போக்குவரத்து வழங்குனர் கேள்விகள் மற்றும் நடாத்தப்பட்ட மதிப்பீட்டுக் கூட்டங்கள் | 47 | 46 |
| சர்வதேச விமானப் பட்டியல் அட்டவணைப்படுத்தப் பட்டவைகளுக்கான அங்கீகாரங்கள் | 337 | 287 |
| தொழில்நுட்பமல்லாத நிபுனத்துவ பணியாளர் சபைக்காக வீசா பரிந்துரை | 96 | 47 |
| இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள விமானக் கம்பனிகளுக்காக பட்டய அனுமதிப்பத்திரம் | 11 | 09 |
| இலங்கையில் பதிவு செய்யப்பட்ட விமானக் கம்பனிகளுக்கான விமானப் போக்குவரத்து கம்பனி அனுமதிப்பத்திரம் | 05 | 06 |
| பட்டய அனுமதிப்பத்திரம் - உள்நாட்டு நிலையான செயற்பாடுகள் | 02 | 02 |
| பட்டய அனுமதிப்பத்திரம் - உள்நாட்டு நிரந்தரச் செயற்பாடுகள் | 09 | 07 |
| விமானப் போக்குவரத்து விநியோகஸ்தரர் அனுமதிப்பத்திரம் | 511 | 538 |
| தனிப்பட்ட செயற்பாட்டு அனுமதிப்பத்திரங்கள் | 01 | 01 |
| கையொப்பம் இடப்பட்ட புதிய விமானப் போக்குவரத்து சேவை உடன்படிக்கை | 06 | 00 |
| காணப்படும் விமானப் போக்குவரத்து சேவைக்கான உடன்படிக்கைகளை விருத்தி செய்தல் | 14 | 01 |
| திறந்த விமானத் தள விமான சேவை உடன்படிக்கை | 18 | 15 |
| **மானிட வள மற்றும் பணியாளர் சபை முகாமைத்துவம்** | | |
| ஊழியர்களை சேர்த்துக் கொள்ளல் | 36 | 17 |
| பங்கேற்ற வெளிநாட்டுப் பயிற்சி / கருத்தரங்கு / செயலமர்வு | 18 | 52 |
| பங்கேற்ற வெளிநாட்டு சம்மேளனம் மற்றும் கலந்துரையாடல் மாநாடு | 21 | 21 |
| பங்கேற்ற வெளிநாட்டுப் பரிசோதனைகள் | 13 | 02 |
| உள்நாட்டு பயிற்சி வேலைத்திட்டத்தின் மொத்த எண்ணிக்கை | 47 | 40 |
| பணியாளர் சபையின் மொத்த எண்ணிக்கை | 172 | 172 |
| பணியாளர் சபை அடைவு மட்டங்கள் | 222 | 07 |
| ஓய்வுறுத்தல் | 05 | 01 |
| வழங்கப்பட்ட பணியாளர் சபைக் கடன் (ரூபா.மில்) | 24.1 | 9.5 |
| தொழில்நுட்ப நூலகத்தில் கொள்வனவு செய்யப்பட்ட புதிய வெளியீடுகள் | 04 | 06 |
| ICO ஆவணங்களை சமகாலப்படுத்தல் | 204 | 182 |
| பொது விமான சேவை மற்றும் ஏனைய வெளியீடுகள் | 102 | 162 |



| | | |
|---|---|---|
| **வருமான மற்றும் நிதி முகாமைத்துவப் பிரிவு** | | |
| சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் (ரூபா.மில்) | 1993 | 1660 |
| மொத்தச் செலவினம் (ரூபா.மில்) | 527 | 542 |
| பணியாளர் சபைச் செலவினம் - மொத்த எண்ணிக்கை (ரூபா.மில்) | 288 | 236 |
| **தர மற்றும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு** | | |
| நடாத்தப்பட்ட கணக்காய்வுகளின் எண்ணிக்கை | 55 | 40 |
| சமர்ப்பிக்கப்பட்ட தேடல்கள் | 109 | 83 |
| **விமான விபத்து மற்றும் சம்பவ ஆய்வுகள்** | | |
| அறிக்கைப்படுத்தப்பட்ட சம்பவங்கள் | 04 | 02 |
| அறிக்கைப்படுத்தப்பட்ட விபத்துக்கள் | 00 | 00 |
| அறிக்கைப்படுத்தப்பட்ட நிகழ்வுகள் | 303 | 292 |
| பிரயாணிகள் அல்லது ஊழியர்களுக்கு ஏற்பட்ட பாரிய காயங்கள் | 00 | 00 |
| பிரயாணிகள் அல்லது ஊழியர்களுக்கு ஏற்பட்ட சிறிய காயங்கள் | 01 | 04 |
| பங்கேற்ற பயிற்சிச் செயலமர்வு / கருத்தரங்கு | 03 | 01 |
| காணப்படும் வழிகாட்டல் ஆவணங்களை மறுசீரமைத்தல் | 01 | 03 |

# போக்குவரத்து தகல்கள்

## சுர்வதேச விமான பயணங்கள்

### போக்குவரத்துத் தகவல்கள்
### சர்வதேச விமானப் பயணங்கள்

| | 2017 | 2016 | முன்னேற்றம் |
|---|---|---|---|
| **பயணிகள்** | | | |
| புறப்படுகை | 4,851,216 | 4,657,456 | 04% |
| தரையிறக்கல் | 4,970,549 | 4,684,762 | 06% |
| இடைப் பரிமாறல் | 1,536,640 | 1,364,452 | 13% |
| **சரக்குப் பொருள் (மெற்றிக் தொன்)** | | | |
| வரக்கூடிய | 113,516 | 107,349 | 06% |
| வெளியே செல்லக்கூடிய | 152,748 | 146,920 | 04% |
| **விமான அசைவு** | | | |
| அட்டவணைப்படுத்தப்பட்ட விமானம் | 61,295 | 59,666 | 03% |
| கூலி விமானங்கள் | 4,586 | 5,949 | -23% |
| செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட விமானப் போக்குவரத்து **கம்பனிகளின் எண்ணிக்கை** | | | |
| நிரந்தர சேவை | 31 | 28 | 11% |
| பட்டயக் கூலி சேவை | 05 | 08 | -38% |
| சரக்குப் பொருட்கள் மாத்திரம் | 05 | 05 | 00% |
| **உள்நாட்டு விமானப் போக்குவரத்து** | | | |
| அழைத்துச் செல்லப்பட்ட பயணிகள் | 24,597 | 30,523 | -19% |
| விமான அசைவுகள் | 5,645 | 5,974 | -06% |
| செயற்படுத்தப்பட்ட விமானப் போக்குவரத்து கம்பனிகளின் எண்ணிக்கை | 10 | 07 | 43% |
| அட்டவணைப்படுத்தப்பட்ட விமான சேவைகள் | 04 | 02 | 100% |
| கூலி விமானங்கள் | 06 | 05 | 20% |


ICAO AIR SERVICES
NEGOTIATION EVENT
ECONOMIC
Civil Aviation Authority
Sri Lanka

# CASSL இன் நிதி
## வெளிப்பாடுகள்

### இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை
### இலாப நட்ட வெளிப்பாடுகள்
### 2017 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான

| | குறிப்பு | 2017 ரூபா. | 2016 ரூபா. |
|---|---|---|---|
| **வருமானம்** | | **1,993,409,952** | **1,660,271,048** |
| செயற்பாட்டு வருமானம் | 24 | 1,800,434,533 | 1,496,319,113 |
| செயற்பாடல்லாத வருமானம் | 25 | 192,975,419 | 163,951,935 |
| **செலவினம்** | | **527,316,932** | **432,649,534** |
| பணியாளர் சபைச் செலவினம் | 26 | 288,374,181 | 236,120,184 |
| கூட்டம் / கருத்தரங்கு / செயலமர்வு | 27 | 50,495,497 | 29,468,364 |
| பயிற்சிக்கான செலவினம் | 28 | 15,295,043 | 8,973,167 |
| நிருவாகம் மற்றும் ஏனைய செலவினம் | 29 | 149,325,134 | 135,269,400 |
| தேய்மானம் | 31 | 23,446,773 | 21,041,418 |
| தொட்டுணர முடியாத சொத்துக்களின் தேய்மானம் | 32 | 380,305 | 1,777,001 |
| **பொதுவான செயற்பாட்டு பணிகளில் இலாபம் வரி செலுத்துவதற்கு முன்னர்** | | **1,466,093,020** | **1,227,621,514** |
| வரிக் கொடுப்பனவு | 30 | 423,178,562 | 346,480,058 |
| **ஆண்டுக்கான தேறிய இலாபம்** | | **1,042,914,458** | **881,141,456** |



### இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை
### நிதி நிலைமைகள் தொடர்பான வெளிப்பாடுகள்
### 2017 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான

| | குறிப்பு | 2017 ரூபா. | 2016 ரூபா. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | **4,811,101,804** | **3,623,040,318** |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள்** | | **1,333,752,902** | **494,985,108** |
| சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் | 31 | 742,820,187 | 211,521,640 |
| தொட்டுணர முடியாத சொத்துக்கள் | 32 | 1,587,550 | 1,944,674 |
| முன்னெடுக்கப்படும் பணிகள் - மூலதனம் | 33 | 589,157,397 | 281,217,671 |
| நிலையான வைப்பு - ஊழியர் நலன்புரி மற்றும் சமூக காப்புறுதி நிதி | | 187,767 | 301,123 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | **3,477,348,902** | **3,128,055,210** |
| இருப்பு | | 5,554,212 | 5,020,654 |
| வர்த்தகக் கிடைக்க வேண்டியவைகள் | 34 | 123,435,199 | 116,299,047 |
| பணியாளர் சபைக் கடன் | 35 | 37,147,958 | 39,904,738 |
| நிதிச் சொத்துக்கள் | 36 | 1,544,425,181 | 1,663,751,030 |
| முற்பணம், முற்கொடுப்பனவு மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் | 37 | 221,579,884 | 93,426,423 |
| நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகள் | 38 | 1,545,206,468 | 1,209,653,318 |
| **பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்** | | **4,811,101,804** | **3,623,040,318** |
| **மூலதனம் மற்றும் ஒதுக்கீடுகள்** | | **3,135,524,633** | **2,467,386,618** |
| அரச வழங்கல் | 39 | 575,571,516 | 50,347,959 |
| மீள் மதிப்பீட்டு மிகை | | 7,000,418 | 7,000,418 |
| பொதுவான ஒதுக்கீடு | | 1,150,000,000 | 1,150,000,000 |
| திரண்ட இலாபம் | | 1,402,952,699 | 1,260,038,241 |

## நிதி நிலைமைகள் தொடர்பான வெளிப்பாடுகள்
## 2017 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான

| | | 2017 ரூபா. | 2016 ரூபா. |
|---|---|---|---|
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | **92,744,480** | **47,908,980** |
| நீண்டகால குத்தகைப் பொறுப்புக்கள் | 40 | 26,691,100 | 14,076,078 |
| ஒதுக்கீடுகள் மற்றும் ஏனைய பொறுப்புக்கள் | 41 | 42,589,400 | 26,476,006 |
| ஓய்வூதியப் பிரதிலாபங்கள் மற்றும் கடப்பாடுகள் | 42 | 23,406,485 | 7,356,896 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | **1,582,832,691** | **1,107,744,720** |
| வர்த்தக செலுத்த வேண்டியவைகள் | 43 | 1,373,802,676 | 966,442,757 |
| ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 44 | 20,156,095 | 20,344,855 |
| வருமான வரிப் பொறுப்புக்கள் | 45 | 188,873,919 | 120,957,108 |

பக்கம் 99 தொடக்கம் 115 வரையான கணக்கீட்டுக் கொள்ளைகள் வரையான நிதி வெளிப்பாடுகளுக்குரிய குறிப்புக்கள் இந்நிதி வெளிப்பாடுகளுக்கு தேவையான பிரிவாகும். 2017.12.31 ஆம் திகதியன்று அதிகார சபையின் பணிகள் தொடர்பாக உண்மையான நியாயமான விளக்கங்கள் இந்நிதி வெளிப்பாடுகள் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளன.

### பணிப்பாளர் - வருமானம் மற்றும் நிதி முகாமைத்துவம்

இலங்கை கணக்கீட்டுத் தரங்கங்களுக்குரியதாக இவ் வெளிப்பாடுகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பிக்கும் பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்நிதி வெளிப்பாடுகள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக கையொப்பம் இடப்பட்டுள்ளது.

**திரு. எச்.எம்.சி. நிமல்சிறி**
சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்
இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை

**திரு. ஆனந்த விமலசேன**
தலைவர்
இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை

**இலங்கை சிவில் விமான சேவை அதிகாரசபை**
2018 பெப்ரவரி 28

## உரிமைப் பங்கு மாற்றம் தொடர்பான வெளிப்பாடுகள்
## 2017 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான

| | அரச வழங்கல் ரூபா | உண்மையான ஒதுக்கீடு ரூபா | பொதுவான ஒதுக்கீடு ரூபா | திரண்ட இலாபம் ரூபா | மொத்தம் ரூபா |
|---|---|---|---|---|---|
| **2016 ஜனவரி 01 ஆம் திகதியன்று நிலுவை** | **29,170,677** | **29,050,410** | **1,150,000,000** | **764,175,086** | **1,972,396,173** |
| உரிய காலப்பகுதிக்கான இலாபம் | | | | 881,141,457 | 881,141,457 |
| ஆண்டுக்குள் மாற்றங்கள் | | | | 32,721,699 | 32,721,699 |
| மீள் மதிப்பீட்டு மிகை | | | | 250,000,000 | 250,000,000 |
| மாற்றங்கள் -மீள் மதிப்பீட்டு மிகை | 22,049,992 | (22,049,992) | | | |
| தேறிய மிகை ஒதுக்கீடு - கூட்டிணைந்த நிதியம் | | | | (668,000,000) | (668,000,000) |
| ஆண்டுக்கான தேய்மானம் | (872,710) | | | | (872,710) |
| **2016 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலுவை** | **50,347,959** | **7,000,418** | **1,150,000,000** | **1,260,038,241** | **2,467,386,618** |
| உரிய கால எல்லைக்கான இலாபம் | | | | 1,042,914,458 | 1,042,914,458 |
| மாற்றங்கள் - அரச வழங்கல் | 526,053,313 | | | | 526,053,313 |
| ஆண்டுக்காக தேய்மானம் மேற்கொள்ளல் | (829,756) | | | | (829,756) |
| தேறிய மிகை ஒதுக்கீடு - கூட்டிணைந்த நிதியம் | | | | (900,000,000) | (900,000,000) |
| **2017 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிலுவை** | **575,571,516** | **7,000,418** | **1,150,000,000** | **1,402,952,699** | **3,135,524,634** |

## இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின்
## நிதிப்பாய்ச்சல் கூற்று
## 2017 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த ஆண்டுக்கான

| | 2017 ரூபா. | 2016 ரூபா. |
|---|---|---|
| **செயற்பாட்டுப் பணிகள் மீதான நிதிப்பாய்ச்சல்** | | |
| பொதுவான செயற்பாடுகளின் இலாபம் / (நட்டம்) - வரிக் கொடுப்பனவிற்கு முன்னர் | 1,466,093,020 | 1,227,621,514 |
| **ஒப்பீடுகள்** | | |
| தேய்மானம் | 23,446,773 | 21,041,418 |
| தொட்டுணர முடியாத சொத்துக்களின் தேய்மானம் | 380,305 | 1,777,001 |
| அரச வழங்கல் மீதான தேய்மானம் | (829,756) | (872,710) |
| முதலீட்டு வருமானங்களில் வட்டி வருமானம் | (180,781,182) | (154,795,710) |
| சொத்துக்கள், ஆதனங்கள் உபகரண விற்பனை மூலம் இலாபம் / (நட்டம்) | - | 2,002,676 |
| உரிய பிரதிலாபத் திட்டங்களுக்கான ஒதுக்கீடு | 28,605,878 | 604,470 |
| செயற்பாட்டு இலாபம் / (நட்டம்) -அமுலிலுள்ள மூலதன மாற்றங்களுக்கு முன்னர். | 1,336,915,038 | 1,097,378,658 |
| இருப்பு (அதிகரிப்பு) / குறைவு | (533,558) | 430,163 |
| வர்த்தகக் கிடைக்க வேண்டியவைகள் (அதிகரிப்பு) / குறைவு | (7,136,153) | 125,792,670 |
| பணியாளர் சபைக் கடன் (அதிகரிப்பு) / குறைவு | (5,424,435) | 4,176,975 |
| முற்பணம் முற்கொடுப்பனவு மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவைகள் (அதிகரிப்பு) / குறைவு | (115,446,470) | 12,227,585 |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளின் அதிகரிப்பு | 407,171,159 | 248,534,765 |
| செயற்பாடுகள் மூலம் ஈட்டப்பட்ட நிதி | 1,615,545,582 | 1,488,540,816 |
| முன்னைய ஆண்டுக்கான கொடுக்கல் வங்கல்கள் மூலம் பெற்ற நிதி (இரத்துச் செய்யப்பட்ட கொடுப்பனவு) | - | 32,721,699 |
| ஊழியர் நலன்புரி மற்றும் சமூக காப்புறுதி நிதியத்தின் குறைவு | (113,356) | - |
| உரிய பிரதிலாப மற்றும் திட்டமிடல் செலவினம் செலுத்தப்பட்ட - (பணிக்கொடை) | (12,556,289) | (1,316,740) |
| மீளச் செலுத்தப்பட்ட வட் வரி | 4,366,656 | (21,676,129) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | (346,955,891) | (371,947,982) |
| **செயற்பாட்டு பணிகளின் மூலம் தேறிய நிதிப் பாய்ச்சல்** | **1,260,286,702** | **1,126,321,665** |

## நிதிப்பாய்ச்சல் கூற்று
## 2017 டிசம்பர் 31 முடிவடைந்த ஆண்டுக்கான

| | 2017 ரூபா. | 2016 ரூபா. |
|---|---|---|
| **முதலீட்டுப் பணிகளின் மூலம் தேறிய நிதிப் பாய்ச்சல்** | | |
| சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்களைப் பொறுப்பேற்றல் | (28,715,188) | (22,503,547) |
| கற்புலனாகாத சொத்துக்களைப் பொறுப்பேற்றல் | - | (100,000) |
| அமுலிலுள்ள பணிகளின் அதிகரிப்பு | (307,939,725) | (108,852,428) |
| சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் | - | 222,010 |
| மீளப் பெறல் / ஏனைய முதலீடுகளை பொறுப்பேற்றல் | 123,439,024 | (112,555,905) |
| கிடைத்த வட்டி | 172,142,231 | 155,573,235 |
| வங்கிப் பிணைக்காக கிடைக்கப் பெற்ற நிதி | 16,226,750 | 10,548,250 |
| ஊழியர் நலன்புரி மற்றும் சமூக காப்புறுதி நிதியத்தின் நிதியினை மீளப் பெறல் | 113,356 | - |
| **முதலீட்டு பணிகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய நிதி** | **(24,733,552)** | **(77,668,386)** |
| நிதிப் பணிகள் மூலம் பெற்ற நிதிப் பாய்ச்சல் | | |
| கூட்டிணைந்த நிதிய பங்களிப்பு | (900,000,000) | (668,000,000) |
| **நிதிப் பணிகள் மூலம் ஈடுபடுத்தப்பட்ட தேறிய நிதி** | **(900,000,000)** | **(668,000,000)** |
| நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகளின் தேறிய அதிகரிப்பு / (குறைவு) | 335,553,150 | 380,653,278 |
| **ஆண்டின் ஆரம்பத்தில் நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகள்** | **1,209,653,318** | **829,000,040** |
| **ஆண்டின் இறுதியில் நிதி மற்றும் நிதிக்கு சமமானவைகள்** | **1,545,206,468** | **1,209,653,318** |
| **நிதி மற்றும் நிதிக்குச் சமமானவைகளின் பகுப்பாய்வு** | | |
| வங்கியிலுள்ள நிதி | 965,206,468 | 721,653,318 |
| குறுகிய கால முதலீடுகள் | 580,000,000 | 488,000,000 |
| | **1,545,206,468** | **1,209,653,318** |

## நிதி அறிக்கைப்படுத்தல் தொடர்பாக அதிகார சபையின் முகாமைத்துவப் பொறுப்புக்களின் வெளிப்பாடுகள்

2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைச் சட்டத்தில் 14 மற்றும் 15 வது பிரிவிற்கமைய அதிகார சபையின் முகாமைத்துவம் கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் பொறுப்புக்கள் காட்டப்பட்டுள்ளது.

1. அதிகார சபையின் வருமானம் மற்றும் செலவினம், சொத்து மற்றும் பொறுப்புக்கள் உட்பட ஏனைய சகல நிதிக் கொடுக்கல் வாங்கல்களும் உரியவாறு கணக்குகளில் பதியப்பட்டுள்ளன.
2. அதிகார சபையின் நிதிச் செயற்சாதனைகள் மற்றும் அதன் நிதி நிலைமைகள் தொடர்பாக உண்மையான நியாயமான நோக்குடன் சமர்ப்பிக்கும் பணிகளுக்காக 1995 இலக்கம் 15 கொண்ட இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு தரம் சட்டத்தின் கீழ் இலங்கை பட்டயக் கணக்காளர்களின் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை கணக்கீட்டுத் தரத்திற்கமைய கணக்குகளைத் தயாரித்தல்.
3. அதிகார சபையின் சொத்துக்களையும் பொறுப்புக்களை பாதுகாப்பதற்கும் மோசடிகள் மற்றும் ஏனைய முறைகேடுகளை வெளிப்படுத்தல் உட்பட தடுப்பதற்காக பொருத்தமான உள்ளக நிருவாக முறையைத் தாபிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்தல்.

**திரு. எச்.எம்.சி. நிமல்சிறி**
சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்
இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை

**திரு. ஆனந்த விமலசேன**
தலைவர்
இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை

**இலங்கை சிவில் விமான சேவை அதிகாரசபை**
2018 பெப்ரவரி 28



# நிதி வெளிப்பாடுகளுக்குரிய குறிப்புக்கள்

## 1. பொதுவான தகவல்கள்

1.1. இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் கட்டுநாயக்க, மினுவங்கொட வீதி, இலக்கம் 152/1 கொண்ட இடத்தில் செயற்படுகின்றது.

1.2. இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் 2017 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான நிதி வெளிப்பாடுகள் 2017 பெப்ரவரி 22 ஆம் திகதி இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் யோசனையை அங்கீகரிக்கக்கூடியவாறு வெளியிடுவதற்காக அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

1.3. 2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் சட்டத்தின் கீழ் 2002 டிசம்பர் 27 ஆம் திகதி தாபிக்கப்பட்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபை நிலையியற் சபையாகக் கருதப்படுவதுடன் அதன் பணிகளாக அமைவது 2002 இலக்கம் 34 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் சட்டத்தினால் 2010 இலக்கம் 14 கொண்ட இலங்கை சிவில் விமான சேவை சட்டத்தினாலும் உள்ளடக்கப்பட்டுள்ள சட்ட ரீதியிலான ஒழுங்கு விதிமுறைகளின் கீழ் செயற்பட்டு சர்வதேச சிவில் விமான சேவை அமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட புதிய சர்வதேச தரங்கள் மற்றும் பரிந்துரை விதிமுறைகளுக்கமைய சிவில் விமான சேவையின் பாதுகாப்பு, வினைத்திறன் மற்றும் செயற்திறன் உட்பட சிவில் விமான சேவையினால் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை மேற்பார்வை செய்வதாகும்.

## 2. பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

### 2.1 இணக்க வெளிப்பாடுகள்

இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் நிதி நிலைமைகள் தொடர்பான வெளிப்பாடுகள், விளக்கமான வருமானம், பங்கு மாற்றங்கள். நிதிப் பாய்ச்சல்கள் மற்றும் குறிப்புக்களும் கணக்கீட்டு கொள்கை சுருக்கமும் (நிதி வெளிப்பாடு) சர்வதேச கணக்கீட்டுத் தரச் சபையினால் வெளியிடப்பட்ட சர்வதேச நிதி அறிக்கைப்படுத்தல் தரம் (IFRS) பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது. இலங்கை பட்டயக் கணக்காளர்களின் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட நிதி அறிக்கைப்படுத்தல் தரம் (SLFRS) மற்றும் (LKAS) இற்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளது

### நிதி வெளிப்பாடுகள் தொடர்பான பொறுப்புக்கள்

நிதி வெளிப்பாடுகளைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பது தொடர்பான பொறுப்புக்கள் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் முகாமைத்துவத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

### 2.2. நிலையான வர்த்தகம்

இந் நிதி வெளிப்பாடுகளைத் தயாரிக்கும் போது முகாமைத்துவமும், இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் இலாபமீட்டும் வெற்றிகரமான வர்த்தகமாக தொடர்ச்சியாக முன்னெடுத்து செல்வதற்கு காணப்படும் இயலுமைகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபைக்கு சட்டரீதியான பொறுப்பளிக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பணிகளை மேற்கொண்டு தொடர்ந்தும் எதிர்காலத்திற்காக அச் செயற்பாடுகளை நிலையாகப் பேணுவதற்கு தேவையான போதியளவு வளம் அதனிடம் காணப்படுவதாக நியாயான எதிர்பார்ப்புக்கள் முகாமைத்துவதிற்கு உள்ளது. எதிர்காலம் தொடர்பில் பயன்பாட்டு அடிப்படையில் காணப்படும் தகவல்களைக் கருத்திற் கொள்ளும் வேளையில் அதிகார சபைக்கு அதன் செயற்பாடுகளை இடைநிறுத்த அல்லது ஏலமிட வேண்டி ஏற்படும் என்பதை காணமுடியவில்லை. இதற்கமைய முன் அதிகார சபையில் நிதி நிலைமைகளை தயாரிக்கும் போது தொடர்ந்தும் இலாபமீட்டும் வர்த்தக அடிப்படையில் (going concern basis) பயன்படுத்தப்படுகின்றது.

### 2.3. முக்கியத்துவம் வாய்ந்த கணக்குகள் மீதான தீர்மானங்கள், மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள்

அதிகார சபையின் நிதி வெளிப்பாடுகளைத் தயாரிக்கும் போது அறிக்கைப்படுத்தப்பட்ட தினத்திற்கு அறிக்கைப்படுத்தப்பட்ட வருமான அளவு, செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் உட்பட தொடர்ச்சியான பொறுப்புக்கள் மூலம் வெளிப்படுத்தல் போன்றவைகள் மீது அழுத்தங்கள் ஏற்படக்கூடியதற்கமைய தீர்மானங்கள் மற்றும் ஊகங்களைக் கட்டியெழுப்ப வேண்டிய நிலை முகாமைத்துவத்திற்கு ஏற்படுகின்றது. இது எவ்வாறாக இருப்பினும் இதற்கமைய ஊகங்கள் மற்றும் நிச்சயமற்ற நிலைமைகள் காரணமாக எதிர்காலத்தில் ஏதேனும் சொத்து அல்லது பொறுப்புக்களை முன்னெடுத்துச் செல்லும் அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒப்பீடுகளை மேற்கொள்வது அவசியமாக அமையும். இக்காரணிகளுக்கிடையே ஊகங்கள் மற்றும் தீர்வுகள் உள்ளடக்கப்பட வேண்டும்.

### கருத்துக்கள்

அதிகார சபையின் கணக்கீட்டுக் கொள்கைகளைப் பயன்படுத்தும் செயற்பாடுகளின் போது கட்டியெழுப்பப்படும் கருத்துக்கள் ஊகங்களைத் தவிர நிதி வெளிப்பாடுகளில ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவுகள் தொடர்பில் கவனத்தில் கொள்ள வேண்டிய அழுத்தங்களை ஏற்படுத்தக்கூடிய விடயங்கள் கீழ்க் குறிப்பிடப்பட்டவாறு அதிகார சபையினால் கட்டியெழுப்பப்பட்டுள்ளன.

### மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள்

எதிர்வரும் நிதியாண்டுக்குள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகளை முன்கொண்டு செல்லப்பட்ட நிலுவைகளின் ஒப்பீடுகள் அவசியப்படின் குறிப்பிடத்தக்களவு பாதிப்புக்களை ஏற்படுத்தும் எதிர்காலத்தின் மதிப்பீட்டுத் தேவைகள் ஏற்படும் வரை பிரதான வகைகள் தொடர்பில் முக்கியத்துவம் வாய்ந்த ஊகங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படுகின்றன.

**(அ) நிதிச் செயற்பாடுகளின் நியாயமான பெறுமதி**

நிதி நிலைமைகள் தொடர்பான வெளிப்பாட்டின் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ள நிதிச் சொத்துக்கள் மற்றும் நிதிப் பொறுப்புக்களின் நியாயமான பெறுமதி செயற்பாட்டுச் சந்தையிலிருந்து பெற முடியாத சந்தர்ப்பத்தில் கழிவாக வழங்கப்பட்ட நிதிப் பாய்ச்சல் முறைகள் / அல்லது கணித முறைகளை உள்ளடக்கி பல்வேறுபட்ட மதிப்பீட்டுக் கலைசார் முறைகளை பயன்படுத்துவதன் மூலம் அது கணிப்பீடு செய்யப்படுகின்றது. இம் முறைகளுக்குத் தேவையான உள்ளீடுகள் அவ்வாறு மேற்காள்ளக்கூடிய சந்தர்ப்பங்களில் மேற்பார்வை செய்ய முடியுமான சந்தைப் புள்ளி விபரங்கள் மூலம் பெறப்படுவதாகவும் மேற்பார்வை செய்வதற்குரிய சந்தைப் புள்ளி விபரங்கள் இல்லாத சந்தர்ப்பத்தில் நியாயமான பெறுமதியினை நிலைப்படுத்துவதற்கான மதிப்பீடுகள் (தீர்வுகள்) அவசியமாகும்.

இக்காரணிகள் தொடர்பில் ஊகங்களில் மாற்றங்கள் காரணமாக நிதி சார்ந்த பொருட்களின் அறிக்கைப்படுத்தப்பட்ட பெறுமதி தொடர்பில் அழுத்தங்கள் ஏற்பட முடியும். திறைசேரி முறிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடுகள் மூலம் முன்னைய ஆண்டுகளில் அவற்றின் செலவினத்தில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் இவ்வாண்டில் அவற்றில் பெயரளவிலான பெறுமதிகளில் காண்பிக்கப்பட்டிருந்தன.

ஐந்தொகை தினமன்று நிதி சார்ந்த பொறிமுறைகள் (திறைசேரி + கட்டணப் பட்டியல் அழைப்பு வைப்பு) முன்கொண்டு சென்ற நிலுவை ரூபா 2,151,116,281/- இல் (2016 - ரூபா: 2,182,856,428/-)

**(ஆ) உரிய பிரதிலாப பொறுப்பு மதிப்பீடுகள்**

உரிய பிரதிலாப ஓய்வூதியத் திட்டங்களில் செலவினம் உறுதிப்படுத்தப்படுவது இலங்கை கணக்கீட்டுத் தரம் 19 (LKAS) இற்கமைவான (formula method) சூத்திர முறைகளைப் பயன்படுத்துவதன் மூலமாகும்.

ஐந்தொகை தினமன்று உரிய பயன்களை பொறுப்புக்கள் முன்கொண்டு சென்ற பெறுமதி ரூபா. 23,406,485/- இல் (2015: ரூபா. 7,356,896/-)

**(இ) நியாயமான பெறுமதி**

நியாயமான பெறுமதியாக அமைவது முழுங்கை தூரம் அளவு கொடுக்கல் வாங்கல்களின் போது வெளி அழுத்தங்கள் இன்றி அறிவு மற்றும் விருப்பம் கொண்ட இரு தரப்பினருக்கிடையே இணக்கத்தை எட்டுவதற்கான நியாயப் பெறுமதியாக அமைவது பொதுவாக அதற்காக செலுத்தப்பட்ட அல்லது பொறுப்பேற்கப்பட்ட நியாயப் பெறுமதியாகும். ஆரம்பத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் சந்தையில் விலை குறிப்பிடப்பட்டுள்ள நிதிச் சொத்துக்களின் நியாயப் பெறுமதியாக அமைவது பொதுவாக அதன் விற்பனை விலையாகும். சந்தையில் விலை குறிப்பிடப்பட்டுள்ள நிதிப் பொறுப்புக்கள் (நியாயப் பெறுமதியாக அமைவது பொதுவாக அதன் கேள்வி விலையாகும். நிதிக்கு சமமானவைகள் மற்றும் குறுகிய கால முதலீடு போன்ற குறுகிய கால நிதி முன்கொண்டு சென்ற பெறுமதி அதன் நியாயப் பெறுதியாக பொதுவாக ஏற்றுக் கொள்ள முடியும்.

**(ஈ) வருமான வரி**

அதிகார சபையின் வருமான வரிகளுக்கு உட்படுவதுடன் வருமான வரிக்காக தேவையான மொத்த ஒதுக்கீட்டு அளவினை உறுதிப்படுத்துவதற்காக குறிப்பிடத்தக்களவு மதிப்பீடுகள் அவசியமாகும்.

**2.4 செயற்பாடுகள் மற்றும் சமர்ப்பிப்பது தொடர்பில் புழக்கத்திலுள்ள நிதி**

2. அதிகார சபையின் செயற்பாட்டு நிதிவகை இலங்கை நாணயமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் நிதி வெளிப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பது இலங்கை ரூபாக்களின் அடிப்படையிலாகும்.

## 3. விசேட கணக்கீட்டுக் கொள்கைகள்

### 3.1 நிதிச் சொத்துக்கள்

அதிகார சபை அதன் நிதிச் சொத்துக்களை கீழ் குறிப்பிடப்பட்டவாறு வகைப்படுத்தியுள்ளது. கடன் மற்றும் கிடைக்க வேண்டியவைகள், காலாவதியாகும் வரை தேக்கி வைக்கப்பட்ட மற்றும் விற்பனை செய்யவுள்ள சொத்துக்கள் என்ற அடிப்படையிலாகும். முகாமைத்துவத்தினால் ஆரம்ப அங்கீகாரத்தின் போது இவ் வகைப்படுத்தல்கள் உறுதிப்படுத்தப்படுவதுடன் அது உரிய முதலீடுகள் பொறுப்பேற்கப்பட்ட தேவைக்கமைய நிலைப்படுத்தப்படுகின்றது.

#### 3.1.1 வகைப்படுத்தல்கள்

**(அ) கடன் மற்றும் கிடைக்க வேண்டியவைகள்**

கடன் மற்றும் கிடைக்க வேண்டியவைகள் எனப்படுவது செயற்பாட்டுச் சந்தையின் விலைகள் குறிப்பிடாத உரிய தினத்திற்கு செலுத்த வேண்டிய அல்லது உறுதிப்படுத்தக்கூடிய கொடுப்பனவுகளைக் கொண்ட அல்லது பெறப்படாத நிதிச் சொத்துக்களாகும். பொதுவான கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்பட்ட கிடைக்க வேண்டியவைகளும் இப் பிரிவின் கீழ் வகைப்படுத்தப்படுவதுடன் அவ்வாறான சொத்துக்களுக்கு ஏற்படக்கூடிய இழப்பீடுகள் தொடர்பில் மீளாய்விற்குட்படுத்தப்படுகின்றன.



**(ஆ) முதிர்ச்சி அடையும் வரை தேக்கி வைக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள்**

முதிர்ச்சி அடையும் வரை தேக்கி வைக்கப்பட்ட நிதிச் சொத்துக்கள் என்பது அதிகார சபையின் முகாமைத்துவத்திற்கு முதிர்ச்சி அடையும் வரை தேக்கி வைப்பதற்கான இயலுமை உறுதியான குறிக்கோளைக் கொண்ட உரிய தினத்திற்கு செலுத்த வேண்டிய மற்றும் உறுதிப்படுத்த முடியமான கொடுப்பனவுகளைக் கொண்ட பெறப்படாத நிதிச் சொத்துக்களாகும். இருப்பினும் கீழ் குறிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் இவ் வகையில் அடங்குவதில்லை.

ஆரம்ப அங்கீகாரத்திற்கு பின்னர் அதிகார சபையினால் இலாபம் அல்லது நட்டம் ஊடாக தீர்க்கப்படும் நியாயப் பெறுமதி கொண்ட சொத்தாக பெயரிடப்படும் சொத்துக்கள்

அதிகார சபையினால் விற்பனை செய்யவுள்ள சொத்தாக பெயரிடப்படும் சொத்துக்கள்

கடன் மற்றும் கிடைக்க வேண்டியவைகள் தொடர்பாக வரைவிலக்கணப்படுத்த முடியுமான சொத்துக்கள்

முதிர்ச்சி அடையும்வரை பேணப்பட்ட முதலீடுகள் மூலம் கிடைக்கும் வட்டி வருமான வெளிப்பாட்டில் உள்ளடங்குவதுடன் ''முதலீட்டு வருமானம்'' என அறிக்கைப்படுத்தப்படுகின்றது.

**(இ) விற்பனை செய்யவுள்ள நிதிச் சொத்துக்கள்**

விற்பனை செய்யவுள்ள நிதிச் சொத்துக்களாக அறிமுகப்படுத்தப்படுவது நிச்சயமற்ற கால எல்லைக்காகத் தேக்கி வைக்க எதிர்பார்க்கப்படும், ஏல விற்பனை செய்வதற்கான தேவை அல்லது வட்டி விகிதாசாரம், செலாவணி விகிதாசாரம் அல்லது பங்கு மாற்றங்களினால் ஏற்படக்கூடிய தேவைகளுக்கமைய விற்பனை செய்ய வேண்டி ஏற்படும் கடன் மற்றும் கிடைக்க வேண்டியவைகள், முதிர்ச்சியடையும் வரை தேக்கி வைக்கப்பட்ட முதலீடு அல்லது இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயமான பெறுமதியாக அங்கீகரிக்கப்படும் நிதிச் சொத்துக்கள் அல்லாத நிதிச் சொத்துக்களாகும்.

#### 3.1.2. அங்கீகரித்தல் மற்றும் அளவீடுகள்

நிதிச் சொத்துக்கள் பிரதானமாக நியாயப் பெறுதிமதிக்கமைய ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதிக்கமைய முன்கொண்டு செல்லப்படாத சகல நிதிச் சொத்துக்களையும் அனுப்பி பொறுப்பேற்பதற்காக நேரடியாக செலவாணி கொடுக்கல் வாங்கல்கள் செலவினத்திற்காக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டத்திற்காக நியாயப் பெறுமதிக்கு முன்கொண்டு செல்லப்படும் நிதிச் சொத்துக்கள் பிரதானமாக நியாயமான பெறுமதியில் ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் கொடுக்கல் வாங்கல் செலவினம் வருமான வெளிப்பாட்டில் செலவாகக் குறிப்பிடப்படுகின்றன. நிதிச் சொத்துக்கள் மூலம் பெறும் நிதிப்பாய்ச்சலை ஏற்றுக் கொள்ளும் உரிமை முடிவடையும் வேளையில் அல்லது நிதிச் சொத்துக்கள் மாற்றப்பட்டு உரிமையின் பயன்கள் மற்றும் பாதிப்புக்களையும் அதிகார சபையினால் சமநிலைப்படுத்தி மாற்றப்படும் வேளையில் அல்லது அவ்வாறான சொத்துக்களை ஏற்றுக் கொள்வது கைவிடப்படுகின்றது. விற்பனை செய்யவுள்ள நிதிச் சொத்துக்களை தொடர்ந்து நியாயமான பெறுமதிக்கு பேணப்படுகின்றது. காலாவதியாகும் வரை வைத்திருக்கும் நிதிச் சொத்துக்களும் கடன் மற்றும் கிடைக்கவேண்டியவைகளும் அமுலில் உள்ள வட்டி அளவினைப் பயன்படுத்துவதன் மூலம் தேய்மானம் மேற்கொண்டு செலவினம் பேணப்படுகின்றது.

விற்பனை செய்யவுள்ள சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டு விற்பனை செயயப்படும வேளையில் அல்லது அவற்றிக்குப் பாதிப்புக்கள் ஏற்படும் வேளையில் வேறு விளக்கமான வருமானத்தின் கீழ் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

விற்பனை செய்யவுள்ள சொத்தாக வகைப்படுத்தப்பட்டுள்ள பிணை விற்பனை செய்யும் போது அல்லது அதற்கு இழப்பீடுகள் ஏற்படும் பட்சத்தில் அவை விளக்கமான வருமானத்தின் கீழ் உட்படுத்தப்பட்டு திரண்ட நியாயப் பெறுமதியின் ஒப்பீட்டுச் சொத்துக்கள் மூலம் பெறப்பட்ட தேறிய இலாபம் / நட்டமாக வருமான வெளிப்பாட்டில் உள்ளடக்கப்படுகின்றது.

விற்பனை செய்யவுள்ள பிணைக்காக அமுலில் உள்ள வட்டி முறையினை பயன்படுத்தி கணிப்பீடு செய்யப்பட்ட வட்டி அளவு வருமான வெளிப்பாட்டில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

#### 3.1.3.நியாயப் பெறுமதியினை உறுதிப்படுத்தல்

கடன் மற்றும் முற்பணங்களைப் போன்று வங்கி உட்பட கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவோருக்கு காணப்படும் பொறுப்புக்களின் நியாயப் பெறுமதி உறுதிப்படுத்தப்படுவது கடன் நிலைமை, அதனைத் தீர்த்தல் மற்றும் செலவினத்தை கருத்திற் கொண்டு தற்போதைய பெறுமதி முறையினைப் பயன்படுத்தும் அடிப்படையிலாகும்.

1.1.4. வர்த்தகக் கிடைக்க வேண்டியவைகள் மற்றும் செலுத்த வேண்டியவைகளின் இழப்பீடுகளுக்கான ஒதுக்கீடுகளை குறைத்து முன்கொண்டு செல்லப்படும் பெறுமதி அவற்றின் நியாயப் பெறுமதியாக பொதுவாக ஏற்றுக் கொள்ள முடியும்.

**அங்கீகாரத்தைக் கைவிடல் (De-recognition)**

கீழ் குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்களில் ஏதேனும் நிதிச் சொத்துக்கள் அல்லது (உரிய சந்தர்ப்பங்களில் நிதிச் சொத்துக்களின் பகுதி அல்லது சமமான நிதிச் சொத்துப் பிரிவின் ஒரு பகுதி) ஏற்றுக் கொள்வது கைவிடப்படுகின்றது.

உரிய சொத்துக்கள் மூலம் பெறும் நிதிப்பாய்ச்சலைப் பொறுப்பேற்கும் உரிமை பூர்த்தியடையும் வேளையில்

சொத்துக்கள் மூலம் பெறும் நிதிப்பாய்ச்சலை பொறுப்பேற்கும் உரிமையினை அதிகார சபையினால் மாற்றப்பட்டுள்ள அல்லது அதிகார சபையினால் பொறுப்பேற்கும் நிதி ''கைமாற்றல்'' (Pass through) வேலைத்திட்டத்தின் கீழ் கூடுதலான தாமதங்கள் இன்றி மூன்றாம் தரப்பினருக்கு செலுத்துவதற்கு கட்டுப்பட்டுள்ள சந்தர்ப்பம் மற்றும்

(அ) அதிகார சபையினால் சொத்துக்களில் பிரதிலாபங்கள் மற்றும் பாதிப்புக்கள் கணிசமான அளவு அடிப்படையில் மாற்றப்பட்டிருப்பின்

(ஆ) அதிகார சபையின் சொத்துக்களின் பிரதிலாபங்கள் மற்றும் பாதிப்புக்கள் சகல கணிசமான அடிப்படையில் மாற்றுதல் அலலது தேக்கி வைக்காது இருப்பினும் சொத்துக்களின் நிருவாகம் மாற்றப்பட்டிருப்பின்

அதிகார சபையினால் ஏதேனும் ஒரு சொத்தின் மூலம் கிடைக்கும் நிதிப் பாய்ச்சல்களைப் பொறுப்பேற்கும் உரிமை மாற்றப்பட்டிருப்பின் அல்லது ''கைமாற்றல்'' (Pass through) வேலைத்திட்டத்தில் உள்ளடக்கி உரிய சொத்துக்களின் சகல பயன்பாடுகள் மற்றும் பாதிப்புக்களை மாற்றியமைத்தல் அல்லது கணிசமாக தேக்கி வைக்காது அதன் நிருவாகத்தை மாற்றாதிருப்பின் அல்லது அவ்வாறான சொத்தினை ஏற்றுக் கொள்வது அதிகார சபை அச்சொத்துக்கு தொடர்ந்தும் தலையீடு செய்யும் வரை மாத்திரமாகும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் அதிகார சபை அச் சொத்துக்கள் சார்ந்ததாக உள்ள பொறுப்பினை ஏற்றுக் கொள்கின்றது. மாற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் அது சார்ந்த பொறுப்புக்கள் அதிகார சபையினால் நிலைப்படுத்தப்பட்டுள்ள பயன்கள் மற்றும் பொறுப்புக்கள் மூலம் சித்தரித்து காட்டும் அடிப்படையில் அளவீடு செய்யப்படுகின்றது. மாற்றப்பட்ட சொத்துக்களுக்கான பிணையின் தன்மைக்கமைய அதிகார சபையின் தலையீடுகள் மதிப்பீடு செய்யப்படுவது சொத்தின் ஆரம்பப் பெறுமதி மற்றும் அதிகார சபைக்கு மீள செலுத்த வேண்டி ஏற்படக்கூடிய உயர்ந்தபட்ச பெறுமதி ஆகிய இரண்டின் குறைந்த பெறுமதி அடிப்படையிலாகும்.

## 4. சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள்

### 4.1. செலவினம் / மீள்மதிப்பீடு

உரிமையாளர் வசித்துவரும் சொத்துக்கள் உட்பட சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் நாளாந்த சேவைச் செலவினங்களைத் தவிர திரண்ட தேய்மானம் மற்றும் திரண்ட இழப்பீடுகளை குறைத்து செலவினத்திற்கு குறிப்பிடப்படுகின்றது. மீள் ஒதுக்கீடு அல்லது பிரதான பரிசோதனை செலவினத்தைக் கொண்டவைகளின் செலவினம் நம்பகத்தன்மையுடன் மதிப்பீடு செய்யப்பட்டிருப்பின் மற்றும் உரிய வகை சார்ந்ததாக எதிர்காலத்தில் நிறுவனத்திற்குப் பொருளாதார பயன்கள் கிடைக்கக் கூடியதாக இருப்பின் அவ்வாறான செலவினம் மூலதனமாக்கப்படுகின்றது.

சொத்துக்கள் மற்றும் உபகரணங்களின் செலவினமாக கருதப்படுவது அவற்றை பொறுப்பேற்றல் அல்லது கட்டியெழுப்பல் செலவினம் தேவையானவாறு பயன்படுத்தக்கூடிய நிலைமைக்கு முன்கொண்டு செல்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவினமாகும். சொத்துக்கள் மற்றும் உபகரணங்கள் அவ் மீள் மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்கள் வகைகளின் சேர்த்து மீள் மதிப்பீடு செய்யப்படுகின்றன. அதிகார சபையினால் சகல 03 வருடங்களுக்கு ஒரு தடவையும் சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்யும் கொள்கை 2014 ஆம் தொடக்கம் மாற்றியமைத்து சகல 05 ஆண்டுகளுக்கு ஒருமுறை மீள் மதிப்பீடுகளை மேற்கொள்ளும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது எவ்வாறாக இருப்பினும் மீள் மதிப்பீட்டுக்கு உட்படும் சொத்துக்களின் நியாயப் பெறுமதிக்கு முன்கொண்டு செல்லப்பட்ட அளவில் பாரியளவு மாற்றங்கள் ஏற்படும் பட்சத்தில் அவ்வாறான சொத்துக்கள் மீள் மதிப்பீட்டுக்குட்படுத்தப்படுகின்றன.

இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை 2017 திசெம்பர் 31 இல் உள்ளவறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று மற்றும் உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு 2002 இன் 34ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகரசபை சட்டத்தின் 14 (4) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) (சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிற கூற்றுகளிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுபாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக் கூற்றுக்ககளின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு





நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்வதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுபாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகார சபையின் உள்ளகக் கட்டுபாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டு மொத்த சம்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**2 நிதிக் கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

நிதிக் கூற்றுக்களானவை இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையை அத் திகியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 பெற வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு அதிகார சபைக்கு கிடைக்க வேண்டிய பெறுமதி கூட்டிய வரியின் பெறுமதி ரூபா 117.46 மில்லின் தொகையாக இருந்தது. அம்மீதி கடந்த ஆண்டில் காணப்பட்ட ரூபா 59.50 மில்லியன் உடன் இணக்கஞ் செய்த போது ரூபா 57.97 மில்லியன் இனால் அதாவது 97 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்திருந்தது. நிறுவனத்தின் முடிவுற்ற வரி போதியளவு காணப்பட்டமையால் இந்த பெறுமதி நீண்ட காலமாக சேகரமாகி இருந்து வந்துள்ளது என அவதானிக்கப்பட்டது. இந்த பணத்தை அறவீடு செய்வது தொடர்பாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் தினைக்களத்துடன் கலந்துரையாடல் நடத்தப்பட்ட போதிலும் இதுவரை இறுதி தீர்மானமொன்று அனுகி இருக்கவில்லை. இதன் காரணமாக அப்பணத்தை அறவீடு செய்தல் நிச்சயமற்றது என அவதானிக்கப்பட்டது.

(ஆ) அதிகார சபையினால் மீளளிப்பு செய்யும் அடிப்படை மட்டக்களப்பு விமான நிலையம் நிர்மாணிக்கும் அலுவல்களுக்காக 2016 ஆண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 18.97 மில்லியன் தொகை போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சிலிருந்து 2017 ஆண்டு இறுதியளவிலும் மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

சட்டங்கள் விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவம் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களும் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 2015 மே 25 திகதி பிசுடி/1/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 4.2 | அரச நிறுவனங்களுக்கு பொதுப் போக்குவரத்து வசதிகள் வழங்கப்படக் கூடிய உச்ச எல்லை வருவதற்கும் போவதற்கும் 100 கீ.மி தூரமாகும் எனினும் அதிகார சபையின் தலைமை அலுவலகத்தை கட்டுநாயகவில் நிறுவி இருந்தமையால் அதன் பதவியனியினருக்கு சேவைக்கு வருவதற்காக தொடங்கொட முதல் கட்டுநாயக வரை பஸ் வண்டி ஒன்றிற்காக நாளாந்தம் ரூபா 16,800 தொகை செலுத்தும் அடிப்படை வருவதற்கும் போவதற்கும் 188 கி.மி தூரம் பிரயாணம் செய்வதற்காக பஸ் வண்டி ஒன்று ஈடுபடுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2016 ஜனவரி 01 ஆம் திகதி 01/2016 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரிவு 6 | அதிகார சபையின் கீழுள்ள வாகனங்கள் தொடர்பாக ஆரம்ப அறிக்கை வழங்குவதற்கும், வழங்கிய பின்னர் அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் படிவத்தின் பிரகாரம் ஒவ்வொரு காலாண்டு இறுதியின் பின்னர் வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் முகாமைத்துவ சேவை கணக்காய்வு திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமெனினும் அதிகார சபையினால் 2017 ஆண்டின் போது அவ் அறிக்கை சமர்பித்திருக்கவில்லை. |
| (இ) | 2008 மே 22 ஆம் திகதி 1550/7 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 8 ஆம் பிரிவு | அதிகார சபை சேகரிக்கும் வெளிநாட்டு விற்பனை மிகைவதிப்பு திரண்ட நிதியத்திற்கு செலவு வைப்பதற்காக நடைமுறை ஒன்று மீளாய்வாண்டு இறுதிவரை தயாரித்திருக்கவில்லை. 2017 ஆண்டின் போது இவ்வாறு அதிகார சபையின் கணக்கிற்கு சேகரித்திருந்த வெளிநாட்டு விற்பனவு மிகை விதிப்பு ரூபா 1,525.63 மில்லியன் தொகையாகும். |
| (ஈ) | 2017 திசெம்பர் 21 திகதி 2050/38 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் | விமான சேவை வழங்கும் நிறுவனத்தினால் தற்போது பயன்படுத்தும் கட்டுநாயக விமான நிலையம் , இரத்மலான விமான நிலையம் மற்றும் 07 இடங்கள் தொடர்பான விண்வெளி வசதிகள் மற்றும் இணைந்த காணி சிவில் |

விமானப் போக்குவரத்து அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது விமான சேவை அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 88 இன் பிரகாரம் அதிகார சபையினால் தீர்மானிக்கும் நிபந்தனைகளின் மீது மீண்டும் இந்த காணிகள் விமான சேவைகள் வழங்கும் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட வேண்டுமெனினும் அவ் அலுவல்கள் 2018 ஏப்ரல் 30 திகதி வரை பூர்த்தி செய்திருக்கவில்லை.

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் ஒட்டுமொத்த செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,042.91 மில்லியன் இற்கான இலாபம் ஒன்றாகக் காணப்பட்டிருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 881.14 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 161.77 மில்லியன் வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக செயற்பாட்டு வருமானம் ரூபா 304.31 மில்லியன் அதாவது 20 சதவீதத்தினாலும், செயற்பாடுகள் அல்லாத வருமானம் ரூபா 29.02 இனால் அதாவது 18 சதவீத்தினால் வளர்ச்சி அடைதல் காரணமாயுள்ளது.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் செயற்பாட்டு இலாபம், ஊழியர் ஊதியம், பல்வேறு வகையான வரிகள் ஆக தேசிய பொருளதாரத்திற்கு கூட்டிய பெறுமதிகள் தொடர்பான பரிசோதனையின் போது 2013 ஆண்டின் போது ரூபா 1,002.81 மில்லியன் தொகையான பங்களிப்பு 2017 ஆண்டளவில் ரூபா 1,792.98 மில்லியன் வரை வளர்ச்சியடைந்திருந்தது. இதற்காக ஊழியர் ஊதியம் மற்றும் வருமான வரி செலுத்துவதில் படிப்படியாக ஏற்பட்டிருந்த அதிகரிப்பு முக்கிய காரணமாக இருந்தது.





### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் பொருண்மையான விகிதாசாரங்கள் மற்றும் சதவீதங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 |
|---|---|---|---|---|---|
| புறழ்விற்கு தேறிய இலாப விகிதசாரம் (நூற்றிற்கு) | 74 | 74 | 77 | 76 | 69 |
| புறழ்விற்கு பதவியணி கிரயம்(நூற்றிற்கு) | 14 | 14 | 12 | 11 | 13 |
| நடைமுறை விகிதாசாரம் | 2.2:1 | 2.85:1 | 3:1 | 3:1 | 2.4:1 |

புறழ்விற்கு பதவியணிக் கிரயம் 2013 ஆண்டிற்கு ஒப்பாக 2014 இல் குறைவடைதல் ஒன்று காட்டிய போதிலும் அது 2014 ஆண்டு முதல் மீளாய்வாண்டு இறுதி அளவில் படிப்படியாக அதிகரிப்பதாகவும் 2014 ஆண்டின் போது 3:1 ஆக காணப்பட்ட நடைமுறை விகிதம் 2016 ஆண்டு முதல் படிப்படியாக குறைவடைவதாகவும் அவதானிக்கப்பட்டது. சொத்துக்கள், உரிமை மூலதனம் மற்றும் பொறுப்புகளின் அசைவுகளை கவனம் செலுத்தும் போது 2016 ஆண்டிற்கு ஒப்பாக 2017 ஆண்டின் போது மொத்த சொத்துக்கள் ரூபா 1,188.06 மில்லியனினால் அதாவது 33 சதவீதத்தினால் மற்றும் உரிமை மூலதனம் ரூபா 668.14 மில்லியனினால் அதாவது 27 சதவீதத்தினால் அதிகரித்து இருந்ததுடன், மொத்த பொறுப்புகளை ரூபா 519.92 மில்லியனினால் அதாவது 45 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 திட்டமிடல்

அதிகார சபை 2016 முதல் 2018 வரையான 03 வருட காலத்திற்காக கூட்டிணைந்த திட்டமொன்று தயாரித்து அதன் பிரகாரம் திட்டமிட்ட இலக்குகளை நெருங்குவதற்கு இயன்ற விதமாக அதிகார சபையின் செயற்பாட்டு அலுவல்களை மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2018 ஆண்டிற்கான அதிகார சபையின் அனைத்து செயற்பாட்டு விடயங்களும் அடங்கும் விதத்தில் 18 செய்பணிகள் இனங்கண்டு அதற்கு நேரொத்த பிரதான செயலாற்றுகை சுட்டிகள் (Key performance Indicators) அறிமுகப்படுத்தியிருந்த போதிலும் அதற்கு இணங்கக் கூடிய விதமாக செயலாற்றுகையை அறிக்கை தயாரித்திருக்கவில்லை.

### 4.1.2 செயல் ஆற்றுகை மற்றும் மீளாய்வு

2010 ஆண்டின் போது சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு (ICAO) வெளியிடப்பட்ட அரச உபத்திரவமின்மைக்கான பொழிப்பு அறிக்கையின் பிரகாரம் 191 நாடுகளில், 19 ஆவது இடத்தை பெற்றிருந்தது.

2002 இன் 34 ஆம் இலக்க இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை சட்டத்தின் குறிப்பிட்டுள்ளவாறு இலங்கையில் தேசிய விமானப் போக்குவரத்து கொள்கை தயாரிப்பதற்காக அதிகார சபையினால் அமைச்சருக்கு உதவ வேண்டும் அதன் பிரகாரம் பலவருட காலத்திற்கு முன்னர் தேசிய விமானப் போக்குவரத்துச் சேவை கொள்ளை ஒன்று தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 திகதி வரை அதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை தேசிய விமான போக்குவர்த்து கொள்கை ஒன்று காணப்படாமையால் விமானப் போக்குவரத்து அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்க முடியாதுள்ளது என தலைவர் எனக்கு அறிவித்திருந்தார்.

### 4.1.3 விமானப் போக்குவரத்து பாதுகாப்பு பிரிவின் செயலாற்றுகை

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நுண் கணிப்பு (Surveillances) முன்னேற்றம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன

(i) சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் விமான போக்குவரத்து பாதுகாப்பு (Aviation Security) பிரிவின் 2016 மற்றும் 2017 ஆண்டுகள் தொடர்பாக செய்ய வேண்டியிருந்த நுண் கணிப்பு (Surveillances) எண்ணிக்கை முறையே 47 தொகை மற்றும் 32 தொகை என வருடாந்த கணிப்பு திட்டத்தின் குறிப்பிட்டிருந்த போதிலும் உண்மையாக செயற்படுத்தியிருந்த கணிப்புகளின் எண்ணிக்கை முறையே 29 தொகை மற்றும் 18 தொகை ஆக இருந்தது.

(ii) 2017 ஆண்டின் போது விமானப் போக்குவரத்து பாதுகாப்பு கணிப்பு விடயங்கள் நிகழ்ச்சி திட்டத்தின் பிரகாரம் 03 பரிசோதனை (Test) திட்டமிடப்பட்டிருந்த போதிலும் பரிசோதனை ஒன்றும் செயற்படுத்தியிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) 2010 இன் 14 ஆம் இலக்க சிவில் விமானப் போக்குவரத்து சட்டத்தின் பிரிவுகள் 55 மற்றும் 56 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் விமான விபத்துக்கள் மற்றும் பாரதூரமான விமான விபத்துக்கள் தொடர்பாக விசாரணை





மேற்கொண்டு விமானப் போக்குவரத்து அதிகார சபைக்கு அறிவிப்பதற்காக ஒவ்வொரு சம்பவங்கள் தொடர்பாகவும் விசாரணை சபை ஒன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் 2010 ஆண்டின் போது சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு (ICAO) இனால் சமர்பிக்கபட்டிருந்த கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் மேற்குறிப்பிட்ட விசாரணை சபைக்கு பதிலாக நிரந்தரமாக செயற்பட வேண்டிய "விமான விபத்துக்கள் விசாரணை சுதந்திர அதிகார சபை" ஒன்று நிறுவப்பட வேண்டுமென அழுத்தம் கொடுக்கப்பட்டிருந்தது எனினும் அந்த சுதந்திர அதிகார சபையை நிறுவுவதற்கு உரிய அலுவல்கள் 2017 வருட இறுதி அளவிலும் ஆரம்ப நிலையிலே காணப்பட்டது.

(ஆ) 2016 ஜுலை 01 திகதி 1973/78 ஆம் இலக்க வர்த்தமானி அறிவிலின் பிரகாரம் மட்டகளப்பு விமான நிலையம், சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைக்கு சாட்டப்பட்டிருந்தது 2017 ஆண்டின் போது அந்த விமான நிலையம் அமைந்துள்ள காணி ரூபா 495.82 மில்லியன் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்ககுளில் காட்டப்பட்டிருந்த போதிலும் அதற்கான காணி உறுதி 2018 ஜுன் 30 திகதி வரை பெற்றிருக்கவில்லை.

(இ) மட்டகளப்பு விமான நிலையத்தில் பறக்கும் பாடசாலை ஒன்று நடாத்துவதற்கு 2017 செப்டம்பர் 21 திகதி செய்தித்தாள் அறிவித்தலின் பிரகாரம் முன் வந்திருந்த ஒரே ஒரு நிறுவனம், அமைச்சரவை அங்கீகாரத்தின் மீது தெரிவு செய்யப்பட்டிருந்தது அந் நிறுவனத்தினால் 2017 செப்டம்பர் 30 திகதி அல்லது அதற்கு முன்னர் அதிகார சபைக்கு சமர்பிக்கபட வேண்டிய வர்த்தக திட்டம் (Business plan) 2018 ஜுன் 30 திகதி வரை சமர்பித்திருக்கவில்லை.

### 4.3 செயற்பாடு தொழிற்பாடு

சர்வதேச சிவில் விமானப் போக்குவரத்து அமைப்பு (ICAO) இனால் 2010 ஆண்டில் மேற்கொள்ளபட்டுள்ள அரச உபத்திரமின்மைக்கான கணக்காய்வின் போது அதிகார சபையின் ஒவ்வொரு பிரிவு தொடர்பாகவும் சரிசெய்து கொள்ளப்பட வேண்டிய 80 பலவீனங்கள் சரிசெய்து கொள்ள வேண்டும் என விதந்துரைக்கப்பட்டிருந்தது. தெரிவு கணக்காய்வு பரிசோதனையின் பிரகாரம் அவற்றில் வான் மாலுமி சேவை பிரிவு மற்றும் விபத்து விசாரணை பிரிவு தொடர்பாக சமர்பித்திருந்த 07 பலவீனங்களில் 02 வருமாறு ஆகும்.

| | பலவீனம் | சரி செய்வதற்கான விதப்புரை மற்றும் இலக்கு நாட்கள் | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| (i) | வலயத்தின் ஏனைய நாடுகளுடன் வான் பிரயாணம் தடைபடுதல் சொத்துக்கள் தடைபடுதல் விமானப் போக்குவரத்துச் சேவை மற்றும் தொடர்புடைய துனை சேவைகள் தொடர்பாக சந்தர்பத்திற்கு ஏற்ற திட்டமொன்று தயாரிக்காமை. | 2011 திசெம்பர் 31 திகதியில், உள்ளவாறு பலவீனங்கள் தவிர்த்துக் கொள்ளும் விதத்தில் வலயத்தின் நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கையொப்பமிடல். | நாடுகளுடன் உடன்படிக்கைகளுக்காக இணங்கியிருந்த போதிலும் இராஜதந்திர முறையில் உடன்படிக்கைகள் கையொப்பமிட்டிருக்கவில்லை. |
| (ii) | வானிலை தரவுகள் வழங்கும் தரப்பினரால் தனது நிறுவனத்தில் அமைப்பு தரமான சேவை (Quality Service) நடைமுறையொன்று நிறுவியிருக்காமை. | 2011 திசெம்பர் 31 திகதிக்கு முன்னர் தர நடைமுறை ஒன்று நிறுவுதல் | வானிலை ஆராய்ச்சி திணைக்களத்தில் உரிய நடைமுறை ஒன்று நிறுவி இருத்தல் உறுதிப் படுத்தப்படவில்லை. |

### 4.4 சர்ச்சைகுறிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்

அதிகார சபையின் ஊழியர்களுக்காக 2016 ஆண்டிற்கான ஊழியர் பணிக்கொடைக்காக ஒதுக்குதல் மாதாந்த சம்பளத்தில் அரைவாசியை அடிப்படையாக கொண்டு கணக்கிடப்பட்டிருந்ததுடன் 2017 அண்டின் போது மாதாந்த சம்பளத்தை அடிப்படையாக கொண்டு ஊழியர் பணிக்கொடைக்காக ஒதுக்கம் மேற்கொள்ளப்பட்டிருந்தது அதன் பிரகரம் மீளாய்வாண்டிற்காக பணிக்கொடை ஒதுக்கக் கணக்கு ரூபா 14.30 மில்லியன் தொகையினால் மிகை கணிப்பிடப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போது 06 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 6.28 மில்லியன் தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது.

### 4.5 விளைவற்ற மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்

சிவில் விமான சேவை அதிகார சபையினால் மத்தளை விமான நிலையத்தில் ரூபா 45.04 மில்லியன் செலவிடப்பட்டு 1200 சதுர அடிக்கான அலுவலகம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. எனினும் 2017 ஆண்டின் போது விமான நிலையத்தின்



செயற்பாட்டு அலுவல்கள் குறைந்துள்ளமையால் அவ் அலுவலகம் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது.

### 4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கட்டுநாயக வில் அமைந்துள்ள புதிய அலுவலகக் கட்டிடம் நிர்மாணிக்கும் அலுவல்களின் மேற்பார்வை மற்றும் மதிஉரைக்காக ரூபா 24.40 மில்லியன் இற்கான கட்டணம் ஒன்று செலுத்தும் அடிப்படையில் பொறியியல் சேவை உசாத்துனை கம்பனி ஒன்றிற்கு சாடப்பட்டிருந்த போதும் ரூபா 250,000 இற்கான மாதாந்த கொடுப்பனவு ஒன்று செலுத்தும் அடிப்படையில் அவ் அலுவல்களுக்காக சிவில் பொறியியலாளர் ஒருவர் மற்றும் அவருக்கு உதவிக்காக அலுவலக உதவியாளர் ஒருவரும் 2016 ஜனவரி முதல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. 2018 மார்ச் வரை அவ் இருவர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ரூபா 8.77 மில்லியன் இற்கான செலவு சிக்கனமற்ற செலவு ஒன்று என அவதானிக்கப்பட்டது.

## 5 நிலை பேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்

நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு "நிகழ்ச்சி நிரல்" இன் பிரகாரம் அனைத்து அரச நிறுவனத்தினாலும் செயற்பட வேண்டிக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு தொடர்பாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையினால் தனது நோக்கெல்லையின் கீழ் வருகின்ற கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டுமென்பது தொடர்பாக அறிந்திருந்தனர். எவ்வாறாயினும் அதனது கருமங்களுடன் தொடர்பாக நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளும் அந்த இலக்குகளை நோக்கி நெருங்குவதற்கான திருப்பு முனைகளும் இலக்குகள் மீது நெருங்குவதை அளவை செய்வதற்கான சுட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 6 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 உள்ளகக் கணக்காய்வு

அதிகார சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவு 2017 ஆண்டிற்கான கணக்காய்வு வேலை திட்டம் ஒன்று தயாரித்திருந்த போதிலும், அதிகார சபையின் பௌதீக செயலாற்றுகை தொடர்பாக போதியளவு மதிப்பாய்வு ஒன்று ஏற்படக் கூடிய விதமாக கணக்காய்வு ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை.

## 6.2 ஒப்பந்த வேலை நிறுவாகத்தின் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடுநாயகவில் நிர்மானிக்கப்பட்ட அதிகார சபையின் தலைமை அலுவலகக் கட்டிடம் 2017 ஜுன் 13 ஆம் திகதி வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டி இருந்தது. மேலும் இந்த அலுவல்கள் அமப/17/1019/709/041 இலக்கம் கொண்ட 2017 ஜுன் 07 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், 2017 செப்டம்பர் 30 திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. எனினும் எதிர்பார்த்த விதமாக செப்டம்பர் 30 ஆம் திகதி நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத போதிலும் 2018ஜனவரி மாதத்தில் அதிகார சபை அக்கட்டத்தில் இருப்பிடமாகியுள்ளது. எவ்வாறாயினும் நிர்மாண வேலைகள் தாமதப்படுத்திய காரணத்தினால் 2017 அக்தோபர் 01 திகதி முதல் ஹுனுப்பிடியவில் அமைந்துள்ள தலைமை அலுவலகம் நடத்தப்பட்டு வந்த வாடகைக் கட்டிடத்திற்காக 03 மாதங்களுக்காக மேலதிகமாக செலுத்திய கட்டிட வாடகை செலவு ரூபா 14.91 மில்லியன் தொகை ஆகும்.

(ஆ) மேற்கூறிய ‘அ’ இல் குறிப்பிட்ட கடுநாயக தலைமை அலுவலக கட்டிடம் 2018 ஜனவரியில் திறக்கப்பட்டிருந்த போதிலும் 2018 மார்ச் 19 அளவில் மேலும் அடிப்படை செயற்பாடுகள் 22 இல் Flag Posts, Boards, terrace Works ஆகிய 03 விடயங்கள் ஆரம்பித்திருக்காததுடன், மேலும் 04 விடயங்கள் பூர்த்தி செய்தல் வீதம் 15 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையான மட்டத்திலேயே காணப்பட்டது.

## 6.3 பாதீட்டு கட்டுபாடு

தலைமை அலுவலக கட்டிட நிர்மாண வேலைக்கான மதிப்பீட்டு கிரயம் ரூபா 803.37 மில்லியனாக காணப்பட்டதுடன் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 281.22 மில்லியனுக்கான நிர்மான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதற்காக மேலும் மேற்கொள்ளப்பட வேண்டிய ரூபா 522.15 மில்லியன் கிரயத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 760 மில்லியன் இதற்கான நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் 2017 ஆண்டின் போது ரூபா 307.34 மில்லியன் அதாவது நிதி ஏற்பாடுகளில் 40 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக கட்டிடத்தின் நிர்மான வேலைக்காக ஒதுக்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட தொகைகள் இடையே ரூபா 452.06 மில்லியன் தொகை அதாவது 60 சதவீதம் மிகை ஒதுக்கம் ஒன்றும் அவதானிக்கப்பட்டது.



## 7 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு குறைபாடுகளை அவ்வப்போது அதிகார சபை தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது கீழ்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) ஒப்பந்த நிருவாகம் | நிர்மான வேலைகள் தாமதப்படல் |
| (ஆ) பெறவேண்டிய பணம் | அறவீடு செய்தல் தாமதமடைதல் |
| (இ) சொத்துக்கள் கட்டுபாடு | உடன்படிக்கை பொறுப்பு ஒன்றிற்கு வந்து போதலும் காணிகளை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஈ) செயலாற்றுகை | திட்டமிட்டுள்ளவாறு தெரிவு ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமை |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம்.காமினி விஜேசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# **கணக்காய்வாளர்** அறிக்கைக்கான பதில

கணக்காய்வாளர்
கணக்காய்வாளர் திணைக்களம்,
பத்தரமுல்ல.

**இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையில் 2017 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதி வெளிப்பாடுகள் தொடர்பாக 1971 இலக்கம் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் 14(2)(சி) வாசகத்திற்கமைய கணக்காய்வாளர் அறிக்கை**

**மேற்கூறப்பட்ட மற்றும் அதனுடன் தொடர்புபட்ட விடயம் தொடர்பாக தங்களது இலக்கம் ஏ.வீ.ஏ/வீ/சீ.ஏ.ஏ.எஸ்.எல்./எப்.ஏ./1/17/2 மற்றும் 2018.10.10 ஆம் திகதிய அறிக்கை தொடர்பாக**

**சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு விடயங்கள் தொடர்பில் இவ் அதிகார சபையின் கருத்துக்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.**

**2.2. கிடைக்க வேண்டிய கணக்கு**

அ) தங்களது மேற்பார்வைக்கு இணங்குகிறேன். இருப்பினும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இந்நிதியினை வழங்குவது தொடர்பில் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்வதுடன் இந்நிறுவனம் அது தொடர்பில் பின்னூட்டல்களை மேற்கொள்கின்றது. இந்நிதி கிடைப்பதில் நிச்சயமற்ற நிலைமைகள் இல்லை என்பதே எனது கருத்தாகும்.

ஆ) தங்களது மேற்பார்வைக்கு இணங்குகிறேன். இது தொடர்பில் நிரல் அமைச்சினால் தொடர்ந்தும் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் பிரதம கணக்கு வழங்கும் உத்தியோகத்தரின் ஆலோசனைகளுக்கமைய 2018 ஆம் ஆண்டில் இது தொடர்பில் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள குறித்துக் கொள்ளப்பட்டது.

**2.3. சட்டங்கள், ஒழுங்குக் கோவைகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு ஒவ்வாமை**

| | | |
|---|---|---|
| (அ) | 2015 மே 25 ஆம் திகதிய இலக்கம் பீ.ஈ.டி/2015 கொண்ட அரச தொழில்முயற்சி சுற்றறிக்கை 4.2 வாசகம் | கீழ்க் குறிப்பிடப்பட்ட காரணங்களுக்கமைய தங்களது மேற்பார்வையுடன் இணங்குவது சிரமானது.<br><br>அதிகார சபையின் பணியாளர் சபை மற்றும் நிருவாக சட்ட ஒழுங்குக் கோவையில் 24.2 வாசகத்திற்கமைய சேவை இடத்திலிருந்து 60 கிலோ மீற்றர் வரை ஒருபுறம் போக்குவரத்து வசதிகள் வழங்க முடிவதுடன், புதிய அலுவலகம் கட்டுநாயக்காவிற்கு மாற்றப்பட்டமையைத் தொடர்ந்து கொழும்பிலிருந்து 30 கிலோமீற்றர் அதிகமானதாகும். இதனால் இந்த தூர அளவு கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2016 ஜனவரி 01 ஆம் திகதிய இலக்கம் பீ.ஈ.டி./1/2016 கொண்ட முகாமைத்துவம் கணக்காய்வு சுற்றறிக்கையின் 06 வது வாசகம் | தங்களது மேற்பார்வைக்கு இணங்குகிறேன். 2018 ஆம் ஆண்டு தொடக்கம் இவ் அறிக்கை உரிய தினத்திற்கு அனுப்ப குறித்துக் கொள்ளப்பட்டது. |





| | | |
|---|---|---|
| (இ) | 2018 மே 22 ஆம் திகதிய இலக்கம் 1550/7 கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் 08 வது வாசகம் | கீழ்க் குறிப்பிட்ட தங்களது வாசகத்துடன் இணங்குவது சிரமமானது.<br><br>வெளிநாட்டு விற்பனை மிகைக்கட்டணம் சேர்த்துக் கொள்ளப்பட்ட நிதிமூலம் ஏனைய வருமான வகைகளிலிருந்து கிடைக்கும் நிதிமூலம் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் வரவு செலவுத் திட்ட ஆவணத்திற்கமைய செலவினங்களை மேற்கொண்டு 1971 இலக்கம் 38 கொண்ட நிதிச் சட்டத்தின் 07(1) வாசகத்தின் கீழ் எதிர்வரும் 05 ஆண்டுகளுக்காக செலவினங்களை மேற்கொள்வதற்குத் தேவையான நிறுவனத்தின் நிதிப் பலத்தினை உறுதிப்படுத்தி எஞ்சிய நிதியை திரண்ட நிதியத்திற்கு அனுப்புவது இவ் அதிகார சபையின் வருமானத்துடன் தொடர்புபட்ட முறையாகும். இதற்கமைய நிறுவனத்தின் நிதி நிலைமைகள் சீரானதைத் தொடர்ந்து கடந்த ஆண்டுகளில் மற்றும் இவ்வாண்டில் கீழ்க் குறிப்பிட்டவாறு அதிகார சபையினால் திரண்ட நிதியத்திற்கு நிதி வைப்பிலிடப்பட்டுள்ளது. |




இம்முறை பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள நிதி ஒழுங்கு விதிமுறை கையேடு (Financial Procedures Manual) உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| (ஈ) | 2017 டிசம்பர் 31 ஆம் திகதிய இலக்கம் 2050/38 கொண்ட வர்த்தமானி அறிவித்தல் | தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன். 2017 டிசம்பர் 21 ஆம் திகதிய இலக்கம் 2050/38 கொண்ட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அசையாச் சொத்து கௌரவ அமைச்சரினால் அதிகார சபைக்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்த போதிலும் அவ் அசையாச் சொத்துக்களின் எல்லை அளவு தொடர்பில் உரிய ஆவணங்கள் வழங்கப்படவில்லை என்பதினால் உரிய அசையாச் சொத்துக்களின் எல்லை அளவு மற்றும் தற்போதைய பயன்பாடு உட்பட ஏனைய சொத்துக்கள் ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பிலான மதிப்பீடுகளை பெற்றுக் கொண்டதன் பின்னர் மற்றும் அவற்றை அதிகார சபைச் சொத்து ஆவணத்தில் உரியவாறு உள்ளடக்கியதன் பின்னர் உரியவாறு பொறுப்பேற்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காகத் தேவையான செயற்பாடுகள் ஏற்கனவே அமுல்படுத்தப் பட்டுள்ளன. |

## 03. நிதி மீளாய்வு

### 3.1. நிதிப் பெறுபேறுகள்

தங்களினால் குறிப்பிடப்பட்டுள்ள பகுப்பாய்வுக்கு இணங்குகிறேன்.

### 3.2. விளக்கமான நிதி மீளாய்வு

தங்களினால் குறிப்பிடப்பட்டுள்ள பகுப்பாய்வுக்கு இணங்குகிறேன்.

## 04. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1. செயற்சாதனை

#### 4.1.1. திட்டமிடல்களை மேற்கொள்ளல்.

தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன். அதிகார சபையின் பிரதான செயற்சாதனைச் சுட்டி, செயற்சாதனை அறிக்கைகளைத் தயாரிக்கும் போது அதிகார சபையின் சகல செயற்பாடுகளையும் உள்ளடக்கக்கூடியவாறு இனங்காணப்பட்டுள்ளதுடன், இலக்கம் 18 க்கு உரியவாறு தயாரிக்கப்பட்டுள்ள போதிலும் அவை துணைப்பிரதியாக குறிப்பிடப்படவில்லை என்பதினால் எதிர்வரும் காலங்களில் செயற்சாதனை அறிக்கையினை சமர்ப்பிக்கும் போது துணைப்பிரதியாக சமர்ப்பிக்க குறித்துக் கொள்ளப்பட்டது.

#### 4.1.2. செயற்பாடுகள் மற்றும் மீளாய்வு

தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன்.

#### 4.1.3. விமான சேவைப் பாதுகாப்புப் பிரிவின் செயற்சாதனைகள்

கீழ்க் குறிப்பிட்ட தங்களது மேற்பார்வையுடன் இணங்குவது சிரமமானது.

சிவில் விமான சேவைப் பரிசோதகர்களின் பற்றாக்குறை காரணமாக 2016 ஆம் ஆண்டுக்காக திட்டமிடப்பட்டிருந்த பாதுகாப்புப் பரீட்சை 47 இல் 18 ஐ விமான சேவைப் பாதுகாப்பு பிரிவில் மேற்கொள்ள முடியவில்லை. மேலும் 2017 ஆம் ஆண்டுக்காக திட்டமிடப்பட்டிருந்த பாதுகாப்புப் பரீட்சை 32 இல் 14 பரீட்சைகள் மாத்திரம் விமான சேவைப் பாதுகாப்பு பிரிவில் மேற்கொள்வதற்கு இப்பரீட்சை பரிசோதகர்களின் பற்றாக்குறை காரணமாக அமைந்தது.

### 4.2. முகாமைத்துவச் செயற்பாடுகள்

(அ) தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன். விமான விபத்து விசாரனைக்குத் தேவையான சட்ட ஒழுங்குகளை வகுப்பவர்களினால் ஏற்கனவே அது தொடர்பான செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் அது அங்கீகாரத்திற்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன். இதற்காக காணி உறுதிப்பத்திரத்தை பெற்றுக் கொண்டு முறையான விண்ணப்பப்படிவம் மட்டக்களப்பு மாவட்ட செயலாளருக்கு சமர்ப்பிக்க இருப்பதுடன் அதற்காக பின்னூட்டல்கள் மேற்கொள்ளப்படுகின்றன.



(இ) கீழ்க் குறிப்பிட்ட காரணங்களுக்கமைய தங்களது மேற்பார்வையுடன் இணங்குவது சிரமமானதாகும்.

மட்டக்களப்பு விமான நிலையம் மிக ஆரம்ப மட்டத்தில் காணப்படும் விமான நிலையம் என்பதுடன், விமானப் படையின் கீழ் நீண்டகாலமாக இது நிர்வகிக்கப்பட்டமையினால் சிவில் விமான சேவை போக்குவரத்துப் பணிகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

சிவில் விமான சேவைத் துறையின் முன்னேற்றங்களுக்காக சிவில் விமான சேவைச் சட்டத்தில் அமைச்சிருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் மட்டக்களப்பு விமான நிலையத்தின் விமானி பயிற்சி கல்லூரியினை தாபிக்கும் நோக்குடன் தேசிய பத்திரிகைகளில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டதுடன், இதற்கு வரவேற்பு வழங்கும் வகையில் உள்நாட்டு விமானங்களை செயற்படுத்தும் வகையில் விமானச் செயற்பாட்டுச் சான்றிதழ் கொண்ட மற்றும் விமானப் பயிற்சி கல்லூரி அனுமதிப்பத்திரம் கொண்ட விமானக் கம்பனியான சகுரா அவியேசன் கம்பனி மாத்திரம் தமது விருப்பத்தைத் தெரிவித்தது. விமானிப் பயிற்சி கல்லூரியைத் தாபிப்பதற்காக சிறிய மற்றும் நடுத்தரளவில் ஜப்பானின் பல விமானங்களை இறக்குமதி செய்து மட்டக்களப்பு விமான நிலையத்தில் உள்நாட்டு விமான சேவை அலகினை ஆரம்பிப்பதற்கான திட்டங்கள் இவர்களிடம் காணப்படுவதுடன் இவர்களின் திட்டங்களுக்கு நிதி அமைச்சின் இணக்கப்பாட்டிற்கமைய அமைச்சரவை அங்கீகாரமும் கிடைக்கப் பெற்றுள்ளது.

இது எவ்வாறாக இருப்பினும் இக்கம்பனியுடன் உடன்படிக்கை செய்து கொள்ளப்படவில்லை என்பதுடன் இதன்போது அவர்களின் வர்த்தக நோக்கங்களுக்கமைய உடன்படிக்கையின் நிபந்தனைகள் வகுக்கப்படுகின்றன.

### 4.3. செயற்பாட்டுப் பணிகள்

இங்கு மேற்பார்வைக்குட்படுத்துவதற்கு உரியதாக அமைவது விமானப் போக்குவரத்து சேவைப் பிரிவு மற்றும் விபத்து விசாரனைப் பிரிவாக திருத்தியமைக்கப்பட வேண்டும்.

i. தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன். இவ் உடன்படிக்கையினை கைச்சாத்திடுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ii. கீழ்க் குறிப்பிட்டப்பட்ட காரணங்களுக்கமைய தங்களது மேற்பார்வையுடன் இணங்குவது சிரமமானதாகும்.

மேற்கூறப்பட்ட பணி இடம்பெற வேண்டியது வளிமண்டளவியல் திணைக்களத்தின் மூலமாகும். இப்பணிகள் தொடர்பில் அதிகார சபை வளிமண்டளவியல் திணைக்களத்திற்கு தொடர்ந்தும் அறிவுறுத்தியுள்ளது.

### 4.4. கருத்து முரன்பாடுகளுக்குட்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்

கீழ்க் குறிப்பிடப்பட்ட காரணங்களுக்கமைய தங்களது மேற்பார்வையுடன் இணங்குவது சிரமமானதாகும்.

சிவில் விமான சேவைப் போக்குவரத்து அதிகார சபையின் ஊழியர்களுக்காக பணிக்கொடைக் கொடுப்பனவு செலுத்தப்படுவது அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் சபை மற்றும் நிருவாக ஒழுங்குக் கோவைகளின் கீழ் 18.8 வது வாசகத்திற்கமையவாகும். இப்பணியாளர் சபை மற்றும் நிருவாக ஒழுங்குக் கோவையை அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பதற்கு முன்னர் அது பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டதுடன் அதற்கு மேலதிகமாக பொதுத்திறைசேரியின் நான்கு பணிப்பாளர் நாயகங்கள் உட்பட எட்டு பேர் கொண்ட உயர்மட்ட உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவினால் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன. இக்குழுவில் தொழிலாளர் திணைக்களத்தின் உயர்மட்ட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். பணிக்கொடைக் கொடுப்பனவினை செலுத்துவது தொடர்பிலான வாசகமும் இக்குழுவினால் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதுடன் அது தொடர்பிலான சட்ட ஒழுங்குக் கோவைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய இணக்கம் தெரிவிக்கப்பட்டது. மேலும் பணிக்கொடை

கொடுப்பனவினை செலுத்துவது தொடர்பில் இவ் அதிகார சபையினால் தொழிலாளர் திணைக்களத்திடம் எழுத்து மூலம் வினவிய வேளையில் சட்டக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கொடுப்பனவுகளை மேற்கொள்ள இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

**4.5. செயளிழந்துள்ள மற்றும் குறைப்பயன்பாடு கொண்ட சொத்துக்கள்**

கீழ்க் குறிப்பிட்ட காரணங்களுக்கமைய தங்களது மேற்பார்வையுடன் இணங்குவது சிரமமானதாகும்.

மத்தள விமான நிலையத்தில் நிர்மானிக்கப்பட்ட கட்டடத்தை தொடர்ந்து அதற்கிணைவாக சிவில் விமான சேவை அதிகார சபையின் அலுவலகத்தை நடாத்திச் செல்லும் தேவை எழுந்துள்ளமையினால் விமான நிலைய வளாகத்தில் கட்டடம் ஒன்று நிர்மானிக்கப்படுகின்றது. மத்தள விமான நிலையத்தின் செயற்பாடுகள் குறைவடைந்ததைத் தொடர்ந்து இவ் அலுவலகத்தில் சேவைக்கு இணைப்புச் செய்வதற்கு இரண்டு ஊழியர்கள் மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்து. இடைக்கிடையே விமான நிலையத்தில் மேற்கொள்ளப்படும் மேற்பார்வைச் செயற்பாடுகளின் போது இவ் அலுவலகம் பயன்படுத்தப்படுவதுடன் 2017 ஆம் ஆண்டு பூராகவும் இவ் அலுவலகத்தில் ஊழியர்கள் பயிற்சிச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

**4.6. பொருளாதார பயனற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

கீழ்க் குறிப்பிட்ட காரணங்களுக்கமைய தங்களது மேற்பார்வையுடன் இணங்குவது சிரமமானதாகும்.

புதிய அலுவலகத்தின் கட்டடச் செயற்பாடுகள் அதாவது கட்டடத் திட்டமிடல் ஆக்கம், அங்கீகாரங்களைப் பெற்றுக் கொள்ளல், கட்டட மதிப்பீடுகளை வகுத்தல், நிர்மானச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் ஆலோசனைகளுக்காக பொறியியல் சேவை ஆலோசனைக் கம்பனி நியமிக்கப்பட்டுள்ள போதிலும் சேவை வழங்குனரான சிவில் விமான சேவை அதிகார சபைக்காக நிர்மானச் செயற்பாடுகளை மேற்பார்வைக்குட்படுத்த அனுபவம் மற்றும் அதிகார சபைக்கு பொறுப்புக் கூறும் சிவில் பொறியியலாளர்களின் தேவை அவசியப்பட்டமையினால் கட்டடத்தின் நிர்மானப் பணிகளை மேற்பார்வை செய்வதற்காக உத்தியோகத்தர் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன், அவர் நிர்மான வேலைத்தளத்தில் சேவை வழங்குனருக்காக அமைக்கப்பட்ட அலுவலகத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டார். இவ் அலுவலகத்தின் செயற்பாடுகளுக்கு உதவுவதற்காக அலுவலகப் பணி உதவியாளர் ஒருவரும் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

அமைச்சரவை அங்கீகாரத்திற்கமைய சிவில் விமான சேவைப் போக்குவரத்து அதிகார சபை மற்றும் பிரதான ஒப்பந்ததாரரான அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கிடையே நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் இணைந்த கணக்கு (Joint Account) மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் பூரணப்படுத்தப்பட்ட பணிகளுக்குரியதாக சிவில் விமான சேவை அதிகார சபையினால் வழங்கப்படும் நிதி இக்கணக்கில் வைப்பிலிடப்படுகின்றது. அவ்வாறு நிதி வைப்பிலிடுவதற்கு முன்னர் செலுத்துவதற்குரியதான இன்வெய்ஸ், ஆலோசனைக் கம்பனி மற்றும் அதிகார சபையின் பொறியியலாளரினால் உறுதிப்படுத்தப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து இக்கணக்கின் மூலம் துணை ஒப்பந்ததாரருக்கு கொடுப்பனவினை மேற்கொள்ள சமர்ப்பிக்கப்படும் இன்வெய்ஸ் அதிகார சபையின் பொறியியலாளரினால் உறுதிப்படுத்தப்படுகின்றது. இச்சான்றிதழை அடிப்படையாகக் கொண்டு இணைந்த கணக்கிலிருந்து நிதியினை விடுவிக்க வழங்கப்படும் காசோலைகளில் இரண்டாவது ஒப்பம் அதிகார சபையின் உத்தியோகத்தர்களினால் வழங்கப்படுகின்றது.

இதற்கமைய இது பொருளாதார பயனற்ற செலவினம் என்பதுடன் அதிகார சபையின் நிதி உரிய பணிகளுக்காக பயன்படுத்தப்படுவதை உறுதிப்படுத்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட உபாய அடிப்படையிலான தீர்மானமாகும்.



**05. நிலையான அபிவிருத்தி நோக்கங்களை எட்டுதல்.**

தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன். இக்குறைபாடு இணங்காணப்பட்டுள்ளதுடன் 2019 ஆம் ஆண்டுக்காக தேவையான திட்டங்களை வகுக்க மற்றும் வரவு செலவு ஒதுக்கீகளை மேற்கொள்ள குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**06. கணக்கீட்டுச் செயற்பாட்டுப் பணிகள் மற்றும் சிறந்த நிருவாகம்**

**6.1. உள்ளகக் கணக்காய்வு**

தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன். தங்களது மேற்பார்வை தொர்பில் கவனம் செலுத்தி உரிய செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பிரதம உள்ளகக் கணக்காய்வாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

**6.2. ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்**

அ) தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன். இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபைக்கான பிரதான அலுவலகக் கட்டடத்தை 18 மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு நிர்மான அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்தது. இந்நிர்மானப் பணிகளை மேற்கொள்ளும் வேளையில் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் கோரிக்கைக்கமைய 2017 செப்ரெம்பர் 30 வரை ஒப்பந்தக் காலம் நீடிக்கப்பட்டது.

இது எவ்வாறாக இருப்பினும் கட்டடத்தில் வதிவதற்காக நிர்மானப் பணிகளை முழுமையாக பூர்த்தி செய்ய அரச பொறியியல் கூட்டுத்தாபனம் இதுவரையில் தவறிய போதிலும் கொழும்பு ஹுணுபிட்டிய வீதியில் அமைந்துள்ள இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் 2018 ஜனவரி மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட கட்டுநாயக்கா புதிய கட்டடத்திற்கு கொண்டு செல்லத் தீர்மானிக்கப்பட்டது. இதனால் 2018 ஜனவரி மாதம் 28 ஆம் திகதி வரையான காலத்திற்காக கொழும்பு ஹுணுபிட்டிய வீதியில் அமைந்துள்ள கட்டடத்திற்குரிய வாடகைக் கட்டணத்தைச் செலுத்த வேண்டி ஏற்பட்டது.

ஆ) தங்களது மேற்பார்வையுடன் இணங்குகிறேன். 2018 மார்ச் 31 ஆம் திகதியளவில் பிரதான அலுவலகத்தை நிர்மானிப்பது தொடர்பில் 50 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், தாமதங்களைத் தவிர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்குமாறு தொடர்ந்தும் அறிவிக்கப்பட்டிருந்தது. தாமதிப்புக்கள் தொடர்பில் தொடர்ந்தும் ஒப்பந்ததாரர் அறிவுறுத்தப்பட்டதுடன் அதற்கு மேலதிகமாக போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சிற்கும் தாமதம் தொடர்பில் அறிவிக்கப்பட்டது. போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சின் செயலாளர் மற்றும் சிவில் விமான சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் கீழ்க் குறிப்பிடப்பட்ட கடிதங்கள் மூலம் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு தாமதத்தைத் தவிர்ப்பதற்குரிய காலத்திற்கு நிர்மானப் பணிகளைப் பூர்த்தி செய்யுமாறு அறிவிக்கப்பட்டது.

i) 2016 மே மாதம் 17 ஆம் திகதிய மற்றும் இலக்கம் MTCA/PI/39 கொண்ட கடிதம்
ii) 2016 டிசம்பர் 19 ஆம் திகதிய மற்றும் இலக்கம் DG/18/1/9/(CA/16/0719) கொண்ட கடிதம்
iii) 2017 ஆகஸ்ட் 25 ஆம் திகதிய மற்றும் இலக்கம் SP/1/1/CA/17/CA/17/510 கொண்ட கடிதம்
iv) 2017.11.22 / 2018.01.19 / 2018.02.05 / 2018.02.13 / 2018.02.16 / 2018.03.19 / 2018.07.10 திகதிய இலத்திரணியல் முகவரி

**6.3. வரவு செலவு ஆவணங்களை நிருவகித்தல்.**

கீழ்க் குறிப்பிட்ட காரணங்களுக்கமைய தங்களது மேற்பார்வையுடன் இணங்குவது சிரமமானதாகும்.

விலை அதிகரிப்பு மற்றும் அடிப்படை உடன்படிக்கை இல்லாத ஏனைய தேவைகளுக்காக வரவு செலவுத் திட்டம் வகுக்கப்பட்ட போதிலும் அடிப்படை நிர்மானப் பணிகள் கூட திட்டமிடப்பட்ட தினத்தில் பூர்த்தி செய்யப்படாமையினால் வேறு தேவையினை கருத்திற் கொள்ள முடியவில்லை. இது இவ் அதிகார சபையின் நிருவாகத்திற்கு அப்பால் உள்ள செயற்பாடு என்பதினால் வரவு செலவின் பயன்மிக்க நிருவாகச் செயற்பாடாக பயன்படுத்தப்படவில்லை என இணங்க முடியாது.

**07. முறைமை மற்றும் நிருவாகம்**

தங்களினால் குறைபாடாகக் காண்பிக்கப்பட்டுள்ள முறைமை மற்றும் நிர்வாகத் துறை தொடர்பில் விசேட கவனம் செலுத்தி உரிய பணிகளை மேற்கொள்ளக் குறித்துக் கொள்ளப்பட்டது.

**ஆனந்த விமலசேன**

தலைவர்

இலங்கை சிவில் விமான சேவைகள் அதிகார சபை

**பிரதி** - செயலாளர், போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு

7

**Notes**

## Notes

Safe and Efficient Skies for all


இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை
இல. 152/1, மினுவன்கொட வீதி, கட்டுநாயக்கா
தொலைபேசி : 94-11-2304632, 94-11-2358800
தொலைநகல் : 94-11-2304644
மின்னஞ்சல் முகவரி : info@caa.lk
இணையம் : www.caa.lk